
# திருக்கோயில்


செப்டம்பர் - அக்டோபர் 1982

ரூ. 2.50





திருவரங்கம் அருள்மிகு அரங்கநாதர் திருக்கோயில், தெற்கு இராயகோபுரம் 6ஆம் நிலைக்கான நன்கொடையைத் திரைப்பட இன்னிசை அமைப்பாளர் திரு. இளையராஜா அவர்கள், மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்களிடம் வழங்குதல்.



திருவரங்கம் அருள்மிகு அரங்கநாதர் திருக்கோயில் 6ஆம் நிலை அடிக்கல் நாட்டு விழாவில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்களும், அறநிலையத்துறை ஆணையர் திரு. ஆர். ஷண்முகசிகாமணி, ஐ.ஏ.எஸ். அவர்களும், திருச்சி மாவட்ட ஆட்சியாளர் திருமதி சாந்தாஷீலாநாயர்,ஐ.ஏ.எஸ். அவர்களும், மற்றும் பல பிரமுகர்களும் கலந்து கொள்ளுதல்.

முகப்பு

திருமாலிருஞ்சோலை
அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலின்
அழகிய காட்சி


# திருக்கோயில்

ஆசிரியர்: ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

| மாலை : 24 | திருவள்ளுவர் ஆண்டு 2013, துந்துபி ஆண்டு-ஐப்பசி & கார்த்திகை [செப்டம்பர் & அக்டோபர் 1982] ரூ. 2-50 | மணி : 11 & 12 |
|---|---|---|


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

*திருக்கோயில்* திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

**ஆணையர் அவர்கள்,**
**அறநிலைய ஆட்சித்துறை,**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப்பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. 15—00 உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங்களுக்கு, ஒரு இதழ் ரூ. 1—25 வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் ''சந்தாதாரர்'' ஆகலாம்.

தனிப்பட்ட 'சந்தாதாரர்கள்' ஒவ்வொருவரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும்பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் (Pin Code) எண்ணுடன் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவு செய்து வரிசைப் படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறையாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற்பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. 9—60 ஆகின்றது. ஆதலால் வெளிநாட்டுச் சந்தா, ரூ. 20—00-ல் இருந்து ரூ. 25—00 ஆக ஜனவரி 1978 முதல் மாற்றி அமைக்கப்பட்டது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப்போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பொருளடக்கம்


1. குயிற்பாட்டில் பாரதியாரின் வேதாந்தக் கருத்துக்கள்
—திரு டாக்டர் பொன். சௌரிராஜன்

2. கம்பன் கண்ட கலையியல் உலகு
—திரு டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்

3. திருவள்ளுவரும் செந்தமிழ் மருத்துவமும்
—திரு டாக்டர் ச. ஆறுமுகநாதன்

4. கம்ப ராமாயணத்தில் அகத்திணைக் காட்சி
—திரு செ. வேங்கடராமச் செட்டியார்

5. திரு அரிசிற் கரைப் புத்தூர்
—திரு டாக்டர் இரா. கலைக் கோவன்

6. ஆகமங்களின் காலம்
—திரு மு. அருணாசலம்

7. கொல்லிமலை அருள்மிகு அறப்பளீசுவரர் திருக்கோயில் தல வரலாறு —ஆசிரியர்

8. நெடுநாளைய தோட்டம்

9. இரு வரங்கள்
—திரு கா. அ. ச. ரகுநாயகன்

10. உங்கள் சிந்தனைக்கு
—ஆணையர் திரு ஆர். ஷண்முகசிகாமணி

11. சீர்காழிக்கோவை —ஆசிரியர்

12. திருக்குறளும், பிள்ளை லோகாசாரியரும்
—ஆசிரியர்

13. வள்ளுவர் காட்டும் நூலறிவும், வாலறிவனும்
—திரு டாக்டர் இ. சுந்தரமூர்த்தி

14. திருவெம்பாவைக் காட்சி
—திரு நல். முருகேச முதலியார்

15. பட்டரின் விளக்கவுரைகள்
—திரு கே. ஆர். கிருஷ்ணமூர்த்தி

16. சைவ சித்தாந்தமும், ஆன்ம நேய ஒருமைப் பாட்டு நிறைவாழ்வும்
—திரு டாக்டர் வ. ஆ. தேவசேனாபதி

17. திருநெல்வாயில்
திரு அழ. சித. அழகப்பச் செட்டியார்

18. திருமந்திரயோகம்
—தவத்திரு சுத்தானந்த பாரதியார்



**இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு**

# குயிற்பாட்டில் பாரதியாரின் வேதாந்தக் கருத்துகள்

'பேராசிரியர்'
திரு. டாக்டர் பொன். சௌரிராஜன், M.A., Ph.D.,
திருவேங்கடவன் பல்கலைக் கழகம்.

உபநிடதங்கள் எண்ணற்றன. ஆத்மனையும் பரப்பிரம்மத்தையும் பற்றிய ஆராய்ச்சியை மையமாகக் கொண்டன அவை. அவையெல்லாம் வேதங்களில் கூறப்பெற்ற சாரமான கருத்துகளேயாகும். வேதங்கள் குறிப்பிடும் செயல்களிலிருந்தும், செயலூக்க மறைமொழிகளிலிருந்தும் அப்பாற்பட்ட சிந்தனைச் செல்வங்கள் இவை. இவற்றை நிறைமொழிகள் எனலாம். இவற்றை வேதத்தின் இறுதியில் 'ஞான காண்டம்' என்ற தலைப்பில் சான்றோர் தொகுத்து அமைத்துள்ளனர். வேதத்தின் இறுதியாயும் உறுதியாயும் இவை அமைந்திருப்பதால் 'வேதாந்தம்' என்னும் பெயரினை இவை பெற்றன.

வேதங்களின் இறுதியில் பலவாறு அமைந்திருக்கும் இந்த ஆன்மீகக் கருத்துக்களெல்லாம் தொகுத்து வகைப்படுத்தப்பெற்றன. அந்த நூலே 'பிரம்ம சூத்திரம்' என வழங்கலாயிற்று. இதற்கு அறிஞர் பெருமக்கள் பலர் உரை விள்க்கம் செய்யலாயினர். அந்த உரைகளே வேதாந்தத்தின் விரிவுகளாக அமைந்தன. அத்தகு உரைவிளக்கம் செய்த சான்றோருள் சங்கரர், இராமாநுசர், மத்துவர் என்னும் மூவர் குறிக்கத்தக்கவர்கள். இவர்களுள் சங்கரரின், 'அத்வைத விளக்கம்' பிற்காலத்தில் 'வேதாந்தம்' என்ற சொல்லாலேயே வழங்கப்பெறலாயிற்று.

''சோலை, குயில், காதல், சொன்ன கதை
யத்தனையும்,
மாலை, யழகின் மயக்கத்தால் உள்ளத்தே
தோன்றியதோர் கற்பனையின் சூழ்ச்சி
யென்றே கண்டு கொண்டேன்,
ஆன்ற தமிழ்ப்புலவீர், கற்பனையே யானாலும்
வேதாந்த மாக விரித்துப் பொருளுரைக்க
யாதானுஞ் சற்றே யிடமிருந்தாற் கூறீரோ?''

இந்த வரிகளால் அமரகவி சுப்பிரமணிய பாரதியார் வேதாந்தக் கருத்துக்கள் சில தோன்றுமாறு குயில்பாட்டைத் தாம் பாடியுள்ளதாக உணர்த்துகிறார். 'சற்றே யிடமிருந்தாற் கூறீரோ?' என்ற அவர் பாடல் தொடரின் முதலில் அமைந்துள்ள ஏகாரத்தை எதிர்மறையாகக் கொண்டு வேதாந்த உண்மைகள் இதன்கண் சற்றும் இல்லை என விவாதிப்போரும் இல்லாமலில்லை. எனினும் 'ஆழ்ந்திருக்கும் கவி உள்ளத்து' நோக்கையும், 'சொல் முடிவின்' போக்கையும் பார்க்கும்போது குயில் பாட்டில் வேதாந்தக் கருத்துக்கள் விளங்கக் காணலாம்.

இறை, இறையை நாடும் உயிர், உயிரைக் கவர்ந்திழுக்கும் உலகப்பொருள் இவற்றுள் 'இறை ஒன்றே உண்மை; பிறவெல்லாம் பொய்' என்பது சங்கரர் கூறும் 'ஓம்தத்சத்' என்ற உபநிடத நிறைமொழி விளக்கம். இந்த விளக்கமே,

''சோலை, குயில், காதல், சொன்ன கதை
யத்தனையும்
மாலை யழகின் மயக்கத்தால் உள்ளத்தே
தோன்றியதோர் கற்பனையின் சூழ்ச்சி
யென்றே கண்டு கொண்டேன்''

என்ற தொடரில் குறிக்கப் பெறுவதாகக் கொள்ளலாம். மேலும் 'நெட்டைக் கனவு' என இப்பாடலில் வரும் தொடரும் இதனை வலியுறுத்தக் காணலாம். இந்தக் கேவலாத்துவிதக் கொள்கையை,

''உலகெலாமோர் பெருங்கனவஃதுளே
யுண்டு உறங்கி யிடர்செய்து செத்திடும்
கலக மானிடப் பூச்சிகள் வாழ்க்கை, ஓர்
கனவி லுங்கனவாகும்''

என்ற பாரதி பாடல் வலியுறுத்தக் காணலாம்.

''வாழ்வு முற்றுங் கனவெனக் கூறிய
மறைவ லோர்தம் உரைபிழை யன்றுகாண்''

என்ற அவர் பாடலும் இதனையே உணர்த்தும். மாயை (பிரபஞ்சத் தோற்றம்) பொய் எனல் முந்தித் தெளிவுறுத்தும். இதனை இன்னும் சற்று விரிவாக்கினால் குயிற்பாட்டில் பின்வரும் பூதங்கள், பொருள்கள், காலங்கள், இடங்கள், நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. இவையாவும் இறுதியில் நெட்டைக்கனவாய், கற்பனையின் சூழ்ச்சியாய் மறையக் காண்கிறோம்.

1. வானம், பூமி, கடல், காற்று.

2. குயில், நெட்டைக் குரங்கன், மாடன், சேர இளவரசன், கவிஞன் பறவை, குரங்கு, மாடு, சோலை, மரம் , கிளை.

3. காலை, மாலை, கதிரவன் தோற்றம், மறைவு, இரவு, பகல்.

4. நாடு, ஊர், தெரு, வீடு.

5. நிற்றல் - இருத்தல், கிடத்தல், காதல்-இன்பம்-துன்பம் - பிறப்பு - இறப்பு-முற்பிறப்பு.

இவையெல்லாம் மாலையழகின் மயக்கத்தால் மனத்தில் தோன்றியதோர் பொய்த்தோற்றம் என்பது கவிஞர் தரும் கருத்து. இவையாவும் கவிஞர் கற்பனையில் நிகழ்கின்றன. இங்கே கவிஞர்மட்டுமே உண்மை. பிறவெலாம் பொய். 'அகம் சத்யம்: ஜகம் மித்யம்' என்னும் கேவலாத்துவைத வேதாந்தப் பிரிவு இங்கு இடம் பெற்றிருத்தலைத் தெளியலாம்.

ஒன்று பரம்பொருள். உயிருள்ள, உயிரில்லாத பிறவெல்லாம் அதன் விசேடணங்கள். அதாவது உயிரொன்றுக்குச் சில குணங்களும் உயிருள்ளதும் இல்லதுமான உடற் கூறுகளும் சூழ அமைந்திருப்பது போலப் பரமாத்மனைக் கல்யாண குணங்களும் ஜீவாத்மாக்களும் பிரபஞ்சமும் உடலாகச் சூழ்ந்து அமைந்துள்ளன. இவ்வாறு விசேடணங்களோடு கூடிய ஒரு பொருளே உள்பொருள் என்பர் இராமாநுசர். இவர் கூறும் வேதாந்தம் 'விசிட்டாத்துவிதம்' என்னும் பெயர் பெறும். இந்த 'விசிட்டாத்துவைத' வேதாந்தத் தத்துவப்படி இறை, உயிர், தடை, நெறி, பலன் என்னும் ஐந்து நோக்குகளில் மானிட வாழ்வு ஆயப்பெறும்.

இங்குக் குயிற்பாட்டில் தோன்றும் கவிஞனை இறையாக உருவகிக்கலாம் எனில், கருங்குயில் உயிராகும். நெட்டைக்குரங்கனும் மாடனும் இறையாகிய இளவரசனை அடைய முடியாமல் தடுத்த தடைகளாகும். பொதிய மலைச்சாரல்முனிவர், நெறிகாட்டும்ஆசாரியன் ஆவர். பலன் குயிலாகிய உயிரைக் கவிஞனாகிய இறை ஏற்றுக் கொள்வதாகும்.

மத்துவர் கூறும் துவித வேதாந்தத்திற்கு இங்கு இடமில்லை. ஆனால் பதி பசு பாசம் என்னும் சைவசித்தாந்த உண்மைகள் குயிற்பாட்டில் விளங்கக் காணலாம். பசுவாகிய குயில் பதியாகிய அரசனை அடைய முடியாமல் கடமை, கருணை, என்னும் பாசத்துள் அகப்பட்டு மாடனுக்கும் நெட்டைக் குரங்கனுக்கும் உரியதாகின்றது. அப்பாசம் ஞானவாளினால் அழிகின்றது. உடனே இறைவனும் மறைகிறான். இறைவனால் உணர்த்தப்பெற்ற குயிலாகிய பசு தன்னை மறந்து, தன் நாமம் கெட்டு, அவனைக் காண அலைந்து திரிகிறது. பொதிகை மலையில் குரு உபதேசம் கிடைக்கிறது. பின்னர் திரோதான மாயையிலிருந்து நீங்கிப் பதியினைப் பசு அடைகிறது.

இவ்வாறு குயிற்பாட்டிற்குத் தத்துவவிளக்கம் தரலாம். ஆனால் சிற்சில இடங்களில் இந்த விளக்கங்களில் ஐயங்களும் சில தோன்றாமல் போகவில்லை. கேவலாத்துவித வேதாந்தப்படி பரம்பொருள் பேரின்பமும் பேரா ஞானமும் பெற்று விளங்கும் சத்தியப் பொருளாகும். ஆனால் இங்குக் குறிக்கப்பெறும் மானுடனோ மாயையில் மயங்கி, உயிரின் உண்மையை உணராது தடுமாறுகிறான். எனவே கேவலாத்துவித வேதாந்தம் குயிற்பாட்டில் ஓரளவே பொருந்துவதாகக் கொள்ளலாம். இப்படியே பதியின் பரஞானத்திற்குக் குறை ஏற்படுவதால் சைவ சித்தாந்தத்தையும் முழுமையாகப் பொருத்திக் காட்ட இயலவில்லை என்று சொல்லலாம். ஆனால் அவதாரக் கொள்கைகளையும் அந்தந்த அவதாரத்திற்கேற்ப மாயா காரியங்களுக்குட்பட்டு ஆடல் புரியும் திருமாலை இறையாயாகக் கொண்டிலங்கும் விசிட்டாத்துவித வேதாந்தத்திற்கு இது பெரிதும் பொருந்தும்.

நாத தத்துவத்தைக் குயிலாக உருவகித்தல் மரபு. மயிலை விந்து தத்துவமாகவும், சேவலை நாதமாகவும், முருகப்பிரான் மயிலையும் சேவலையும் கொண்டு விளங்குகின்ற குறிப்பால் உணரலாம். விந்து தத்துவமாகிய ஒளி, நாத தத்துவமாகிய ஒலியாக மாறும் தன்மையை,

''மயில் குயிலாச்சுதடி அக்கச்சி
மயில் குயிலாச்சுதடி''

என்ற வடலூர் வள்ளலார் பாடலால் அறியலாம். 'காலை இளம்பரிதி வீசும் கதிர்களிலே வேகத்திரைகளினால் வேதப் பொருள்பாடும்' என இத் தத்துவங்களை நெஞ்சில் கொண்டு துவங்கும் பாரதியார், 'நாதக்கனலினிலே நம் முயிரைப் போர்க்கோமோ'' என்று பாடுகிறார். எனவே நாத தத்துவத்தில் துவங்கி ஏக மௌனத்தில் இருப்பது குயில் பாட்டில் குறிக்கப்பெற்றிருக்கிறது எனக் கொள்வதில் தவறில்லை.

காதல் காதல் எனத் துவங்கி, ஒன்பது சரணங்களில் அமையும் குயில் பாடிய பாடல்-காதல்-காதல்-சாதல்; இன்பம்-துன்பம்-இன்பம்; கூடல்-ஊடல்-கூடல் என இவ்வுலக வாழ்வு தப்பமுடியாத ஒரு சுழற்சியில் அமைந்திருப்பதைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

வேதாந்த விளக்கங்களின் மூலமாகிய உபநிடதங்களைத் தெளிந்தவர் பாரதியார். இந்தியச் சிந்தனைச் சிறப்புக்கு அதுவே காரணமாயிற்று என்றும் உணர்ந்தவர் அவர்.

''பன்னரும் உபநிட நூலெங்கள்நூலே
பார்மிசை யேதொரு நூலிது போலே''

என்று பாடியவரும் அவரே. அத்தகு உபநிடத உண்மைகள் பல குயில்பாட்டில் ஒளிரக் காணலாம்.

''காலை யிளம் பரிதி வீசுங்கதிர்களிலே
நீலக்கடலோர் நெருப்பெதிரேசேர்மணிபோல்
மோகனமாஞ் சோதி பொருந்தி முறைதவறா
வேகத் திரைகளினாற் வேதப் பொருள்பாடும்''

எனத் துவங்கும் குயிற்பாட்டின் அடிகள் பிரச்சினோபநிடதத் துவக்கம் போல் அமைந்து திகழக் காணலாம்.

''வேதத் திரைகளினால் வேதப்பொருள் பாடி'' என்னும் அடி மாண்டூக்கிய உபநிடத 1,8,9,10 பிரிவில் அமைந்துள்ள 'ஓம்' என்னும் பிரணவத்தின் மந்திர விளக்கம் எனலாம்.

இன்னும் ஒரு கருத்தையும் இங்குக் கூறி முடிக்கலாம். மாமன் மகன் மாடன் என்பான், 'பொன்னை மலரைப் புதுத்தேனை' நாளுந் தந்து அவள் மனத்தை விரும்பி நின்றான். அவன்பால் தனக்குக் காதல் இல்லை எனினும், கருணையினால் அவனை மணந்து கொள்ளக் குயிலி இசைகின்றாள். ஆனால் அவ்வளையும் அறியாமல் அவள் தந்தை வீரமுருகன் மொட்டைப்புலியனின் மூத்த மகன் நெட்டைக் குரங்கனுக்குத் தன் மகளைத் தருவதாக உடன்பட்டு வந்து உரைத்தபோது, கடமை வயப்பட்டு அதனை மீற இயலாமல் அமைகிறாள். இறுதியில் சேர இளவரசனைக் கண்டபோது காதல் கொள்கிறாள்.

இங்குக் குயிலி ஆகிய ஆன்மா பரமாத்மன் ஒருவனையே காதலிக்கும் இயல்புடையது. இதனை யாக்ஞவல்கியர் தம் மனைவிக்கு உரைக்கும் சொற்களால் உணரலாம். ஆனால் மாயை வழிப்பட்டு அது கருணைக்கும் கடமைக்கும் தன்னை ஆளாக்கிக் கொண்டு உரிய குறிக்கோளிலிருந்து பிறழ்கிறது. இவ்வாறு உலகக் கடமை, உயிர்ப் பேற்றுக்குத் தடை யாவதை உணர்ந்தே பாரதியாரும் பிறிதோரிடத்தில்....

''கடமை புரிவா ரின்புறுவார்
என்னும் பண்டைக் கதைபேணோம்;
கடமை யறிவோம் தொழிலறிவோம்;
கட்டென் பதனை வெட்டென்போம்;
மடமை, சிறுமை, துன்பம், பொய்,
வருத்தம், நோவு, மற்றிவைபோல்
கடமை நினைவுந் தொலைத் திங்குக்
களியுற் றென்றும் வாழ்குவமே''

எனப்பாடித் தெளிவு செய்கிறார்.

# அருணகிரிநாதரும், திருமூலரும்

தாயுமானவர்க்குச் சற்று முன்னே வாழ்ந்திருந்த அருளாளர், திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர். 'வாக்கிற்கு அருணகிரி' எனத் தமிழ்கூறும் நல்லுலகம் அவரைத் தகவுற மதித்துச் சால்புறப் போற்றி வருகின்றது. அருணகிரியாரைத் தமக்கு ஒரு ஞானத் தந்தை என்றும், அவரைப்போல ஒவ்வொரு சொல்லும் உயரிய பொருளும் அனுபவமும் அமையும்படி உண்மையாகக் கூறியவர்கள் எவரும் இலர் என்றும், தாயுமானவர் கூறுகின்றார். ''ஐயா! அருணகிரி அப்பா! உனைப் போல மெய்யாக ஓர்சொல் விளம்பினர் யார்?'' என்பது அவர்தம் பாடல். இங்ஙனம் தாயுமானவர் புகழ்ந்து ஏத்தும் அருணகிரியார்க்கும், திருமூலர்பால் மிக்க மதிப்பும் ஈடுபாடும் இருந்ததெனத் தெரிகின்றது. ''நந்தி அருளாலே நாதனாம் பேர் பெற்றோம்'' என்று திருமூலர் பாடியிருப்பதனால், அருளாளர் சிலருக்கு ''நாதர்'' என்னும் பெயர் அமைவதுண்டு எனத் தெரிகின்றது. அம்முறையில் ''அருணகிரிநாதர்'' எனப் பெயர் அமைந்து வழங்கிவரும் சிறப்பு, இங்குக் கருதத்தக்கும். திருமூலருக்கும் அருணகிரியாருக்கும் இடையே எத்தனையோ பல சொற்பொருட் கருத்தொப்புமைகள் அமைந்து காணப்படுகின்றன. அவற்றுள் ஒரு சிலவற்றை மட்டும், இங்குக் குறிப்பிடுதல் சாலும்.

திருமூலர் ஆகிய சிறந்த சிவயோகியார் ஓராண்டுக்கு ஒன்றாக, மூவாயிரம் ஆண்டுகள் தவம் இருந்து, திருமந்திரப் பாடல்கள் மூவாயிரத்தினையும் பாடியருளினர் என்பது வரலாறு. இஃது உண்மையா? இவ்வாறு இருத்தலும் இயலுமோ? காலத்தை வெல்ல எவரால் முடியும்? என நம்மில் ஒரு சிலர் ஐயப்படுவதுண்டு. இவ் வையப்பாட்டிற்கு விடையளித்து விளக்கம் தருவதுபோல, அருணகிரிநாதரின் பாடல் ஒன்று காணப்படுகின்றது. ''சிவயோகியர்கள் காலத்தை வென்று நெடுங்காலம் நிலைபெற்றிருப்பார்கள், அவர்களுக்கு இறப்பு என்பது இல்லை; அவர்கள் ஒருபோதும் மரிக்க மாட்டார்கள். தீவினைகளாகிய கன்மங்களைச் செய்கின்ற நம்மைப் போன்றவர்கள்தான் காலத்தை வெல்லும் வகையறியாமல் மரித்தொழிவார்கள்'' என்பதனை, அப்பாடல் அறிவுறுத்துகின்றது.

''நீலச் சிகண்டியில் ஏறும் பிரான், எந்த நேரத்திலும்
கோலக் குறத்தியுடன் வருவான்; குருநாதன் சொன்ன
சீலத்தை மெள்ளத் தெளிந்தறிவார்; **சிவயோகிகளே**
**காலத்தை வென்றிருப்பார்;** மரிப்பார் வெறும் கர்மிகளே''

எனவரும் கந்தரலங்காரப் பாடல், திருமூலரை நினைத்துத்தான் அருணகிரியாராற் பாடப்பெற்றதோ, என நாம் நினைத்து மகிழும்படி அமைந்துள்ளது.

—ஆசிரியர்

# கம்பன் கண்ட கலையியல் உலகு

திரு. டாக்டர் ச. வே. சுப்பிரமணியன், M.A.Ph.D.,
இயக்குநர், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை - 600113.

தொடக்க காலம் முதலே மனித வாழ்க்கையில் அறிவியல் போன்று கலையியலும் இன்றியமையாத இடம் பெற்றிருக்கின்றது. இரு கற்களை உரசி நெருப்பு உருவாக்கிப் பயன்படுத்திய மனிதன், கரித்துண்டால் குகையில் சில படங்களும் வரைந்தான். தேவைகள் ஏற்பட்ட போது புது ஆக்கங்களில் ஈடுபட்டுக் கண்டு பிடிப்புகள் செய்த மனிதன், தன் பல புறத் தேவைகளையும் அகத்தேவைகளையும் நிறைவேற்றிக் கலையிலும் ஈடுபட்டான்.

உலக வாழ்க்கையில், கலை இன்றியமையா இடம்கொண்டு ,புறவாழ்வுக்குரிய பயன்படு கலையாகவும், அகவாழ்வுக்கேற்ற கவின்கலையாகவும் திளைத்தது. உலகின் அனைத்துச் சலனங்களும் செயற்பாடுகளும் வாழ்க்கைக்காகவும் வாழ்க்கையாகவும் அமைந்ததுபோன்று, கலையும் வாழ்க்கைக்காகவும் ஒரு சிலருக்கு வாழ்க்கையாகவும் அமைந்தது எனக் கூறலாம். பல்வகைத் தொழில்களும் மனிதனின் ஆக்கப் பூர்வமான கலையுணர்வுப் புலப்பாட்டைக் காட்டுகின்றன. எச் செயலிலும் ஓர் ஒழுங்கு புலப்பாட்டோடும், அழகு உணர்வோடும், சில இலக்கணச் செவ்வி கருதியும் ஈடுபடும்போது, தொழிலும் செயலும் கலைவயப்படுகின்றன.

பயன் கலைகளில், பல்வகைத் தொழில் நிலைகளும் பொருந்திக் காணக்கூடியனவே, உலக வாழ்க்கை, தொழிலை மையமாகக் கொண்டு இயங்கி, பின்பு தொழில்மயமாகவே ஆகிவிடுகின்றது. உலகியலைப் பின்புலமாக அமைத்துப் படைக்கப்படும் இலக்கியமும், இத் தொழில் நிலையை அங்கங்குச் சுட்டிச் செல்கின்றது. நால்வகை வருணத்தாரைக் கருதிய சமுதாயமும் நால்வகைத் தொழிலுடன் நின்று விடவில்லை; மிகப் பல வகைத் தொழில்களை உரைத்து அமைகின்றது. அவ்வக் கால மனநிலைக்கேற்பவும், கவிஞனின் தனிச் சிந்தனைக் கேற்பவும் சில தொழில்கள் முதன்மை பெறும், பிற அத்துணைச் சிறப்புடன் சுட்டப்படாமையும் அமையலாம். பொருள் செயலுக்காகத் தலைவியைப் பிரிந்து நிலம் கடந்து செல்லும் சங்க அகத்தலைவனில் வணிகத்தொழில் சிறப்பிக்கப்படுவதுபோல் தோன்ற, ''சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்'' எனும் வள்ளுவர் வாக்கில் உழவுத் தொழில் ஏற்றம் பெறுகின்றது; இளங்கோ படைத்த காப்பியத்தில் தலைமகன் சூழலால் வணிகத்தொழில் உயர்த்தப்பட, கம்பன் காவியத்தில் அரசர் தொழிலும் முனிவர் செயலும் முன்னிற்பதாகத் தோன்றுகின்றன.

எத்தொழில் உயர்ந்ததாயினும், சிறந்ததாயினும், அவ் ஒரு தொழிலால் மட்டும் உலகம் நிற்பதில்லை. பல்வகைத் தொழில்வளமும், வளர்ச்சியும், இயக்கமுமே உலகை ஆக்கப் பூர்வமாக்கி உதவுகின்றன. எனவே உலகியல் நோக்குடைக் கவிஞனான கம்பனும், பற்பல தொழில் அறிவைக் காப்பியத்தில் கையாள்கின்றான். நாட்டு நகரப் படலங்களில் நானிலத்தின் தொழில்களும் சுட்டப்படுகின்றன. கரும்பாலை *(34)*, உழுதல் *(38,49)*, கடல் வணிகம் *(50)*, தயிர் கடைதல் *(59)*, யானை பிடித்தல் *(63)* என இயல்பான வாழ்வுநிலைப் புலப்பாட்டுடன் இவை பொருந்துகின்றன.

பயன்பாடுடையதால் தொழிலாக அமைந்த போதும், அழகும் செவ்வியுமுடைமையால் கலையாக மிளிரும் கட்டிடக்கலை பற்றிப் பலபட உணர்த்துகின்றான் கவிஞன். புகார் நகர் அமைப்பும், ஆடலரங்கும், மதுரை மதிற் பொறிகளும் இளங்கோவை ஒரு பெருங்கட்டிடக்கலை வல்லுநனின் அறிவுடன் புலப்படுத்துவது போன்று, மாடங்களும், மாளிகைகளும் வாயில்களும் மதில்களுமுடைய நகர அமைப்புப் பன்முறை கம்பனைக் கட்டிடக் கலைஞனாகப் புலப்படுத்துகின்றது. அறையும் ஆடரங்கும் படப் பிள்ளைகள் தரையில் கீறிடின் தச்சரும் காய்வரோ *(9)* என அவையடக்கத்திலேயே இக்கலையுணர்வினைவைக் கம்பனிடம் காண்கின்றோம்.

'மயன் முதல் தெய்வச் தச்சரும் தம்தம் மனத்தொழில் நாணினர் மறந்தார்' *(96)* எனும்வண்ணம் அழகுடையதாக அமைகின்ற அயோத்தி நகரம் புலப்படுத்தும் கட்டிடக் கலை. மதிலின் மாட்சியைப் பேசுமிடத்து,

> ''நால்வகைச் சதுரம் விதிமுறை நாட்டி
> நனி நவ உயர்ந்தன, பனி தோய்
> மால்வரைக் குலத்து இனி யாவையும் இல்லை''
> (100)

என்பதில், அளவு பற்றிய கவிஞரின் அறிவு புலப்படுகின்றது. ஒரு பெருநில மன்னனின் அரண்மதில் பல்வகைப் பொறிகளுடன் எதிரியைத் தாக்கி அழிக்கும் வன்மையுடன் அமைதல் இயல்பு. மதிலில் இத்திண்பொறி அடக்கிய செயலை *(101)*, அயோத்தியில்,

''சினத்து அயில்கொலை வாள் சிலை மழுதண்டு
சக்கரம் தோமரம் உலக்கை
கனத்திடை உருமின் வெருவரும் கவண்கல்
என்று இவை கணிப்பு இல; கொதுகின்
இனத்தையும் உவணத்து இறையையும்
இயங்கும் காலையும் இதம்அல நினைவார்
மனத்தையும் எறியும் பொறிஉள என்றால்
மற்றுஇனி உணர்த்துவது எவனோ?'' (104)

எனக் காட்டுகின்றான் கவிஞன். அரணில், அதன் விண்தொடும் உயரம் பற்றிப் போலும் சூலவடிவில் இடிதாங்கியும் அமைக்கப்பட்டமை (101) தெரிகின்றது. இம்மதிலைப் போன்றே அகழியின் அமைப்பும் கட்டிடக் கலையறிவைப் புலப்படுத்துகின்றது. கல்தள மிட்டு, விளிம்பு சுற்றும் வெள்ளி கட்டி முற்றுவித்து, உள் ளூறப் பளிங்குப் பொன்தலத்து அகட்டு அடுத் துறப்படுத்ததாக(112)அயோத்தியின் நீள்அகன் கிடங்கின் கட்டுமானத்தைக் காட்டுகின்றான். ஆழியே அழகாக அமைந்த இலங்கையின் நகர், உள்ளும் அகழிகளைக் கொண்டு அமைகின்றது. இடைநகர் அகழி எழுகடலன்ன ஆழ அகலங் களைக் காட்டும் போது, அதில், 'நீலமே முதல் நன்மணி நித்திலம் மேல கீழ பல்வேறு ஒளி வீச'லும் (4989) சுட்டப்படுகின்றது.

நகரமைப்பினை, இலங்கையில், ஒருவல்லு நனின் பார்வையுடன் அமைத்தளிக்கின்றான் கம்பன். அகழி சூழ்ந்து, பெருவாயில்களுடைய மதிலின் உள் அமையும்நகர், பல்வகைப் பகுதி களுடனும், வீதிகளுடனும், மாடங்களுடனும் அமைகின்றது. மூன்று பகுதிகளாக, புறநகரும் (4979), இடைநகரும் (4990). அகநகரும் (5000)ஆக இலங்கை அமைபுத் தரப்படுகின் றது. இவற்றுள் புறநகர்,

"மாட கூடங்கள் மாளிகை ஒளிகை மகளிர்
ஆடு அரங்குகள் அம்பலம் தேவர் ஆலயங்கள்
பாடல் வேதிகை பட்டிமண்டபம் முதல்பலவும்''
(4967)

கொண்டு அமைகின்றது. 'வான்தொடர் மணி யின் செய்தமை அறு மாட கோடி'யும் (4931), பசுக்கள் நிரம்பிய கொட்டிலும், ஆனையின் கூடமும், பெரிய தேர்கள் நிற்கும் இடமும், குதிரைகள் உள்ள சாலைகளும் (4935), பெரிய நாள் ஒளிகொள் நானாவித மணிப்பித்திப் பத்திகளும்(4936)உடையதாக இப் புறநகரைக் கம்பன் புனைகின்றான்.

அகழியும் இஞ்சியும் சூழ்ந்த இடைநகர், 'பன்னிரு யோசனைத் தெருவு மும்மை நூறா யிரம்' (34991) உடையதாக அமைகின்றது. அதனகத்து அமையும் அதநகரும் இவ்வாறே கிடங்கும் மதிலும் உடையதாகி, 'அரசர் வைகும் தூய தெரு ஒன்றொடு ஒரு கோடி' (5000) பெற்றதாகிக் காணப்படுகின்றது. இங் களைச் சூழ்ந்த விண்மீன்கள் போன்று 'அரக்க அரசன் பொன்கோயிலும் உரிமை மகளிர் உறைவிடங்களுமாக இந்நகர்ப்பகுதி தீட்டப் படுகின்றது. இயக்கியர் ஈண்டிய மனை ஓர் ஆயிரம் ஆயிரம் வாயிலும் (5013), அரக்கி மார்கள் ஈர் இரு கோடி ஈட்டம். பத்தியர் உறையும் பத்திப்படர் நெடுந்தெருவும், சித்தி யர் உறையும் மாடத்தெருவும், விஞ்சைமாதர் உறையுளும் (5025) இங்கு அமைகின்றன. விஞ்சை மடந்தையர் உறைவிடம் ஆறு இரண்டு அமை கோடித் தூய மாளிகை நெடுந்தெருவின் பின், மயன்மகள் உறைவிட மாடமும், நாய கன் பெருங்கோயிலும் (5029), அயலே கள்உறையும் மலர்ச்சோலையும் (5068) காட்டப்படுகின்றன.

நகரமைப்பு வல்லுநனாக இங்குப் புலப் படும் கம்பன், மாடங்கள், மாளிகைகள் பற்றிய அமைப்பு ஒழுங்கைக் கவிதைப்படுத்துவதன் வழி, அதிலும் தன் வன்மையைப் பறைசாற்று கின்றான். மிதிலையின் மணிநெடுந் தெருக்கள் (486), ஆறுபோன்று (485), இரு பக்கங்களி லும் பல மாடங்கள் உடையதாக அமைகின்றது (484). நிரம்பிய மாடத்து உம்பர் நிரைமணிக் கொடிகள், விசும்பின் அரம்பையர் ஆடல் போன்றமையும் காட்சி, அவற்றின் விண்தோய் உயர்ச்சியையும் காட்டுகின்றன.

அயோத்தியின் வருணனையில், எழுநிலை மாடங்களைக் கவிஞன் காட்டும்போது, அதன் அமைப்பினை விரிவாகவும் விளக்கமாகவும் அமைத்துள்ளதிலும் அவன் கட்டிடக் கலை யறிவு வன்மை புலப்படுகின்றது. சிற்ப நூன்முறை அறிந்து, ஏழ்நிலை அமைத்துப் பொன்வேய்ந்த ,மாணிக்கம் இழைத்த கலசங் களையுடைய மாடம் (118).

''கல் அடித்து அடுக்கி, வாய் பளிங்கு
அரிந்துகட்டி, மீது
எல்லுடைப் பசும் பொன் வைத்து,
இலங்கு பல்மணிக்குலம்
வில்லிடக் குயிற்றி, வாள்விரிக்கும்
வெள்ளி மாமரம்
புல்லிடக் கிடத்தி, வச்சிரத்த
கால் பொருத்தியே'' (116)

''மரகதத்து இலங்கு போதிகைத்
தலத்து வச்சிரம்
புரை தபுத்து அடுக்கி, மீதுபொன்
குயிற்றி, மின் குலாம்
நிரை மணிக் குலத்தின் ஆளி
நீள் வகுத்த ஒளிமேல்
விரைவு கைத்தலத்தின் உய்த்த
மேகத்தின் மீதுஅரோ'' (117)

எனக் காட்டப்படுகின்றது. கற்சுவர் எழுப்பிப் பளிங்கு வாயில் கட்டி, பொன் பதித்து, இரத் தினங்களை இழைத்து, வெள்ளிக் கைமரம் பரப்பி, வச்சிரத்தூண் நாட்டி, மரகத மணியா லான போதிகையின்மேல், வயிரக்கற்களை அடுக்கி, பொன்னால் சந்து பதித்து, பலநிற மணிகளாலான சிங்கங்களை வரிசையாக வைத்து, அதன்மேற் கோமேதகக் கொடுங்கை அமைத்துக் கட்டப்படுகின்றது. இங்குப் பயன் பெற்ற பொருள்களில் மிகை தோன்றினாலும் தளமும், சுவரும், வாயிலும், கைமரமும், தூணும், அதன் உறுப்பான போதிகையும், அழகுருவங்களும், கூரையும், கலசமுமாகக் கட்டிடத்தின் பல்வகை உறுப்புநிலை புலப்படு வதும், அவை சிற்ப நூற்படி அமைக்கப்படலும், கவிஞனின் இத்துறை அறிவை வெளிப்படுத்து கின்றன.

(தொடரும்)

# திருவள்ளுவரும், செந்தமிழ் மருத்துவமும்

'சித்தமருத்துவப் பெரும் புலவர்'
டாக்டர் திரு. ச. ஆறுமுகநாதன், வடபழநி

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

உலகத்தின் முதன்மொழி தமிழ்மொழி யென்பதும், உலகத்தின் முதல் மக்களினம் தமிழினம் என்பதும், எத்தனை உறுதிப்பாடு உடையதோ, அத்தனை உறுதிப்பாட்டுக்கும், உவகைக்கும் உரியதானதும், தமிழுடன் பிறந்ததுமான தமிழ் (சித்த)மருத்துவம், தரணியின் முதன் மருத்துவம் என்பது மறுக்கவும் மாற்றவும் முடியாத தக்க சான்றுகளைக் கொண்டது. அது பிறந்த இடத்தில் பெருமைப்படும் அளவுக்கு வளராது இருத்தலுடன், பிற நாட்டினர் புரிந்து கொள்ளாத கருவூலமாகத் தென்னகத்தில் இருந்து வருகிறது!

இந்த உண்மையை அறுதியிட்டுக் கூறும் வகையில் நமது உலகப் பெருநாவலரும், முதற் பாவலருமான வள்ளுவப் பெருந்தகை தமது பொய்யா மொழியான, தமிழ் மறையாகிய பொதுமறையாம் அறம்-பொருள்-இன்பம் என்ற முப்பாலைக் கொண்ட அமுதசுரபியாம் திருக்குறளில், பொருட்பால் அங்கவியல் பகுதியின் இறுதி அமைப்பில் மருந்து என்னும் மாண்பான தலைப்பிட்டு வரும் பத்து குறட்பாவிலும் கீழ்க்கண்டவாறு பாடி, சித்தமருத்துவம், அன்று இருந்தது, இன்றும் இருக்கிறது, என்றும் இருக்கும் என்பதை அறுதியிட்டுக் கூறியுள்ளதைச் சித்த மருத்துவத்தின் தன்மையைத் தெரிந்து கொள்ளாதார் தெரிந்து கொள்வார்களாக! அவை வருமாறு:—

மிகினும் குறையினும் நோய்செய்யும், நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று

உண்ணும் உணவு குறைவதாலும் கூடுவதாலும், வாதம்-காற்று; பித்தம் - நெருப்பு; ஐயம்-கப நீர் ஆகிய முப்பிணிகளும் உண்டாகும்.

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு, அருந்தியது
அற்றது போற்றி உணின் (2)

முன் உண்ட உணவு முற்றிலும் சீரணமான நிலை தெரிந்து, பின் உணவு உட்கொண்டால், உடலுக்கு மருந்து என்பதே வேண்டாம்.

அற்றால் அளவறிந்து உண்க, அஃது உடம்பு
பெற்றான் நெடிது உய்க்கும் ஆறு (3)

முன் உண்டது முற்றிலும் சீரணமாகிய நிலை தெரிந்து, பின் உண்பதை சீரணமாகும் அளவுக்கு உண்டுவரின், உடல் நோயணுகாமல் நீண்டநாள் விளங்கி, இம்மை இன்பத்தை அனுபவிப்பதுடன், மறுமை இன்பத்தையும் அடையத்தக்கதாய் இருக்கும்.

அற்றது அறிந்து கடைப்பிடித்து, மாறல்ல
துய்க்க துவரப் பசித்து (4)

உண்ட உணவு செரித்ததை அறிந்து, பின் பசி அதிகப்படும் வேளையில், வாதம்-பித்தம்-சிலேத்துமம் ஆகிய நோய்களை விளைவிக்காதனவற்றை உண்க. ஒன்றிற் கொன்று விடத் தன்மை கொண்ட உணவுகளை மனம்போல உண்டு, உணவை நஞ்சாக்கிக் கொள்ளவேண்டாம்.

மாறுபாடு இல்லாத உண்டி, மறுத்து உண்ணின்,
ஊறுபாடு இல்லை உயிர்க்கு (5)

மாறுபாடு-விரோதம் இல்லாத உணவினை உட்கொண்டால், எப்பிணிகளும் வந்து உயிருக்குத் துன்பம் தராது.

இழிவறிந்து உண்பான்கண் இன்பம் போல், நிற்கும்
கழிபேர் இரையான்கண் நோய் (6)

தாழ்ந்ததெனத் தெரிந்தும், விலங்கினம் போல் இரை (உணவு) எடுப்பாரிடத்தில், வாதம்-பித்தம்-சிலேத்துமம் என்ற முப்பிணிகளும் ஏகாமல் இன்புற்றிருக்கும்.

தீயள வன்றித் தெரியான் பெரிது உண்ணின்,
நோய் அள வின்றிப் படும் (7)

மருத்துவ அறிஞர்கள் நோயின் நிலையை நோக்கி, அது வந்த காரணம் தெரிந்தும், தெளிந்தும் அதனைத் தணிப்பிக்கத் தக்க மருந்துகள் செய்க.

நோய்நாடி, நோய்முதல் நாடி, அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் (8)

உற்றான் அளவும், பிணிஅளவும், காலமும்,
கற்றான் கருதிச் செயல் (9)

ஆயுளைப் பலப்படுத்தும் சித்த மருத்துவத்தைக் கற்றுணர்ந்த மருத்துவ அறிஞர்கள் ஆதுரன்-நோயுற்றோன் வயது, உணவுகாலம், வேதனை, உறுதி, பிணியளவு, சாத்தியம், அசாத்தியம், ஆரம்பநிலை, நடுநிலை, இறுதிநிலை ஆகியவற்றை நன்கு தெளிந்து, மருத்துவ நூல்கள் நன்றே ஆய்ந்து மருந்து செய்க.

உற்றவன், தீர்ப்பான், மருந்து, உழைச் செல்லான், என்று
அப்பால்நாற் கூற்றே மருந்து (10

மருத்துவக்கலை என்பது நோயாளி, மருத்துவர், மருந்து, மருந்தைக் காலம் தவறாமல் கொடுக்கும் செவிலியர் (செவிலியர்-வளர்த்த தாய், பணிப்பெண்கள், Nurses) ஆகிய நான்கு பிரிவினைக் கொண்டது. அடுத்து நோயாளியின் கடமைகள் நான்காவன: பொருள் வளம், மருத்துவர் வழி நிற்றல், நோயின் தன்மை உணர்ந்துநிற்றல், மருந்தால் ஏற்படும் விளைவுகளைப் பொறுத்தல் ஆகியவையாகும். மேலும் நோயைத் தீர்க்க வல்லாரின் திறன்கள் நான்காவன; பிணி கண்டு பயப்படாமை, நுட்ப அறிவுடைமை, நோயினைத் தீர்க்கும் திறனுடைமை, மனம்-சொல்-உடல் தூய்மையாய் இருத்தல்.

இம்மாதிரி திருவள்ளுவப் பெருமானால் சிறப்பித்துப் பாடப்பெற்றிருக்கின்ற சித்த மருத்துவம், செந்தமிழ் நாட்டின் தெய்விக மருத்துவமாய் அமைந்து பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே பதினெண் சித்தர்களால் பாங்காக வளர்க்கப்பட்டிருந்தது. இப்படியாக சித்த மருத்துவம் சீராக வளர்க்கப்பட்டிருந்த காரணத்தினால்தான், முதற் பாவலர், முத்தமிழ் கண்ட சித்தமருத்துவத்திற்குத் திருக்குறள் பொருட்பால் அங்கவியல் பகுதியில் அழகாக ஆய்வு செய்து மருந்து என்னும் தலைப்பிட்டுச் சித்த மருத்துவத்திற்கே உரியதான முப்பிணியென்ற வாத-பித்த-சிலேத்துமத் தன்மைகளையும் தெள்ளத் தெளிவாய் விளக்கி, வையகம் அறியுமாறு செய்துள்ளார்.

இத்தகு பெருமை வாய்ந்த சித்த மருத்துவத்தின் சேய்களாக ஆயுர்வேத மருத்துவமும், யூனானி மருத்துவமும் பிறந்து, அவ்வக்காலத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களுக்கேற்பத் தம்மைப் பலமுடையதாகவும், வளமுடையதாகவும் ஆக்கிக் கொண்டு இந்திய உபகண்டத்தின் பல்வேறு பாகத்திலும் முறையே கல்லூரிகளையும் மருத்துவ விடுதிகளையும் அமைத்துக் கொண்டுள்ளன.

இவை இவ்வாறிருக்க, அன்னியர் ஆட்சி காரணமாய் அருந்தமிழ்ச் சித்த மருத்துவம், தான் பிறந்த மண்ணிலேயேபேணுவாரற்றுஅழியும் தருவாயில் இருந்து கொண்டிருந்தவேளை, தென்பாண்டி நாடான திருநெல்வேலி, நாஞ்சில் நாடு உள்ளிட்ட கோட்டையம் மருத்துவர்களும், தமிழ்நாடு முழுமையுமுள்ள குறுநில மன்னர்களும் வளர்ச்சிப்பணி செய்து, சித்த மருத்துவத்தைக் காத்து வந்தார்கள். பண்டித எஸ். எஸ். ஆனந்தர், மற்றும் பல சித்த மருத்துவ அறிஞர்கள் பலராலும், சித்த மருத்துவத்தைச் சீராக வளர்க்கும் பணி உருவாகி வளர்ந்து வந்தது. தற்போது நம் தமிழ்நாடு அரசு அளித்துவரும் ஆதரவினாலும் பேருதவிகளினாலும், எதிர் காலத்தில் நம்முடைய தமிழ் நாட்டுச் சித்த மருத்துவம் உலகப் புகழ் பெறும் என்பது உறுதி.

## சித்தர்களும், தலங்களும்

(1) திருமூலர்—சிதம்பரம்
(2) அகப்பேய்ச்சித்தர்—விருத்தாசலம்
(3) நந்திதேவர்—சீர்காழி
(4) தன்வந்திரி—வைத்தீசுவரன்கோயில்
(5) கமலமுனி—திருவாரூர்
(6) வால்மீகி—எட்டிகுடி
(7) பாம்பாட்டிச்சித்தர்—திருக்கடவூர்
(8) போகர்—பழநி
(9) சுந்தரானந்தர்—மதுரை
(10) மச்சமுனி—திருப்பரங்குன்றம்
(11) இராமதேவர்—அழகர்மலை
(12) குதம்பைச்சித்தர்—திருக்கழுக்குன்றம்
(13) இடைக்காடர்—திருவண்ணாமலை
(14) பதஞ்சலி—இராமேசுவரம்
(15) சட்டைமுனி—திருவரங்கம்
(16) கருவூர்த் தேவர்—கருவூர்
(17) கொங்கணவர்—திருப்பதி
(18) கோரக்கர்—ஸ்ரீசைலம்
(19) குதிமான்முனிவர்—திருக்காளத்தி
(20) கும்பமுனி—திருவனந்தபுரம்
(21) நந்தி—காசி (வாரணாசி)

—ஆசிரியர்

# கம்ப ராமாயணத்தில் அகத்திணைக் காட்சிகள்

பேராசிரியர்
திரு. செ. வேங்கடராமச் செட்டியார்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

## முன்னுரை

கவிச்சக்கரவர்த்தி கம்பர் தம் புலமை நலம் தோன்ற இயற்றியருளிய இராமாயணத்தில் எத்துணையோ காட்சிகளைக் கண்டு நமக்குக் காட்டியுள்ளார். எத்தனையோ நுட்பங்களை அறிஞர்கள் வியக்கும்வண்ணம் விளக்கியுள்ளார். கடற்காட்சியைக் கண்டு காட்டும் வாய்ப்பு, யுத்த காண்டத்தில்தான் அவர்க்குக் கிடைத்தது. இலங்கை வேந்தனாகிய இராவணனை வென்று கற்பினுக்கு அணியான சீதையை மீட்பதற்காக எழுபது வெள்ளம் வானர சேனையோடு தென்கடலின் வட கரைக்கு வந்துள்ளான் இராமன்.

கடலின் காட்சி யாரையும் கவரும் தன்மையது. கூடியுள்ள காதலர்க்குக் களிப்பை மிகுவிப்பது. பிரிந்தார்க்குப் பெருந்துயரைத் தர வல்லது. பிரிந்த காதலர்க்குக் கடற்காட்சி இரக்கத்தை மிகுவிப்பது. இதைக் கருத்தில் கொண்டே நெய்தல் திணைக்கு இரங்கல் உரிப்பொருள் எனக் கூறியுள்ளனர், இலக்கண நூலோர். தென்கடலின் வடகரைக்கு வந்துள்ள இராமன், ஆவியைச் சனகன் பெற்ற அன்னத்தை, அமிழ்தின் வந்த தேவியைப் பிரிந்து வருந்துகின்றவன். இந்தக் கடற்காட்சியால் அவன் பிரிவுத்துயர் மிகுகின்றது. இராமன் கடலைக் கண்டு பெறும் துன்ப அனுபவங்களையெல்லாம், கம்பரே அவ்விராமன் சார்பில் நின்று நமக்குப் புலப்படுத்துகின்றார்.

## கண்துயிலாக் கண்ணன்

கங்குற்பொழுதும் துயிலாத கண்ணன் கடலைக் கண்ணுற்றான் என்கின்றார். சீதையைப் பிரிந்த பின்பு இரவிலும் துயிலாத கண்கள் இராமனுடைய கண்கள். அந்தக் கண்களால்தான் கடலைக் காண்கின்றான். இராமன் தாமரைக் கண்ணன். தாமரை இரவில் இதழ்குவிழ்ந்து கண்ணுறங்குவதுபோலக் காணப்படும். தமக்கு இனமாகிய தாமரைகள் உறங்கும்போதும் இராமனுடைய தாமரைக்கண்கள் துயில்வதில்லை. கண்ணன் என்ற பெயர், இங்கு துயிலாத கண்ணன் என்ற அடையோடு வந்துள்ளது. தாமரைக் கண்ணன் என வள்ளுவர் திருமாலைக் குறிப்பிடுவர். தாமரைகள் இதழ் குவித்துத் துயிலும் இராப்பொழுதிலும் இராமனுடைய தாமரைக் கண்கள் துயிலவில்லை என வேற்றுமையணி தோன்றக் கம்பர் கூறியிருப்பது புலமை யுள்ளத்திற்கு நல்விருந்தாகும். கடல்அலைகள் இராமன் கண்முன்புரண்டுவந்து வந்து,தூய மலர்போன்ற நுரைகளையும் முத்துகளையும் சிந்துகின்றன. அத்தோற்றம் இராமன் திருவடிகளில் நெல்லும் மலரும் தூவி வரவேற்பதுபோலத் தோன்றுகின்றது. மேலும் கடலிடைத் துயின்று கொண்டிருந்த மாயன் நெடுங்காலம் பிரிந்துபோய்ப் புறத்தே திரிந்து கொண்டிருந்தான். இப்போது மீண்டும் அந்தக் கடலாகிய படுக்கையருகில் வந்துள்ளான். இனி அந்தப் படுக்கையில் படுத்துத் துயிலவுங்கூடும் என்று கருதித் தென்றல் காற்று இந்தக் கடலாகிய பாயலை உதறிப்போடுவது போலக் காணப்படுகின்றது. பாயை விரிக்கும்போது அதில் உள்ள தூசு போக உதறிவிட்டுப் போடுவது வழக்கம் என்பது இன்னும் உலகியலில் காணத்தகுவது. நுரையும் முத்தும் சிதற அலைகள் தென்றல் காற்றால் வீசுகின்ற காட்சி, இராமன் படுத்துக் கொள்ள வந்துள்ளான் என்று அவனுக்குத் தென்றல் என்ற பணியாளன் கடலாகிய பாயலை உதறிப் போடுவது போலக் காணப்படுகின்றது என்பது கம்பர் தற்குறிப்பேற்ற மாகக் கூறிய கருத்து, எவ்வளவு சிறப்பாகப் பொருத்தமாக உள்ளது காண்மின்.

## தென்றலும் கடலும்

தென்கடலின் வடகரையில் தங்கியுள்ள இராமன்மேல் தென்றல்காற்றுக் கடலிலிருந்து தூற்றுகின்ற சிறிய நீர்த்துளிகள் படுகின்றன. வஞ்சிக் கொடிபோன்ற சீதை, கண்ணீர்க் கடலில் பிரிவாற்றாது வருந்தா நிற்க, அந்தச் சோகந்தனை மீட்க மாட்டாமையால் வந்து சேர்ந்த பழிக்கும், மன்மதன் தொடுக்கும் மலர் அம்புகட்கும் இலக்காக நின்ற இராமனின் தோள்களில் அந்த நீர்த்துளிகள் வீழ்ந்து கொல்லன் உலையில் துள்ளி விழுகின்ற நெருப்புப் பொறிகள் போலச்சுடுகின்றன.

தன்னருகில் வந்துள்ள இராமன் சீதையின் பிரிவால் நேற்றுக் கண்ட திருமேனி இன்று

வேறாகி நிலை தளர்ந்துள்ளான். அவன் நிலையைக் கண்டு சீதையின் தாய்முறையின ளான கடல்நங்கை இரக்கம் காட்டியிருக்க வேண்டும். அவன்படும் துன்பங்கண்டு அது நீங்க முகமன் செய்திருக்கவேண்டும். அப்படி யேதும் செய்யாது, அவன் துயர் விஞ்சுமாறு தனியே நின்று கதறுகின்றது. அந்தப் பெரிய கடலிடத்தே பின்னி வருகின்ற அலைகளின் மேல் தவழ்ந்து வருகின்ற பிள்ளைத்தென்றல் அக்கடற்கரையில் உள்ள புன்னை மலர்களின் நறுமணமிக்க மகரந்தப்பொடியை, இராமன் மேல் ஒவ்வொரு முறை வரும்போதும் பூசியே செல்கின்றது. கடலின் ஒலியும் புன்னை மலர் மணத்தில் தவழ்ந்துவரும் மெல்லிய பூங் காற்றும், இராமனது பிரிவாற்றாது துயரை மிகுதிப்படுத்துகின்றன. என்செய்வான் இரா மன்! என அவன் துயர்கண்டு கம்பர் இரங்கு கின்றார். ஆடலில் பிறந்த கவின்மிக்க சீதையை இராவணன் கவரவிட்ட இராமனின் தவற்றினை நினைந்து, அவனைக் கண்டதும் அவன் நிலைக்கு இரங்காது, முகங்காட்டாது கடலாகிய நங்கை தனித்து நின்று கதறுவதாகக் கூறிய கம்பரின் தற்குறிப்பேற்றம் எவ்வளவு இயற்கையாக அமைந்துள்ளது! எவ்வளவு உணர்ச்சிகளை எழுப்புகின்றது. காண்மின்!

## கடற்பவளத்தின் காட்சி

வில்லினை யேந்தியுள்ள இராமன் தோள் கட்கு முன்பு உவமையாகாது தோற்றமலை இப்போது சிறிது உவமையாம்படி மெலிந்து தோன்றும் நிலையிலுள்ள அவ்விராமனுக்கு முன் சீதையின் மணிஅதரம் எனத் தனியே தோன்றிக் கொலை மேற்கொண்டு அவன் ஆரு யிரைக் குடிக்கும் கூற்றமே என்னும்படி, பவளம் காட்சியளிக்கின்றது. கடலில் கொடிப் பவளத்தைக் கண்ட இராமன், சீதையின் வாயி தழை நினைத்து மிகவும் வருந்தி அவள் நினைவால் உயிர்விடுவான் போன்று காணப் படும் நிலையை விளக்க ''கூற்றங்கொல்லோ கொடிப்பவளம்'' என்கின்றார் கம்பர்.

## கடல்முத்தின் காட்சி

சீதையின் பற்களைப் போன்று கடலில் தோன்றும் கவின்மிக்க முத்துக்களின் காட்சி இராமன் உள்ளத்தில் சீதையின் புன்சிரிப்பை நினைப்பிக்கின்றது. சீதை சிறையிலிருக்கும் இலங்கைமாநகரம், தொலைவில் இல்லை. அவ ளைச் சிறைமீட்கா மான உணர்ச்சி மேலிடுத லால் நாளும் மெலிகின்ற இராமனை அந்த முத்துகளின் காட்சி உயிரைக்குடித்து விடுமோ? என அஞ்சுகின்றார் கம்பர். இராம னது உயிரை வாங்கவேண்டும் என்றிருப்பவர் கள், இலங்கையிலுள்ள இரக்கமில்லாத இராக் கதர்கள். ஏ முத்தே! உனக்கு அவ்வரக்கரோடு என்ன உறவு உளது? சீதையின் முறுவற்குறி காட்டி இராமனை முடித்துவிடுவாயோ? என்று கம்பர் இரங்குகின்றார்.

கடலலைகள் முத்துக்களைச் சிந்திக் கொண்டு இராமன் நிற்கும் இடத்தில் வந்து வீசுகின்றன. கடலிற் பிறந்த திருமகளின் அவ தாரமாக உள்ள சீதைக்குத் தாய் முறையின ளான கடல்நங்கை, தன் மருமகனாகிய இரா மனைக் கண்டதும் 'கொடியோளாகிய யான் தந்த பாவைபோன்ற சீதை தவப்பாவையாக இலங்கையில் தனித்துத் தளர்வது தகுமா?' என்று சிந்துகின்ற முத்துக்களாகிய கண்ணீ ரோடு அலைகளாகிய கைகளை உயர்த்திக் கொண்டுவந்து வள்ளலாகிய இராமன் திருவடி களில் வீழ்ந்து அழுதரற்றுவது போலக் காட்சி யளிக்கின்றது என்கிறார் கம்பர்.

## கடலலைகளின் காட்சி

மேலும், கடலானது தன்னிடத்தில் வந் துள்ள இராமனது பிரிவுத் துயரால் ஆய வெப் பம் தணிய வேண்டித் தரையாகிய கல்லில், பனி நறுமணநீர் தெளிப்பக் கொண்டு, அலை யாகிய குழவியை முறையே சுழற்றி அறைத்து, வெண்மையான நுரையாகிய கலவைச் சாந் தினை அவன் திருமேனியில் அள்ளி அப்புவது போன்று காணப்படுகின்றது கம்பருக்கு.

சீதையைச் சிறைமீட்டுத் தேவர்துயர் தீர்க்க வில்லோடும் அம்போடும் புறப்பட்டுள்ள இராமனைப் பார்த்துக் கடல் நெஞ்சம் களித்து, அலைகளாகிய கைகளை உயர்த்தி ஆரவாரிப் பது போன்றது அலைகடலின் ஆரவாரம் எனக் கம்பர் கற்பனை செய்கின்றார். இவை யாவும் கம்பர் காட்டும் பொதுக்காட்சிகள்.

நெய்தல் திணைக்குரிய இரங்கல் என்னும் உரிப்பொருளை எத்தனை விதமாகக் கம்பர் கண்டு நமக்குக் காட்டியுள்ளார் என்பது நினை யுந்தோறும் வியப்பு விஞ்சுகின்றது.

## சிறப்புக் காட்சி

கடற்கரையில் உறங்கி எழுந்த இராமன் இக்கடலினைக் கடப்பது எவ்வாறு? என்ற எண் ணத்துடன் கடலைச் சார்ந்து உலவுகின்றான். அக் கடற்கரையில் காணப்படும் காட்சிகள் சீதையைப் பிரிந்துள்ள இராமனின் துயரை மிகு திப்படுத்துகின்றது. பாலைத்திணையின் உரிப் பொருளாகிய பிரிவுத்துயரால் வருந்துகின்ற இராமனை அக் கடற்கரையிலேயே ஏனைத் திணைக்குரிய உரிப் பொருள்களையெல்லாம் காணச் செய்யும் கம்பர் திறன், கவின்மிக்கதாக உள்ளது. இக்காட்சிகள் நேரே இராமன் காணும் காட்சிகளாகும்.

கடற்கரையில் காணப்படும் முத்துகள் சீதையின் பற்களை நினைப்பிக் கின்றன. அங் குள்ள பவளம் அவள் செவ்வாயிதழையும், மணிக் குவியல்கள் அவள் அணிந்திருந்த அணிகலன் களையும், கனகத்திரள்கள் அவள் பொன்னார் மேனியையும் நினைப்பிக்கின்றன. அங்கு உள்ள இருண்ட சோலையில் அச்சீதையின் கரிய கூந் தலையும், மணற் குவியல்கள் அவள் நகிலையும் நினைப்பிக்கின்றன. எனவே அவற்றையெல்லாம் இராமன் மிகமிக விரும்பி நோக்குகின்றான். சீதையின் நினைவு மேலோங்குகின்றது. கடற்

கரையாகிய நெய்தல் நிலத்திற்கு உரிப்பொருள் இரங்கல் ஆதலின் அதனையே இராமன் முதலில் காண்பதாகக் கம்பர் அமைத்துள்ளார்.

## கூடற்சுழி

நெய்தல் நிலத்தில் வாழும் வலைஞர்கள் தம் மனைவியரைப் பிரிந்து கடல்வழியே நெடுந் தொலைவு சென்றுவிட்டார்கள். அவர்கள் சொல்லிச் சென்ற பருவத்தில் வரவில்லை. கணவரோடு இருந்தபோது இனிய நகைமுகத்தினராயிருந்த வலைஞர் மகளிர், அவர்களைப் பிரிந்திருந்து அவர்கள் குறித்த காலத்தில் வராமை நினைந்து சோர்ந்த முகத்தினராய் அக்கணவர் வருகையை யறிவதற்காகப் புன்னைப் பொதும்பரில் அமர்ந்து மணலில் கூடற்சுழி இழைக்கின்றார்கள். ஒளிமிக்க மணிகள் பதித்த மோதிரம் அணிந்த தம் விரல் தேயுமாறு பெரிய சுழியை இழைத்து முடிப்பதற்கு முன்னரே அவர் பிரிவாற்றாது விடுகின்ற கண்ணீர், அச் சுழியை அழித்துவிடுகின்றது. மீண்டும் சுழிக்கின்றார்கள். அப்போதும் அதே நிலைதான் நிகழ்கின்றது. இவ்வாறு அவர்கள் கைவிரல் சுழிக்கக் கண்ணீர் அழித்துக் கொண்டே இருக்கின்றது. எனவே, கூடற்சுழி கூடாது குறையாகவே யுள்ளது. அக்குறை தீரக் கூடும்படி வலைஞர் மகளிர் கூடற்சுழியை இழைத்துக் கொண்டே இருக்கின்றார்கள். அவற்றையெல்லாம் இராமன் புன்னையம் பொதும்பரில் புகுந்து காண்கின்றான்.

''மின்னல் மணிவிரல் தேய வீழ்கணீர்
துன்னரும் பெருஞ்சுழி அழிப்பச் சோர்வினோடு
இன்னகை நுளைச்சியர் இழைக்கும் ஆழிசால்
புன்னையம் பொதும்பருட் புக்கு நோக்கினான்''

எனக் கம்பர் இராமன் செயலைப் புலப்படுத்துகின்றார். கணவரைப் பிரிந்து வருந்தும் மகளிர் அக்கணவர் குறித்த காலத்தில் கூடாமையால் கூடற்சுழி கூடுதல் கொண்டு அவர் வரவை யறிய விரும்பி அக்கூடற்சுழியை மணலில் இழைத்து இழைத்து இளைக்கின்றனர். அம் மகளிரின் நிலைமையை நோக்கும் இராமன் 'என்னைப் பிரிந்த சீதையும் இவர்களைப்போலவே என் வருகையை நோக்கிக் கூடற்சுழி இழைத்துக்கொண்டு கண்ணீர் விடுவாளன்றோ?'' என நினைந்து ஏங்காமல் இருக்க இயலுமா?

## அன்னங்களின் இன்பக் காட்சி

அடுத்து வேறொரு காட்சியைக் காண்கின்றான். கடலை அடுத்து ஒரு முடத்தாழை தோன்றுகின்றது. அத்தாழையின்மேற்பகுதியில் உள்ள மடலில் கோவையாகப் பனித்திவலைகள் காணப்படுகின்றன. அத்திவலைகள் வீழ்ந்துகொண்டே இருக்கின்றன. அத்தாழையின் அடிப்பகுதியைக் கடலின் வெள்ளிய அலைகள் மோதி மோதித் தாக்குகின்றன. இவ்வாறு மேலும் கீழும் நீர்த்துளிகளால் நனைகின்ற அந்த முடத்தாழையின்மேல் ஓர் அன்னச் சேவல் தன் பேடையைத் தன் சிறகுகளால் பக்கத்தில் அணைத்துக்கொண்டு கவலையின்றித் துயில்கின்றது. மேலே கொட்டும் பனித்திவலைகளையும் கீழே அலைகள் வீசும் நீர்த்திவலைகளையும் பொருட்படுத்தாமல் தூங்குகின்ற அந்த அன்னப்பறவைகளின் இன்பவாழ்வை - குறிஞ்சித்திணையின் உரிப்பொருளாகிய புணர் நிலையை-இராமன் காண்கின்றான். இப்பறவைகட்கு வாய்த்த வாழ்வு தானும், ஆறறிவு நிறைந்த அரச குமாரனாகிய தனக்கு வாய்த்திலதே எனப் பெருமூச்சு விடுகின்றான்.

## வழிநோக்கி வாடியிருக்கும் கொக்கின் காட்சி

மேலும் உலாவுகின்றான். ஒரு கொக்கின் பேடை ஒரு பெரிய மரக் கிளையில் வாடிய முகத்துடன் வழிநோக்கி யிருப்பதைக் காண்கின்றான். தன் அன்புறு பேடை அருந்துதற்கு இனிதாய மீனைத் தேடிக்கொணர்தற்காகவே அன்புடன் பிரிந்தது ஆண்கொக்கு. அதுவரும் வழிமேல் வைத்த விழியுடன் அந்த இளமையுடைய பெண்கொக்கு வாடியிருக்கின்றது. அது விட்டுச் சென்ற பெரிய மரக்கிளையில் இருந்து கொண்டு கணவன் வரவை எதிர்நோக்கியுள்ள இப்பெண்கொக்கு, முல்லையின் உரிப்பொருளாகிய இல்லிருத்தல் என்ற ஒழுக்கத்தை மேற்கொண்டுள்ளதை இராமன் உணர்கின்றான். அதன்தனி நிலைக்காக இரங்குகின்றான். கணவன் வரும் வழிநோக்கி வாடியிருக்கும் கொக்கின் பேடையைக் கண்டவுடன் ''சீதையும் இவ்வாறு தானே என் வரவை எதிர்நோக்கியிருப்பாள்'' என்ற எண்ணம் இராமனின் இரக்கவுணர்ச்சிக்குக் காரணமாகும்.

## நாரைகளின் பொருந்தாக்காதல்

இவ்வாறு இரங்கலும் புணர்வும் இருத்தலுமாகிய அகத்திணை ஒழுக்கங்களைக் கண்டு செல்லும் இராமன், பொருந்தாக் காமமாகிய பெருந்திணை நிகழ்ச்சியையும் கண்டதாகக் கம்பர் அமைத்துள்ளார். இது கதைப் போக்கிற்கு முன்னோடியாக அமைந்து சுவையூட்டுகின்றது. ஒரு பெண் நாரைமேல் இரண்டு பெரிய வலிய நாரைகள் காதல் கொள்கின்றன. ஒன்றை ஒன்று காதலிப்பதே இயல்பு. ஒன்றை இரண்டு ஆண் நாரைகள் காதலித்ததால் அவ்விரண்டு நாரைகளுக்கும் சினம் மூள்கிறது. மாறுபட்ட கொடிய கோபத்தையுடையவாய்க் கண்களில் தீப்பொறி பறக்கப் போர் செய்கின்றன. இந்த அடாத செயலைக் கண்டவுடன் இராமனின் நேர்மையான உள்ளத்தில் சினம் பொங்குகிறது. புருவங்களை வளைத்துக் கொண்டு கோபத்துடன் அவற்றைப் பார்க்கின்றான். அவற்றின் பொருந்தாக் காதலைக் கண்ட இராமனுக்குத் தான் காதலித்து மணந்த சீதையின்மேல், பொருந்தாக் காமங்கொண்ட இராவணன் நினைவு வராமல் இருக்க முடியுமா? அந்நினைவே அவன் புருவம்கோட்டுதற்கும் காரணமாயது என்னலாம். பின் இலங்கை புகுந்து வில்லினை வளைத்து எய்யும் அம்பினால் இராவணன் உயிரை வாங்க இருக்கின்ற இராமன், இப்பொழுது அவ்விராவணன் போன்ற கொடுமையுள்ள நாரையைக் கண்டு புருவம் மட்டும் கோட்டுவானானான். இதனால் இராமனுக்கு வெகுளியாகிய மெய்ப்பாடு தோன்றலாயிற்று.

## அன்னத்தின் ஊடலும் கூடலும்

அதன் பின் இராமன் மருதத் திணைக் குரிய ஊடலாகிய உரிப்பொருளையும் அக்கடற் கரையில் காண்கின்றான். ஊடல் கொண்ட தன் அன்னப் பேடைக்குத் தோற்றுத் தன் பணி வைப் புலப்படுத்திய ஓர் அன்னச் சேவல், பின்னர் நிகழ்ந்த கூடலில் வெற்றி கொண்ட நிலையை, இராமன் கண்டு சீதையோடு தான் அனுபவித்த இன்ப நிலையை நினைவுகூர்ந்து வாயிதழைப் பல்லினால் அதுக்குகின்றான். இதனால் இராமனுக்கு உவகைச் சுவை தோன்றியது. உடன் அச்சுவை நீடிக்காது மறைய அவலச்சுவை தோன்றுகின்றது. சீதையை நினைத்து விம்முகின்றான். பாலைத் திணையின் உரிப் பொருளுக்குரியவனாகிய இராமன், நெய்தல் நிலத்தில் உலாவிக் கொண்டு நெய்தலின் உரிப் பொருளாகிய இரங்கலையும், குறிஞ்சியின் உரிப் பொருளாகிய புணர்ச்சியையும், முல்லையின் உரிப்பொருளாகிய இல்லிருத்தலையும், பெருந் திணைக்குரிய பொருந்தாக் காமத்தையும், மருதத்திணைக்குரிய ஊடலையும் கண்டதாக அமைத்தது, கம்பரின் அகத்திணை இலக்கணப் புலமையை நன்கு புலப்படுத்துகின்றது. நெய்தல் திணையின் உரிப்பொருளாகிய இரங்கலை அந்நிலத்து வாழும் நுளைச்சியராகிய மக்களிடத்து அமைத்துக் காட்டிய கம்பர், ஏனைத் திணைக்கு உரிய ஒழுக்கங்களை அந்நிலத்து மக்கள்பால் நிகழ்ந்ததாகக் காட்டாமல், ''எந் நில மருங்கின் பூவும் புள்ளும் அந்நிலம் பொழுதொடு வாராவாயினும் வந்த நிலத்தின் பயத்த வாகும். (தொல். பொருள். 19) என்ற நூற் பாவில் கூறிய விதிப்படி, வந்த நிலத்தின் பயத்தவாய் மாறுதற்குரிய பறவைகளிடத்தே நிகழ்ந்ததாகக் காட்டிய கம்பரின் பொருளிலக்கண மரபு காக்கும் புலமைத்திறனை நோக்கின் வியப்பு விஞ்சுகின்றது.

## முடிவுரை

அவ்வாறு புட்களிடத்து உரிப்பொருள் நிகழ்ச்சியைக் காணும் வழியும்காதல் உணர்ச்சியில்சிறந்த அன்னப்பறவைகளின்பால், குறிஞ்சி உரிப்பொருளாகியபுணர்ச்சியையும், மருதத்தின் உரிப் பொருளாகிய ஊடலையும் அமைத்துக் காட்டியது, மிக்கபொருத்தமுடையசெயலாகும். ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடி யிருக்கும் கொக்கினிடத்துக் கணவன் வரவை எதிர் நோக்கி வாடியிருக்கும் இல்லிருத்தலாகிய முல்லையுரிப் பொருளை அமைத்துள்ள சிறப்பு நினைந்து நினைந்து இன்புறத்தகுவதாகும். பொருந்தாக் காமமாகிய பெருந்திணை நிகழ்ச் சிக்குப் பொருத்தமாகப் பெருநாரையைக் காட்டியிருத்தலும் சிறப்புடையதேயாகும். அன்னப் பறவைபோல் சிறப்பாக மதிக்கத் தகாத நாரையிடத்தே பொருந்தாக்காமம் இருப்பது இயல்புதானே. அகத்திணை ஏழனுள் கைக்கிளைக்காட்சியைக் காட்டாமல் விடுத்தது இங்கு இயைபின்மையால் போலும்.

நுளைச்சியர் கூடற்சுழி இழைத்துக் கொண்டு இரங்கும் நிலையை முதற்கண் கண்ட இராமன், இறுதியில் ஊடலும் பின்கூடலும் ஆகிய அன்னங்களின் விளையாட்டினைக் கண்ட தாக அமைத்தது, நோக்கி உணரும் நுட்பமுடையதாகும். இராமன் கண்ட இறுதிக்காட்சி, கூடலாகிய இன்பத்தில் முடிகின்றது. தோற்ற அன்னச்சேவல் வெல்கின்றது. இதனால் இராமனும் இராவணனை வென்று சீதையைக் கூடுதல் உறுதி என்பதைக் குறிப்பால் உணரவைத்துள்ளமை, நோக்கி நோக்கி இன்புறத் தகுவதாகும்.

---

# கவிதை இன்பம்

அரியநல் இயற்கை அழகினை ஆராய்ந்து
அகங்களித் தின்புறு வோர்க்கும்,
மருவுமிவ் வாழ்க்கை மறைபொருள் பலவும்
மதித்துணர் அறிஞர்கள் தமக்கும்,

விரிவுறு சமய மெய்யுணர் வொளியில்
விருப்பிமேன் மேற்படர் பவர்க்கும்,
திருவருள் ஒழுக்கம் செறிந்ததூ யவர்க்கும்,
சிறந்தநற் கவிதையே இன்பாம்!*

தமிழாக்கம்: ந. ரா. முருகவேள்

"To a mind brooding on the silent beauty exhibited in the varied phenomena of nature, to an intellect diving deep into the mysteries that lie in the inmost corners of life, to a soul soaring high into the ethereal regions of religion and philosophy, to a spirit seeking moral sanctity and Divine grace, nothing appears so permanently beautiful so certainly impressive and effective as the study of a fine piece of poetry".

—MARAIMALAI ADIGAL

---

# திருஅரிசிற்கரைப் புத்தூர்

திரு. டாக்டர். இரா. கலைக்கோவன்
திருச்சி.

R. RAJU
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

கும்பகோணத்துக்குத் தென்கிழக்கே ஏழு கிலோமீட்டர் தொலைவில், கும்பகோணம் நன்னிலம் சாலையில், அரசலாறு என்று இப்போது அழைக்கப்படும் அரிசிலாற்றின் தென் கரையில் அமைந்துள்ளது, திருஅரிசிற்கரைப் புத்தூர் என்னும் பாடல் பெற்ற இச் சிவத் தலம். இவ்வூர் அரிசிற்கரைப்புத்தூர் என்று மூவர் தேவாரங்களில் குறிப்பிடப்படுகிறது. இக்கோயிலில் இருந்து படியெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களிலோ அழகாதிரிப்புத்தூர் அல்லது அழகார்திருப்புத்தூர் என்று கூறப்படுகின்றது. இங்குள்ள மக்களோ, 'அழகாபுத்தூர்' என்றால் தான், வழிகாட்டுகிறார்கள். பெயர்ப்பலகையும் அழகாபுத்தூர் என்றுதான் இருக்கிறது. கும்பகோணம்-நன்னிலம் சாலையில், கும்பகோணத்திலிருந்து ஏழாவது கிலோ மீட்டரில் பாதையின் இடதுபக்கம் ஒரு மண்சாலை பிரிகிறது. அது நேராக நம்மைக் கோயிலுக்கு அழைத்துச் செல்கிறது. அம் மண்சாலையில் இருபுறமும் தென்னை மரங்கள் வரிசையாக வளர்ந்து நிற்பது மிக அருமையான காட்சியாக அமைந்துள்ளது.

பரந்து பட்டதொரு திருக்குளத்தின் கரையில் இக்கோயில் அமைந்துள்ளது. மூன்று கோபுர வாயிலைக் கடந்து உள்ளே நுழைந்ததும், வெளித் திருச்சுற்றில் வலப்புறம் சந்திரனும் இடப்புறம் சூரியனும், கிழக்குப் பார்த்த முகமாக வீற்றிருக்கின்றனர். சூரியனை அடுத்து இடப்புறம் கஜலட்சுமி, முருகன் இருவருக்கும் சிறு உட்கோவில்கள் விமானங்களுடன் அமைந்துள்ளன. வலப் புறம் சந்திரனை அடுத்துத் தனியானதொரு சிறிய உட்கோயிலில் விநாயகர் வடிவம் அமைந்துள்ளது. திருச்சுற்றின் வடக்குப் புறத்தில் சண்டேசுவரருக்கென்று ஒரு சிறு உட்கோயில் விமானத்துடன் அமைந்துள்ளது. கிழக்குப் புறத்தில் மேற்குப்பார்த்த நிலையில் பைரவர் திருமுன்னும், அதையடுத்து நவக்கிரகங்களும் அமைந்துள்ளன.

மகாமண்டபத்துள் நுழைந்ததும் நேரே மேற்குப் பார்த்த நிலையில் இறைவன் திருமுன், சிறியதொரு அர்த்தமண்டபத்தை அடுத்த கருவறையில் அமைந்துள்ளது. படிக்காசளித்த ஈசுவரர் என்றும், சுவர்ணபுரீசுவரர் என்றும் இறைவன் அழைக்கப்படுகிறார். இறைவன் திருமுன்னுக்கு இருபுறமும் மகாமண்டப வாயிலில் வாயிற்காப்போர் சிலைகள் உள்ளன. வலப்புறம் விநாயகர் சிலை உள்ளது. இடப்புறம் உள்ள சிறுமேடைமீது காசிவிசுவநாதர், விசாலாட்சியின் அழகான வடிவங்கள் அமைந்துள்ளன. இறைவன் இலிங்கமாக அமர்ந்துள்ளார். இதைத் தானாகத் தோன்றிய இலிங்கமாகக் குறிப்பிடுகிறார்கள்.

மகாமண்டபத்தின் தென்புறத்தில் மேடை, மீது வரிசையாகப் புகழ்த்துணை நாயனார், அவரது துணைவியார், மாணிக்கவாசகர், சம்பந்தர், அப்பர், சுந்தரர், பரவையார் உருவச் சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இது புகழ்த்துணைநாயனார் வாழ்ந்து இறைவன் திருவடிப் பேறு பெற்ற இடமாதலால் அப்பெருமானுக்குத் தனிச்சிறப்பு தரப்பட்டுள்ளது. மகாமண்டபத்தின் வடக்குப்புறத்தில் தெற்குப் பார்த்த நிலையில் இறைவியின் திருமுன் அமைந்துள்ளது. இறைவிக்கு 'அழகம்மை' என்று பெயர். இத்தலத்தின் மரம் வில்வமரம். கருவறையின் விமானம் வட்டவடிவமானது.

அறுபத்து மூவருள் ஒருவரான புகழ்த்துணை நாயனார் இத்தலத்தில் வாழ்ந்தவர். அவர் எப்போதும் இக்கோயில் இறைவனை வழிபடுவது வழக்கம். இறைவனுக்குத் திருமஞ்சனமாட்டு செய்து மலரிட்டுப் போற்றி வணங்கிவரும் நிலையில், அவரை வறுமை சூழ்ந்தது. உணவுக்கு வழியில்லை. பட்டினி கிடந்தபோதும் இறைவனுக்குச் செய்யும் கடமைகளில் அவர் தவறவில்லை. ஒருமுறை, வழக்கம்போல் அரிசில் ஆற்றிலிருந்து ஒருகுடம் தண்ணீர் கொண்டுவந்து இறைவனுக்குத் திருமஞ்சனமாட்டு நடத்தும்போது உடல்தளர்ச்சியால் குடம் நழுவி இறைவன் திருமுடிமீது விழுந்துவிட்டது. நாயனாரும் மயங்கி வீழ்ந்தார். அப்படியே துயின்றும் போனார்; கனவிலே இறைவன் தோன்றி, 'அஞ்சாதே! பஞ்சம் நீங்கும் வரையில் படிக்காசு ஒன்று தருகிறோம்! உணவுபெற்று வழிபடுக' என்று அன்புடன் கூறி மறைந்தார். அன்றிலிருந்து தினமும் புகழ்த்துணை நாயனாருக்குப் படிக்காசு கிடைத்து வந்தது. அவரும் வறுமை நீங்கித் தொடர்ந்து இறைபணி செய்து முக்தியடைந்தார் என்று சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணம் கூறுகிறது. சேக்கிழார் பெருமான் இவ்வூரைச் செருவிலிபுத்தூர் என்று குறிக்கிறார்கள்.

சிதைந்த நிலையில் இருந்த இக்கோயிலை, இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் உள்ளூர்க்காரர்கள் இடித்துப் புதிய திருப்பணி செய்துள்ளார்கள். இப்போது கோயிலில் எந்தக் கல்வெட்டும் காணப்படவில்லை. நல்லகாலமாக இக்கோயிலைத் திருப்பணி செய்தபோது, எப்படியோ செய்தியறிந்து, அரசு கல்வெட்டு ஆய்வாளர்கள் வந்து, பாதியழிந்திருந்த கோயிலின் அடிப்பாகத்தில் இருந்த கல்வெட்டுக்களைப் படியெடுத்துள்ளார்கள். அவற்றுள் சிதைந்த நிலையில் இருந்த முதலாம் இராசராசப் பெருவேந்தனுடைய ஏழாம் ஆண்டுக் கல்வெட்டே இங்குக் கிடைத்த கல்வெட்டுக்களுள் காலத்தால் பழமையானதாகும். இதில் சாத்தன் காரி வேளார் கண்டராதித்தன் அல்லது மும்முடிச் சோழியவரையர் என்பவர் திருப்புத்தூர் உடையார் பரமசுவாமிக்குக் கல்லால் கோயில் எடுப்

பித்த செய்தியும், கோயில் வழிபாட்டிற்கு நில மளித்த செய்தியும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இராசராசனின் இருபத்திரண்டாவது ஆண்டுக் கல்வெட்டொன்று இக்கோயிலில் விளக்கெரிப்பதாக நிலக்கொடை வழங்கப் பட்ட செய்தியைச் சொல்கிறது. இக் கல்வெட் டில், 'திருப்புத்தூர் மகாதேவர் கோயில்' என்று இக்கோயிலும், திருநறையூர் நாட்டுப் பிரம தேயமான பரதாயக்குடி என்று இவ்விடமும் குறிப்பிடப் படுகின்றன.

இராசராச மண்டலத்தின் ஒருபகுதியான மேல்வேம்பநாட்டின் கல்லூர் என்ற பகுதி யைச் சார்ந்த பட்டலக்கண் ஆதித்தன் என் பான் சூரியனுக்காக இக்கோயில் எல்லைக் குள் ஒரு சிறு கோயில் கட்டியதாக இராசராச சோழனின் கல்வெட்டொன்று குறிப்பிடுகிறது. இக்கோயிலைப் பற்றிய குறிப்புக்களில் ,தரும புர ஆதீன வெளியீடான சம்பந்தர் தேவாரத் தொகுதி இரண்டாம் திருமுறையில், 'இக் கோயில் கோச்செங்கட் சோழன் திருப்பணி' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் இங் குக் கிடைத்த கல்வெட்டுக்களில் ஒன்றாக ஏழு என்ற எண்ணைத் தொடர்ந்து கீழ்க்கண்ட செய்தி தரப்பட்டுள்ளது.

## கோச்செங்கட் சோழன்

ஒரு கல்வெட்டில் ''குலோத்துங்கசோழ வளநாட்டு அழகார் திருப்புத்தூர்'' என்று ஊர்ப்பெயர் குறிக்கப்பட்டுள்ளது.

இச்செய்தியின் பொருள் விளங்கவில்லை! கோச்செங்கட்சோழன் என்ற பெயருக்கும் இக் கல்வெட்டுக்கும் உள்ள தொடர்பு என்னவென் பது புரியவில்லை. கல்வெட்டில் குலோத்துங்க சோழ வளநாடு என்றிருப்பதால், இது மிகவும் பிற்பட்ட காலத்துக் கல்வெட்டு என்பது தெளி வாகும். கோச்செங்கட்சோழர் பெயருக்குப் பின் இக்கல்வெட்டு தரப்பட்டிருப்பதன் பொருள் புலனாகவில்லை. இது அச்சுப்பிழை யாக இருக்கவேண்டுமென்றுதான் கருதவேண்டி யுள்ளது.

இக்கோயில் கற்றளியாக்கப்பட்டது, முத லாம் இராசராசன் காலத்தில் என்பதற்குக் கல்வெட்டுச் சான்று உள்ளது. ஆனால் இக் கோயிலை எழுப்பிய முதல் வேந்தன் யார் என்பதற்கு எந்தவிதச் சான்றுகளும் இல்லை. இக்கோயிலின் சிவாச்சாரியார் திரு. இராம லிங்க குருக்கள், இக்கோயில் கோச்செங்கட் சோழனால் எடுப்பிக்கப்பட்டதென்றும், அதைச் சம்பந்தரே பாடியிருப்பதாகவும் கூறிக் கீழ்க் கண்ட வரிகளைப் பாடிக் காட்டினார்.

''நிலந்த ணீரோ டனல்கால்
விசும்பி னீர்மையான்
சிலந்தி செங்கட் சோழ
னாகச் செய்தானூர்''

'சிலந்தியைச் செங்கட் சோழனாகச் செய்த வனுடைய ஊர்' என்பதுதான் இவ் வரிகளின் பொருளே தவிர, செங்கட்சோழன் செய்தவூர் என்பதல்ல. இதேபதிகத்தில்

''வள்ளி முலைதோய் குமரன்
தாதை வான்தோயும்
வெள்ளி மலைபோல் விடையொன்
றுடையான் மேவும் ஊர்''

''மேவா அசுரர் மேவெயில்
வேவ மலைவில்லால்
ஏவார் எரிவெங் கணையால்
எய்தான் எய்தும்ஊர்''

என்ற வரிகள் நோக்கத்தக்கன. முருகனின் தந்தை, வெள்ளிமலை போன்ற எருதுடை யான் மேவும் ஊர், திரிபுரம் எரித்தவன் எய் தும் ஊர் என்று சிவபெருமானின் திருவிளை யாடல்களைக் குறிப்பிட்டு, அப்பெருமான் உறையும் ஊர் என்றுதான், அரிசிற்கரைப் புத்தூரைச் சம்பந்தர் கொண்டாடுகிறாரே தவிர, 'கோச்செங்கட்சோழன் செய்த கோயில்' என்று குறிப்பிடவில்லை. இதை மாடக்கோயில் என்றோ, பெருந்திருக்கோயில் என்றோ, சம் பந்தர் பெருமான் தன் பதிகத்தில் ஓரிடத்திலே னும் குறித்தாரில்லை.

''முத்தா ரும்புனல் மொய்யரிசிற்கரைப்
புத்தா ரன்னடி போற்றியென் பாரெலாம்
பொய்த்தா ரும்புலன் ஐந்தொடு புல்கிய
மைத்தா ரும்வினை மாற்றவும் வல்லரே''

என்று இத்தலத்தைப்பாடிப் பரவும் அப்பர் சுவாமிகளும், இக்கோயிலை மாடக் கோயிலா கவோ, இதைக் கட்டிய மன்னன் கோச்செங் கணான் என்றோ ஓரிடத்திலும் குறிப்பிட வில்லை.

''கலைக்கொம்பும் கரிமருப் பும்மிடறிக்
கலவம்மயிற் பீலியும் காரகிலும்
அலைக்கும்புனல் சேரரி சிற்றென்கரை
அழகார்திருப் புத்தூர் அழகனீரே''

என்ற சுந்தரரின் திருப்பதிகத்திலும் இக்கோயி லின் வரலாறு காணப்படவில்லை.

எந்தவிதமான அகச்சான்றும் புறச்சான் றும் இல்லாத நிலையிலும் இக் கோயிலை முத லில் எழுப்பின வேந்தன் கோச்செங்கட் சோழ னாகத்தான் இருத்தல் வேண்டும் என்பதில் ஐயமில்லை. கி.பி நான்காம் நூற்றாண்டி லிருந்து ஆறாம் நூற்றாண்டுக்குள்ளான இடைப் பட்டதொரு காலக் கட்டத்தில் வாழ்ந்த கோச் செங்கணான்,மாடக் கோயில்களை எடுப்பித்து, தமிழகத்துக் கோயில் கட்டிடக்கலை வரலாற் றில் ஒரு புதிய அமைப்பு முறையை உருவாக்கி வரலாறு படைத்தது உண்மை. அப்பெருமகன் கட்டிய மாடக் கோயில்கள் பலவற்றை இன் றும் நாம் தமிழகத்தின் பல இடங்களில் காண லாம். கோச்செங்கட் சோழர் மாடக்கோயில் கள் தவிர, வேறு அமைப்புடைய கோயில்களை யும் கட்டினார். திருச்சியிலுள்ள திருமூக்கீச் சரம், அழகிய மணவாளப்பெருமாள் கோயில், திருவானைக்கா போன்ற தலங்கள் மாடக்கோ யில் அமைப்பிலிருந்து மாறுபட்டவையாகும். மேலும் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த சம்பந்தரும் அப்பரும் இக்கோயிலைப் பாடி யிருப்பதால், அவர்களுக்கு முன்னாலேயே இக் கோயில் கட்டப்பெற்றிருக்க வேண்டுமென்பது தெளிவு. கோச்செங்கணான் ஒருவனே, பல கோயில்களை எழுப்பிய ஒரே இடைக்காலத்து மன்னனாக அறியப்படுவதால், உறுதியான சான்றுகள் இல்லாதபோதும், அரிசிற்கரைப்புத் தூர்த் திருக்கோயிலை, ஆதியில் எழுப்பிய மன் னன் கோச்செங்கணானே என்று துணியலாம்.

# ஆகமங்களின் காலம்

திரு. மு. அருணாசலம்

ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருமூலர் ஒன்பது ஆகமங்களைச் சொல்லுகின்றார்.

பெற்றநல் ஆகமம் காரணம் காமிகம்
உற்றநல் வீரம் உயர்சிந்தம் வாதுளம்
மற்றவ் வியாமளம் ஆகுங்கா லோத்தரம்
துற்றநற் சுப்பிரம் சொல்லும் மகுடமே.

இங்கு அவர் கூறுபவை காரணாகமம், காமிகாகமம், வீராகமம், சிந்தியாகமம், வியாமளாகமம், காலோத்தரம், சுப்பிரபேதம், மகுடாகமம் என்பன. இவற்றுள் யாமளம் என்பது தேவியாமளம் என்ற சாக்த தந்திரம். இது சைவாகமம் 28இல் ஒன்று அல்ல. பின்னர் திருமூலர் சொல்லுபவற்றால், அவர் ஆகமங்களைத் தமிழில் சொல்லுவதற்காக அவதரித்தார் என்றும் கொள்ள இடமுண்டு.

மேலும், இந்த ஒன்பது ஆகமங்களையும் அவர் ஒன்பது தந்திரங்களாக அமைத்தார் என்று பலர் சொல்லவும் காண்கிறோம். இதில் பொருத்தமில்லை. பொருளுமில்லை. திருமந்திரத்தின் ஒன்பது பகுதிகளும், இந்த ஒன்பது ஆகமங்களின் பொருளை அமைத்துக் கொள்ளவில்லை.

இனி, இவர் ஆகமங்களைக் குறிப்பிடுவதால், இவருக்கு நெடுங்காலம் முன்னமேயே ஆகமங்கள் செய்யப்பட்டு இருந்தன என்றே கருத வேண்டும். கௌதம புத்தருடைய காலம் கி. மு. 563 முதல் 483 வரை என்பர். புத்தர் எதையும் எழுதி வைக்கவில்லை. ஆனால் அவர் காலமான சிறிது காலத்திற்குப் பின், அவர் சீடர்கள் கூடி அவருடைய உபதேச மொழிகளை மூன்று தொகுப்புக்களாகத் தொகுத்தார்கள். அத்தொகுப்புக்குத் 'திரிபிடகம்' என்று பெயர். திரி-மூன்று, பிடகம்-பெட்டி அல்லது கூடை. அவையாவன: சூத்திரபிடகம், வினயபிடகம், அபிதர்மபிடகம் என்பன. இவை அக்கால அர்த்தமாகதி யாகிய பாலி மொழியில் எழுதப் பெற்று, வாய்மொழியாகவே சொல்லப் பெற்று வந்தன. அதனால் பல சமயம் பல புதிய கருத்துக்கள் இடைச்செருகலாகச் சேர்த்துச் சொல்லப் பெற்ற காரணத்தால் அவற்றை விலக்க எண்ணிய பிட்சுக்கள், வாய்மொழியாக இருந்த உபதேசங்களைப் பிற்காலத்தில் எழுத்தில் எழுதி வைத்தார்கள். எழுதி வைத்த காலம் கி.மு. முதலாம் நூற்றாண்டு. திருஞானசம்பந்தர் பிடகங்களைப் பிடக்கு என்று சொல்லக் காண்கிறோம்.

இங்கு நாம் கருத வேண்டியது பிடகாகமங்கள் புத்தர் பரிநிர்வாணம் அடைந்த காலத்தை அடுத்தே தோன்றின என்பதாகும். இங்கு ஆகமம் என்ற பெயரின் அமைப்பு சிந்திக்கத்தக்கது. அன்றியும் காலத்தால் சிறிது பிற்பட்டுத் தோன்றிய புத்த நூல்களும், ஏகோத்தர ஆகமம், மத்தியமாகமம் என்று ஆகமப் பெயராலேயே வழங்கப்பட்டன. இதிலிருந்து ஒன்று தெளிவாகின்றது. அதாவது முன்னமே இருந்த சாத்திரங்களுக்கு வழங்கிய ஆகமம் என்ற பெயரை எடுத்துப் பௌத்தர்கள் தங்களுடைய புதிய சாத்திரங்களுக்கு வைத்துக் கொண்டார்கள் என்பதே. இதனால் நாம் பெறுவது முந்தைய சாத்திரங்களாகிய ஆகமங்கள் (சைவ ஆகமங்கள்), புத்தரின் பரிநிர்வாண காலமாகிய கி. மு. 483-க்கு முன் அதாவது, கி.மு. 5ஆம் நூற்றாண்டிற்கு முன், வழக்கிலிருந்தன என்பதாகும்.

மற்றொரு செய்தியும் நினைவு கூரலாம். நேபாளத்தில் புத்தர் பிறந்த அரச குடும்பமாகிய சாக்கிய மரபு, கபிலவாஸ்து. இன்றும் கூட உலகிலேயே ஒரே இந்து ராஜ்யமாக உள்ளநாடு, நேபாளம் என்பது எல்லோரும் அறிந்தது. இதனாலெல்லாம் சைவ ஆகமத்தின் பழமை விளங்கும்.

வடமொழி மகாபாரதம், பாசுபதாகமம் (சைவம்), பாஞ்சராத்திராகமம் (வைணவம்) ஆகிய இரண்டைக் கூறுகிறது. பாசுபதம் என்று சொல்லும்போது, பொதுவாக சைவம் என்று பொருள் கொள்ள வேண்டும். நேபாளம் சைவமாயிருந்து ஆகம முறைப்படி சிவ வழிபாடு நடத்தி வந்த நாடு. இந்த இருபதாம் நூற்றாண்டிலும்கூட, நம்நாட்டுப் பண்டிதர் அனேகர் நேபாளம் சென்று அங்குள்ள ஆகம ஏடுகளைப் பார்வையிட்டிருக்கிறார்கள்.

இவற்றால் நாம் பெறுவது மிக்க நெடுங்காலத்திற்கு முன்னமேயே, பல ஆகமங்கள் இருந்தன என்ற செய்தி ஆகும். இதனால்,

இப்பொழுது நமக்குக் கிடைக்கும் ஆகமங்கள் எல்லாமே அந்தக் காலத்திலிருந்தன. இந்த வடிவத்திலேயே இருந்தன என்பது பொருள் ஆகாது. இவை யாவும் வாய் மொழியாகவே, ஆசிரியன், மாணாக்கன் என்ற முறையில் கற்பிக்கப்பட்டு வந்தன. பல நூற்றாண்டு சென்று ஏட்டில் எழுதப்பட்டன. அப்போது பாடத்தில் இடைச்செருகலும், மாறுதலும் ஏற்பட்டிருக்கக் கூடும். சமூகம் அன்று இருந்த படியே தொடர்ந்து இருக்கவில்லை. மாறிக் கொண்டு வந்திருக்கிறது. இந்த மாற்றம் சாத்திரங்களையும் பாதித்தது என்பதில் ஐயமில்லை. பழைய நூல்கள் விரிவடைந்து புதுக்கருத்துக் களைத் தழுவிக் கொண்டிருக்கலாம். எனினும் முக்கியமான தத்துவக்கருத்தானது தொடர்ந்து ஒன்றுபோலவே இருந்து வந்திருக்கிறது. பண்டைய ஆகமப் பாடங்களே இன்றும் இருக்கின்றன என்று நாம் நம்பலாம். தத்துவத்திற்குப் போர்வையாய் உள்ள சடங்கும், பிறவும் மாறியிருக்கும். காலக்கிரமத்தில், புதிய ஆகமங்கள் தோன்றின. உப ஆகமங்களும் போர்வையாய் உள்ள சடங்கும் பிறவும் மாறியிருக்கும் காலக்கிரமத்தில் தோன்றின என்பது உண்மையே. ஆயினும் இவையெல்லாம் ஒரு கருத்தை மாற்ற முடியாது. அதாவது முக்கியமான பல ஆகமங்கள் தத்துவக் கருத்தைப் பொறுத்த வரையில் இன்றுள்ள வடிவத்திலேயே அன்றும் இருந்தன என்பதாகும்.

விரிவாக ஆகம ஆய்வு செய்த கல்கத்தா தத்துவப் பேராசிரியரான சுரேந்திரநாத் தாஸ் குப்தா பின்வருமாறு எழுதுகிறார்: 'ஆகமங்களுடைய காலத்தை வரையறுத்துக் கூற இயலவில்லை. ஒரு கால், இவற்றுள் பழமையான ஆகமங்கள், கி. பி. 2-3 நூற்றாண்டுகளில் எழுதப் பெற்றிருக்கலாம். 12, 13 நூற்றாண்டு வரை கூட ஆகமம் எழுதும் வேலை தொடர்ந்து நடைபெற்றிருக்கலாம். இருப்பினும், மேலே நாம் குறிப்பிட்டபடி முக்கிய மூல ஆகமங்களின் காலம் புத்தருக்கு முற்பட்ட காலம்.

சைவ சமய நூல்களுக்கும், பிற்காலத்து அவை எழுதப்பட்டபோதும், ஆகமம் என்ற பெயரையே இட்டிருந்தார்கள். இவற்றுக்கு ஜினாகமம் என்று பெயர். இவை அங்காகமம், பூர்வாகமம், பகுசுருதி ஆகமம் என்பன. சைன ஆகமங்கள் அல்லாமல், சக்திபரமான சாக்தாகமங்களும், விஷ்ணுபரமான வைகானச ஆகமங்களும் பாஞ்சராத்திராகமங்களும் இருந்திருக்கின்றன. ஆயினும் பொதுவாக ஆகமங்கள் என்று சொல்லும்போது, சைவ ஆகமங்களையே குறிக்கும். மற்றவையெல்லாம் காலத்தால் பிற்பட்டவையே.

மேலும் தாஸ்குப்தா சொல்லுகின்ற மற்றும் ஓர் கருத்து இங்கே நினைவு கூரத் தக்கது. சங்கரர் தோன்றுவதற்கு நெடுங் காலம் முன்னமேயே புராணங்கள் தோன்றி விட்டன. சிவாகம புராணமானது சிவபிரான் சக்திக்கு அளித்த உபதேசங்களைக் கொண்டிருக்கின்றது. இந்த உபதேசங்களே சிவாகமங்கள். ஆகவே சிவாகமங்கள், சிவாகம புராணத்திற்கு நெடுங்காலம் முற்பட்டவை. இதனால், சைவாகமம் மிகவும் பழமையானது என்ற கருத்து உறுதியாகின்றது.

எல்லா ஆகமங்களும் மொத்தமாக ஒரே சமயத்தில் உருப்பெறவில்லை. வேதங்கள், அபௌருஷேயம் அதாவது மனிதனால் செய்யப் பெறவில்லை. வேதங்கள் பிரமனின் நான்கு முகங்களினின்றும் தோன்றின. அதாவது பக்குவம் அடைந்த ஞானிகளுக்கு உள்ளத்தில் பிரமம் வேதங்களை உணர்த்தியிருக்கிறது. இதை ஞானிகள் அல்லது ரிஷிகள் ஏனையோருக்கு உபதேசித்தார்கள். ஆதலால் செவி வழியாக வந்த காரணத்தால், வேதங்கள் 'சுருதி' எனப்பட்டன. அவைபோலவே ஆகமங்களும் சிவபெருமானுடைய பஞ்ச முகங்களால் ரிஷிகளுக்கு உபதேசிக்கப்பட்டு, அவர்களால் மாணாக்கர்களுக்கு உபதேசிக்கப்பட்டு, வழி வழியாக வந்த காரணத்தால், இவைகளும் சுருதி எனப்படுகின்றன.

ஆகமங்களின் பழமைக்கு மற்றும் ஒரு சான்றும் உண்டு. பிரமசூத்திரம் செய்த பாதராயணர் சில ஆகம நெறிகளைக் குறிப்பிடுகிறார். ஆகவே, அவர் அந்நூலைத் தொகுப்பதற்கு முன்னமேயே ஆகமங்கள் இருந்தன என்பது தெளிவு. சிலர் பிரமசூத்திரத்தின் காலம் மகாபாரதத்திற்கு முன்பு என்றும், புத்தருக்கு முன்பு என்றும் பலவிதமாகக் கூறுவார்கள். இவையெல்லாம் ஆகமங்களின் பழமையைக் காட்டும். சில உபாகமங்கள் சைன, பௌத்த, சாங்கிய நெறிகளை எடுத்து விமர்சிக்கின்றன. எனவே இவை அவற்றிற்குப் பிற்பட்டவை என்பது தெளிவு.

திருக்குறளுக்கு 13ஆம் நூற்றாண்டில் உரை எழுதுகின்ற பரிமேலழகர், சைவாகமங்களை நன்கு பயின்றவர் என்பது தெரிகின்றது. கடவுள் வாழ்த்தில் 'எண்குணத்தான் தாளை வணங்காத் தலை' என்ற தொடருக்கு உரை எழுதும்போது, சிவபெருமானுக்குரிய எண் குணங்களைக் குறிப்பிட்டு ''இவை சைவ ஆகமத்தில் கண்டது'' என்று எழுதுகிறார். அவருக்கு அருகதேவனுடைய எண்குணங்களைச் சொல்ல மனம் ஒவ்வவில்லை. தாம் சிறந்த வைணவராயிருந்தபோதிலும், வைதிக சமயத்தின் மற்றொரு சமயமாகிய சைவத்தில் சொல்லப்பட்டகருத்தே, அதிகாரபூர்வமானது என்று கருதிச் சைவாகமத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் பரிபாடலில் இரண்டு பாடல்களுக்கு உரை எழுதுமிடத்து, இவரே ஒன்றில் ஆகமங்களால் காண முடியாத திருமால் என்றும், மற்றொன்றில் ''ஆதிரைச் செல்வனுக்கு ஆகம முறைப்படி விழா தொடங்கினார்கள்'' என்றும் எழுதுகிறார். இங்கு ஆகமம் சைவாகமம். சங்க இலக்கியமான பரிபாடலுக்கு எழுதும் உரையில் பக்தியோடு ஆகமத்தைக் குறிப்பிடுவது ஆகமங்களுக்கு இருந்த புராதன நிலையைச் சுட்டிக் காட்டுகின்றது. இதுகாறும் கூறியவற்றால் மூலாகமங்கள் புராதனமானவை என்பதும், அவை புத்தர் காலத்திற்கு முற்பட்டவை. அதாவது கி. மு. 5ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டவையாய் இருக்கும் என்பதும், நன்கு விளங்கும்.

***

# கோல்லிமலை
# அருள்மிகு அறப்பளீசுவரர் திருக்கோயில்
# தல வரலாறு

## 1. கொல்லி மலை

தமிழ்நாட்டில் எத்தனையோ பலப்பல மலைகள் உள்ளன. அவைகளுள் ஒருசில, தொன்னெடுங் காலம் முதலே இலக்கியச் சிறப்பும், வரலாற்றுச் சிறப்பும் பெற்றுத் திகழ்கின்றன. சைவ சமய ஆசிரியர்களாகிய சம்பந்தர் அப்பர் சுந்தரர் மாணிக்கவாசகர் என்னும் நால்வர் பெருமக்கள் வாழ்ந்திருந்து, தேவார திருவாசகத் திருமுறைப் பாடல்களை அருளிச் செய்த காலத்தில், திருக்காளத்தி - திருக்கழுக் குன்றம் - திருவண்ணாமலை-திருமுதுகுன்றம் - திருச்சிராப்பள்ளி - திருக்கற்குடி - திருஈங் கோய் - திருவாட்போக்கி - திருக்கொடுங் குன்றம் - திருப்பரங்குன்றம் - திருக்குற்றாலம் முதலிய மலைகள், மிகவும் புகழோங்கிச் சிறப்புற்றன.

சமய ஆசிரியர்களின் காலத்திற்கு முற்பட்ட சங்ககாலத்தில், பொதினி (பழநி)மலை- பறம்புமலை - கோடைமலை - பொதியமலை- குதிரைமலை - முதிரமலை - தோட்டிமலை முதலிய மலைகள், பெரும்புகழ் வாய்ந்து திகழ்ந்திருந்தன. அவைகளுள் ஒன்றாகக் கொல்லி மலையும், 2,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க காலத்திலேயே, சங்ககாலப் புலவர்களால் புகழ்ந்து போற்றிப் பாடப்பெற்ற சிறப்புடையதாகத் திகழ்ந்திருந்தது. இக் கொல்லிமலை, சேலம் மாவட்டத்தில், நாமக் கல்-ஆத்தூர் வட்டங்களில், 17 மைல் நீளம் உடையதாகப் பரந்து விரிந்து படர்ந்துள்ளது.

இக்கொல்லிமலைக்குச் சதுரகிரி என்ற ஒரு பெயரும் வழங்கி வருகின்றது. எனினும், மதுரை மாவட்டத்தில் வத்திராயிருப்பு என்னும் இடத்திற்கு அருகில் சதுரகிரி என்னும் பெயரில் மற்றொரு மலை இருந்து வருகின்றது. இதற்குத் திருவில்லிபுத்தூர் வழியாகவும், விருதுநகர் வழியாகவும் செல்லலாம். அந்தச் சதுரகிரி, கொல்லி மலையாகிய சதுரகிரியினின்று வேறுபட்டதாகும். சதுரகிரி எனப் பிற்காலத்தில் பெயர் பெற்ற கொல்லிமலையையே சங்க காலப் புலவர்கள் தம் பாடல்களில் புகழ்ந்து பாடியுள்ளனர். அவைகளுள் சில வருமாறு :

''முள்ளூர் மன்னன் கழல்தொடிக் காரி
செல்லா நல்இசை நிறுத்த வல்வில்
ஓரிக் கொன்று சேரலர்க்கு ஈத்த
செவ்வேர்ப் பலவின் பயம்கெழு கொல்லி''

—அகநானூறு, 208

''நிறையுறு மதியின் இலங்கும் பொறையன்
பெருந்தண் கொல்லிச் சிறுபசுங் குளவிக்
கடிபதம் கமழும் கூந்தல்
மடமா அரிவை தடமென் தோளே''

—நற்றிணை, 346

''வேந்து தந்த பணி திறையாற்
சேர்ந்தவர்தம் கடும்பு ஆர்த்தும்,
ஓங்கு கொல்லியோர், அடு பொருந!
வேழ நோக்கின் விறல்வெஞ் சேஎய்!
வாழிய, பெரும! நின் வரம்புஇல் படைப்பே!'

—புறநானூறு, 22.

கொல்லிமலை சேரர் பரம்பரையினர்க்கு உரியது. இவ்வுண்மை, ''கொல்லி ஆண்ட குடவர் கோவே'' எனவரும் சிலப்பதிகார வரியால் புலனாகின்றது. 'பொறையர்' என்பது சேர அரசர்களுக்கு உரிய பெயர். ஆதலின்,

''களிறுகெழு தானைப் பொறையன் கொல்லி'' என்று, அகநானூறு(62) இக்கொல்லி மலையைக் குறிப்பிடுகின்றது. கொல்லிமலை, சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறைக்கு உரியதாக இருந்த செய்தியினை, குறுங்கோழியூர் கிழார் என்னும் சங்க காலப் புலவர், புறநானூறு 22ஆம் பாடலில் குறித்துள்ளார்.

## 2. கொல்லிப் பாவை

கொல்லிமலையின் புகழுக்கு ஒரு பெரும் சிறந்த காரணமாக, அதன்கண் அமையப் பெற்றிருந்த கொல்லிப் பாவை என்பது விளங்கியது. கொல்லிப் பாவையைப் பற்றிய குறிப்புக்கள் பல, சங்க இலக்கியப் பாடல்களில் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன. ஒரு சமயம் அசுரர்கள் தேவர்களுடன் பகைத்து எதிர்த்துப் போர்புரிய வந்தனர். அங்ஙனம் அசுரர்கள் வருதலை, எங்ஙனமேனும் தடுத்து நிறுத்தி, அசுரர்களிடமிருந்து தேவர்களைக் காப்பாற்று

வதற்காகத் தேவர்களும் முனிவர்களும் வேண்டிக் கொண்டபடி, தெய்வத் தச்சன் ஆகிய மயன் என்பவன், கொல்லிமலையின்கண் காண்பவர் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து காமம் உறுவித்து மயக்கிக் கொல்லவல்ல ஓர் அழகிய பாவையின் படிமத்தினைச் செய்து வைத்தான். கொல்லி மலையின்கண் இருந்த தனாலும், அசுரர்களையும், அரக்கர்களையும் தனது அழகினால் மயக்கிக் கொல்வித்து வந்த தனாலும், அப்பாவைப் படிமத்திற்குக் 'கொல்லிப் பாவை' எனப் பெயரமைந்தது என்னும் கதை, மக்களிடையில் வழங்கி வருகின்றது.

இங்ஙனம் தன்னைக் காண்போரைத் தனது பேரழகினால் மயக்கிக் கொல்லவல்ல கொல்லிப்பாவை ஆகிய படிமம் ஒன்று கொல்லி மலையின்கண் செய்து, அமைக்கப்பட்டிருந் தமை பற்றிய செய்தி, பின்வரும் சங்கப்பாடல் களில், முறையே குறிக்கப் பெற்றுள்ளன. அப்பாடற் பகுதிகள் வருமாறு:

களிறுகெழு தானைப் பொறையன் கொல்லி
ஒளிறுநீர் அடுக்கத்து வியலகம் பொற்பக்
கடவுள் எழுதிய பாவையின்
மடவது மாண்ட மாஅ யோளே
—அகநானூறு, 62.

செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி
நிலைபெறு கடவுள் ஆக்கிய
பலர்புகழ் பாவை அன்னநின் நலனே
—அகநானூறு, 209

பெரும்பூட் பொறையன் பேஎமுதிர் கொல்லிக்
கருங்கண் தெய்வம் குடவரை எழுதிய
நல்லியற் பாவை அன்னஎம்
மெல்லியற் குறுமகள் பாடினள் குறினே
—குறுந்தொகை, 89.

வல்வில் ஓரி கொல்லிக் குடவரைப்
பாவையின் மடவந் தனளே
மணத்தற் கரிய பணைப்பெருந் தோளே
—குறுந்தொகை, 100

உரைசால் உயர்வரைக் கொல்லிக் குடவயின்
அகல்இலைக் காந்தள் அலங்குகுலைப் பாய்ந்து
பறவை இழைத்த பல்கண் இறாஅல்
தேனுடை நெடுவரைத் தெய்வம் எழுதிய
வினைமாண் பாவை அன்னோள்
கொலைசூழ்ந் தனளால், நோகோ யானே!
—நற்றிணை, 185

பயங்கெழு பலவின் கொல்லிக் குடவரைப்
பூதம் புணர்த்த புதிதியல் பாவை
விரிகதிர் இளவெயில் தோன்றி அன்ன, நின்
ஆய்நலம் உள்ளி வரின், எமக்கு
ஏமம் ஆகும் மலைமுதல் ஆறே
—நற்றிணை, 192.

செவ்வேர்ப் பலவின் பயம்கெழு கொல்லித்
தெய்வம் காக்கும் தீதுதீர் நெடுங்கோட்டு,
அவ்வெள் அருவிக் குடவரை யகத்துக்
கால்பெரிது இடிப்பினும், கதழ்உறை கடுகினும்,
உரும் உடன்று எறியினும், ஊறுபல தோன்றினும்,
பெருநிலம் கிளரினும், திருநல உருவின்
மாயா இயற்கைப் பாவையிற்,
போதல் ஒல்லாள் என்நெஞ்சத் தானே
—நற்றிணை, 261.

## 3. வல்வில் ஓரி

சங்ககாலத்தில் விளங்கிய வள்ளல்கள் பலருள், வல்வில் ஓரி என்பவனும் ஒருவன் ஆவான். இவன் கொல்லிமலைக்குத் தலைவன். கொல்லிமலையையும் அதனைச் சூழ்ந்திருந்த நிலப் பகுதிகளையும், இவன் அரசாண்டு வந் தான். இவனது குதிரை, ஓரி என்னும் பெயர் உடையது. கிரேக்க மாவீரன் அலெக்ஸாண் டர் 'புசிபேலஸ்' என்னும் புகழ்மிக்க குதிரையை வைத்திருந்தது போலவும், அண்மைக் காலத் தில் நம் தமிழகத்தில் வாழ்ந்திருந்த தேசிங்கு என்னும் சிற்றரசன், 'பாராசாரி' என்னும் பராக்கிரமம் மிகுந்த குதிரையை வைத்திருந் தது போலவும், வல்வில்ஓரி என்னும் வள்ளலும் தன்னுடைய பெயரையே கொண்ட ஓரி என் னும் சிறந்த குதிரையைத் தான் போர்க்களங் களுக்குச் செல்லும் காலங்களில் பயன்படுத்து வதற்கு வைத்திருந்தான். அதனால் இவனுக்கு 'ஓரிக் குதிரை ஓரி' என்ற புகழ்ப் பெயரமைந் திருந்தது.

'ஓரி' என்னும் சொல், ஒப்பற்றவன் என்னும் பொருளை உடையது. 'தனக்கு உவமை இல்லாதான்' என்று, திருவள்ளுவர் இறைவனைக் குறிப்பிடுவர். அந்நிலையில் வள்ளற்றன்மையிலும், வீரச் சிறப்பிலும் ஒப்பு யர்வற்று விளங்கியதனால், இவனுக்கு ஓரி என்னும் காரணப் பெயர் அமைந்திருத்தல் கூடும். இவன் ''ஆதன்ஓரி'' எனவும் வழங்கப் படுவான்.

''அடுபோர் ஆனா ஆதன் ஓரி
மாரி வண்கொடை காணிய நன்றும்
சென்றது மன்,எம் கண்ணுளங் கடும்பே''

என்று வரும் புறநானூற்றுப் பாடல் (153) வரிகள், இவ்வுண்மையினை உணர்த்தும். இவ் வள்ளலைப் புறநானூற்றில் வன்பரணர், கழைதின்யானையார் என்னும் புலவர்கள் இருவர் பாடியுள்ளனர்.

ஒரு சமயம், காட்டில் வேட்டையாடச் சென்ற இவன், ஒரு காட்டு யானையின்மீது தன்னுடைய வில்லை வளைத்துக் கூரிய வலிய அம்பு ஒன்றைச் செலுத்தினான். அவ்வம்பு அக்காட்டு யானையின் மீது பாய்ந்து, அதனைக் கீழே தள்ளியது; பின்னர்த் திறந்த வாயை உடைய புலியின்மீது பாய்ந்து அதனைக் கொன் றது; அருகே இருந்த புள்ளிமானைத் தாக்கிக் கீழே உருட்டியது; அவ்வழியே ஓடிவந்த காட்டுப் பன்றியை வீழ்த்தியது; அவ்வளவி லும் அமையாமல் பக்கத்தில் இருந்த புற்றில் கிடந்த உடும்பின்மீது பாய்ந்து, அதனைக் கொன்றது. இங்ஙனம் ஓர் அம்பினாலேயே பல உயிர்களைக் கொன்று வேட்டையாடக் கூடிய வில்வலிமை உடைய வீரனாக விளங்கிய தனால், ஓரிக்கு 'வல்வில்ஓரி' என்னும் சிறப்புப் பெயர் ஏற்படுவதாயிற்று. இச்செய்தியைப் பின்வரும் புறநானூற்றுப் பாடல் குறிப்பிட்டி ருத்தல் காணலாம்.

''வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி
பேழ்வாய் உழுவையைப் பெரும்பிறிது உறீஇப்
புழற்றலைப் புகர்க்கலை உருட்டி, உரற்றலைக்
கேழற் பன்றி வீழ, அயலது
ஆழற் புற்றத்து உடும்பிற் செற்றும்
வல்வில் வேட்டம் வலம்படுத்து இருந்தோன்''
—புறம், 152

கடைச்சங்க காலத்தில் வாழ்ந்திருந்த வேள்பாரி, மலையமான் திருமுடிக்காரி, எழினி, வேளாவிக்கோப் பெரும்பேகன், ஆய்வேள், நள்ளி என்னும் வள்ளல்களைப் போல, கொல்லி மலையை ஆண்ட வல்வில்ஓரியும், ஒரு சிறந்த பெருவள்ளலாகத் திகழ்ந்திருந்தான். இவ் வள்ளல்கள் எழுவரையும் பற்றி,

'முரசுகடிப்பு இகுப்பவும் வால்வளை துவைப்பவும்,
அரசுடன் பொருத அண்ணல் நெடுவரை,
கறங்கு வெள்அருவி கல்அலைத்து ஒழுகும்
பறம்பின் கோமான் பாரியும்; பிறங்குமிசைக்
கொல்லி ஆண்ட வல்வில் ஓரியும்;
காரி ஊர்ந்து பேர்அமர்க் கடந்த,
மாரி ஈகை மறப்போர் மலையனும்;
ஊராது ஏந்திய குதிரைக் கூர்வேற்
கூவிளங் கண்ணிக் கொடும்பூண் எழினியும்;
ஈர்ந்தண் சிலம்பின் இருள்தூங்கு நளிமுழை,
அருந்திறற் கடவுள் காக்கும் உயர்சிமைப்
பெருங்கல் நாடன் பேகனும்; திருந்துமொழி
மோசி பாடிய ஆயும்; ஆர்வம்உற்று
உள்ளி வருநர் உலைவு நனிதீரத்
தள்ளாது ஈயும் தகைசால் வண்மைக்
கொள்ளார் ஓட்டிய நள்ளியும்:
எனஆங்கு எழுவர்.....''

என்று, பெருஞ்சித்திரனார் என்னும் புலவர், புறநானூற்றுப் பாடல் ஒன்றில் (158) பாடியிருக்கின்றார். பத்துப்பாட்டில், சிறுபாணாற்படை என்னும் நூலும், இவ்வள்ளல்கள் எழுவரையும் பற்றிப் புகழ்ந்து பாடியுள்ளது.

பறம்பு மலையைப் பாரியும், பொதினி (பழநி) மலையைப் பேகனும், கோடை மலையைக் கடியநெடு வேட்டுவனும், பொதிய மலையை ஆய்வேளும், குதிரை மலையை அதியமானும், முதிர மலையைக் குமணனும், தோட்டி மலையை நள்ளியும் ஆண்டு வந்தாற் போல, வல்வில்ஓரி என்னும் இவ்வள்ளல் கொல்லிமலையை ஆண்டு வந்தான். இவனைப் பற்றிச் சங்க இலக்கியங்கள் ஆங்காங்கே பின் வருமாறு புகழ்ந்து பாடியிருக்கின்றன.

''உப்புச்சிறை நில்லா வெள்ளம் போல,
நாணுவரை நில்லாக் காமம் நண்ணி,
நல்கினள், வாழியர் வந்தே—ஓரி
பல்பழப் பலவின் பயம்கெழு கொல்லிக்
கார்மலர் கடுப்ப நாறும்,
ஏர்நுண் ஓதி மாஅ யோளே!''
—அகநானூறு, 208

''வல்வில் ஓரி கொல்லிக் குடவரைப்
பாவையின் மடவந் தனளே
மணத்தற் கரிய பணைப்பெருந் தோளே''
—குறுந்தொகை, 100

''வல்வில் ஓரி கானம் நாறி,
இரும்பல் ஒலிவரும் கூந்தல்
பெரும் பேதுறுவள், யாம்வந்தனம் எனவே''
—நற்றிணை, 6

''மழவர் பெருமகன் மாவள் ஓரி
கைவளம் இயைவது ஆயினும்,
ஐதே கம்ம இயைந்துசெய் பொருளே''
—நற்றிணை, 52

''மாரி வண்மகிழ் ஓரி கொல்லிக்
கலிமயிற் கலாவத்து அன்ன, இவள்
ஒலிமென் கூந்தல் நம்வயி னானே''
—நற்றிணை, 265

''ஓரிக் கொன்ற ஒருபெருந் தெருவில்,
காரிபுக்க நேரார் புலம்போல்,
கல்லென்று அன்றால், ஊரே; அதற்கொண்டு,
காவல் செறிய மாட்டி ஆய்தொடி
எழில்மா மேனி மகளிர்
விழுமாந்தனர், தம்கொழுநரைக் காத்தே''
—நற்றிணை, 320

## 4. கொல்லி மலை அறைப்பள்ளி

வள்ளற் பெருந்தகையாகிய வல்வில்ஓரி, அரசு செலுத்திய கொல்லிமலையின் ஒரு பகுதிக்கு, அறைப்பள்ளி என்பது பெயர். அஃது அறப்பள்ளி, அறப்பளி என்றும் வழங்கும். அறப்பளி என்னும் இக்கொல்லிமலைப் பகுதியில் எழுந்தருளியுள்ள ஈசுவரர்க்கு அறப்பளீசுவரர் என்பது பெயர். இவ் அறப்பளீசுவரர் மீது பாடப் பெற்றுள்ள சதகம் என்னும் நூல் ஒன்று, 'அறப்பளீசுவரர் சதகம்' என்னும் பெயருடன் வழங்கி வருகின்றது. அதன் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும், ''அடியவர்க்கு அமுதமே! மோழை பூபதி பெற்ற அதிபன், எமது அருமை மதவேள் அனுதினமும் மனதில் நினைதரு சதுரகிரி வளர் அறப்பளீசுவர தேவனே!'' என்னும் வரிகள் பயின்றுவரக் காணலாம். கொல்லிமலைக்கும், அதன் ஒரு பகுதியாகிய அறப்பளிக்கும், சதுரகிரி என்னும் ஒரு பெயரும் வழங்கி வருதலை, நாம் முன்னரே கண்டோம். அதனாலேயே 'சதுரகிரி வளர் அறப்பளீசுவர தேவனே!' என்று அறப்பளீசுவரர் சதகம் பாடுகின்றது. இச்சதகத்தைப் பாடியவர் அம்பலவாண கவிராயர் என்றும், பாடப்பெற்றவர் மோழைக் கவுண்டர் மகன் கருமக்கவுண்டர் என்றும் கூறப்படுகின்றது.

கொல்லிமலையின்கண் உள்ள அறைப்பள்ளி (அறப்பள்ளி, அறப்பளி) என்னும் தலத்தைப் பற்றி, இற்றைக்கு 1300 ஆண்டுகளுக்கு முன்னர், கி. பி. 7ஆம் நூற்றாண்டில் விளங்கியிருந்த திருஞான சம்பந்தப் பெருமானும், திருநாவுக்கரசர் பெருமானும், தமது தேவாரப் பாடல்களில் குறிப்பிட்டிருக்கக் காண்கின்றோம். அப்பாடல்களால் இத்தலத்தின் பழமையும் பெருமையும் புலப்படுகின்றன.

**அறைப்பள்ளி,** அகத்தியான் பள்ளி, வெள்ளைப்
பொடிப்பூசி ஆறணிவான் அமர்காட்டுப் பள்ளி,
சிறப்பள்ளி, சிராப்பள்ளி, செம்பொன் பள்ளி,
திருநனி பள்ளி, சீர்மகேந் திரத்துப்
பிறப்பில் லவன்பள்ளி, வெள்ளச் சடையான்
விரும்பும்இடைப் பள்ளி, வண்சக் கரம்மால்
உறைப்பால் அடிபோற்றக் கொடுத்த பள்ளி,
உணராய் மடநெஞ்சமே! உன்னிநின்றே
—திருஞானசம்பந்தர்

தில்லைச்சிற் றம்பலமும், செம்பொன் பள்ளி,
தேவன்குடி, சிராப்பள்ளி, தெங்கூர்,
**கொல்லிக் குளிர் அறைப் பள்ளி,** கோவல்
வீரட்டம், கோகரணம், கோடி காவும்,
முல்லைப் புறவம், முருகன்பூண்டி,
முழையூர், பழையாறை, சத்தி முற்றம்;
கல்லில் திகழ்சீரார் காளத் தியும்,
கயிலாய நாதனையே காண லாமே

பொருப்பள்ளி வரைவில்லாப் புரம்மூன்று எய்து
புலந்தழியச் சலந்தரனைப் பிளந்தான்
பொற்சக்
கரப்பள்ளி, திருக்காட்டுப் பள்ளி, கள்ளார்
கமழ்**கொல்லி அறைப்பள்ளி,** கலவஞ் சாரற்
சிரப்பள்ளி, சிவப்பள்ளி, செம்பொன் பள்ளி,
செழுநனி பள்ளி, தவப் பள்ளி, சீரார்
பரப்பள்ளி என்றென்று பகர்வோர் எல்லாம்
பரலோகத்து இனிதாகப் பாலிப் பாரே
—திருநாவுக்கரசர்

## 5. அறப்பளீசுவரர் திருக்கோயில்

சேர வேந்தர்களால் ஆளப்பெற்றிருந்த பழமையும் பெருமையும் மிகக் கொங்குநாட்டின்கண் உள்ள புகழ்மிக்க தலங்கள் அல்லது கோயில்களுள், கொல்லிமலையின்கண் அமைந்திருக்கின்ற அறப்பளீசுவரர் திருக்கோயிலும் ஒன்றாகும். 'கொல்லிக் குளிர் அறைப்பள்ளி' என்றும், 'கள்ளார் கமழ் கொல்லி அறைப் பள்ளி' என்றும், திருநாவுக்கரசர் பெருமான், இத்தலத்தைத் தம்முடைய பாடல்களில் குறித்துள்ளார். திருஞானசம்பந்தரும், திருத்தலக் கோவைப் பதிகத்தில் 'அறைப்பள்ளி' என்று குறிப்பிட்டுப் போற்றியுள்ளார்.

அறப்பளீசுவரம் என்னும் இத்திருக்கோயில், கொல்லிமலையில் வளப்பூர்நாடு என்னும் பகுதியில் அமைந்திருக்கின்றது. இங்கு அறப்பளீசுவரர், அருள்மிகு தாயம்மையுடன் எழுந்தருளி விளங்குகின்றார். இக்கோயில் மூர்த்திச் சிறப்பு, தலச்சிறப்பு, தீர்த்தச் சிறப்பு என்னும் மூவகைச் சிறப்புக்களும் பெற்று முதன்மையுற்று விளங்குகின்றது. இயற்கை எழில்நலம் மிக்க சூழலில் இத்திருக்கோயில் அமைந்து இருக்கின்றது. அதனால் இங்கு வருகை புரியும் அன்பர்கள் அனைவர் உள்ளங்களிலும், பக்தியுணர்வு தானே மேலோங்கிப் பெருகி எழுந்து, பரவசத்தை விளைவிக்கின்றது. இக்கோயிலில் அருள்மிகு தாயம்மை, அறப்பளீசுவரர் ஆகிய இருவருடன், விநாயகரும் முருகனும்கூட, சந்நிதிகொண்டு விளங்குகின்றனர். கோயிலின் ஒரே இடத்தில் நின்று, ஒரே சமயத்தில், இந்த நான்கு தெய்வத் திருவுருவங்களையும் ஒருசேரத் தரிசித்து மகிழும் அரிய வாய்ப்பு, இத்தலத்தின் தனிப்பெரும் சிறப்பாகும்.

இத்திருக்கோயில், மிகவும் பழமையும் பெருமையும் வாய்ந்து திகழ்கின்றது. இக்கோயிலானது ஏறத்தாழ 1,400 ஆண்டுகளுக்கு முன்னரே கட்டப்பெற்றிருத்தல் வேண்டும். தஞ்சைப் பெருவுடையார் கோயிலை எடுப்பித்த இராசராச சோழரின் பெரிய பாட்டியாராகிய செம்பியன் மாதேவியார் (சிவஞான கண்டராதித்த சோழ தேவரின் மனைவியார்), இக்கோயிலுக்கு வந்து தரிசித்து மகிழ்ந்திருக்கின்றார். அப்போது அவர் விலையுயர்ந்த பல அணிகலன்களை நன்கொடையாக வழங்கியிருக்கும் செய்தி, கல்வெட்டுக்களால் புலனாகின்றது. இங்குள்ள மகாமண்டபம், கிழக்குப் பகுதியில் சற்று நிலச்சரிவால் சாய்ந்து அழுந்தியிருக்கின்றது. மூலவரின் விமானம் பழுதுபட்டிருக்கின்றது. பரிவார தேவதைகளுக்கும் சிறுசிறு சந்நிதிகள் அமைக்கப்பட்டுள்ளன. முருகன் சந்நிதியைத் தவிர, ஏனையன எல்லாம் திருப்பணி செய்யப்பட வேண்டிய நிலையிலேயே பழுதுபட்டுள்ளன. இராசகோபுரம் கல்லகாரம் வரையில், கருங்கல்லால் கட்டப்பெற்றிருக்கிறது. கோயிலின் வடக்குப்புறத்தில் அழகிய ஆறு அல்லது அருவி ஒன்று ஓடுகின்றது. இவ் ஆற்றில் ஆண்டு முழுதும் நீர் வற்றாமல் ஓடிக்கொண்டிருக்கின்றது. இந்த ஆறும், அதனைச் சார்ந்த அருவியும், பக்தர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வகையில், இயற்கை அழகு மிகுந்த சூழலோடு திகழ்கின்றது.

## 6. நீர்வீழ்ச்சி

அறப்பளீசுவரர் திருக்கோயிலுக்கு வடபுறத்தில் ஓடுகின்ற இந்த ஆற்றுக்கு ஐயாறு எனப் பெயர் வழங்குகின்றது. இந்த ஆற்றில் வண்ணவண்ணமான, வகைவகையான அழகிய மீன்கள் நிறைய உள்ளன. அறப்பளீசுவரர் இங்கு மீன் வடிவமாக ஆற்றில் உள்ளார், என்று மக்கள் நம்புகின்றனர். அதனால் வழிபாட்டிற்கு முன்னர், இங்குவரும் மக்கள் இம் மீன்களுக்குச் சோறு, பலவகைத் தின்பண்டங்கள் ஆகியவற்றை அளித்த பிறகுதான், கோயில்வழிபாடு செய்கின்றனர். ஆற்றிலுள்ள மீன்களை எளிதாகக் கையினாலேயே பிடிப்பதற்கு இயலும். ஆனால் யாரும் மீன்களைப் பிடித்தல் கூடாது எனக் கருதி, பிடிக்க முயலுவது இல்லை. அதனால் மீன்கள் அச்சமின்றி மக்கள் அருகில் வந்து, அவர்கள் வழங்கும் பொருள்களை மகிழ்ச்சியுடன் தின்னுகின்றன. இந்த ஆற்றில் மழையில்லாத காலங்களிலும், ஒரு சிறிதேனும் தண்ணீர் ஓடிக்கொண்டேயிருக்கும். ஆடி மாதம் பதினெட்டாம் பெருக்குத் திருநாளன்று, பக்தர்கள் திரண்டு வருவார்கள். அவர்களில் சிலர் பெரிய மீன்களைப் பிடித்து அவற்றிற்குப் பக்தியுடன் மூக்குத்தி அணிவித்து வழிபட்டு ,பின்னர் அவற்றை ஆற்றில்விட்டு விடுவார்கள். இந்த ஐயாறு என்னும் நதியானது கோயிலின் வடகிழக்குப் புறமாகச் சென்று, இரண்டு கிலோமீட்டர் தூரத்தில், ஒரு பெரிய நீர்வீழ்ச்சியாக மாறுகிறது. உயரம் 150 அடி இருக்கும். அந்நீர்வீழ்ச்சி மலையிலிருந்து இறங்கித் துறையூர், முசிறி வழியாகச் சென்று காவிரியில் கலக்கின்றது.

இந்நீர்வீழ்ச்சி, திருக்குற்றால நீர்வீழ்ச்சியை விட மிகச் சிறந்ததாக விளங்குகின்றது என்று, அனைவரும் கூறுகின்றனர். இவ் அருவியில் நீராடினால் பலவகை நோய்கள் தீருகின்

றன. உடல் நலம்பெறுகின்றது. இந்நீர்வீழ்ச்சிக்குச் செல்லும் பாதை மிகவும் குறுகலானது. கீழே நிதானமாகக் கவனித்து இறங்கவேண்டும். இந்நீர்வீழ்ச்சிக்கு எல்லோரும் போகவர வசதிகள் செய்யப்பட்டால், நம் தமிழ்நாட்டினர்க்கு மட்டுமின்றி, ஏனைய அயல்நாட்டினர்க்கும், மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கும், இஃது ஒரு ஒரு சிறந்த யாத்திரைத் தலமாக அமையும்.

## 7. திருவிழாக்கள்

இக்கோயிலில் ஆண்டுதோறும் ஆடிமாதம் 17, 18, 19 தேதிகளில், தேர்த் திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றது. அண்மையிற் சில காலத்திற்கு முன்புவரையில் கொடியேற்றம் செய்து, 12 நாட்கள் திருவிழா நடைபெற்று வந்ததாகத் தெரிகிறது. இவ்விழாவின்போது மலைவாழ் மக்கள், பலவகைவண்ண உடைகள் அணிந்து, மகிழ்ச்சியுடனும் புக்தியுடனும் திருவிழாவிற்குத் திரண்டு வருவர். அதுபொழுது ஓராண்டுக் காலமாகச் சந்திக்க வாய்ப்பில்லாமல் இருந்த நண்பர்களும், உறவினர்களும் ஒருவரையொருவர் சந்தித்துக் கொண்டு, ஒருவரையொருவர் அன்பாகத் தழுவி முகமன் கூறிக் களிப்புறுவர். இக்காட்சி பார்ப்பதற்கு மிக்க மகிழ்ச்சியையும் உவகையையும் தரும்.

தற்போது இவ்வாலயத்தில் இவ்விழா சில காலமாக நடைபெறக் காணவில்லை. ஆயினும் ஒருகாலத்தில் தேர்த்திருவிழா சிறப்புற நடைபெற்று வந்தது என்பதற்கு அடையாளமாகச் சிதைவுற்ற தேரும், கொடிமரமும் இருக்கக் காண்கின்றோம். மார்கழி மாதத்தில் திருவாதிரை விழாவை முன்னிட்டுக் கூத்தப் பெருமானுக்கு அபிடேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. மாசிமாதம் சிவராத்திரி அன்று சிறப்புவிழா நிகழ்கின்றது. ஆண்டுதோறும் சித்திரைத் திங்களில் முதல் நாளன்று சேந்தமங்கலம் நண்பர்களால் திருவிழா நடத்தப்படுகின்றது. ஆலத்துடையான்பட்டி பெருநிலக்கிழார் திரு. பெத்துரெட்டியார், மற்றும் சிவப்பிரகாசம்பிள்ளை ஆகியவர்கள், தம்முடைய உபயமாக முருகப்பெருமான் சந்நிதிக்குத் திருப்பணி செய்து, குடமுழுக்குவிழா செய்திருக்கின்றனர்.

## 8. திருக்கோயிலின் வருவாய்நிலை

ஆலயத்திற்குச் சொந்தமாக 172.13 ஏக்கர் புன்செய், 31.12 ஏக்கர் நன்செய் நிலங்கள் உள்ளன. புன்செய் நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. இவற்றுள் 77.46 ஏக்கர் நிலம் சாகுபடி செய்யப்படாமல் தரிசாக உள்ளது. நன்செய் நிலம் 24.69 ஏக்கர் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. 7.43 ஏக்கர் நன்செய் நிலம் அர்ச்சகரின் சொந்த அனுபோகத்தில் உள்ளது. அர்ச்சகர் சாகுபடி செய்வதற்காக இலாகாவின் அனுமதி பெறப்படவில்லை. அர்ச்சகரிடம் உள்ள நிலத்திற்கு வருவாயும் வசூல் செய்யப்படவில்லை. இந்த ஆலயம் வளப்பூர் நாடு கிராமத்தில் சர்வே எண்.172ல் உள்ள 2.36 ஏக்கர் ஆலயப் புறம்போக்கு நிலம் 0.50 சென்ட்டில் அமைந்துள்ளது. ஆலயத்தைச் சுற்றியுள்ள 1.86 ஏக்கர் நிலம் திருவிழாக் காலங்களில் பக்தர்கள் தங்குவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. ஆலயத்தின் ஆண்டு வருவாய் ரூ. 5,500 மட்டுமே. முக்கிய வருவாய்கள் வருமாறு:

| | | |
|---|---|---|
| உண்டியல் | ... | 1,668.37 |
| உற்சவக் கடை | ... | 169.65 |
| அரிசி ஏலம் | ... | 20.00 |
| அர்ச்சனைச் சீட்டுப் பங்குகள் | ... | 497.50 |
| தீபாராதனை | | 153.20 |
| முடி டிக்கட் | ... | 1,374.00 |
| கூடுதல் | ... | 3,882.72 |

## 9. வளப்பூர் நாடு

### கொல்லிமலை அறப்பளீசுவரர் திருக்கோயில் கல்வெட்டுக்கள்

*1930ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் தேதியுடன் முடியும் தென்னிந்தியக் கல்வெட்டின் ஆண்டறிக்கை:*

எண்கள் 489 முதல் 508 வரையுள்ள 20 (இருபது) கல்வெட்டுக்கள்

### மரபும் அரசர்களும்:

1. விசயநகர அரசர்—வேங்கடபதி தேவ மகாராசர் (சக ஆண்டு 1532)
2. சோழ அரசர்—பரகேசரி வர்மன்
3. பொன்னரி வர்மன்
4. சோழ அரசர்—இராசாதிராச தேவர்
5. சோழ அரசர்—இராசகேசரி வர்மன்
6. திரிபுவனச் சக்கரவர்த்தி—இராசாதிராசதேவர்
7. குலோத்துங்க சோழ தேவர்.
8. அரசர் இராச மகேந்திரர்
9. பராந்தகன் சுந்தரசோழன்
10. வாசிராசு நரசிங்கராசர், துறையூர்த் தாசில்.

கல்வெட்டு எண் (489)

அறப்பளீசுவரர் கோயில் கருவறையின் வடக்குச் சுவரில் உள்ளது.

விசுவநாத வீரப்ப முத்துவீரப்ப நாயக்கர் காலத்தில், கோயிலுக்குத் திருப்பணி செய்து, நாச்சியார் திருவுருவம் நிறுவிய பொழுது, கோனூர் நரலோககண்ட வஞ்சிநாராயண நாயக்கரின் புதல்வர் இராமச்சந்திர நாயக்கரின் நலம் குறித்து, அவருடைய கீழ்ப் பணியாளர்களால் குடமலைநாட்டு அசிக்கிராமம் சர்வ மான்யமாக அறப்பளீசுவரர் கோயிலுக்கு வழங்கப்பட்டதனைத் தெரிவிக்கின்றது.

*(490)* அதே சுவரில்:

சோழ அரசர் பரகேசரி வர்மரின் 11ஆம் ஆட்சியாண்டில்.

திரு அறப்பளீசுவரர்க்கு நிவேதனத்தை அதிகப்படுத்துவதற்காகக் குறிப்பிட்ட மூன்று கிராமங்களின் நில வருவாயைப் பயன்படுத்த வேண்டும் என்று கூறுகின்றது.

*(491)* அதே சுவரில்: இராசேந்திர சோழ தேவ உடையார் காலத்தில்.

அறப்பளீசுவரர்க்கு மூன்று கால பூசைகளிலும் (முச்சந்தி: காலை நண்பகல் மாலை என்னும் மூன்று வேளைகளிலும்) படைக்கப்படும் நிவேதனத்தைத் தயாரிக்க, நான்கு ஊழியர்களுக்கு ஒரு கழஞ்சு பொன்னும், நிவேதனத்திற்காக வீரனூர்க் கிராமத்து, நில வருவாயும் வழங்கப்பெற்றது. நெல் அளக்கும் கருவிக்குத் 'திருப் பள்ளி அறைக் கொண்டோன்' என்னும் பெயர் அமைந்திருந்தது.

*(492)* அதே சுவரில்: அரசர் பெயரும், நாளும் காணப்படவில்லை.

கருங்கையன் கிராமம், மற்றும் பல கிராமத்தைச் சேர்ந்த பல குடும்பத்தினர் வழங்கிய பொருளின் வட்டியைக் கொண்டு, திரு அறப்பள்ளி உடையார் (நடராசர்)க்கும், அம்பிகைக்கும் உரிய நிவேதனத்திற்கு ஏற்பாடு செய்யப் பெற்றமையினைத் தெரிவிக்கின்றது.

*(493)* அதே கருவறையின் வடமேற்குச் சுவரில்: பொன்னரிவர்ம அரசரின் 22ஆம் ஆட்சியாண்டில், ஆவணி மாதச் சூரியக்கிரகண நாளில்,

திரு அறப்பளிக் கிராமசபையார்க்கு, அறப்பளீசுவரர்க்கு இரண்டு நந்தா விளக்குகள் அமைக்கவும், நிவேதனம் படைக்கவும் நிலங்கள் வழங்கிய செப்பேட்டின் பிரதியாகப் பொறிக்கப்பட்டுள்ளது. இதன்கண் கொல்லிமலை, 500 நாடுகளை உட்கொண்ட பகுதியாகக் குறிக்கப்பெற்றுள்ளது.

*(404)* அதே கருவறையின் மேற்குப் பக்கச் சுவரில், அரசர் பெயர், நாள் முதலியன காணப்படவில்லை.

பரலூர்க் கிராமத்தின் குடும்பங்கள் சிலவற்றிடமிருந்து வரவேண்டிய கடன் தொகையின் வட்டியைக் கொண்டு, பூசை வேளைகளில் சங்கு ஊதுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இதன்கண் முகத்தல் அளவை ஒன்றின் பெயர் 'கொங்கம்' (கொங்கு நாட்டிற்குரியது) என்று குறிக்கப்பட்டுள்ளது.

*(495)* அதே சுவரில், அரசர் பெயர் நாள் முதலியன இல்லை.

வீரனூர்க் கிராமத்தைச் சேர்ந்த அறப்பள்ளியுடையார் வீரன் செட்டியார் தரவேண்டிய கடன் தொகையின் வட்டியைக் கொண்டு, பூசைவேளைகளில் 'கரடிகை' என்னும் வாத்தியம் வாசிப்பதற்கு ஓர் ஊழியனை அமர்த்தவும், சுவாமிக்கும் அம்பாளுக்கும் நிவேதனத்தின் போது வெற்றிலை படைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

*(496)* அதே கருவறையின் தென்புறச் சுவரில், இராசாதிராச தேவரின், 10ஆம் ஆட்சியாண்டில்,

உறத்தூர்க் கூற்றத்தைச் சேர்ந்த கடலூர் நாட்டுப் பனையூர்க் கிராமத்தின், பெரியாண்டான் என்னும் திருக்களிற்றுப் பாவடி நம்பி என்பவனிடமிருந்து, வீற்றிருந்தான் செம்மான் என்னும் அகளங்கத்தாழ்வார், கொல்லிமலையைக் கைப்பற்றியபோது, அவருக்கும், அவர்தம் நண்பர்கள் உறவினர்களுக்கும் நலம் விளையும் பொருட்டு, அருள்மிகு ஆளுடை நாச்சியார்க்கு மார்கழித் திருவாதிரை விழாக் கொண்டாடுவதற்காக, நிலம் வழங்கப்பெற்றதனைக் கூறுகின்றது.

*(497)* அதே சுவரில், சோழ அரசர் பரகேசரி வர்மனின் 14ஆம் ஆட்சி யாண்டில்,

கார்த்திகைத் திருநாளில் அறப்பளீசுவரர்க்குத் தீபங்கள் ஏற்றுவதற்காக, மலைப் பெருமாள் என்பவரின் மருமகளும், அருமுறை நாடாள்வார் என்பவரின் மனைவியும் ஆகிய கமலைத் தாதியார் என்பவர், கொல்லிமலைக் கோயில் நிர்வாகப் பொறுப்புடையவர்களிடம் பொன்தானம் அளித்தமையைக் குறிக்கின்றது.

*(498)* அதே சுவரில், காந்தளூர்ச் சாலைக் கலம் அழித்த இராசகேசரி சோழ அரசரின் 11ஆம் ஆட்சியாண்டில்:

திருவறப்பள்ளி ஆட்சிக்குழுவினர் ஆகிய பட்டப்பெருமக்கள், அமலத்தான் அரவணை என்னும் மலைமாசெட்டி ஆகிய ஒரு வணிகனிடமிருந்து பொன் பெற்று, கோயிலில் நந்தா விளக்கு எரிக்க உடன்பட்டதனைக் கூறுகின்றது. இதன்கண் 'மலைக்கடல்' என்னும் நிறுத்தல் அளவைக் கருவியின்பெயர் சுட்டப்பெற்றுள்ளது.

*(499)* அதே சுவரில்: இராசாதி ராச தேவ சோழரின், 9ஆம் ஆட்சியாண்டில்,

கொல்லிமலையைச் சேர்ந்த குட்டநாட்டுச் சபையார்க்கும், வீரசந்தன் சிவந்தான் என்னும் அகளங்க தேவர் என்பவர்க்கும்,

சுவாமிக்கு நிவேதனம் படைப்பது பற்றி ஏற்பட்ட உடன்பாட்டைக் குறிக்கின்றது. இக் கல்வெட்டு முற்றுப்பெறாமலும், பழுதுபட்டும் இருக்கின்றது.

*(506)* அதே சுவரில்: திரிபுவனச் சக்கரவர்த்தி இராசாதிராச தேவ சோழ அரசரின் 9ஆம் ஆட்சியாண்டில்,

பாண்டிகுலாசனி வளநாட்டின் உட்பிரிவாகிய இடையம்மஹூர் நாட்டுத் திருத்தலத்துறையைச் சேர்ந்த 'வீற்றிருந்த சிவந்தார்' என்னும் பிள்ளை அகளங்க நாடாள்வார் பற்றியும், வீரசோழ மண்டலத்தின் உட்பிரிவாகிய கொல்லிமலை நாட்டுக் கிராமம் ஒன்றின் 'உரவன்' என்பவனைப் பற்றியும் குறிப்பிடுகின்றது. இக் கல்வெட்டு முற்றுப் பெறாமல், அரைகுறையாக உள்ளது.

*(501)* அதே சுவரில், அரசர் பெயர் நாள் முதலியன இல்லை.

மேற்கண்ட கல்வெட்டிற் குறித்தது போன்று, சில பங்குத் தொகை கோயிலுக்கு அளிக்கப்பட வேண்டியது பற்றி ஏற்பட்ட உடன்படிக்கையைப் பதிவு செய்துள்ளது. இக் கல்வெட்டு மிகவும் பழுதடைந்துள்ளது.

*(502)* கருவறையின் தெற்கு, வடக்குச் சுவர்களில்: குலோத்துங்க சோழ தேவரின் 12ஆம் ஆட்சியாண்டில்:

கொல்லிமலை நாட்டின் வரிவிதிப்பளவு கணிக்கப்பெற்றபோது, இராச மகேந்திரமன்னரால் அறப்பளீசுவரர் கோயிலுக்கு முன்பே வழங்கப்பெற்றிருந்த வயலூர் நிலங்களின் வரித் தொகைகள், கோயிலுக்குச் செலுத்தப்படாமல் நிலுவையாக இருந்து வருதல் பற்றி அரசரிடம் முறையீடு செய்துகொள்ள, அரசர் அவற்றைக் கோயிலுக்குத் திருப்பியளித்த தனைக் கூறுகின்றது.

*(503)* கருவறையின் வலப்புற நுழைவாயிற் கதவின் அருகில்: பரகேசரிவர்ம சோழ அரசரின் 16 ஆம் ஆட்சியாண்டில்,

கடாரம் கொண்டான் என்னும் உத்தம சோழ தேவரின் தாயார் ஆகிய, பராந்தகன் மாதேவடிகள் என்னும் செம்பியன்மாதேவியார் கொல்லிமலை நாட்டைச் சேர்ந்த சில ஊரார்களிடம் நூறு (100 )கழஞ்சு பொன் வழங்கி, அதன் வட்டித் தொகையைக் கொண்டு அறப்பளீசுவரர்க்கு மாதந்தோறும் சில விசேட பூசைகளும் விழாக்களும் நடத்த ஏற்பாடு செய்த தனைக் கூறுகின்றது.

*(504)* கருவறையின் இடப்புற நுழைவாயிலில் பரகேசரி வர்ம சோழ அரசரின் 10ம் ஆட்சியாண்டில்.

பராந்தகன் சுந்தரசோழன், ஒவ்வோர் ஆண்டும் கார்த்திகைத் திருவிழாக் கொண்டாடுவதற்காகச் சாலாபோகமாக நிலம் வழங்கியதனைக் கூறுகின்றது.

*(505)* கருவறையின் முன் உள்ள மண்டபத்தின் துண்டுக் கல் ஒன்றில்: பரகேசரி வர்ம சோழ அரசரின் 10ஆம் ஆட்சியாண்டில்.

மேற்குறித்த 504ஆம் எண் உள்ள கல்வெட்டின் பிரதியாகக் காணப்படுகின்றது.

*(506)* கோயிலின் வடக்குப் பிராகாரத்துத் துண்டுக் கல்லில்: அரசர்பெயர், நாள் முதலியன தெரியவில்லை. *(சக ஆண்டு 1962)*

'பாறையில் அம்மன்' என்னும் அம்பிகையின் படிமம், நிறுவப்பட்டதனைக் கூறுகின்றது.

*(507)* அறப்பளீசுவரர் கோயிற் சுப்பிரமணியசுவாமி சந்நிதியின் வடக்குச் சுவரில், அரசர் பெயர், நாள் முதலியன இல்லை.

இக்கோயிலில் உள்ள இளையநாயனார் (சுப்பிரமணிய சுவாமி)க்கும், தேவிநாச்சியார்க்கும் பூத் தொடுத்து அணிவிக்க நந்தவனம் அமைக்க, குடவாசல் திருமலை நாட்டுச் சங்கம தேவன் நன்கொடை வழங்கியதனைக் கூறுகின்றது.

*(508)* அருள்மிகு தாயம்மை சந்நிதியின் கிழக்குச் சுவரில்: அரசர்பெயர் தெரியவில்லை. கலியுகம் *4720*, சக ஆண்டு *1945*, சுபானு ஆவணி *28*.

துறையூர் வட்டம் தாசில் வாசிராசு நரசிங்கராஜா, சுவாமி அம்பாள் விமானங்களுக்குப் பொற்கலசம் அமைத்துக் குடமுழுக்கு விழாச் செய்ததனைக் கூறுகின்றது.

R. RAJU
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

## 10. திருப்பணி

கொல்லிமலை அருள்மிகு அறப்பளீசுவரர் திருக்கோயில் மிகவும் தொன்மையான, இயற்கை எழில்மிகுந்த தோற்றம் உடையதாகும். திருக்கோயிலின் கருவறையின் வெளிப்புறம் கல்வெட்டுக்கள் பல உள்ளன. விநாயகர் அறப்பளீசுவரர், கிழக்குநோக்கி எழுந்தருளியுள்ளனர். அருள்மிகு தாயம்மை தெற்கு நோக்கி இருக்கின்றாள். அம்பிகையின் சந்நிதிக்கு எதிரில், சண்முகப்பெருமான் மயில் மீது அமர்ந்த வண்ணமாய்க் காட்சி தந்தருள்கின்றார். தட்சிணாமூர்த்தி, சண்டேசுவரர், திருநந்திதேவர், பைரவர் ஆகிய பரிவார தெய்வங்களும், சுற்றுக் கோயிலில் அமைந்துள்ளனர். இக்கோயிலில் உற்சவ மூர்த்தியின் திருவுருவமும், பஞ்சமூர்த்திகளின் திருவுருவங்களும் இருக்கின்றன. ஆடவல்லார் ஆகிய நடராசப்பெருமான், அருள்மிகு சிவகாமி அம்மையுடன், அழகுறக் காட்சியளிக்கின்றார்.

இத் திருக்கோயிலின் திருப்பணிக்காகத் திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களைத் தலைவராகவும், மற்றும் 'பசிப்பிணி மருத்துவர்' உறையூர் அருணாசல முதலியார் முதலிய, இருபத்து மூன்று *(23)* பேர்களை

உறுப்பினராகவும் கொண்ட திருப்பணிக் குழு ஒன்று, சென்னை இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் அலுவலக மூ.மு. 3821-76 நாள் 24.3.76 குறிப்பில் அனுமதிக்கப் பட்டுள்ளது. ஆயினும் திருப்பணிக்குழு, இன்னும் செயல் படத் துவங்கவில்லை. இக்கோயிலின் விக்கிரகப் பாதுகாப்புக்காக ரூபா ஆயிரத் திற்கு (1000-) ப.மு. 13373-75 நாள் 5.10.75 ஒரு மதிப்பீடும், கதவுகள் ஜன்னல்கள் அமைக்க ரூபா ஆயிரத்திற்கு (1000) மற்றொரு மதிப்பீடும் அனுமதிக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கான வேலைகள் இன்னும் துவங்கப் பெறவில்லை. இத்திருக்கோயிலைப் பெரும் பொருட்செலவில் திருப்பணி செய்வதற்கு, நல்லமுறையில் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

தரை மேடும் பள்ளமுமாக இருப்பதனால் இக் கோயிலின் மகாமண்டபத்தின் கிழக்குப் பகுதி, சரிந்து அழுந்தி உள்ளது. அறப்பளீசுவரரின் விமானம், மற்றும் பரிவார தேவதைகளின் சந்நிதிகள் ஆகியவைகள், பழுதுபார்க்கப் படல் வேண்டும். இராசகோபுரம் கல்லகாரம் வரையில்தான் கருங்கல்லால் அமைந்துள்ளது. அதற்குமேல் அழகிய சுதை வேலைப்பாடுகளுடன் உயரமாகக் கோபுரம் கட்டப்பெறல் வேண்டும். கோயிலுக்கு அருகிலும் சுற்றுப்புறத் திலும் சேவார்த்திகள் தங்குவதற்காகக் குடில்கள் அமைக்கப்படவேண்டும். திரளாக வரும் பக்தர்களும் யாத்திரிகர்களும் இரவில் பாதுகாப்பாகத் தங்குவதற்கும், உறங்குவதற்கும் பெரிய அளவில் நல்லதொரு கட்டிடம் கட்டப்பெறல்வேண்டும்.

கோயிலின் வடக்குப்புறத்தில் அழகிய ஆறு ஒன்று ஓடுகின்றது. அது வற்றாத ஒரு ஜீவநதியாக ஓடிக் கொண்டிருக்கிறது. அது சிறிது தூரத்தில் சென்று, அருவியாகச் சுமார் 150 அடி உயரத்தில் நீர்வீழ்ச்சியாக அமைகின்றது. அந்நீர்வீழ்ச்சி இருக்குமிடத்தில், நல்ல வசதிகளுடன் ஒரு குளியல் அறை, அமைத்தல் வேண்டும். கோயில் நிலத்தில் அந்நீர் வீழ்ச்சிக்குச் செல்லும் பாதை ஒன்றை, நல்ல முறையில் அமைப்பது பெரிதும் நலம்பயக்கும். நெடுஞ்சாலைத் துறை, சுற்றுலாத்துறை, மலைவாழ்மக்கள் வளர்ச்சித்துறை முதலியவற்றின உதவிகளையும் பெறுதல் இன்றியமையாதது.

இத்தகைய பல திருப்பணிகளுக்குப் பொது மக்களும் பக்தர்களும், குறிப்பாகச் சேலம் மாவட்டத்துப் பெருமக்களும் பெருமளவில் உதவி செய்ய முன்வரவேண்டும்.

—ஆசிரியர்

—o—

# இந்திய ஆன்மீக ஞானம்

நமது இந்தியநாடு, பழமையும் பெருமையும் நிறைந்தது; நாகரிகமும் கலைவளமும் பண்பாடும் செறிந்தது; ஞானத்திலும் பரமோனத்திலும் சிறந்தது. பிற துறைகளில் எவ்வாறு இருப்பினும், சமய அனுபவத்திலும், தத்துவ உணர்விலும் தலைசிறந்து விளங்கி, ஏனைய பிறநாடுகளுக்கெல்லாம் இனிய நல்ல வழிகாட்டியாகத் திகழ்தற்குரியது, நமது இந்திய நாடேயாகும். தொன்றுதொட்டு நமது இந்திய நாட்டில், சமயப் பெருஞ் சான்றோர்களும், தத்துவ ஞானிகளும் மிகப்பலர், வாழையடி வாழையாகத் தோன்றி வந்துள்ளனர். இங்ஙனம் வழிவழியாக, இறையருள் பெற்ற இணையிலாச் சான்றோர்களும், சிறந்த தத்துவ ஞானப் பெருஞ் செல்வர்களும் தோன்றி வாழ்ந்து வருவதனால், நமது இந்திய நாடு ஆன்மீக நெறியில், ஒப்புயர்வற்று விளங்குகின்றது. இந்தியநாட்டின் ஈடும் எடுப்புமற்ற ஆன்மீக ஞானச் செல்வத்தின் மேன்மையினை, எத்தனையோ பல மேலைநாட்டுப் பேரறிஞர்கள் மிகவும் வியந்து புகழ்ந்து போற்றியுள்ளனர்.

1952ஆம் ஆண்டில், எடின்பர்க் பல்கலைக் கழகத்தில் நிகழ்த்திய ஆராய்ச்சிச் சொற்பொழிவு ஒன்றில், உலகப் புகழ்பெற்ற தலைசிறந்த வரலாற்றுப் பேரறிஞராகிய, டாக்டர் ஆர்னால்ட் டாயின்பி அவர்கள், ''இன்னும் ஐம்பது ஆண்டுகளில் இவ்வுலகமானது ஐக்கிய அமெரிக்க நாடுகளின் தலைமையில் அடங்கி ஒடுங்கிநிற்கும்; ஆனால் 21 ஆம் நூற்றாண்டில், சமயமானது, தொழிலியல் துறையின் இடத்தை வென்று கைப்பற்றிக் கொள்ளும்பொழுது, இப்பொழுது பிறரால் வெல்லப்பெற்று அடங்கியுள்ள இந்தியாவானது, தனது ஆன்மீக ஞானப் பெருமையினால், தன்னை வென்றவர்களை வெற்றி கொண்டு சிறப்புற்றோங்கி மேம்பட்டு, விளங்குவதற்குரிய வாய்ப்பு உள்ளது என்று, குறிப்பிட்டிருக்கின்றார்.''* எனவே எதிர்காலத்தில், இந்திய ஆன்மீக ஞானம் உலகம் முழுவதும் பரவி, அனைவராலும் மிகவும் வியந்து மகிழ்ந்து போற்றிக் கடைப்பிடிக்கப்படக்கூடிய, ஒரு பொற்காலம் இறையருளால் வரும் என நாம் எதிர்பார்க்கலாம்.

—ஆசிரியர்.

"In an address delivered at Edinburgh University in 1952, Arnold Toynbee predicted that in 50 years the world would be under the hegemony of the United States but in the 21st century, as religion captures the place of technology, it is possible that India the conquered will conquer its conquerers.''

—**HUSTON SMITH,**
The Religions of Man

# நெடுநாளைய தேட்டம்*

"தத்துவப் பேராசிரியர்"

டாக்டர் திரு வ. ஆ. தேவசேனாபதி, M.A., Ph.D.

மனிதன் தேடியலைந்த பொருளாகக் கடந்த காலத்தில் விளங்கியது யாது? நிகழ் காலத்தில் அங்ஙனம் திகழ்கின்றது எது? எதிர் காலத்தில் அஃது யாதாக இருக்கும்? இதற் குரிய விடையினை, ஒரு சொல்லிலேயே தருதல் இய்லும். அதுதான் 'இன்பம்' என்பது. இஃது ஏதோ ஒரு புதுமை போலத் தோன்றலாம். இன்பம் மட்டுமேயன்றிப் பொருள் புகழ் பதவி முதலியவற்றையும் மனிதன் விரும்பித் தேட வில்லையா? ஆம், தேடியலைகின்றான். எனினும், அவன் அங்ஙனம் தேடுவதன் அடிப் படை நோக்கத்தினை ஆராய்ந்து பார்த்தால், இன்ப வேட்கையே அதன் சாரமாக அமைந் திருத்தலைக் காணலாம். ஒருகால் இவ்வுண் மையை இன்னும் தெளிவாக இவ்வாறு கூறலாம். ஒன்று, துன்பத்தினின்று தப்புதல் ; இரண்டு, இன்பத்தினை அடைதல். துன்பத்தினின்று தப்புதல் என்பது உணவு கொள்ளுதலாற் பசி நீங்கப் பெறுதல் போல்வது. இன்பத்தையடை தலாவது; பசி நீங்கப் பெறுதலால் விளையும் உடல் வளனை யுறுதலொப்பது. ஆனால்; மனிதன் பசி நீங்குவதனால் மட்டுமே இன்பம் எய்துகின்றனனா? அவன் மீண்டும் பசிப் பிணியை அடைகின்றனன் அல்லனோ? 'பசித் துண்டு பின்னும் பசிப்பானை யொக்கும்' என மெய்க்கண்டார் கூறுதல் போல, பசித்தலும் உண்ணலும் ஆகிய இச்செயல்கள் மீண்டும் மீண்டும் ஒரு முடிவின்றி நடைபெற்றுக் கொண்டேயிருக்கின்றன அல்லவோ?

இங்ஙனமே பொருள் புகழ் பதவி முதலி யனவற்றையும், அவை நிலையான இன்பம் தரக்கூடும் என்ற நம்பிக்கையில் மனிதன் தேடியலைந்து கொண்டிருக்கின்றான். ஆனால், இவைகளையே வாழ்க்கையின் சிறந்த பேறாக வும், குறிக்கோளாகவும் கொண்டு தேடியலை பவர்கள்; அணிமையிலோ சேய்மையிலோ என் றேனும் ஒருநாள் அவற்றால் சிந்தை கலங்கித் திகைப்புறுகின்றார்கள். தேடும் அளவில் இவைகள் கிடைப்பதில்லை. அல்லது, ஒரோ வழிக் கிடைத்தாலும் இவற்றின் பயன் ஏமாற் றம் விளைவிப்பதாகவே காணப்படுகின்றது. இவ்வாற்றால் இவர்கள் அடையும் இன்ப மானது துன்பத்தின் இரு நிலைகளுக்கிடையே நிகழும் ஒரு சிறிய இடைப்பிறவரல் நாடகம் போலவே உள்ளது. மனிதனின் இந்நிலை யானது,

''செருக்கும் சினமும்சேர்
சிற்றுடலின் துன்பங்கள்
இருக்கின்ற நெடுநாளாய்!
என்றும்இவை ஒழிவதின்றே''

என்னும் கருத்தமையப் பாடிய ஆங்கிலக் கவி ஞரைப் போலவே, அழுங்கியரற்றும் தகைய தாய் இருக்கின்றது. இத்தகைய 'திகைப்பு நற்செய்தி' ( Gospel of Despair ) யோடு நாமும் ஒத்துச் செல்ல வேண்டுவதுதானா? இதனைத் தவிர வேறு யாதும் 'நற்செய்தி' யில்லையா? ஆம். இருக்கின்றது! உண்மை யிலேயே, பலப்பல இருக்கின்றன. அவற்றுள் ஒன்றை ஈண்டு நாம் ஆராய்வோம். இந் நற் செய்தியானது, ஆசிரியர் மெய்கண்டாரால் தரப்பெற்றதாகும். 'மெய்கண்டார்' என்றால் 'உண்மையைக் கண்டுணர்ந்தவர்' என்பது பொருள். மெய்கண்டார் ஆன்மீகத் துறை யில் மூவாண்டிற் சிவஞானம் பெற்ற 'ஒரு குழந்தைமைப் பேரறிஞர்' (Child-Prodigy) ஆவர்.

அற்றேல், இம்மெய்கண்டார் என்பார் யார்? அவர் கி. பி. 12 ஆம் நூற்றாண்டில் தோன்றியருளியவர். அவர்தம் தந்தையார் அச்சுதகளப்பாளர் என்பவர். வழிவழியாக வழங்கிவரும் கதையின்படி, அவர்தம் தந்தை யார் மகப்பேறு இல்லாதவராக இருந்தார். அதனால், அவர் தமது குலகுருவாகத் திகழ்ந்து வந்த 'சகலாகம பண்டிதர்' (எல்லா ஆகமங் களையும் கற்று வல்லவர்) என்பவர் பாற் சென்று மகப்பேறில்லாத் தமது குறையைக் கூறி வருந்தினார். அவர் இறைவனை வணங்கி அக்கால முறைப்படி, தேவாரத் திருமுறை யினை எடுத்துக் கயிறு சார்த்திப் பார்த்தார். அதுபோது 'திருவெண்காடு என்னும் தலத் திற்குச் சென்று அங்குள்ள முக்குளநீரில் மூழ்கிச் சிவபெருமானை வழிபடுபவர்களுக்கு எல்லாத் தீங்குகளும் நீங்கும். மகப்பேறில்லாத குறையும் தீரும். இதில் ஏதும் சந்தேகம் கொள்ள வேண்டுவதேயில்லை' என்னும் கருத்து அமைந்த,

''பேயடையா பிரிவெய்தும்
பிள்ளையினோ டுள்ளநினைவு
ஆயினவே வரம்பெறுவர்
ஐயுறவேண் டாஒன்றும்
வேயனதோள் உமைபங்கன்
வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத்
தோயாவாம் தீவினையே''

* "The Quest Eternal" என்னும் ஆங்கிலக் கட்டுரையின் தமிழாக்கம்.

என்னும் திருப்பாடல் கிடைத்தது. அச்சுதகளப்பாளர்க்கு இது பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. அவர் தமது மனைவியாருடன் திருவெண்காட்டிற்குச் சென்று இறைவனை முறைப்படி வழிபட்டு வந்தார். சிறிது காலத்திற்குப் பின்னர், அவருக்கு ஒரு குழந்தை தோன்றியது. அதுவே பிற்காலத்து மக்களால் 'மெய்கண்டார்' எனப் போற்றப் பெறுவதாயிற்று. மெய்கண்டாரை அவர்தம் தாய் மாமன் வளர்த்து வந்தார். அக்குழந்தை 'சிறிய பெருந்தகையார்' எனப் போற்றலாம்படி, இளமைப்பருவத்திலேயே மிகப் பேரறிவு வாய்ந்ததாகப் பிறங்கியது. மிக இளம் பருவமாகிய மூன்றாம் வயதிலேயே, பரஞ்சோதி முனிவர் என்பவர்பால்அருளுபதேசம் பெற்றுத் தியான சமாதி கை கூடி, மெய்யுணர்வு எய்தியது. உடனே அக்குழந்தை சைவ் சித்தாந்த உண்மைகளை விளக்கத் தொடங்கியது. தம்மிடம் கல்வி கற்பதற்கு வரும் என்று கருதியிருந்த குலகுருவுக்கு இஃது ஒரு பெரும் வியப்பை விளைவித்தது. அவர் குழந்தையாகிய மெய்கண்டார் இருக்குமிடம் சென்றார். அக்குழந்தை, உயிர்களின் துன்பங்களுக்கு எல்லாம் காரணமான ஆணவமலத்தின் இயல்பினை விளக்கிக் கொண்டிருந்தது. தாம் எய்தியிருந்த நூற்புலமையின் செருக்கால் குலகுருவாகிய சகலாகம பண்டிதர், மெய்கண்டாரை நோக்கி 'ஆணவமலத்தின் சொரூபம் யாது?' என விளக்கும்படி வினவினார். ஏதும் பேசாமலே மெய்கண்டார் அவ்வினாவுக்கு அளித்த விடை அவரைத் துணுக்குறச்செய்தது. மெய்கண்டார் தமது கைவிரல் கொண்டு 'நீர் தாம் ஆணவ மலத்தின் சொரூபம்' என வினாவுக்கு விடைகூறுவதுபோல அவரையே சுட்டிக் காட்டினார். சகலாகம பண்டிதர் அதுகாறும் வெறும் நூற்கல்வியையே உயிர் விளக்கமாகிய மெய்யுணர்வு எனத் தவறாகக்கருதிச் செருக்குக் கொண்டிருந்தார். தமது பிழையினையுணர்ந்து அவர், உடனே அச்சிவஞானக் குழந்தையின் திருவடிகளில் விழுந்து பணிந்தார். தமது பிழை பொறுத்துத் தம்மை மாணவராக ஏற்றுக் கொண்டருளும்படி வேண்டினார். மெய்கண்டாரும் அங்ஙனமே சகலாகம பண்டிதரை மாணவராக உவந்தேற்றுக் கொண்டு அவருக்கு 'அருள்நந்தி' என்னும் திருப்பெயர் சூட்டி, தாம் இயற்றியருளிய சிவஞானபோதத்திற்கு விரிவுரை நூல் ஒன்றை இயற்றும்படி பணித்தருளினார். சிவஞான போதத்திற்கு அருள்நந்தி இயற்றிய விரிவுரை நூலே 'சிவஞான சித்தியார்' என்பது.

மெய்கண்டாரின் சிவஞானபோதம் மிகச் சுருக்கமானதொரு சிறிய நூல். அது பன்னிரண்டு சூத்திரங்களையும், இடையிடையே வார்த்திகம் என்னும் பொழிப்புரையையும், ஒருசில உதாரண வெண்பாக்களையும் கொண்டது. அஃது அளவாற் சிறியதாக இருந்தாலும் சைவசித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கைகளையெல்லாம் தெளிவுற வகுத்துணர்த்துகின்றது. உண்மையில் அதுதான் சைவ சித்தாந்த உண்மைகளை முறையாகவும் முதன் முதலாகவும் தமிழில் விளக்கும் நூலாகும். கச்சியப்பமுனிவர் என்னும் பெரும் புலவர் ஒருவர் பாராட்டிக் கூடியிருப்பதுபோல, மிகப் பெரியமலையையும் தன்னுள்ளே அடக்கிக் காட்டவல்ல மிகச் சிறிய கண்ணாடியைப் போலவே, சிவஞான போதமானது அளவிற் சிறியதாக இருப்பினும், சைவசித்தாந்த அடிப்படையுண்மைகளையெல்லாம் தன்னகத்தே பொதிந்து கொண்டு விளங்குகின்றது.

''சிறிய ஆடியிற் பெரியமால்
　　வரைப்பொருள் செறிந்தாங்கு
அறிவு நூல்களின் முடிபெலாம்
　　அகத்தடக் கியதோர்
நெறியின்நீடிய நிகழ்சிவ
　　ஞானபோ தத்தைக்
குறிய தீந்தமி ழால்உரை
　　குரவனைப் பணிவாம்''

மனிதன் தேடத் தகுந்த பொருளாக யாது இருத்தல் வேண்டும்? மனிதன் ஏன் ஆரா இயற்கை அவாவுடையவனாய்த் துன்புறுகின்றான்? நிலையான பேரின்பத்தினை மனிதன் எவ்வாறு அடைதல் இயலும்? என்னும் வினாக்களுக்கு இந்நூலில் மெய்கண்டார் தரும் விடை என்ன? மனிதன் தேடத்தக்க பொருள் கடவுளேயாவர். கடவுளைப் பிரிந்திருத்தலே துன்பங்களுக்குக் காரணம். மீண்டும் கடவுளையடைந்து அவரோடு ஒன்று படுதலே நிலையான பேரின்பத்தைத் தரும்.

இவற்றைச் சிறிது விளக்கமாகக் காண்போம்! மெய்கண்டார் கூற்றின்படி, என்றும் உள்ள 'நித்தியப்' பொருள்கள் மூன்று உள்ளன. அவை பதி (கடவுள்), பசு (உயிர்கள்) பாசம் (தளைகள்) எனப்படும். உயிர்கள் தொன்று தொட்டே அநாதியாகப் பாசங்களாற் பிணிக்கப்பட்டுள்ளன. உயிர்களைப் பிணித்துள்ள பாசங்களுக்குத் தொடக்கம் இல்லாதொழியினும் முடிவுண்டு. பாசங்களைக் களைதல் இயலும். உயிர் என்பது என்ன? உடம்பா, பொறிகளா, மற்றவைகளா? உயிர் என்பது இவைகளெல்லாம் அல்ல; இவைகளெல்லாம் ஒன்று திரண்ட கூட்டத்திற்கும் உயிர் என்பது பெயர் அன்று. அது 'பதி' எனப்படும் கடவுளும் ஆகாது. அஃது ஓர் அறிவுடைப்பொருள். அறிவிக்க அறியும் தன்மையுடையது. உண்மையில் உயிர்கள் எண்ணில்லாதனவாக இருக்கின்றன. அவைகள் ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலங்களாற் பிணிக்கப்பட்டுள்ளன. எல்லாத் தீங்குகளுக்கும் மூலகாரணமாய் நிற்பது ஆணவமலம். உயிர்கள் வியாபகத் தன்மையுடையன. அவற்றை ஆணவம் அணுத்தன்மைப்படுத்துகின்றது. மாயை என்பது நமது தனுகரண புவனபோகங்களுக்குக் காரணமாய் அமைவது. கன்மம் என்பது செயல் எனப் பொருள்படும். நாம் செய்யும் செயல்களுக்கு முதல்வர்கள் நாமே என உரிமை கொண்டாடினால், அவைகள் நம்மை அடிமைப் படுத்துகின்றன.

''நான்செய்தேன் எனுமவர்க்குத்
　　தான்அங் கின்றி,
நண்ணுவிக்கும் போகத்தைப்
　　பண்ணுவிக்கும் கன்மம்!
ஊன்செய்யா ஞானம்தான்
　　உதிப்பின் அல்லால்
ஒருவருக்கும் யான்எனதிங்கு
　　ஒழியா தன்றே!''

அங்ஙனமின்றி, இறைவன் திருக்கைகளில் நாம் ஒரு கருவியே என்னும் உண்மையை உணர்ந்தால், அவைகள் நம்மைக் கட்டுப்படுத்த மாட்டா.

''உலகினில்என் செயலெல்லாம்
உன்விதியே! நீயே
உள்நின்றும் செய்வித்தும்
செய்கின்றாய்! என்றும்,
நிலவுதோர் செயல்எனக்கின்
றுன்செயலே! என்றும்,
நினைவார்க்கு வினைகளெல்லாம்
நீங்கும் தானே''

எனவே, நம்முடைய செயல்களின் பயனாகிய வலையிலேயே நாம் சிக்கிக்கொள்ளு கின்றோம். ஆணவம் மாயை கன்மம் என்னும் மூன்றும் 'பாசம்' எனக் கூறப்படுமாயினும், மாயையும் கன்மமும் இறைவன் திருவுள்ளப் படி நல்வழியிற் பயன்படுத்தப்பட்டால், அவைகள் நமது பாசப் பிணிப்பைக் கடக்க நமக்கு உதவி செய்யக்கூடும்.

எங்ஙனமெனின் முதலில் மாயையினை எடுத்துக் கொள்வோம்! உயிரின் அறிவானது மூலமலமாகிய ஆணவத்தால் மறைக்கப்படு கின்றது. இறைவன் உயிர்களுக்கு உடல் கருவி உலகம் நுகர்பொருள்கள் ஆகியவற்றைப் படைத்துக் கொடுத்து உயிர்களின் அறிவை ஒரு சிறிது விளங்கச் செய்கின்றார். உடலானது ஐம்பொறிகளாலும் அந்தக் கரணங்களாலும், உயிர் தனது மறைப்பை நீக்கிக் கொள்ள ஓரளவு உதவிபுரிகின்றது. உயிரானது உடலைத் தக்க வழியிற் பயன்படுத்திக் கொண்டால், தான் உடலெடுத்தது இறைவழிபாட்டின் பொருட்டே என்பதனை யுணர்ந்து கொள்ளும். மனிதப் பிறவியே இறைவழிபாட்டிற்கு உறு துணையாக இருத்தலின், மனித வாழ்க்கை யானது மிகவும் அருமையும் சிறப்பும் வாய்ந்த தாகும். விண்ணுலகத்திலுள்ளவர்களும்கூட இறைவனை வழிபட இம்மண்ணுலகத்திற்கு வருகின்றார்கள்.

''மானிடப் பிறவி தானும்
வகுத்தது மனவாக் காயம்
ஆனிடத் தைந்தும் ஆடும்
அரன்பணிக் காக அன்றோ?
வானிடத் தவரும் மண்மேல்
வந்தரன் தனைஅர்ச் சிப்பர்!
ஊன்எடுத் துழலும் ஊமர்
ஒன்றையும்உணரார் அந்தோ!''

உயிரானது மனிதப் பிறவியின் அருமையையும் சிறப்பையும் மறந்து, வெறும் புலன்களின் நுகர்ச்சிக்கே அதனைத் தவறாகப் பயன் படுத்துமாயின், மாயையானது உயிரின் மலப் பிணிப்பை நீக்கப் பயன்படாமல் உயிரை மயக்கி, அம்மலப்பிணிப்பிலேயே அழுந்தச் செய்யும். 'வைத்ததோர் மலமாய் மாயை மயக்கமும் செய்யும் அன்றே' என்பது சிவ ஞானசித்தியார்.

இங்ஙனமே, கன்ம மலமும்கூட நல்வழியிற் பயன்படுத்தப் பெற்றால் உயிருக்குத் துணை செய்யும். இறைவனின் திருக்கைகளில் தான் ஒரு கருவியே என்பதை உணர்ந்து கொண்டு, உயிரானது தன் கடமையைச் செய்தால், கன்ம மலம் உயிரைக் கட்டுப்படுத்தாது. அதற்கு மாறாகத் தன் செயல்களுக்குத் தன்னையே முதன்மையாகக் கருதி உரிமை கொண்டாடி னால், கன்ம மலம் உயிரை நிச்சயமாகப்பிணித்து விடும். பயன்கருதாமற் கடமையைக் கடமைக் காகவே செய்வதின் மூலம்தான், உயிரானது பாசத் தளையினை நீக்கிக் கொள்ளக் கன்ம மலத்தைப் பயன்படுத்த முடியும். இங்ஙனம் மாயையும் கன்மமலமும் உயிரின் பாசப் பிணிப் பினை அகற்றுதற்கும் உதவி செய்யும். அல்லது அதனை இறுகச்செய்வதற்கும் காரணமாக அமையும். மாயை கன்மங்களை உயிர் எங் ஙனம் பயன் கொள்ளுகின்றது என்பதனைப் பொறுத்தே இவைகளெல்லாம் அமைகின்றன. ஒரு சங்கிலியின் வலிமையானது அதனுடைய வலிமையற்ற மிக மெல்லிய சிறிய இணைப்பைப் பொறுத்தே அமைகின்றது என்பர். இங்கே ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலங் களில், மாயை கன்மம் என்னும் இரண்டினை யும் நாம் வலிமை குன்றச் செய்தல் கூடும். அங்ஙனம் செய்தலால், ஆணவ மலத்தின் ஆற்ற லும் தானே குறையும்.

எனினும், இவைகளெல்லாம் இறைவன் திருவருள் துணையால் மட்டுமே இயலும். ஆனால், இறைவன் ஒருவன் இருக்கின்றான் என்பதனை நாம் எவ்வாறு உணர்வது? மெய் கண்டார் இறைவனுண்மையில் நமக்கு நம் பிக்கை யுண்டாக்குவதற்காகக் காரணகாரிய ஆராய்ச்சி முறைகளைக் கையாளுகின்றார். நாம் உலகத்திற் காண்கின்ற எந்தப் பொரு ளும் முதற்காரணம் நிமித்த காரணங்களை உடையதாக விளங்குகின்றது. உதாரணமாக, ஒரு குடத்தினை எடுத்துக் கொண்டால், அதற்கு மண் முதற்காரணம்; தண்ட சக்க ரங்கள் துணைக் காரணம்; குயவன் நிமித்த காரணம். குடம் தோன்றுவதற்குக் குயவன் ஒருவன் இன்றியமையாமை போல, அவயவப் பகுப்புடைய, நிலைமாறும் தன்மையுள்ள, உலகப்படைப்பிற்கும், இறைவன் ஒருவன் இன்றியமையாதவன் ஆவன்.

''காரிய காரணங்கள்
முதல்துணை நிமித்தம் கண்டாம்!
பாரில்மண் திரிகை பண்ணு
மவன், முதல் துணைநி மித்தம்!
தேரின்மண் மாயை யாகத்
திரிகைதன் சத்தி யாக,
ஆரியன் குலாலன் ஆய்நின்
றாக்குவன் அகிலம் எல்லாம்!''

இதுமட்டுமே யன்றி, வேறொரு காரணமும் கூட உள்ளது. மனிதர்கள் செயல்களில் ஈடு படுகின்றார்கள். அவர்களைத் தம் அளவில் விட்டுவிட்டால். அவர்கள் தாம் செய்யாத நற்செயல்களுக்கு உரிமை கொண்டாடுவார்கள், தாங்கள் செய்த தீச்செயல்களுக்குரிய தண் டனையினின்று தப்பித்துக் கொள்வார்கள். செயல்களின் பயன்கள் தம்மைச் செய்தவரைத் தாமே சென்றடைவன அல்ல. ஆதலின், செய்

தார் மாட்டுச் செய்வினைகளின் பயனை முறையே சேர்ப்பிக்கவல்ல இறைவன் ஒருவன் இருத்தல் இன்றியமையாததாகின்றது.

''அவ்வினையைச் செய்வதனுக்கு அவ்வினைஞர்
தாம்சென்றங்கு
அவ்வினையைக் காந்த பசாசம்போல்
—அவ்வினையைப்
பேராமல் ஊட்டும் பிரானின் நுகராரேல்
ஆர்தாம் அறிந்தணைப்பார் ஆங்கு?''

அவ்விறைவன் படிப்படியாகத் தரும் ஒழுகலாற்றுப் பயிற்சியால் இன்ப துன்பப் பயன் எதனையும் கருதாமற் கடமைகளைப் புரியும் திறனை உயிர்களுக்கு உண்டாக்குகின்றான்.

இத்தகைய காரணங்கள், இறைவன் ஒருவன் இருப்பதனை உடன்பட விரும்பாதவர்களை உடன்படச் செய்யக் கூடியன அல்ல. எனினும், போதிய நல்லூழால் நமக்கு ஆன்மீக அனுபவம் வாய்த்திருந்தால், அதனை வளர்க்க இக்காரணங்கள் உதவியாகக்கூடும். அல்லது, அத்தகைய ஆன்மீக அனுபவங்கள் நிகழக் கூடியவையே என்றும், அவைகள் அறிவு நெறிக்கும் இயைந்தனவே என்றும், இக்காரணங்கள் உணர்த்தாநிற்கும்.

சுருக்கமாகக் கூறினால், மெய்கண்டாரின் உபதேசம் இதுவே! உயிரானது வேடர்களாற் கவர்ந்து செல்லப் பெற்ற ஓர் அரசிளங்குமரனைப் போன்றது. அஃது ஊனியல் வழிப்பட்டு வளர்கின்றது. புல்லர்களை யொட்டிய வாழ்க்கையை நடத்துகின்றது. அரசன் அரசிளங் குமரனை வேடர்களின் சூழலினின்று மீட்டு, அவனை அவ்வேடர்களின் இழிந்த வாழ்வியல் விளைவுகளை விடுத்தொழிக்கச் செய்து, அரசிளங் குமரனுக்குரிய சிறந்த பண்புகளை மேற்கொண்டு வாழுமாறு செய்தல் போல, இறைவனும் உலகியல் வாழ்வினின்று, உயிர்களை அருளியல் வாழ்வின்கண் தலைப்படுமாறு செய்தருள்கின்றான். அரசிளங் குமரனின் இன்பமானது, வேடர்களின் வாழ்க்கை முறைகளைத் தொடர்ந்து பின்பற்றுதலா லன்றி, அவற்றினை விட்டொழித்து, அரச நிலைக்குரிய வாழ்க்கைக்கு மாறி அதனை மேற்கொள்ளுதலாலேயே அமைகின்றது. அதுபோலவே, உயிர்களின் இன்பமும் தன்னலங் குறித்த புலன்வழி வாழ்க்கையை விடுத்தொழித்து, இறைவழிப்பட்டு அருளியல் வாழ்க்கையைக் கடைப்பிடித்தலால்தான், அமைகின்றது.

''ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே''

என்பது சிவஞானபோதம்.

இறைவன், உயிர்வாழ்பொருள்கள் எல்லாவற்றின் நலன்களையுமே குறிக்கோளாகக் கொண்டுள்ளான். அதுபோலவே, இறைவழிப்பட்ட உயிரும் எல்லாப் பொருள்களின் நலத்தினையும் தனது பயன்கருதாத் திருத்தொண்டுக்கு உரியதாக்கிக் கொள்ளுதல் வேண்டும். அத்தகைய உயிரானது தன்னலம் பற்றிக் கருதுவதேயில்லை. அது மன்னுயிர்களின் நலம் குறித்தே வாழ்கின்றது. இதுவே இறைவனுக்குரிய திருத்தொண்டாகும். உயிரானது மன்னுயிர்களுக்காக வாழ்ந்து, தன்னை இறைவனின் திருக்கையில் ஒரு கருவியாக மட்டும் எப்போது கருத முற்படுகின்றதோ, அப்போது ஆணவம் மாயை கன்மம் ஆகிய மும்மலங்கள், உயிரைப் பிணிக்கும் வலியிழந்து விடுகின்றன. இத்தகையதொரு நிலையை, இடைவிடாது இறையருளுணர்வில் ஒன்றிப் பயிலுதலின் மூலமே அடைதல் இயலும். இறைவழிபாட்டிற் கழிக்கும் ஒவ்வொரு நாளும் இன்பநாள் ஆகும். இறைவனை மறந்து கழித்த ஒவ்வொருநாளும் துன்பநாள் ஆகும்.

''துன்பம் நும்மைத் தொழாத நாள்கள் என்பாரும்
இன்பம்நும்மை ஏத்துநாள்கள் என்பாரும்
நும்பின் எம்மை நுழையப் பணியே என்பாரும்.
அன்பன் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம்''

இறைவனை வழிபடுதலும், அவனது புறவியல் மறுபகுதியாகிய உயிர்களுக்குத் தொண்டு செய்தலுமே, நிலைபேறான இன்பத்தினை அளிக்க வல்லவை.

''ஈசனுக்கன் பில்லார்
அடியவர்க்கன் பில்லார்;
எவ்வுயிர்க்கும் அன்பில்லார்
தமக்கும் அன்பில்லார்''

—சிவஞானசித்தியார்

மனிதனின் 'நெடுநாளைய தேட்டம்' என விளங்கி வருவது, இன்பத் தேட்டமே. இறைவனை வழிபடுதலாலும், இறைவன் படைத்த உயிர்களுக்குத் தொண்டு புரிதலாலுமே, மனிதன் இன்பம் அடைதல் இயலும். மெய்கண்டாரின் ஞானச் செய்தியைச் சுருக்கமாகத் தொகுத்துக் கூறவேண்டுமாயின், அண்மைக்கால அருட்பெருஞ் சான்றோராகிய தாயுமானவர் திருமொழியாற் பின்வருமாறு கூறி முடிக்கலாம்.

''அன்பர்பணி செய்யஎன்னை
ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந்து
எய்தும் பராபரமே''

—தாயுமானவர்

# இரு வரங்கள்

திரு. கா. அ. ச. ரகுநாயகன், எம்.ஏ.,

திருப்பத்தூர், (வ. ஆ. மாவட்டம்)

'தருகை நீண்ட தயரதன்' என்று தயரத மன்னனுடைய கொடை மடத்தைப் புகழ்கின்றார் கம்பர். வள்ளல்கள் தம்மிடம் வரும் இரவலர்க்கு வாரி வழங்குவார்கள் என்று இலக்கியம் பேசுகிறது. 'யாருக்குக் கொடுக்கிறோம்? என்ன கொடுக்கிறோம்? எவ்வளவு கொடுக்கிறோம்?' என்பனவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்காமல் கொடுப்பதைக் 'கொடைமடம்' என்று இலக்கண ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றார்கள். இந்த வள்ளல்கள் பிறர்க்குக் கொடுப்பதில் பேரார்வம் உடையவர்கள்; கொடுக்கும்போதெல்லாம் அவர்களுடைய உணர்ச்சியே மேலோங்கி நிற்கும்.

தயரத மன்னன் பிறர்க்குப் பொருள்களைக் கொடுப்பதுபோலவே வரங்களையும் ஆர்வத்தோடு கொடுக்கின்றான். பொருள்களைக் கொடுத்து 'ஈத்துவக்கும் இன்பம்' பெறுவது போலவே, வரங்களைக் கொடுத்தும் இன்பம் பெறுகிறான் போலும்! பொருள்கள் வெளிப்படையாகக் கட்புலனுக்குத் தெரிவன. ஆனால் வரங்கள் அவ்வாறு தெரியக்கூடியன அல்ல; அவற்றின் இயக்கத்தால் உணரக்கூடியன.

பொருள்களைக் கொடுப்பதும் பெறுவதும் உடன் நிகழ் வினைகள். வரம் கொடுப்பது ஒரு நாளும், கொடுத்த வரத்தைப் பெறுவது வேறொரு நாளுமாக அமையக்கூடும். வரம் கொடுக்கும்போது அதன் உருத் தெரியாமல் இருந்து, பெறும்போது அது பெரிதாக வெளிப்படும்.

தயரதன் இருவேறு சூழ்நிலைகளில் வரத்தைக் கொடுக்கின்றான். இருமுறையும் அவனை யாரும் வரம் கொடுக்கும்படி கேட்கவில்லை; அவனே வலிய வேண்டிக்கொடுக்கின்றான்.

முதலாவதாக:

தேரோட்டிச் சென்று தன் அருஞ்செயலால் தன் கணவனின் ஆருயிரையும் மானத்தையும் காத்தளித்த கைகேயி, தனக்கு வரம் தர வேண்டுமென்று தயரதனைக் கேட்கவில்லை. மகிழ்ச்சிப் பெருக்கினால் மன்னவனே 'இரு வரங்களைக் கொடுப்பேன்' என்று மொழிகின்றான். வரம் ஒன்றே கொடுத்திருக்கலாம்; இரண்டு வரம் என்றது ஏன் என்பது விளங்கவில்லை. தன் உயிரைத் காத்தாள் என்பதற்காக ஒன்றும், அதனினும் பெரியதான மானத்தைக் காத்தாள் என்பதற்காக மற்றொன்றும் கொடுத்தான் போலும்!

தயரதன் அப்படிக் கொடுத்த வரம், பின்பு பூதம்போல் நெடிது வளர்ந்துவிட்டது. அவ்வரம் அவனையே மருட்டுகின்றது. அவன் உள்ளம் தடுமாறுகிறான். கைகேயி, ஒரு வரத்தினால் தன் மகன் பரதன் முடிசூடி நாடாள வேண்டும் என்றும், மற்றொன்றினால், அரசுக்குரிய இராமன் மரவுரி தரித்துக் கானகம் செல்ல வேண்டுமென்றும் பிடிவாதம் செய்கின்றாள். தயரதன் எவ்வளவு கெஞ்சிக்கேட்டும் அவள் மனம் நெகிழவில்லை. மன்னன் ஒரு சமரச முயற்சி செய்கின்றான். ஒரு வரத்தினால் பரதன் நாடாள்வதற்கு உடன்படுகிறான், மற்றொரு வரத்தை வலியுறுத்த வேண்டாமெனத் தன் மனைவியிடம் கெஞ்சிக் கேட்டு, அவள் அடிமேல் வீழ்கின்றான். அந்தச் சமரசத்துக்கும் அவள் இணங்க வில்லை. முடிவில்,

''ஈந்தேன் ஈந்தேன் இவ்வரம்
என்சேய் வனமாள
மாய்ந்தேன் மாய்ந்தேன் நான்போய்
வானுல காள்வேன்..''
(—அயோ. கைகேசி சூழ்.. பா. 48)

என்று கூறி மயங்கி விழ்கின்றான்.

இராமன் கானகத்துள் சென்றுவிட்டான் என்ற செய்தியைச் சுமந்திரன் வாயிலாகக் கேட்ட தயரதன் தன் ஆவி நீங்கினான். தன் மானத்தைக் காத்தளித்தாளே என்று தயரதன் முன்பு உவந்து அளித்த ஒரு வரத்தினால் கைகேயி மன்னனுடைய மானத்தைப் போக்கி விட்டாள். சம்பராசுரனை வென்று தேவர்க்கெல்லாம் வாழ்வளித்துப் புகழோங்கியிருந்த தயரதன் தன் நிலையில் தாழ்ந்து, மனைவியின் காலடியில் வீழ்ந்து கெஞ்சிக் கேட்கும் நிலையை அடைந்துவிட்டான். தன் உயிரைக் காத்தளித்தாளே என்று அவன் மகிழ்ந்தளித்த மற்றொரு வரத்தினால், இராமனைக் காட்டுக்கு அனுப்பி மன்னனுடைய உயிரையும் போக்கிவிட்டாள்.

இரண்டாவதாக:

இலங்கைப்போரில் இராவணனைஅழித்து முடித்தான் இராமன். அடுத்துப் பிராட்டியை அழைத்துக் கொண்டு அவன் திரும்பியிருக்க வேண்டும்; ஆனால் அவ்வாறு நிகழவில்லை. இடையில் வருந்தத்தக்க நிகழ்ச்சி ஒன்று நடந்து விட்டது. இராமன் ஏவியவாறே வீடணன் சீதையை அழைத்து வந்தான். ஆனால், சீதையைக் கண்ட இராமன் தன்னிலை இழந்தான், வெகுண்டான்; படமெடுத்தாடும் பாம்பைப் போல் அவன் பிராட்டியைப் பார்த்தான்.

''ஊண்திறம் உவந்தனை ஒழுக்கம் பாழ்பட
மாண்டிலை முறைதிறம்பு அரக்கன் மாநகர்
ஆண்டுதிறைந் தடங்கினை அச்சம் தீர்ந்தவண்
மீண்டதென் நினைவு, எனை விரும்பும் என்பதோ?''

(யுத்த மீட்சி.பா. 62)

இவ்வாறு பழிமொழிகளைப் பேசுகிறான். ''நீ மாண்டு போவதே மேல்; அல்லது உனக்குத் தக்க ஓர் இடத்துக்குப் போய்விடு'' என்று கூறுகிறான்.

'ஈண்டிவள் இருந்த வாறெல்லாம், காண நோற்றிலன் அவன் கமலக் கண்களால்' என்று அசோகவனத்தில் சீதையைக் கண்டபோது அனுமன் பேசிய அந்தக் காட்சியை, சீதை அப்போது இருந்த கோலத்தை அப்படியே காண வேண்டுமென்று அண்ணல் எண்ணியிருந்தான் போலும்! ''சீரொடும் தருக'' என்று வீடணனிடம் அவன் கூறியதற்கு அதுதான் பொருள் போலும்! 'தேவியைச் சீரொடும் கொணர்க' என்று இராமன் கூறியதை, 'அணிகலன்களைப் பூட்டி அழகு மேம்பட அன்னையை அழைத்து வரும்படி அண்ணல் ஏவினான்' என்று வீடணன் பொருள் கொண்டான். அதனால் வீடணன் விரும்பியவாறு திலோத்தமை முதலான தேவ மாதர் தேவியை மஞ்சனமாட்டி அழகு செய்தனர். எழிற் கோலத்துடன் விமானத்தில் எழுந்தருளினாள் அன்னை. இராமனுடைய பழிச்சொற்களைச் செவியுற்ற பிராட்டி பெருந் துயர் அடைந்தாள். இரத்தத்தைக் கண்ணீராய்ச் சிந்தின அவள் கண்கள்; உள்ளம் வெறுமையாய்ப் பெருமூச்செறிந்தாள்.

பின்னர் அவள் இலக்குவனைப் பார்த்துத் ''தீ மூட்டுக'' என்று கூறினாள். இலக்குவன் செய்வதறியாது தன் அண்ணனை நோக்கினான். அவனும் 'அவ்வாறே செய்க' எனத் தன் கண்ணினால் சொன்னான். இலக்குவன் தீயை மூட்டினான். பிராட்டி தீயினை வலம் வந்து நின்று, ''தீச் செல்வனே! மனத்தாலும் வாக்கினாலும் நான் களங்கமுற்றவளாயின், என்னை நீ சினங்கொண்டு சுடுவாயாக'' என்று தன் கோயிலாகிய தாமரை மலருக்குத் திருமகள் செல்வது போலப் பிராட்டி தீயினில் பாய்ந்தாள். அவள் அவ்வாறு பாய்ந்தபோது தீக்கடவுள் அவளுடைய கற்புத்தீக்கு ஆற்றாது பஞ்சு போலத் தீய்ந்தான்.

எரிந்த மேனியையுடைய அக்கினிதேவன் பிராட்டியைத் தன் கைகளில் ஏந்தி வெளிப்பட்டான். இராமனிடம் சென்று, ''இராமா! பெருந் தீயாகிய உன் மனைவியின் கற்புத் தீயினால், நான் என் வலிமை இழக்கச் செய்தாயே! நான் என்ன தவறு செய்தேன்? என்னை நீ முனிந்தது ஏன்?'' என்று முறையிட்டான்; தேவியை இராமன் அருகே கொண்டு வந்து நிறுத்தினான். ''உலகத்தில் உள்ள உயிர்களுக்கெல்லாம் நீயே சாட்சியாவாய். இவள் குற்றமற்றவள் என்று நீயே சொல்வதால் இவளிடம் பழி இல்லை; எனவே, இவள் ஏற்கத் தக்கவளே'' என்று இராமன் தீக்கடவுளிடம் கூறினான்.

அப்போது பிரமனும் சிவனும் அங்கே தோன்றி, ''நீயே ஆதி மூர்த்தி, திருமகளே இங்குச் சீதையாக வந்தவள்; நீ இகழத் தக்கவள் அல்லள் இவள்'' என்று கூறினார்கள். சிவபெருமான் துறக்கத்துக்குச் சென்று, ஆண்டிருந்த தயரதனை நோக்கி, ''உன் மகன் இராமனுடைய ஐயத்தைப் போக்கி உன் துயரத்தையும் நீக்குவாய்'' என்று கூறினான். சிவபெருமானுடைய அருளினால், தன் மகன் இராமனைக் காணவேண்டுமென்னும் ஆவலோடு தயரதன் மண்ணுலகம் வந்தான். இராமன் தந்தையின் திருவடியில் வீழ்ந்து வணங்கினான். வணங்கிய மைந்தனைத் தயரதன் எடுத்துத் தன் மார்புறத் தழுவி மகிழ்ந்தான்.

பின்னர்த் தயரதன் இராமனை நோக்கி, ''நான் உனக்குக் கொடுக்கக் கூடியஒன்றுகேள்'' என்று கூறினான். இராமன், ''என் துன்பம் தீர்வதற்காக வானகம் சென்று உன்னைக் காண எண்ணியிருந்தேன்; இன்று இங்கேயே காணும் பேறு பெற்றேன், இதனைவிட நான் பெறத்தக்க பேறு வேறு என்ன இருக்கிறது?'' என்று மறுமொழி பகர்ந்தான்.

''இருப்பினும், உனக்குத் தேவையானது ஒன்று கேள்'' என்று தயரதன் மீண்டும் கூற, இராமன், ''தீயள் என்று நீ விலக்கிய தெய்வமாம் கைகேயி என் தாயாகவும், அவள் மகன் பரதன் எனக்குத் தம்பியாகவும் நீ வரம் தர வேண்டும்'' என்று அவனைத் தொழுது கேட்டான்.

''ஆயினும்உனக் கமைந்ததொன் றுரையென அழகன்
தீய ளென்றுநீ துறந்தவென் தெய்வமும் மகனும்
தாயும் தம்பியும் ஆம்வரம் தருகெனத் தாழ்ந்தான்
வாய்தி றந்தெழுந் தார்த்தன உயிரெலாம் வழுத்தி''

(—யுத்த மீட்சி. பாட.129)

இராமன் வரம் கேட்ட பின்னர்த் தயரதன் தடுமாறுகிறான். அவன் கேட்டதை இவனால் தர முடியவில்லை. ''நீ விரும்பியவாறே பரதன் உன் தம்பியாவான். ஆனால், உன் முடியைப் பறித்துக் கொண்டு உனக்கு இந்தத் தவ

வேடம் கொடுத்த பாவியின் மேல் என் சினம் நீங்காது நிலைக்கும்'' என்று கூறுகிறான் தயரதன்.

கைகேயியின்மேல் பிழை இல்லை என்று இராமன் தந்தையிடம் பெரிதும் வேண்டுகிறான். இராமனுடைய அன்பின் முன்னே தயரதனுடைய சினமும் மாறிவிடுகிறது. இராமனை நோக்கித் தயரதனே 'வரம் ஒன்று கேள்' என்று சொன்னான். ஆனால் வரம்கேட்ட இராமன் அதனை இரட்டை வரம் ஆக்கினான். 'தெய்வமும் மகனும் தாயும் தம்பியும் ஆம் வரம்,' என்று இராமன் கேட்டான். அவ்வரத்தில், முற்பகுதியான கைகேயி தாயாவதை மறுத்துப் பரதன் தம்பியாகும் பிற்பகுதியை மட்டும் தயரதன் ஏற்றதால், வரம் இரண்டாகிவிட்டது.

'எவ்வ ரங்களும் கடந்தவன் அப்பொருள் இசைப்பத்
தெவ்வ ரம்பது கானிடைச் செலுத்தினாட் கீந்த
அவ்வ ரங்களும் இரண்டவை யாற்றியாற் களித்த
இவ்வ ரங்களும் இரண்டென்றான் தேவரும் இரங்க'

(—யுத்த. மீட்சி. காட.131)

தயரதன் முதலில் கைகேயிக்குக் கொடுத்த இரு வரங்களிலும், ஒன்றைக் கொடுக்க இணங்கி மற்றொன்றினைக் கொடுக்கத் தயங்கினான், தடுமாறினான். பரதன் நாடாள்வதை ஏற்றான். இராமன் கானகம் செல்வதற்கு அவனால் இணங்க முடியவில்லை. அவ்வாறே இராமனுக்கு அளித்த வரத்திலும் ஒன்றை ஏற்று மற்றொன்றினை ஏற்க இயலாமல் தயங்குகிறான், தடுமாறுகிறான்.

கைகேயியைக் கொடுமை செய்தவளாகத் தயரதன் பரதன் முதலானோர் எண்ணி இகழ்ந்தாலும் இராமன் அவ்வாறு எண்ணவில்லை. மாறாக அவன் கைகேயியைத் தன் தெய்வமாக எண்ணுகிறான். வானுலகத்திலிருந்து மண்ணுலகம் வந்த தன் தந்தையிடம் அந்தத் தெய்வம் தனக்குத் தாயாக வேண்டும் என்னும் வரத்தைக் கேட்டுப் பெறுகிறான். இங்கு நினைக்கத்தக்கது ஒன்று புலப்படுகிறது. தெய்வம் தாயாக வேண்டும் என்று விரும்பும் வரத்தினால், 'தெய்வத்தினும் உயர்ந்தவள் தாய்' என்பதை உலகம் உணரச் செய்கின்றான் இராமன். கைகேயி என்னும் ஒரு பெண் பாத்திர வாயிலாக மாற்றாந்தாயின் கொடுமைகளையும் காண்கிறோம். அந்தக் கொடுமை இழைத்தவளிடமும் இராமன் கொண்டிருந்த அன்பையும் காண்கிறோம்.

தயரதனிடம் கைகேயி பெற்ற வரத்தினால் 'மாற்றுத்தாயாக' இருந்த அவள், தன் நிலை மாறி ஒரு 'கூற்றுத் தானாக' ஆய்விடுகிறாள். தயரதனிடம் இராமன் பெற்ற வரத்தினால் கைகேயி 'கூற்றுத்தாய்', 'மாற்றுத்தாய்' என்னும் நிலைமைகளையெல்லாம் கடந்து 'தாய்'என்னும் பெருநிலையை அடைகின்றாள். அதுவும் மாற்றாளின் மகனுக்குத் தாய் ஆகின்றாள்.

தவம் செய்து வரம்பெறுவோர் பலர். தவம் ஏதும் செய்யாமலேயே தம்முடைய பேராற்றலினாலும், பேராண்மையினாலும் வரம் பெறுவாரும் உண்டு. வரத்தின் பெருமை வரத்தில் இல்லை. வரத்தைப் பெறுவாரிடமே இருக்கிறது. வரம் பெறுவோரின் மாண்பினால் வரத்தின் பயனும் பெருமையும் அமைகின்றன. என்பதனை இராமகாதையில் நாம் உய்த்துணர்கின்றோம்.

R. RAJU
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

# சீர்காழிக் கோவை

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

**முன்னுரை :**

நம் நாட்டில், சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டில், தமிழ்ப் புலமை வானில் மிகவும் ஒளிபரப்பிப் புகழ் பெற்றுத் திகழ்ந்தவர்களுள், பெரிதும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள் மூவர்! அவர்கள் முறையே பெரும் புலவர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை (1815-1876), வடலூர் வள்ளல் அருட்டிரு இராமலிங்க அடிகளார் (1823-1874), யாழ்ப்பாணநல்லூர் சிவத்திரு ஆறுமுக நாவலர் பெருமான் (1822-1879) என்பவர்கள் ஆவர். இம் மூவரையும் 19ஆம் நூற்றாண்டின் 'முப்பெருஞ் சுடர்மணிகள்' என்று கூறுதல் பொருந்தும்.

**கவிஞரும் நாடும் :**

ஒரு நாட்டின் பெருமைக்கும் புகழுக்கும் காரணமாவன பலவற்றுள், அந்நாட்டில் தோன்றும் புலவர் பெருமக்களின் சிறப்பும் ஒன்றாகும். 'இந்தியாவை இழந்தாலும் இழப்போம். எங்கள் ஷேக்ஸ்பியரை இழக்க ஒரு போதும் ஒருப்படோம்' என்று தாமஸ் கார்லைல் (Thomas Cerlyle) குறிப்பிட்டிருப்பதும், ஈண்டு நாம் நினைக்கத் தக்கது.

''பெருங்கவிஞர் ஓமர் வாழ்ந்த பண்டைக் கிரேக்க அரசியலுலகம் அழிந்துபட்டதாயினும், அவர்தம் கவிதைகள் இன்றும் உயிர்ப்புடன் உலவி வருகின்றன. உரோமநாட்டின் பழம் பெருஞ் சிறப்பெல்லாம் மறைந்து போயிற்றெனினும், வர்ஜில் என்பவரின் கவிதைகள் இந்நாளிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. எந்த உச்சயினி மாநகரம் காளிதாசர் பெருமானால் அணி செய்யப்பெற்றதோ, அந்த உச்சயினி மாநகரம், தன் நினைவைக் காளிதாசன்பால் ஒப்படைத்துவிட்டு நிலைகுலைந்து தளர்ந்தது; ஆனால் காளிதாசர் கண்ட கவிதைக்கற்பனைக் கனவுகள், உயிருடைய ஒருவனின் குரலொலியைப்போல, இன்றும் நம்மைக் கவர்ந்து இயக்கி நிற்கின்றன. இடைக்காலப் பெருவேந்தர்கள் பலரும் இறந்து போனார்கள். ஆனால் தாந்தேயின் கவிதைகள் இன்னும் விரும்பிப் பயிலப் பெறுகின்றன. ஷேக்ஸ்பியர் காரணமாக, எலிசபெத் அரசியாரின் காலம் ஆங்கில மொழி நிலைத்துள்ள அளவும் பாங்குற நினைத்துப் பாராட்டப்பெறும்.''*

**அழியாப் புகழாளர் :**

அந்நிலையில் தமிழ்நாடு உள்ள வரையில், தமிழ்நாட்டில் தலங்கள் உள்ளவரையில், அத்தலங்களிற் கோயில்களுள்ள வரையில், தலங்களும் கோயில்களும் பற்றிய இலக்கியங்கள் உள்ளவரையில், அவ்விலக்கியங்களைக் கற்றுச் சுவைத்து மகிழ்ந்து போற்றும் சமயவுணர்வும் தமிழறிவும் உடைய தமிழ் மக்கள் உள்ளவரையில், பெரும்புலவர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களின் அருமை பெருமைகளும், அவர்தம் பேரும் புகழும், என்றும் நிலைபெற்று ஓங்குதல் திண்ணம்.

**உத்தமக் கவிஞர் :**

ஜான் ரஸ்கின் (John Ruskin) என்னும் மேலைநாட்டு அறிஞர் 'உண்மைக் குரலொலிகள்' (Genuine Voices) என்றும், வெறும் எதிரொலிகள்' (Mere-Echoes) என்றும், கவிஞர்களை இரு வகையாகப் பிரித்துரைப்பார். அவர்களுள் முதல் வகையினரைச் சேர்ந்தவராய் முத்தமிழ்த் துறையின் முறை போகிய உத்தமக் கவிஞர், நம் பெரும் புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள்! கவிஞர்கள் 'பொதுமக்கட் கவிஞர்' (Poets of

---

*"The political world of Homer is dead while his song is living today. The splendour of Rome has vanished but the poetry of Virgil is yet vital. The dreams of Kalidasa still move us like the cry of a living voice, with their poignant sense of tears in human relations, while the Ujjain of which he was the ornament has left her memory to his keeping. The great mediaeval potentates are forgotten, but the song of Dante is still cherished; and the Elezabethan age will be remembered as long as the English language lives on account of its Shakespeare".

—DR. S RADHAKRISHNAN,
*East and West in Religion*, p. 130.

the Masses) என்றும், 'பெருமக்கட் கவிஞர்' ( Poets of the Classes ) என்றும் இரு திறப் படுவர். அவர்களுள், நூலாருள் நூல் வல்ல நம்முடைய மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள், பெருமக்கட் கவிஞர் ஆவர்!

**மதிநுட்பம் நூலோடுடையவர் :**

கற்றவர்கள் எல்லாருமே, கவிஞர்களாக ஆகிவிடுவதில்லை. கவிஞர் என்போர் எல்லோருமே, கற்றறிந்தவர்களாக இருப்பதில்லை. ஆனால் நம் பெரும்புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களோ, மில்ட்டன் போல ஆழ்ந்தகன்றோங்கிய அரும்பெரும் கல்வியாளர்; ஷேக்ஸ்பியர் போன்று இயல்பாகவே பாடுந்திறம் பெற்ற இணையற்ற மாபெரும் கவிஞர். கல்வி நலமும் கவிதைத் திறமும் இவர்பால் ஒருங்கே சிறப்புறப் பொருந்தியிருந்தன. அதனாலேயே ''மதிநுட்பம் நூலோடுடையார்க்கு அதிநுட்பம் யாவுள? முன் நிற்பவை'' என்னும் திருக்குறள் மொழிக்கு ஏற்ப, இவர் தமிழுலகில் தமக்கிணை தாமேயாகத் தலைசிறந்து விளங்கியிருந்தனர்.

**சீர்காழிக் கோவை :**

இத்தகைய பெரும்புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பாடிய, எத்தனையோ பல நூல்களுள், சீர்காழிக் கோவை என்பது சிறந்ததொன்றாகும். மணிவாசகப் பெருமான் பாடிய திருச்சிற்றம்பலக் கோவையார் முதலாக, நம் தமிழ் இலக்கியங்களில் எத்தனையோ பல கோவை நூல்கள் இருக்கின்றன. கோவை என்ற அமைப்பு ஒன்றேயாயினும், அதனை அவரவர்கள் பாடியிருக்கும் திறம் வெவ்வேறாகும். அந்தந்த ஆசிரியரின் புலமை நலம், மனப்போக்கு, பண்புநலம் முதலியன ,அவ்வந் நூல்களில் இயல்பாகப் புலப்படக் காணலாம்.

அகப் பொருள் இலக்கண நெறி முறைகளைப் பிறழாமல் தழுவியிருப்பது மட்டுமன்றி, ஒவ்வொரு பாடலிலும் சீர்காழியின் சிறப்பு, அங்கு எழுந்தருளியுள்ள சிவபெருமானின் அருட்டிறம், சீர்காழியைச் சுற்றியுள்ள பிற தலங்களின் மாட்சி, சீர்காழியில் தோன்றியருளிய சம்பந்தரின் மாண்பு, பிற நாயன்மார்களின் வரலாற்றுச் செய்திகள், சைவ நூற் கருத்துக்கள், சங்க இலக்கியப் பொருள்நலங்கள், உலகியல் அநுபவக் குறிப்புக்கள், நல்ல இனிய கவிதை வளம், சொற்பொருள் நுட்பச் சுவைகள் முதலிய பலவகைக் கலைக் கூறுகளும் அமையும்படி, பெரும் புலவர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள், சீர்காழிக்கோவையை இயற்றியுள்ளார். பொதுவாகக் கோவை நூல்களுள் 400 பாடல்களும் துறைகளுமே அமைந்து காணப்படும். ஆனால் அவற்றையே நமது பெருங்கவிஞர் அவர்கள், 531 கவிதைகளும் துறைகளுமாக அமையும்படி யாத்துள்ளார்கள். அவை அனைத்தையும் விரிப்பிற் பெருகும் தொகுப்பின் எஞ்சுமாதலின், அவற்றில் ஒருசிலவற்றை மட்டும் ,ஈண்டுக் கண்டு அமைவோம்.

**சீர்காழியின் சிறப்பு :**

சோழ நாட்டுச் சிவத் தலங்களுள், சீர்காழி மிக்க சிறப்புடைய தொன்று. அதற்குப் பன்னிரு பெயர்கள் உண்டு. பிரமன் பூசித்ததனால் பிரமபுரம் என்று அதற்கு ஒரு பெயர் வழங்கும். மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் மூவகைச் சிறப்பும் சீர்காழிக்கு உண்டு. அங்குள்ள திருக்குளம் பிரமதீர்த்தம் எனப்படும். அதன் கரையில்தான் சம்பந்தர் ஞானப்பால் உண்டார். சிவபெருமான் இங்கு இலிங்கம் குரு சங்கமம் என்னும் மூவகை நிலையிலும் ஒருங்கே காட்சி தருகின்றார்.

பிரமன் வழிபட்ட இலிங்கம் ஆதலின், இங்குள்ள பெருமானைப் பிரமலிங்கேசுவரர் என வழங்குவர். அம்பிகைக்குத் திருநிலை அழகி என்பது பெயர். நம்முடைய அழகும் இளமையும் பிறவும் நிலையில்லாதவை. அம்பிகையோ, நிலைபேறுடைய அழகும் இளமையும் பிறவும் உடையவள். இங்கே கட்டுமலையின் மீது தோணியப்பர் எழுந்தருளியுள்ளார். அதற்கும் மேலே உயரத்தில் சட்டைநாதப் பெருமான் சந்நிதி உள்ளது. இவரை வடுகர் என்றும் வழங்குவர். இவர் சங்கமர் என்னும் அடியார் வடிவில் திகழ்கின்றார். இத்தலத்தில் இவரே வேண்டுகோட்குரிய அருட்டெய்வமாகப் போற்றப்படுகின்றார். சீர்காழியில் திருஞானசம்பந்தர்க்குச் சிறப்பான ஒரு தனிச் சந்நிதி அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இங்ஙனம் சீர்காழியிற் கண்டு மகிழ்வதற்குரிய பலவற்றையும், பின்வரும் ஒரே பாடலில் ஆசிரியர், ''தலைவன் தன்பதி அடைந்தமை தலைவிக்குச் சாற்றல்'' என்னும் துறையில் அமைத்துப் பாடியிருத்தல் அறிந்து மகிழ்தற்குரியது.

''திகழும் பிரமபுரம் இஃது, அப்பெயர்த்
தீர்த்தம் இது;
நிகழும் பிரமலிங்கேசர்இல்
ஈது; நிலையழகி
புகழும் இல்ஈது; இது தோணிப்பிரான்
இல்; புகும்துயர் எற்கு
அகலும் வடுகன்இல் ஈது; இது
சம்பந்தனார் இல்மின்னே''

இவ்வாறே சீர்காழிக்கு அருகில் உள்ள திருக்கோலக்கா, வேளூர், திருக்கடவூர், திருவாரூர் முதலிய பற்பல தலங்களைப் பற்றியும் அகப்பொருள் துறைக்கு ஏற்றபெற்றியில் இயைத்துப் பாடியிருக்கும் திறன், நூலைப் பயின்றறிந்து பாராட்டி மகிழத்தகும்.

**சம்பந்தர் :**

*(1)* சீர்காழிக் கோவையில், சீர்காழியில் தோன்றியருளிய சம்பந்தரைப் பற்றிய பல வேறு வரலாற்றுச் செய்திகளையும், அகப்பொருள் துறைகளுக்கும் இலக்கணத்திற்கும் பொருந்த, ஆங்காங்கே கற்பனை நலம் சிறந்து திகழும் வண்ணம் அமைத்துப் பாடிச் செல்கின்றார், பெரும்புலவர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள்! தலைவியின் கண்கள், தலைவனுக்கு

முதலில் காதல் நோய் தோன்றக் காரணமாயின. அவைகளே பின்னர், அந்நோய் தணிக்கும் மருந்தாகவும் ஆயின. அத்தன்மை, திருஞானசம்பந்தப் பெருமான் மதுரையில் பாண்டிய மன்னனுக்கு முதலில் தீப்பிணியைப் 'பையவே செல்க' எனப்பணித்து வெப்புநோய் உண்டாகச் செய்ததனையும், அவரே பின்னர் 'மந்திரமாவது நீறு' என்னும் திருநீற்றுப் பதிகம் பாடித் திருநீறு பூசி அவ்வெப்பு நோயைத் தணித்ததனையும் போன்று இருந்ததாம்.

''அருளாற் பரமர் புகலியிற்
பாலுண்ட ஐயர், தென்னற்கு
அருளாற் புகுத்திய நோய், அவரை
ஒழித்தாங்கு, இவர்எற்கு
அருளாற் புகுத்திய நோய், இவரே
தெறல் அன்றி, மற்றோர்
அருளாற் புகல் மந்திரம்
ஆதியால் ஒழியாது அதுவே''

(2) தலைவன் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிகின்றான். ''சம்பந்தர்க்கு ஆயிரம் பொன் வழங்கியருளிய திருவாவடுதுறைப் பெருமானின் திருவருளால், செல்லுதற்கரிய பாலைநில வழியே சென்று, உங்கள் தலைவிக்குரிய முலைவிலைப் பொருளை யான் விரைவில் தேடிக் கொணர்வேன்'' என்று தோழியிடம் தலைவன் கூறிச் செல்கின்றான்.

''ஒருவா வளச்சண்பை ஓவார்
கவுணியர்க்கு ஓங்குபைம்பொன்
திருவா வடுதுறை யிற்கொடுத்தார்
தம் திருவருளால்,
மருவா அருஞ்சுரம் போய்வருவேன்;
உங்கள் மங்கைகொங்கைப்
பொருவா விலைகொண்டு மாதே
புகல்தி, அப் பூங்கொடிக்கே''

(3) தலைமகன் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதலை உணர்ந்த தலைமகள், ''தலைவர் பொருள்தேடி வருதல் குறித்துச் செல்ல இருக்கின்றார் போலும்! சீர்காழியில் கவுணியர் குலத்தில் தோன்றிய திருஞானசம்பந்தப் பெருமான், பாலை நிலத்தை நெய்தல் நிலமாக மாறும்படியும், திருமயிலையில் என்பை அழகிய பெண்ணாகும்படியும் அற்புதங்கள் நிகழ்த்தி அருளினார். தம்முடைய பிரிவாற்றாமையால் யான் உயிர் துறந்து இறந்து போயினால், மீளவும் என்னை உயிர்ப்பித்து எழுப்புவதற்கு, நம்முடைய தலைவர் அத்தகைய அற்புதச் செயல்களை நிகழ்த்துதற்குக் கற்றுக் கொண்டிருக்கின்றாரோ?'' என்று தோழியிடம் வினவுதல் ,சுவை மிக்குத் திகழ்கின்றது.

''சீரார் கவுணியர் போற்பாலை
நெய்தல் செயவும், என்புஓர்
ஏரார் மயில் செயவும்,
கற்றுளார்கொல்? இறைபுகலித்
தாரார் புயத்தர், தமையும்
எமையும் தழூஉம்துயரம்
ஓரார், பொருள் குறித்தே
சுரம் போயினது ஒத்ததன்றே''

(4) தலைமகள் முன்பனிப் பருவம் கண்டு வருந்துகின்றாள். தம்முள் இகல் கொண்டு போரிட முனைந்த அரசர்கள் இருவரை ஒற்றுமைப்படுத்தி வைத்து, போர் நிகழாமல் தடுத்து அமைதி ஏற்படுத்துவதற்காகச் சென்ற தலைவன், தான் மீளுதற்குரிய கார்காலம் கடந்து கழிந்ததாயினும், இன்னும் வந்து சேர்ந்திலன். ஆனால் கொடுமை மிக்க முன்பனிப் பருவம் வந்து சேர்ந்தது. அது தலைவனைப் பிரிந்த தலைவியைப் பெரிதும் வருத்துகின்றது. அந்நிலையில் என் செய்வது என்று தலைமகள் கவலை கொள்கின்றாள். ''கொங்கு நாட்டில் திருக்கொடிமாடச் செங்குன்றூர் என்னும் தலத்திற்குச் சம்பந்தர் சென்றிருந்தபோது, அங்கே முன்பனிப்பருவ காலத்தில், கொடுமையான குளிர் மிகுதியால், கொடியதொரு நளிர் சுரம் எங்கும் பரவி மக்களை வருத்தியது. அப்போது சம்பந்தர் ''அவ்வினைக்கு இவ்வினையாம் என்று சொல்லும் அஃது அறிவீர்; உய்வினை நாடாதிருப்பதும் உந்தமக்கு ஊனம் அன்றே; கைவினை செய்து எம்பிரான் கழல் போற்றுதும் நாம் அடியோம்; செய்வினை வந்து எமைத் தீண்டப்பெறா திரு நீலகண்டம்'' என்னும் திருப்பதிகம்பாடி, அக்கொடிய நோயை நீக்கியருளினார். ஆதலின், நாமும் அத்திருநீலகண்டத் தமிழ்த் திருப்பதிகத்தைப் பாடி, நம் வருத்தத்தைத் தணித்துக் கொள்வோம்'' என்று தலைவி ஒருவாறு ஆறுதல் அடைகின்றாள்.

''இருகா வலர்வெம் பகைதணிப்பான்
துணிந்து எய்தியநம்
ஒருகா வலர்வந் திலர்; வந்தது
முன்னுறு பனியே;
அருகா அலர் செறியும் பொழிற்
காழி அரன்அருள் பால்
பருகு ஆர்வலர் திருநீல
கண்டத்தமிழ் பாடுவமே''

(5) தலைவன் தலைவியைப் பிரிந்து, பரத்தையின் இல்லத்திற்குச் செல்லப் புறப்படுகின்றான். அப்போது தலைவியின்பால் இருந்த சிறு புதல்வன் ஓடிச் சென்று, தேம்பித் தேம்பி அழுது தன் தந்தையை அழைத்தான். தன் மகன் தன்னை விடாமல் பொருமிப் பொருமி அழுதலைக் கண்ட தலைவன் ,அதனால் பரத்தையின் இல்லத்திற்குச் செல்ல முடியாமல் வீட்டிலேயே தங்கிவிட்டான். இந்நிகழ்ச்சியைத் தலைவி தன் தோழியிடம் சொல்லி, தன் குழந்தையைப் பின்வருமாறு பாராட்டி மகிழ்கின்றாள்: ''தோழியே! இன்று நம்முடைய இந்தச் சிறுவன் யாது செய்தான் தெரியுமா? தன் தந்தைக்கு இரக்கம் உண்டாகுமாறு பொருமிப் பொருமி அழுது, அப்பா அப்பா என்று அழைத்தான். அதனால் அவர் தாம் விரும்பிய அந்த இடத்திற்குச் செல்ல முடியாமல், இங்கேயே தங்கி இருந்துவிட்டார். இச் சிறுவனின் செயல், தன் தந்தையாகிய சீர்காழித் தோணியப்பரை அருள்மிகுமாறு பொருமிப் பொருமி அழுது அழைத்த ஞானசம்பந்தப் பெருமானின் செயலைப் போல இருந்தது'' என்கின்றாள் தலைவி.

''களிமிகும் மாமயிற் சாயல்நல்லாய்!
கடையேன் இதயத்து
அளிமிகு வாழ்வுடையோன் சண்பை
யூரில், தன் தந்தைதனை
அளிமிகு மாறு பொருமிப்
பொருமி அழுதழைத்தான் ;
ஒளிமிகு ஞான சம்பந்தன் கொலோ?
என் ஒருமகனே''

**பிற நாயன்மார் குறிப்புகள் :**

(1) தலைவன் தலைவியை அடைதற் பொருட்டுப், பலகால் அவள் தங்கியிருக்கும் தினைப் புனத்திற்குச் சென்று வருகின்றான். அப்போது தலைவியின் தோழி, தலைவனுக்கு அருமை செய்து அயர்த்து, அவன்பால் சினங் கொண்டவள் போலச் சிறிப் பேசிப் பலவாறு அலைக்கழிக்கின்றாள். ஆயினும் அத்தோழியே பின்னர்த் தலைவனையும் தலைவியையும் சேர்த்து வைத்து, அவர்கள் முறைப்படிமணந்து கொள்ளுவதற்குத் துணை புரிகின்றாள். அந் நிலையில் ''செறாஅச் சிறுசொல்லும் செற்றார் போல் நோக்கும் உறாஅர்போன் றுற்றார் குறிப்பு'' என்று, திருக்குறள் கூறும் உண்மையை உணர்ந்துகொண்டு, தலைவன் மகிழ்கின்றான்.

''திருநாவுக்கரசருக்குத் திருவதிகை வீரட் டானேச்சுரப் பெருமான் முதலில் தம் மறக் கருணையால் கொடிய சூலை நோயை உண் டாக்கினார்; அப்பெருமானே பின்னர் அதனை நீக்கித் தம் அறக்கருணையால் அவரைப் பெரி தும் ஆட்கொண்டு அருள் புரிந்தார். அது போலவே இந்த தோழி என்னைப் பலகால் வன்சொல் கூறி வருத்தினளாயினும், இது போது என்பாற் பெரிதும் தண்ணளியுடைய வளாய்ப் பெருநலம் புரிந்துள்ளாள்'' என்கின் றான் தலைவன்.

''துருத்தி அவாம்சண்பை நாயகர்
அப்பர்க்குச் சூலைவெந்நோய்
பொருத்திய வாறு, அவர்பால்,
அருளாகிப் புகுந்ததுபோல்,
இருத்திய ஆர்வத்து இவர்
பலகால் வன்சொல் ஈந்து, நம்மை
வருத்திய வாறுநம் மாட்டு
அருள்ஆகி மலிந்ததுவே''

(2) தலைவன், ஓர் அழகிய பூம்பொழி லில் தலைவியை முதற்கண் கண்டு தலைப்படு கின்றான். அவள்பால் தன் காதலைப் பல வகைகளில் கூறி இணங்குவித்து, 'யான் நின் னைப் பிரியேன், பிரிந்தால் உயிர் தரியேன்' என்று சூளுரை புகல்கின்றான். இதனை அகப் பொருள் இலக்கணத்தில் ''பிரியேன் என்றல்'' என்னும் துறையாகப் புலவர்கள் கூறுவர். இவ் வகப்பொருள் இலக்கணத்துறைக் கருத்து, நம் சீர்காழிக் கோவையில் பின்வருமாறு பாடப் பெற்றிருக்கின்றது. ''சீர்காழியைப் போல் விளங்கும் தலைவியே! முன்னொரு காலத்தில் திருவொற்றியூரில், மகிழமரத்தின் அடியில், சுந்தரமூர்த்தி சுவாமிகள் உன்னைப் பிரியேன் என்று சங்கிலி நாச்சியாருக்குச் சூளுரை செய்து கொடுத்துப் பின்னர் அச்சூளுரை தவறியத னால் அடைந்த துன்பங்களை, யான் நன்றாக அறிவேன். ஆதலின் நான் சூளுரை தவறுவேன் என்று நீ கருதற்க. யான் நின்னை எஞ்ஞான் றும் பிரியமாட்டேன் என்று, நம் சீர்காழியில் உள்ள கண்கண்ட அருட்பெருந் தெய்வமாகிய சட்டைநாதர் முன்னே, யான் உனக்குச் சத்தி யம் செய்து தருகின்றேன்'' என்கின்றான் தலைவன்.

''வரியேல் மதர்விழிச் சங்கிலி
காண, மகிழ் அடியிற்
பிரியேன் என்றோதிப் பிரிந்து, வன்
தொண்டர் முன் பெற்றதையான்
தெரியேன் அலேன்; வண் புகலியன்னீர்
நுமைத்தீர்ந்தும் உயிர்
தரியேன், பிரியேன் எனச்
சட்டைநாதர் முன் சாற்றுவனே''

(3) அகப்பொருள் நூல்களில், ''அறத் தொடு நிற்றல்'' என்னும் பகுதியில், பூத்தரு புணர்ச்சி, புனல்தருபுணர்ச்சி, களிறு தரு புணர்ச்சி எனப் பலதுறைகள் வரும். அவற்றுள் 'புனல்தரு புணர்ச்சி' என்பது ஒன்று. தலைவி தினைப்புனத்தின் அணிமையில், ஓர் அருவி அல்லது ஆற்றில் நீராடச் செல்கின்றாள். அங்கே அவள் வெள்ளத்தால் ஈர்க்கப்பெற்று உயிர்துறக்கும் நிலையில் தத்தளித்தாள். அப் போது எதிர்பாராதவகையில் அங்கு வந்த தலைமகன் அவளைக் காப்பற்றுகின்றான். தோழி அந்த நிகழ்ச்சியை எடுத்துக்கூறி, தலைவி அவனையே மணக்க விரும்புதலைத் தாய்க்குத் தெரிவிக்கின்றாள். சீர்காழிக் கோவையில் இத்துறைக்குரிய செய்யுள்மிகவும் சிறப்பு வாய்ந்ததாகத் திகழ்கின்றது.

''திருவிடைமருதூரில் ஏகநாயகன் எனப் பெயர் பெற்று விளங்கும் சீர்காழிப் பெருமா னின், சோழவள நாட்டுக்குரிய காவிரியாற்றின் ஒரு துறையில், தலைவி நீராடுவதற்காக இறங் கினாள். வெள்ளத்தின் வேகம் அவளை ஒரு சுழியில் இழுத்துச் சென்றது. அவள் அச்சுழித் தலைப்பட்டு அழுந்தி மயங்கி மிதந்தாள். திருக்கயிலையில் ஒரு பொய்கையில் மூழ்கிய திருநாவுக்கரசர், திருவையாற்றுக் குளத்தில் எழுந்தமைபோல, ஒரு துறையில் மூழ்கிய தலைவி, இத் தலைவராற் காவிரியின் மற் றொரு துறையின் கரையில் காப்பாற்றி விடுக்கப்பெற்றாள். அதனால் தன்னுயிரைக் காப்பாற்றிய தலைவனையே தலைவி மணக்க விரும்புகின்றாள்'' என்பது, தாய்க்குத் தோழி யின் கூற்று.

''மருதுறை ஏகன் புகலிப்பிரான்
வள நாட்டு நதி
ஒருதுறை மூழ்க உள்நீர் ஈர்த்தலால்,
மற்றொரு துறைபோய்க்
கருதுறை நாவுக் கரசுஎனத்
தோன்றும் அக்காலையின், ஓர்
விருதுறை வேலவனாற் கரை
ஏறினள் மெய்ம்மை இதே''

(4) அகப்பொருள் இலக்கணத்தில் ''நாண் அழிவு இரங்கல்'' என்பது ஒரு துறை. தலை வனுடன் உடன்போக்குச் செல்ல நேரும் தலைவி, தான் தன்னுடைய நாணத்தை

இழந்து பிறர் பழிக்கும்படியாகக் களவு நிலையில் தலைவனுடன் செல்லநேர்ந்தமை குறித்துக் கவல்கின்றாள். ''உயிரினும் சிறந்த நாணத்தைக் கைவிடுதலும் ஒரு பெண்ணிற்கு அடுக்குமோ? நாணத்தைக் கைவிட நேரும் பெண் பிறப்பைக் காட்டிலும், பேய்ப் பிறப்பே மேலாகும். அதனாலன்றோ, காரைக்கால் அம்மையார் தம் பெண்பிறப்பை ஒழித்து, இறைவன்பால் வானமும் மண்ணுமெலாம் வணங்கும் பேய்ப் பிறப்பை வேண்டிப் பெற்றார்'' என்று தலைவி குறிப்பிடுகின்றாள்.

''எண் பிறப்பைத் தவிர்த்தார்
காழி நாதர் இமயத்தினால்
நண் பிறப்பைத் தரலால்
நம் பிறப்பு நகுபிறப்பே;
ஒண் பிறப்பைத் தரு வண்
காரைக்காலம்மை ஓர்ந்தலவோ?
பெண் பிறப்பைத் தவிர்த்துற்றாள்
ஒருகரும் பேய்ப் பிறப்பே''

**சைவசித்தாந்தம் :**

(1) பெருங்கவிஞர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள், சைவசித்தாந்தத் தனிப் பெரும் ஞானநிலையமாகிய திருவாவடுதுறை ஆதீனப் புலவராக விளங்கியிருந்தவர். சைவ சித்தாந்தச் சான்றோர்களாகிய சிவஞான முனிவர், கச்சியப்பமுனிவர் போன்ற, பற்பல பெருமக்களின் நூல்களையெல்லாம் ஆய்ந்து தோய்ந்து, தம் வாழ்நாள் முழுவதும் திளைத்தவர். ஆதலின் அவர்தம் பாடல்கள் அனைத்திலும் சைவசித்தாந்தத் தமிழ்மணம் யாண்டும் கமழ்ந்து நிற்கக் காண்கின்றோம். சிவ வழிபாடு, மந்திரம் கிரியை பாவனை என்னும் மூன்றானாலும் நிகழ்தற்குரியது. மந்திரம் கிரியை பாவனை என்னும் மூன்றும் இன்றிச் சிவவழிபாடு நிகழ்தல் இல்லை. சமய தத்துவ நூல்கள், இம் மூன்றனையும் விரித்துரைத்து விளக்குகின்றன. ''சிவவழிபாடு செய்பவர்களுக்கு மந்திரம் கிரியை பாவனை என்னும் மூன்றும் போல, நாணம் அச்சம் மடம் என்னும் மூன்றும் குலமகளிர்க்கு இன்றியமையாதன'' என்று சீர்காழிக் கோவையில் 'கற்பு மேம்பாடு தோழி கூறல்' என்னும் அகப்பொருள்துறை, அறிவுறுத்துகின்றது.

''பூவனையாய் நினக்கு ஓதுவது
என்னை? புகலியில்நம்
தேவனை யேஅருச் சிப்பார்க்கு
மாமந்திரம் கிரியை
பாவனை; நாணம் மடம் அச்சம்காண்
குலப் பாவையர்க்கு;
மேவுஅனை யார்க்குஅன்பு; தேர்
இனையார்க்கு விரும்புகற்பே''

(2) இவ்வாறே ஆன்மீக அருள்வாழ்க்கையில் ஞானாசிரியனால் மாணவனுக்குச் செய்யப்படும் சமயதீக்கை, விசேடதீக்கை, நிர்வாணதீக்கை என்னும் மூன்றனையும் பற்றிக் கூட, நம்முடைய பெருங்கவிஞர்பிரான் சொற் பொருட்சுவை நலம் பொதுளத் ''தலைவன் தலைவியைப் புகழ்தல்'' என்னும் துறையில் அமைத்துப் பாடி மகிழ்விக்கின்றார். எளிய கருத்தை விளக்க அரிய பெரிய கலைக்குறியீட்டுச் சொற்களை வழங்கியுள்ள ஆசிரியரின் நுண்மாண் நுழைபுலம், பெரிதும் வியந்து போற்றுதற்குரியதாகும்.

''சமைய விசேட நிருவாணம்
என்று, நம் சண்பைப் பிரான்
அமைய உரைத்தது உணர்ந்தாய்கொல்?
நீ தனி ஆகுவதே
சமையம்; நின் அங்கை தொடலே
விசேடம்; தரித்தகலை
அமைய நெகிழ்த் திடலே
நிருவாணம்; மெய்இதுவே''

இன்னோரனைய தத்துவ நுட்பக் கருத்துக்கள் அமைந்த செய்யுட்கள் பலப்பல, சீர்காழிக் கோவையில் உள்ளன. அவையனைத்தும் தனித்தனியே நுண்ணிதின் அறிந்து வியந்து இன்புறுதற்கு ஏற்றனவாகும்.

**கருத்துக்கள் உதிப்பும், வடிப்பும் :**

ஒருவரின் உள்ளத்திற் புதிய புதிய கருத்துக்கள், கற்பனைகள் உதிப்பதும், அவற்றை அவர் வெவ்வேறு வகையான கவிதை-கட்டுரை-நூல்-வடிவங்களில் திறம்பட அமைப்பதும், ஒரு சிலர் நினைப்பதுபோல எளிதான செயல் அன்று. மிகவும் கடினமான-இடர்ப்பாடான செயல்களுள் ஒன்று அது.

''பெற்றவட்கே தெரியும் அந்த வருத்தம்;
பிள்ளை பெறாப் பேதை அறிவாளோ?''

எனத் தாயுமான அடிகளார் பாடுவதுபோல, அதன் அருமைப்பாட்டினை, வேறு பிறர் சிறிதும் அறிதல் இயலாது. பிற பருப்பொருள்களை நாம் கருவிகளின் துணைகொண்டு செய்து உருவாக்குதல் போல, நாம் நம் முயற்சியினால் அரிய இனிய சிறந்த நுண்ணிய சுவைமிக்க கருத்துக்களை உருவாக்குதல் இயலாது.* கருத்துக்கள் தாமாகவே நம் உள்ளத்தில் இறையருளால் உதித்து உருப்பெறுதல் வேண்டும். மேலைநாட்டு அறிஞர்கள் பலர் தத்தம் நூல்களில், தாம் கட்டுரையோ கவிதையோ எழுதத் தலைப்பட்டு அடைந்த பல இன்னல்களையும் அநுபவங்களையும், அடைந்தவாறே பிற்கால மக்களுக்குப் பயன்படும் பொருட்டுக் கிளந்து கூறி மொழிந்திருக்கின்றனர்.

ஏ. ஜி. கார்டினர் என்னும் புகழோங்கிய ஆங்கில எழுத்தாளர், தாம் எழுதிய ''கடற் கரையிற் கூழாங்கற்கள்'' என்னும் நூலின் கட்டுரை ஒன்றில், ''எழுதுவது என்பது மட்டுமே கடினம் அன்று! அதற்குரிய பொருளையோ-தலைப்பையோ தேர்ந்தெடுப்பதும்கூட, மிகவும் கடினமான ஒரு செயல்! ஏதேனும் எழுத விரும்பி முயலும் போதெல்லாம், அதற்குரிய பொருளோ கருத்தோ ஒன்றும் தோன்றாமை

* "A man can not say 'I will compose poetry'. Even the greatest poet cannot say it"

—W. B. Yeats

யால், கைந்நகங்களைத் திருத்துவதும், எழுதுகோல்களைக் கூர்மையாக்குவதுமாகவே பெரும்பாலும் காலங் கழிகின்றது. இவற்றால் மேலும் திகைப்பு உண்டாகின்றதேயன்றிக் கருத்தொன்றும் உதித்திலது'' என்று குறிப்பிடுகின்றார்.(1)

**கஸ்டாவ்** ஃபிளாபர்ட் என்னும் பிரசித்தி பெற்ற ஃபிரெஞ்சு நூலாசிரியர், ''ஏதேனும் ஒரு சிறுசொல் தடைப்பட்டுவிட்டால், அதனைக் கண்டு பிடிப்பதற்காகக் கைகளில் தலையை வைத்துக்கொண்டு, வறண்டுபோன நற்பேறற்ற மூளையினின்று அச்சொல்லை வலிந்து கசக்கிப் பிசைந்து முயன்று வருவித்தலின் பொருட்டு, ஒரு நாள் முழுவதும் உட்கார்ந்திருக்க நேரும் துன்பம் எத்தகையதென்று நீ அறிய மாட்டாய்! கலைத்துறையிற் கடினமான உழைப்பு இன்றியமையாததாக இருக்கின்றது. ஆ! உண்மையிலேயே எழுதுதலால் நேரும் வேதனைகளை யான் நன்குணர்கின்றேன்'' எனத் தம் நெருங்கிய நண்பர் ஆகிய ஜார்ஜ் சேண்ட் என்பவருக்குத் தெரிவிக்கின்றார்.(2)

ஏ. இ. **அவுஸ்மன்** என்னும் ஆங்கிலக் கவிஞர் ஒருவர், பின்வருமாறு தம்முடைய அனுபவம் ஒன்றை, எழுதுகின்றார்: ''யான் ஒரு சமயம் ஒரு கவிதை எழுத நினைத்துத் தொடங்கினேன். முதல் இரண்டு செய்யுட்களை ஏதோ, ஒருவாறு எழுதி முடித்தேன். மூன்றாவது செய்யுள் ஒன்றை எழுத முயன்றேன். அஃது எளிதில் வருவதாக இல்லை. சிறிது ஓய்வு எடுத்துக்கொண்டு, தேநீர் அருந்திய பின்னர்ச் சிறிது இடர்ப்பட்டு அம்மூன்றாம் செய்யுளை எழுதி முடித்தேன். கவிதை முடிவதற்கு நான்காவது ஒரு செய்யுளும் தேவைப்பட்டது. அதனை எழுத எவ்வளவோ முயன்று பார்த்தேன். அஃது அறவே வர மறுத்து திட்டது. எங்ஙனமேனும் எழுதியே தீரவேண்டியிருந்தமையால் அது மிகவும் தொல்லையான வேலையாகவே இருந்தது. அதனை யான் 13 முறைகள் திருத்தித் திருத்தித் திரும்பத் திரும்ப எழுதிப் பார்த்தேன். அப்போதும் அது செவ்விதாக அமையவே இல்லை. பின்னர்ப் பன்னிரண்டு மாதங்கள் வரை காத்திருந்து, மிகவும் முயன்று அதனை முடிக்கவேண்டி நேர்ந்தது. அதற்குப் பின்னர்தான் அஃது ஓரளவு திருத்தமாக அமைவதாயிற்று.''(3)

இவ்வாறே மிகவும் புகழ் பெற்றவரும், உலகப் பெருங்கவிஞர்களுள் ஒருவராக மதிக்கப் பெறுபவரும் ஆகிய வில்லியம் வோர்ட்ஸ்வொர்த் என்பவர் (1770-1850), 'குயிலுக்கு' ( To the Cuckoo ) என்னும் தலைப்பில் தாம் எழுத முற்பட்ட கவிதையில், அக்குயிலின் குரல்பற்றிக் கொடுக்கத்தக்க பொருத்தமான அடைமொழி ( Epithet ) ஒன்றனைக் காண மாட்டாமல், எத்தனையோ சொற்களை மாற்றி மாற்றித் திருத்தி அமைத்துப் பார்த்தும், அவைகளுள் ஒன்றேனும் செவ்வியதாக அமையாமையால், மன நிறைவு கொள்ளாதவராய்ப் பல ஆண்டுகள் வருந்தி முயன்று வந்தார். கடைசியாக 43 ஆண்டுகள் கழித்துத் திடீரென ஒருநாள் 'அலைந்து திரியுங்குரல்' ( Wondering Voice ) என்னும் அடைமொழித் தொடர், அவர் உள்ளத்தில் உதித்தது. அதனையே அக் கவிதையில் அவர் பின்னர்த் திருத்தியமைத்துப் பதிப்பித்தார், என்று அவர்தம் சகோதரியார் ஆகிய டொரத்தி வோர்ட்ஸ்வொர்த் என்பவர் குறிப்பிட்டுள்ளார்.(4)

கருத்துக்களை நினைத்தலும், அவற்றைத் தொகுத்துத் திருத்தமாக வெளியிடுதலும் மிகவும் கடினமான உழைப்புமிக்க ஓர் அரும் பெரும் முயற்சியாகும். ''ஒருவரி இயற்கைப் புனைவுரை எழுத அவர் நூறு (100) கல் தொலைவு பயணம் புரிந்தார். ஒரு சிறு சொற்றொடர் எழுதக் குறைந்தது இருபது (20) நூல்களையாவது ஆராய்ந்தார்'' என்று **மெக்காலே** என்னும் பேரறிஞரைக் குறித்து, **தாக்கரே** என்னும் ஆசிரியர் குறிப்பிடுகின்றார் (5)

---

(1) "Now if you are accustomed to writing articles for a living, you will know that sometimes the difficulty is not writing the article, but choosing a subject....I had pared my nails several times with absent-minded industry, and sharpened every pencil I had on me with elaborate care. But the more I pared my nails and the more I sharpened my pencil the more perplexed I grew as to the theme for an article..."

—A.G. GARDINER,
*On writing an Article in "Pebbles on the Shore"*

"You beat your pate, and fancy wit will come;
Knock as you please, there's nobody at home".

—ALEXANDER POPE.

(2) "You don't know what it is to stay a whole day with your hands trying to squeeze your unfortunate brain so as to find a word...Hard labour at art is necessary. Ah! I certainly know the agonies of writing."

*—Gustave Flaubert to George Sand*

(3) "A third stanza came with a little coaxing after tea. One more was needed, but it did not come. I had to turn to and compose it myself, and that was a laborious business. I wrote it thirteen times. and it was more than twelve months before I got it right."

—A.E.HOUSMAN

(4) "Dorothy Wordsworth records in her 'Journal' that her brother, Willaim had tried to seek an epithet for the Cuckoo and only after 43 years found himself able to express the sound of the Cuckoo's Wandering Voice".

—I.L.LOWES,
*Convention and Revolt in Poetry, p.6.*

(5) "To write a line of description, he travelled hundred miles; to write a single sentence he consulted at least twenty books".

—W.M. THACKERAY,
*On Lord Macaulay, in 'Nil Nisi Bonum'*

இராபர்ட் லூயி ஸ்டீவன்சன் என்னும் பெரும் புகழ்மிக்க புதின ஆசிரியர், ஒரு ஒருமுறை ஒருநாள் இரண்டு மணிநேரம்முயன்று ஒரு சிறு சொற்றொடர் மட்டுமே எழுதினார். மறுநாள் அதனைப் படித்துப் பார்த்து, குப்பைக் கூடையில் கிழித்தெறிந்துவிட்டார். (6)

தாமஸ் கிரே என்பவர், 'சிற்றூர்க் கோயிலின் முன்றிலில் எழுதிய இரங்கற் கவிதை' என்பதனை எழுதிமுடிக்க எட்டு ஆண்டுகள் ஆயின. (கி.பி. 1732-1740).

ஆல்ஃபிரெட் டென்னிசன் என்னும் கவிஞர், தமது நண்பராகிய ஆர்தர்ஹாலம் என்பவரின் மறைவு குறித்து "நினைவின் பொருட்டு" என்னும் கையறு நிலைச் செய்யுளை இயற்றப் பதினேழு ஆண்டுகள் கழிந்தன. (7) இங்ஙனமே "உயிர்வகைகளின் தோற்றம்" என்னும் நூலை எழுதச் சார்லஸ் டார்வின் என்பவர், பதினேழு ஆண்டுகள் அரிதின் உழைக்க வேண்டியிருந்தது.

"மூலதனம்" என்னும் நூலை எழுதக் கார்ல்மார்க்ஸ் பதினெட்டு ஆண்டுகள் செலவிட்டார். நத்தானியேல் ஹாத்தார்ன் என்னும் ஆசிரியருக்குச் 'செவ்வண்ணக் கடிதம்' (Scarlet Letter ) என்னும் புதினம் எழுத இருபது ஆண்டுகள் தேவைப்பட்டன. தாம் கேட்ட ஒரு சுவையான நிகழ்ச்சி ஒன்றைப் பற்றிய கதையினை எழுதச் சாமர்செட்மாம் என்பவர்க்கு, நாற்பது ஆண்டுகளுக்குப் பின்னரே முடிந்தது(8).

ஓவியன் ஒருவன் எங்ஙனம் ஓர் உருவத்தைப் பலகால் அழித்தழித்துத் திரும்பத் திரும்ப வரைந்து வண்ணந்தீட்டி உருவாக்குகின்றானோ, அங்ஙனமே ஒரு எழுத்தாளன் அல்லது கவிஞன் தனது உணர்வுக்கோல் கொண்டு ஒரு கருத்தை வெளியிடுவதற்குப், பலமுறை திரும்பத் திரும்ப முயன்று சிந்தித்து இடர்ப்பட்டு உழைத்துச் செப்பனிட வேண்டியுள்ளது. உலகப் புகழ் வாய்ந்த எர்னஸ்ட் எமிங்க்வே என்னும் பெரு நூலாசிரியர் "படைகளுக்கு விடையளிப்பு" ( Farewell to Arms ) என்னும் தமது நூலொன்றின் இறுதிப் பக்கத்தினை மட்டும் முப்பத்தொன்பது (39) முறை மாற்றி மாற்றி, அழித்தழித்து, திருத்தித் திருத்தி எழுதியதாகக் குறிப்பிடுகின்றார். (9)

முடிவுரை :

இன்னோரனைய மேலை நாட்டுப் பேரறிஞர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் செய்திகளையும் அனுபவங்களையும் பற்றி, நாம் இனிதறிந்து உணர்ந்து கொண்டு கருதுவோமாயின், பெருங் கவிஞர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களின் அரும்பெறல் மாட்சிமைகளையெல்லாம், நாம் செவ்விதில் தெளிந்து உணர்ந்து கொண்டு, மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்து வியந்து நிற்போம் என்பது திண்ணம்.

நம்முடைய கவிஞர்பெருமான் அவர்கள் பாடிய நூல்கள் பற்பல. அவைகள் பலவகைகளாகவும், பல அமைப்புடையனவாகவும் விளங்குகின்றன.

| | |
|---|---|
| உலா | 1 |
| தூது | 1 |
| கலம்பகங்கள் | 2 |
| பதிகங்கள் | 3 |
| கோவைகள் | 3 |
| யமக அந்தாதிகள் | 3 |
| திரிபு அந்தாதிகள் | 5 |
| மாலைகள் | 6 |
| பிள்ளைத்தமிழ்கள் | 9 |
| தலபுராணங்கள் | 16 |

ஆகிய பற்பல நூல்களை, நம் கவிஞர் பெருந்தகை அவர்கள் இயற்றியிருக்கின்றார்கள். இவைகளில் அடங்காமல் விடுபட்டுப்போன மற்றும் எத்துணையோ பலபல பாடல்களும், சிறுசிறு நூல்களும் வேறே இருக்கின்றன.

கலைப்படைப்பு என்பது உழைப்பு மிகுதியும், களைப்படைவும், இடர்ப்பாடும் இன்றி யாண்டும் நிகழ்தல் இல்லை. இத்துணை நூல்களையும் இயற்றியக்கால், அவர்கள் எத்துணை இடர்ப்பாடும் துன்பங்களும் அடைந்திருப்பார்கள்? எவ்வளவு முயற்சியும் உழைப்பும் மேற்கொண்டிருப்பார்கள்? என்று கருதியுணர்ந்தால், பிள்ளை அவர்களின் கடலனைய பெருமையை நாம் ஒரு சிறிதேனும் உணரப்பெறலாம்.

இத்தகைய சிறந்த வித்தகக் கவிஞர்குரிசில் ஆகிய நம்முடைய மாட்சிமைமிக்க பெருங்கவிஞர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் அருமை பெருமைகளை உணர்ந்து, நாம் அப் பெருந்தகையாரின் நினைவுநாளைச் சிறப்புற ஆண்டுதோறும் தமிழகம் எங்கணும் உள்ள சிவதலங்களிலெல்லாம் நன்கினிது கொண்டாடி, அவர்தம் அரிய இனிய நூல்களைப் பயின்று பாராட்டிப் போற்றி, நலம்பெற முற்படுவோமாக.

---

(6) "Robert Louis Stevenson, it has been said, once spent two hours in writing only one sentence and next day, after reading it, threw it into the waste paper basket. If that was true with a writer like Robert Louis Stevenson, what would it be to an ordinary mortal".

(7) "Seventeen years elapsed between the death of Arthur Hallum and the publication of Tennyson's exquisite elegy, In Memoriam".

—W.J. DAWSON
*The Makers of Modern English*

(8) "This anecdotes gave me the idea for a story which I wrote only 40 years later".

—SOMERSET MAUGHAM,
*A Writer's Note-book.*

(9) "I rewrote the ending to Farewell to Arms, the last page of it, thirty-nine time before I was satisfied."

—ERNEST HEMINGWAY,
*Writers' At Work*, p. 178.

# உங்கள் சிந்தனைக்கு

திரு. ஆர். ஷண்முகசிகாமணி, ஐ.ஏ.எஸ்,
ஆணையர், அறநிலையத்துறை, சென்னை.

(1) ஆலயங்களில் வழங்கப்படும் குங்குமம், வண்ண வண்ண நிறங்களில் கவர்ச்சிகரமாக இருந்தபோதிலும், அந்த வர்ண வர்ணக் குங்குமம் பலர் முகங்களில் நெற்றியில் ஒரு நிரந்தரக் கரு வட்டத்தை ஏற்படுத்தி உள்ளதை நாமறிவோம். நமது மரபுப்படி குங்குமத்தை, மஞ்சள் குங்குமம் என்று, தான் சொல்லி வருகிறோம். இதனால் பொதுவாக மஞ்சள் வேறு, குங்குமம் வேறு என்று மக்களிடையே தவறான ஒரு கருத்து நிலவி வருகிறது. மஞ்சள் குங்குமம் என்பதன் உண்மையான பொருள், மஞ்சளால் செய்யப்பட்ட குங்குமம் என்பதுதான்.

அருள்மிகு மதுரை அங்கயற்கண்ணி ஆலயத்தில் அத்தகைய மஞ்சள் குங்குமம் செய்யும் பேற்றினைப் பரம்பரையான ஒரு சில குடும்பத்தினர் ஏற்று நடத்தி வருகின்றனர். அருள்மிகு கற்பகாம்பாள் உடனுறை கபாலீசுவரர் ஆலயத்தின்அருகிலும், அத்தகைய மஞ்சளால் தயாரிக்கப்பட்ட குங்குமம் ஒரு தனியார் நிறுவனத்தின் மூலம் விற்கப்படுவதை, எவ்வளவு ஆஸ்திகப் பெருமக்கள் அறிவார்கள் என்பது தெரியவில்லை. மஞ்சளால் தயாரிக்கப்பட்ட குங்குமம், முகத்தில் நிரந்தர சருமப் புள்ளியையோ அல்லது சரும வியாதிகளையோ ஏற்படுத்துவதில்லை. மாறாக சருமத்திற்கு அது ஒரு பாதுகாப்பாகவும், பொதுவாக அதை அணிபவர்கள் அனைவருக்கும் மங்களம் பயக்கக் கூடியதாகவும் இருப்பதை, ஆண்டாண்டு காலமாக அத்தகைய மஞ்சள் குங்குமத்தை அணிந்து வருபவர்கள் உணர்வார்கள். எனவே தமிழ்நாட்டிலுள்ள ஆலயங்கள் அனைத்திலும் அர்ச்சகப் பெருமக்களும், ஆஸ்திகப் பெருமக்களும் வண்ணக் வண்ண கலவைகளால் தயாரிக்கப்பட்டக் சருமத்துக்குத் தீராத நிரந்தர ஊறு விளைவிக்கும் செயற்கை, குங்குமத்தைத் தவிர்த்துத் தொன்றுதொட்டு நம் மரபுப்படி மஞ்சளினால் தயாரிக்கப்படும் குங்குமத்தையே அனைவரும் உபயோகிக்க முன்வர வேண்டுகிறேன்.

(2) நம் நாட்டில் உள்ள ஆயிரக் கணக்கான ஆலயங்களும், மடங்களும், நம் அனைவரின் உள்ளத்திலும் திகழும் அந்தப் பேரொளியை ஏகாந்தமாக உணர்வதற்கு வழிகாட்ட ஏற்பட்ட அமைப்புக்களே ஆகும். அத்தகைய ஆதியும் அந்தமும் இல்லாத பரம்பொருளை உணர்வதற்கு, ஏகாந்தமான பெரும் அமைதி இன்றியமையாதது. ஆனால் சமீப காலத்தில் தெருவுக்குத் தெரு அமைந்துள்ள ஆலயங்களில், ஆடி ஞாயிற்றுக் கிழமைகளில், மாரியம்மன் விழாக்களானாலும் சரி, பிள்ளையார் சதுர்த்தி விழாக்களானாலும் சரி, மார்கழி மாதக் காலைவேளை ஆராதனைகளானாலும் சரி, போட்டி போட்டுக் கொண்டு, காதைத் துளைக்கும் வகையில் ஒலி பெருக்கி ஏற்பாடுகள் செய்வதால், அப் பரம் பொருளை அமைதியில் நாம் உணர எங்ஙனம் உதவக்கூடும்? அமைதியை அடித்தளமாகக் கொண்டே, அந்தப் பேரமைதியில்தான், நம் உள்ளத்தில் உறையும் பேருண்மையை, நாம் உணர்வதற்கு உதவுமே யொழிய, காதைத் துளைக்கும் ஒலிபெருக்கி அமைப்புகளால் ஒலி பரப்பப்படும் மெல்லிசையினாலோ அல்லது பக்திப் பாடல்களினாலோ அல்ல என்று திட்டவட்டமாகச் சொல்ல இயலும். நம் அனைவர் உள்ளத்தில் உறையும் பேருண்மையை நாம் அறிய உண்மையில் ஆர்வப்படின் ஆலயத் திரு விழாக்களை நடத்துகின்ற நேரத்தில் அல்லது மார்கழி மாதக் காலை வேளை ஆராதனைகளில், ஒலிபெருக்கிகள் மூலம் அந்தப் பகுதிகளில் வாழும் மக்கள் அனைவரது காதுகளையும் செவிடாக்கும் வகையில், இசையை ஒலிபரப்பி வருவதைக் கண்டிப்பாகத் தடுத்து நிறுத்தி விடுவோம். ஏகாந்தமான பேரமைதியில்தான் அந்தப் பேரொளியை நாம் காணமுடியும் என்பதில், எந்தக் கருத்து வேறுபாடும் யாருக்கும் இருக்க இடமில்லை.

(3) தம் வாழ்வில் ஒளி வீசி உச்சக்கட்டத்தில் வாழும் பெரிய மனிதர்கள், தவிர்க்க முடியாத இயற்கையினை எய்தும்பொழுது, செய்தித் தாள்களில் அத்தகைய இறந்த பெருமகனாரின் புகைப்படம் தாங்கிய விளம்பரங்கள் நாட் கணக்கில், ஏன் மாதக் கணக்காகக்கூடப் பல ஆயிரம் ரூபாய் செலவில் வெளியிடப்படுகின்றன. இது இறந்தவரின் நினைவைப் புனிதப் படுத்தவோ அல்லது அவரது பெருமையை என்றும் நின்று நிலவச் செய்யவோ, எவ்விதத்தில் உதவும்? உபயோகித்த செய்தித் தாள்கள் பல வகைகளில் பயன்படுத்தப் படுவதால், அந்தப் பெரிய மனிதரின் திருவுருவம் தாங்கிய புகைப் படம் அடங்கிய தாள்கள், மறைந்தவர் வாழ்ந்த கண்ணியமிக்க வாழ்வுக்கு எதிர்நிலையாக அமையுமேயொழிய, அவரது பெருமையை அவை ஒருநாளும் வருங்காலச் சந்ததியினருக்கு ஒரு அறக்கட்டளைபோல நிரந்தரமாக எடுத்துக் காட்டச் சற்றும் இயலாது. இப்படி இறந்தவரின் புகைப்பட விளம்பரத்தை வாரக் கணக்கில் மாதக்கணக்கில், ஏன் ஒரே நாள் செய்தித் தாளில் பல இடங்களில் பிரசுரிக்கச் செலவிடும் கணிசமான தொகையினை வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் லட்சோபலட்சம் ஏழைக் குழந்தைகளுக்கு அரசு மேம்படுத்தும் சத்துணவுத் திட்டத்தின்கீழ் அமைக்கப்படும் சமையல் கூடங்களுக்கு ஏன் அளிக்க முன்வரக் கூடாது?

பெருமக்களின் சிந்தனையைத் தூண்ட இந்த மூன்று கருத்துக்களை அண்மையில் புனித நீராட்டுக் கண்ட அருள்மிகு அன்னை கற்பகாம்பாள் மற்றும் அருள்மிகு அப்பன் கபாலீசுவரர் அவர்களின் சரண கமலாலயங்களில் சமர்ப்பிக்கின்றேன்.

# திருக்குறளும், பிள்ளைலோகாசாரியரும்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

## முன்னுரை :

திருக்குறள் ஒப்புயர்வற்ற தெய்விகப் பெருநூல். காலத்தாலும் இடத்தாலும் மாறுபடாதனவும், நிறம் இனம் மொழி நாடு முதலிய வேறுபாடுகளைக் கடந்தனவும், என்றும் பொய்யாதனவும், எல்லா மக்களும் உவந்தேற்றுக் கொள்ளத் தக்கனவும், ஆக விளங்கும் அடிப்படை உண்மை அறக்கருத்துக்களை வரையறுத்து உணர்த்தும் நலத்தில், திருக்குறள் தலைசிறந்ததாகத் திகழ்கின்றது. உலக மொழிகள் அனைத்திலுமுள்ள நீதி நூல்கள் பலவற்றுள்ளும், திருக்குறளுக்கு ஒரு பெருந் தனிச் சிறப்பிடம் உண்டு.

திருக்குறள் கூறும் கருத்துக்கள், மிகவும் உயர்ந்தவை; திட்பநுட்பம் செறிந்தவை. நவில்தொறும் நயம் பயப்பவை; அறிதோறும் அறியாமை புலனாகும்படி ஆழ்ந்து அகன்று நுணுகிச் செல்பவை; எண்ணியுணரும்தோறும் மேன்மேற் பல நுண்ணிய பொருள்களை விளக்குபவை.

## திருக்குறளில் ஒரு குறள் :

திருக்குறளின் கருத்துச்சிறப்பிற்கும்வளத்திற்கும், இங்கு ஒரு சான்று மட்டுமே காண்டல் அமையும். நமக்குத் ''துன்பம் செய்தவர்களை நாம் தண்டிக்கும் முறையாவது, அவர்கள் நாணும்படி அவர்களுக்கு நாம் நல்ல இனிய உதவியைச் செய்து விடுதலேயாகும்'' என ஒரு திருக்குறட் பாடல் கூறுகின்றது.

''இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்துவிடல்''

எனவரும் திருக்குறளை அனைவரும் அறிவர். இக்குறள் கூறும் இனிய கருத்து, எண்ணி எண்ணி யுணர்ந்து பெரிதும் போற்றுதற்கு உரியது.

''ஒருவன் உன்னை எதிர்த்தால், நீயும் அவனை எதிர்த்து நில்; ஒருவன் உனக்குத் துன்பம் செய்தால், நீயும் அவனுக்குத் துன்பம் செய்'' என்பதுதான், பொதுவாக மக்கள் அனைவரும் கடைப்பிடிக்கும் கொள்கை. இவ்வியல்பையும்செயலையுமேவீரமாகப்போற்றிப் புகழ்ந்து கூறுவதும் உண்டு. ஆனால், ஒரு சில சான்றோர்கள், ''உனக்குப் பிறன் ஒருவன் துன்பம் செய்தாலும், நீ அவனுக்குத் திருப்பித் துன்பம் செய்யாதே. அவன் செய்த துன்பத்தைப் பொறுத்துக் கொண்டு மன்னித்து விடு'' என்றும், நமக்கு அறிவுரை கூறியுள்ளனர். ஆனால், திருவள்ளுவர் பெருமானோ, அவர்களினும் ஒருபடி மேலே சென்று, ''ஒருவன் உனக்குத் துன்பம் செய்தால், அவன் செய்யும் அத்துன்பத்திற்கு எதிராக, நீ அவனுக்குத் துன்பம் செய்யாதே! அது மட்டும் அன்று! நீ அவன் செய்யும் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டு, அவனை மன்னித்து விடு! மன்னித்தல் மட்டும் போதாது. துன்பம் செய்த அவனுக்கு, நீ இனிய நல்ல உதவியையும் செய்தல் வேண்டும். அதுதான் அவனைத் தக்காங்கு ஒறுக்கும் முறை'' என்கின்றார்.

## இயேசுநாதர் :

இஃது, எவ்வளவு பெரிய சிறந்த அரிய அருளுரை என்பது, நினைத்து வியக்கத் தகுவது. ''பிதாவே! இவர்களை மன்னியும். இவர்கள் தாங்கள் செய்வது இன்னதென்று அறியாமல் இருக்கின்றார்கள்'' என்று பரிந்து கூறி வேண்டிக் கொண்ட, இயேசுநாதர் திருமொழியோடு நினைவு கூர்ந்து கருதின், இக் திருக்குறட் கருத்தின் அருமை பெருமைகள் விளங்கும்.

''தன்னரிய திருமேனி
சதைப்புண்டு தவிப்பெய்திப்
பன்னரிய பெரும்பாடு
படும்போதும், 'பரிந்து எந்தாய்!
இன்னதுஎன அறியகிலார்
தாம்செய்வது; இவர்பிழையை
மன்னியும்' என்று எழிற்கனிவாய்
மலர்ந்தார்நம் அருள்வள்ளல்''

எனவரும் இரட்சணிய யாத்திரிகச் செய்யுள் இங்கு நாம் கருதி இன்புறற்பாலது.

## பிற பல குறள்கள் :

இத்துணைச் சிறந்துயர்ந்த இனிய கருத்தினை, இவ்வொரு திருக்குறளில், இந்த ஓரிடத்

தில் மட்டுமே, திருவள்ளுவர் கூறிச் சென்றனர் அல்லர். இவ்வுயர்ந்த இனிய செவ்விய கருத்தினையே, வேறு பிற பல இடங்களிலும் திருவள்ளுவர் கூறியருள்கின்றார்.

(1) மனச் செருக்கினால், தீங்கு மிக்க கொடிய துன்பங்களைச் செய்தவர்களை, நல்ல பெரியோர்கள், தாம் தம்முடைய பொறுமைத் தன்மையினால் மன்னித்து, அவர்களிலும் மேம்பட்டு உயர்ந்து, வெற்றியை அடைவார்களாக.

''மிகுதியான் மிக்கவை செய்தாரைத், தாம்தம்
தகுதியான் வென்று விடல்''

(2) செய்யத்தகாத கொடிய தீங்குகளைத் தன்கண் பிறர் செய்தாராயினும், அவர்கட்கு அதனால் வரும் துன்பத்திற்காக மனம் வருந்தி, அவர்கள்பால் அறனல்லாத செயல்களைச் செய்யாதிருத்தல், ஒருவனுக்கு நலம் பயப்பதாகும்.

''திறனல்ல தற்பிறர் செய்யினும், நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று''

(3) தமக்குத் தீங்கு செய்பவர்களுக்கும் கூடத் தாம் தீங்கு செய்யாமல் விட்டொழித்தலே, தமக்கு உறுதிப் பொருளைத்தேடும் அறிவுகள் எல்லாவற்றுக்குள்ளும் மேலான சிறந்த அறிவு உடைய செயலாகும் என்று நல்லோர் சொல்லுவர்.

''அறிவினுள் எல்லாம் தலைஎன்ப; தீய
செறுவார்க்கும் செய்யா விடல்''

(4) தமக்குத் தீங்கு செய்தவர்களுக்கும் கூட, ஒருவன் இனிய நல்ல உதவிகளையே செய்தல் வேண்டும். இங்ஙனம் செய்யாமற் போனால், நல்லியல்புகள் எல்லாம் நிறைந்திருத்தல் ஆகிய சால்புடைமைஎன்னும் பண்பு, வேறு என்ன பயனைத்தான் உடையது ஆகும்?

''இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு''

எனவரும் பிற திருக்குறள்களிலும், இவ்வுயரிய கருத்தினையே, திருவள்ளுவர் செவ்விதின் விளக்கி யுறுத்திருத்தல் காணலாம்.

## மெய்ப்பொருள் நாயனார் :

சேதி நன்னாட்டு நீடு திருக்கோவலூரில் அரசோச்சி வாழ்ந்திருந்த மலாடர்கோமான் ஆகிய மெய்ப்பொருள் நாயனார், தம்மை வஞ்சகத்தாற் கொல்லவந்த முத்தநாதனையும், 'மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்' எனத் தொழுதார். அவ்வஞ்சகனைக் கொல்ல முற்பட்ட தன் பாதுகாவலனையும் ''தத்தா! நமர்'' எனத் தடுத்தார். ''எம்பிரான் அடியார் (முத்தநாதன்) போக, மீதிடை விலக்கா வண்ணம் கொண்டு போய் விடு'' என்று தத்தனுக்குக் கட்டளை யிட்டார். தத்தன் முத்தநாதன் தன்னைத் தீதிலா நெறியில்விட்ட சொற்றிறம் கேட்க வேண்டிச் சோர்கின்ற ஆவிதாங்கினார்; தத்தன் திரும்பிவந்து 'இடையூறு இன்றி விட்டனன் என்று, திரும்பி வந்து கூற, ''இன்று எனக்கு ஐயன் செய்தது யார் செய்ய வல்லார்?'' என்று, அவனை நோக்கி நிறை பெருங் கருணை கூர்ந்தார். இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் நன்னயத்திற்கு, இதனின் மிக்க எடுத்துக் காட்டு வேறொன்றில்லை எனலாம். இத்தகைய வரலாறுகள் வேறுசிலவற்றையும், திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணத்துட் கண்டு மகிழலாம்.

## பரிமேலழகர் :

இனி, மேலே குறித்த 'இன்னாசெய்தாரை' (314) என்னும் திருக்குறளில், நாம் கருதத் தக்கதொன்றுண்டு. அக்குறட்பாவுக்கு உரை எழுதிய ஆசிரியர்கள் பலரும், 'நன்னயம் செய்துவிடல்' என்னும் தொடருக்கு 'நல்ல நயமுடையவற்றைச் செய்துவிடுக' என்றே பொருள் வரைந்துள்ளனர். அவர்கள் அனைவரும் 'செய்துவிடல்' என்பதனை ஒரு சொல் நீர்மைத்தாகவே கொண்டு விட்டனர். ஆனால், ஆசிரியர் பரிமேலழகர் 'செய்துவிடல்' என இதனை இரு சொற்களாகக் கொண்டார். ஏனையோரெல்லாரும் 'விடல்' என்பதனை ஒரு துணைவினைச் சொல் (Auxilary verb) என்றே கொண்டு அமைந்தனர். ஆனால், பரிமேலழகரோ இதனை மிகவும் பொருள் பொதிந்த ஒரு முதல் வினைச்சொல் (Principal verb ) எனக் கொண்டு, அதன் வாயிலாக அரிய சிறந்த ஆழ்ந்த பொருள் விளக்கம் ஒன்றைச் செய்தருள்கின்றார்.

''தமக்கு இன்னாதவற்றைச் செய்தாரை ஒறுத்தலாவது, அவர்தாமே நாணுமாறு அவர்க்கு இனிய உவகைகளைச் செய்து, அவ்விரண்டனையும், அதாவது நமக்கு அவர் தீங்கு செய்தார் என்பதும், நாம் அவர்க்கு நன்மையே செய்தோம் என்பதும், ஆகிய இருவகை நினைவுகளையும் மறந்துவிடுதல். மறவாவழிப் பின்னும் மேன்மேற் பகைமை வந்து கிளைக்குமாதலின், மறக்கற்பால வாயின. இதனால் அவரை வெல்லும் உபாயம் கூறியவாறு''

எனப் பரிமேலழகர் வகுத்துள்ள உரைவிளக்கம், எத்துணைச் சிறந்ததாகத் திகழ்கின்றது. 'விடல்' என்னும் ஒரு சிறு சொல், எவ்வளவு சிறந்துயர்ந்த பொருளைத் தன்கண் பொதிந்து கொண்டுள்ளது. காண்மின்கள்.

இங்ஙனம் மேலைத் திருக்குறளிற் பரிமேலழகர் 'விடல்' என்னும் சொல்லின் பொருள் நுட்பத்தினை அழகுற விளக்கியருளினராயினும், 'நன்னயம்' என்பதற்கு 'இனிய உவகைகள்' என்ற அளவில் மட்டுமே, அவர் பொருள் குறித்துச் சென்றார். அவ் 'இனிய உவகை எஃது? எத்தனை வகைத்து?'' என்பன போன்றவற்றை அவர் விளக்கிற்றிலர்.

## பிள்ளைலோகாசாரியர் :

வைணவ சமயத்தின் தத்துவங்களை உலக மக்களுக்கு அறிவுறுத்தி, வைணவ சமயத்தைப் பரவச் செய்து, வளர்த்த பெரியோர்களை ஆழ்

வார்கள் என்றும், ஆசாரியர்கள் என்றும் இரு வகைப்படுத்தி வழங்குவர். ஆசாரியர்களில் முதலாமவராகத் திகழ்பவர் நாதமுனிகள் ஆவர். அவரை அடுத்து உய்யக்கொண்டார், மணக்கால்நம்பி, ஆளவந்தார், பெரியநம்பிகள், இராமாநுசர், எம்பார், பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, வடக்குத்திருவீதிப்பிள்ளை என்பவர்கள், முறையே ஆசாரியர்களாக விளங்கினர்.

வடக்குத் திருவீதிப்பிள்ளையின் மூத்த புதல்வரே, பிள்ளைலோகாசாரியர் என்னும் வைணவப் பெருஞ்சான்றோர்! இவருடைய திருத்தம்பியார் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் என்பவராவர். இவருடைய மாணவர், திருவாய்மொழிப் பிள்ளை முதலிய பலர். திருவாய்மொழிப்பிள்ளையின் மாணவர் மணவாளமாமுனிகள். பிள்ளைலோகாசாரியர், 14 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். தனிப்பிரணவம், தனித்துவயம், தனிச்சரமம், யாத்ருச்சிகப்படி, பரந்தபடி, திருமகள்கேள்வன்படி, முமுட்சுப்படி, தத்துவத்திரயம், அர்த்தபஞ்சகம், தத்துவசேகரம், பிரபந்நபரித்திராணம், நவவித சம்பந்தம், நவரத்தினமாலை, சார சங்கிரகம், பிரமேயசேகரம், சம்சார சாம்ராச்சியம், அர்ச்சிராதி கதி, சீர்வசனபூடணம் என்னும் பதினெட்டு நூல்கள், பிள்ளைலோகாசாரியரால் அருளிச் செய்யப்பெற்றன. இவற்றை ''அட்டாதச ரகசியம்'' (பதினெண் மறைபொருள் நூல்கள்) என வழங்குவர்.

## சீர்வசன பூடணம்:

இப் பதினெட்டு நூல்களுள், சீர்வசன பூடணம் என்பது, மிகவும் சிறந்த பொருள் வளம் நிறைந்த பெருநூலாகும். இரத்தினங்கள் மிகுந்துள்ள ஆபரணத்திற்கு 'இரத்தினாபரணம்' என்று பெயராமாறுபோல, முற்காலத்தில் வாழ்ந்திருந்த ஆசாரியப் பெருமக்களுடைய வசனங்களே மிகுதியாய், தன்னைப் படிப்பவர்களுக்கு ஞானப் பேரொளியைத் தருவதாக இருப்பதனால், இந்நூலுக்குச் 'சீர்வசன பூடணம்' என்று பெயர்ஏற்படுவதாயிற்று. இந் நூலுக்கு மணவாளமாமுனிகள் என்னும் வைணவப்பெருஞ் சான்றோர், அரிய பெரிய விரிவுரை ஒன்று எழுதியருளி இருக்கின்றார்.

''ஆர்வசன பூடணத்தின்
ஆழ்பொருள்எல்லாம் அறிவார்?
ஆர்அதுபோல் ஓர்சொல் அனுட்டிப்பார்?''

என்று மணவாளமாமுனிகள், தாம் இயற்றியருளிய உபதேசரத்தினமாலை என்னும் உயரிய நூலில், தம் உளமுவந்து புகழ்ந்து போற்றியிருக்கின்றார்.

## நன்னயம்:

இத்தகைய சிறப்புமிக்க சீர்வசனபூடணம் என்னும் நூலில், ''இன்னா செய்தாரை ஒறுத்தல், அவர் நாண நன்னயம் செய்துவிடல்'' என்னும் திருக்குறளில், 'நன்னயம்' என்னும் அரிய அழகிய தொடருக்கு, ஆசிரியர் பரிமேலழகர் அருளிச் செய்யாத சொற்பொருள் நலங்கள், மிகவும் அற்புதமாக இனிதெடுத்து விளக்கப் பெறுகின்றன. ஆசிரியர் பரிமேலழகர் 'நன்னயம்' என்னும் தொடருக்கு, 'இனிய உவகைகள்' என்று மட்டுமே பொருள் எழுதியிருக்கின்றார். அவ் இனிய உவகைகள் யாவை என்பதனை, அவர் விளக்கிக் கூறக் காண்கின்றிலேம். நமக்கு இன்னா செய்தவர்களிடத்தில் நம் உள்ளமானது பொறுமை-இரக்கம்-சிரிப்பு-உவப்பு-நன்றிபாராட்டல் என்னும் ஐந்துவகையான உணர்ச்சிகளை உடையதாக விளங்குதல் வேண்டும் என்று, பிள்ளைலோகாசாரியர் பின்வருமாறு விளக்கிக் கூறுகின்றார்:

## ஐவகை நன்னயங்கள்:

(1) நமக்குத் தீங்கு செய்தவர்களுக்கு எதிராக நாம் தீங்கு செய்யாமையும், அவர் செய்த தீங்கினை நாம் நினையாமையும் ஆகிய பொறுமை.

(2) நமக்குத் தீங்கு விளைவித்த இவனை நாம் மன்னித்துப் பொறுத்தாலும், இறைவன் இவனுக்குத் தண்டனையைப் பின்னர்த் தவறாமல் அளிப்பானே என்று நினைத்து அவன் பாற் கொள்ளும் பரிவு ஆகிய இரக்கம்.

(3) எல்லாம் இறைவன் செயலேயாக நாம் நினைத்திருக்கும்போது, தாம் ஏதோ நமக்குக் கேடு விளைவிப்பதாகப் பிறழ உணர்ந்துகொண்டு, 'பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா பிற்பகல் தாமே வரும்' என்பதனையுணராமல், தமக்குத் தாமே இவர்கள் கேடு செய்து கொள்ளுகின்றனரே! என்னே இவர்களின் அறியாமை! என்று எண்ணி, உளம் நெகிழ்தலால் உண்டாகும் சிரிப்பு.

(4) ஒருவன் மற்றொருவனுக்குச் செய்யும் கேடுகள், அழிவில் பொருள் ஆகிய உயிரை ஒன்றும் செய்யமாட்டாமையினால், உடலுக்கு மட்டுமே ஊறு பயப்பதாதல் கூடும். நாமோ 'பிறப்பறுக்க லுற்றார்க்கு உடம்பும் மிகை' என்றபடி இறைவனை அடைதற்கு இவ்வுடம்பே தடையாக உளதே என்று எண்ணி, உடம்பைப் பகையாகக் கருதியிருக்கின்றோம். இங்ஙனம் நமக்குப் பகையாகிய உடம்பிற்குக் கேடு விளைவிக்க முற்படுவோர், நாம் இறைவனை விரைவில் அடைதற்குத் துணை புரிபவர்களாய் நமக்கு ஒருவகையில் நண்பர்களே யாவர் அன்றோ? எனக் கருதி உள்ளத்துக்குள்ளே மகிழும் உவப்பு.

(5) ஒரு மனிதன் 'ஏதிலார் குற்றம் போல்' தன் குற்றங்களையும் கண்டுணர்ந்து கொள்ள வல்லவனாதல் வேண்டும்; நாம் அது செய்யாமல் மயங்கி மறந்து கிடக்கின்றோம். இவர்கள் நம்மைப் புறங்கூறிப் பழித்துத் திரிவதனால், நம்முடைய குற்றங்களை நாம் உணர்ந்து கொண்டு திருந்தி உய்யும்வண்ணம் உதவி புரியப் பாடுபடுகின்றனர் அல்லரோ? என நினைந்து மகிழ்ந்து, அவர்களின் செயல்பாடுகளையெல்லாம் ஒரு பெரும் உதவி என்றே கொண்டு, அன்பு செய்து மகிழ்தல் ஆகிய நன்றியுணர்வு.

இங்ஙனம், நமக்கு இன்னா செய்தவர்களி டத்தில், நாம் பொறுமை இரக்கம் சிரிப்பு உவப்பு நன்றியுணர்வு என்னும் ஐந்தும் உடைய வர்களாக இருத்தல் வேண்டும் என்பதனை,

''குற்றம் செய்தவர்கள் பக்கல் பொறை யும் கிருபையும் சிரிப்பும் உவப்பும் உப காரஸ்மிருதியும் நடக்கவேணும்''

என்னும் சீர்வசனபூடணத் திருமொழியால், பிள்ளைலோகாசாரியர் அருளிச் செய்திருக்கும் திறம், நம் அறிவிற்குப் பெருவிருந்தாகற்பாலது.

## முடிவுரை:

இவ் ஐந்து பண்புகள் அல்லது செயல்கள் ''நன்னயம்'' என்று, திருவள்ளுவர் தம் திருக் குறளில் குறிப்பிட்டருளிய சொல்லுக்குரிய விளக்க விரிவுரைப் பொருள்களாக விளங்குதல் காணலாம். இங்ஙனம் எல்லாம் விரித்துரைத் தற்கேற்பவிளங்கும் திருக்குறளின் சிறப்பும், அதனை ஆழ்ந்து ஆராய்ந்து திட்ப நுட்ப ஒட் பங்கள் செறிந்த பொருள் நலங்களைத், தம் நுண்மாண் நுழைபுலனால் விளக்கியருளிய பிள்ளைலோகாசாரியர் அவர்களின் அளப்பரிய பெருமையும், அறிஞர்களுக்கு ஆராப் பெரு விருந்தாகும்.

தெள்ளுநற்சீர் திருக்குறளில்
'நன்னயம்' என் செழுந்தொடர்க்குப்
பிள்ளைலோ காசார்யர்
என்னும்அருட் பெருந்தகையார்,
உள்ளிமிக ஆய்ந்து,திட்ப
நுட்பமொடும் ஒட்பம்உற
விள்ளுபொருள், அறிஞர்எலாம்
வியந்துமகிழ் விருந்தாகும்!

—ந. ரா. முருகவேள்

---

# திரு.வி.க.வும், பாம்பன் அடிகளும்

நம் தமிழ்நாட்டில் தொன்றுதொட்டுத் தோன்றி வந்துள்ள அருட்பெரும் சான்றோர்கள் பற்பலர். வாழையடி வாழையாக அங்ஙனம் தோன்றி வந்தருளிய சான்றோர்களின் வரிசையில், அண்மைக்காலத் தில் விளங்கியிருந்த பாம்பன் குமரகுரு தாச சுவாமிகள் (கி.பி. 1860-1929) அவர்களும் ஒருவராவர். பாம்பன் சுவாமிகள் முருகனை வழிபடு கடவுளாகக் கொண்டவர். அவருடைய கனவிலும் நனவிலும் முருகப்பெருமானின் திருவருளின் திறனைக் காட்டும் அருள்நிகழ்ச்சிகள் பற்பல நிகழ்ந்தன. 'செந்தமிழ்த் தென்றல்' திரு.வி.கலியாணசுந்தரனார் அவர்கள், சுவாமிகளின் அருள்பெற்ற சிறந்த மாணவர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார். செந்தமிழ்ப் பெரும் புலவரும், தலைசிறந்த தேசபக்தரும், ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோருமாகத் திகழ்ந்திருந்த திரு.வி.கலியாணசுந்தரனார் அவர்கள், பாம்பன் சுவாமிகளைப் பின்வரும் பாடல்களால் போற்றி வணங்கித்துதித்துள்ளார்கள். அப் பாடல்கள் வருமாறு:

பாம்பன்எனும் பதிமுளைத்த பவளக் குன்றே!
பழம் பாண்டித் தமிழ்ப்பொழிலே! பண்பார் இல்லத்
தீம்பயிரே அன்புகொழி திரையே! தெய்வத்
திறங்கண்ட அறநிலையே! செகத்தில் உற்ற
கூம்பல்அற எழுகதிரே! குழந்தை வேலன்
குகன்நெறியே நெறிஎன்ற குருவே! நீதி
ஓம்புகஎன்று உரைத்துஒழுகி உலகில் வாழ்ந்த
உயர் குமர குருதாச! ஒளியே! போற்றி! (1)

செந்நெறி ஈதுஎன அறியாச் சிறிய னேற்குச்,
சேந்தன் அடி பிறழாத சிந்தை கூட்டிப்,
'பன்னெறியும் பலகலையும் பகர்வது, அந்தப்
பரன்அடியைப் பற்றுவதே; பற்றாய்!' என்று,
சென்னை நகர்க் கடற்கரையில் செப்பிப் போந்த
தென்முகத்துப் பெருங்குருவே! தேவே! என்றும்
அன்னவுரை உயிர்க்கமுதாய் ஆக்கஞ் செய்ய
அருள், குமர குருதாச அடிகள் போற்றி! (2)

கடலினிலே அலைபாடக், காணா வானில்
காண்திங்கள் நிலவுஆடக், கரைந்த வெள்ளித்
திடல்எனவே ஒலிஓடத், திகழும் சோதித்
திருமுடியில் சடைதாழச் செங்கை நீட்டி,
கடவுளிலே உலகுயிர்கள் கலந்து நிற்கும்
கருத்துரைத்தே எனையாண்ட கருணைக் கோவே!
உடல்உயிரே! உயிர்க்கு உயிரே! உள்ளம் நீங்கா
ஓதரிய குமரகுரு உரவோய் போற்றி! (3)

—திரு. வி. கலியாணசுந்தரனார்.

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

# "தருமம் அறிந்தவன்"

மகாவித்துவான்

திரு. பி. ப. அண்ணங்கராச்சாரிய சுவாமிகள், காஞ்சிபுரம்

பிராட்டி இராவணனுக்கு உபதேசஞ் செய்யும் இடத்து ''விதிதஸ் ஸஹி தர்மஜ்ஞ'' என்று பெருமாளைத் தர்மஜ்ஞர் எனக் கூறினள். தர்மஜ்ஞர் என்பதற்குத் தருமம் அறிந்தவர் என்று பொருள். ஆண்டாள், நாச்சியார் திருமொழியில் (14-6) ''தருமம் அறியாக் குறும்பனை'' என்று கண்ணபிரானைத் தருமம் அறியாதவன் என்றாள். அவ்வியல்புக்கு நேர்மாறாகத் தருமம் அறிந்தவன் எனப்படுகிறான் இராமபிரான். இராமனைப் பற்றி இங்குப் பேசுவோம். ஆண்டாளுடைய திருவாக்கைப் பற்றித் தனியே ஒரு கட்டுரை தருவோம்.

## தருமம்

தருமமாவது என்ன என்று ஆராய வேணும். சாத்திரங்களில் பலவகைத் தருமங்கள் சொல்லப்பட்டிருந்தாலும், இராமன் அறிந்ததாகச் சொல்லும் தருமம் எதுவாய் இருக்கக் கூடுமென்று பார்க்கவேணும். சுந்தரகாண்டத்தில் (38-41) ''ஆந்ருசம்ஸ்யம் பரோ தர்ம; த்வத்த ஏவ மயாச்ருத:'' என்பது பிராட்டியின் வார்த்தையாகக் காண்கிறது. ஆந்ருசம்ஸ்யம் ஆவது இரக்கம்; அதுதான் பரம தர்மம் என்று இராமனுடைய கொள்கையாம். ஆகவே இரக்கம் அறிந்தவன் என்று பொருள் கொள்ளலாம். அதாவது இரக்கமுடையவன் என்றபடி. வேதாந்த தேசிகர் தசாவதார தோத்திரத்தில் ஒவ்வோர் அவதாரத்திற்கும் தனித்தனியே ஒவ்வொரு சுலோகம் இட்டு முடிவில் பத்து அவதாரங்களையும் சேர்த்து ஒரே சுலோகத்தில் சொல்லும்போது, ஒவ்வொரு அவதாரத்தையும் ஒவ்வொரு விசேஷணம் இட்டுச் சொல்லி வருகையில், இராமாவதாரப் பிரஸ்தாவத்தில் ''கருணா காகுஸ்த!'' என்று கூறியிருப்பதனால், இராமன் கருணையே வடிவெடுத்தவன் என்று சொல்லத் தகுதியுடையவன்.

## கருணை

கருணையாவது என்ன என்பதையும், பெருமாளிடத்தில் காணும் கருணை எப்படிப்பட்டது என்பதையும், இங்கே விவரிக்கப் பிராப்தமாகிறது. அமரகோசத்தில் (1-7-18) 'காருண்யம் கருணா க்ருணா, க்ருபா தயா அநுகம்பா ஸ்யாத் அநுக்ரோசோபி' என்று ஏழு பதங்கள் பரியாய நாமங்களாகப் படிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள், அநுகம்பா, அநுக்ரோச: என்னும் பதங்களும் பரியாயமாகச் சேர்ந்திருக்கின்றபடியால், அப்பதங்களின் பொருளேதான் கருணையின் பொருளுமாகக்கடவது. துக்கத்தினால் நடுங்குபவனைக் கண்டு தானும் நடுங்குகை அநுகம்ப; துக்கத்தினால் அழுகிறவனைக் கண்டு தானும் அழுகை அநுக்ரோசம்; இதுவே உலகில் அனைவரும் இசைய வேண்டிய பொருளாகும். இதுதான் கருணையெனப்படும். ஆகவே, பிறர்படும் துயரைக் கண்டு தானும் ஐயோவென்று துயருற்றிருக்கை கருணை; அதை நன்கறிந்து அப்படியே வர்த்திப்பவன் இராகவன் என்றதாயிற்று. இக்குணம் இராமாயணத்தில் பல இடங்களில் காணப்படுமாயினும், சில இடங்களை மட்டும் இங்கு எடுத்துரைத்து அநுபவிப்போம்.

தசரத மன்னவன் இராமனுடைய திருக்குணங்களையும், அவனுக்கு சனங்களிடத்திலும், சனங்களுக்கு அவனிடத்திலும் அமைந்துள்ள அளவுகடந்த அன்பையும்நோக்கி, அவனை இளவரசாக முடிசூட்டி, அரசாட்சிச் செல்வத்தை அவனிடத்தில் ஒப்புவித்துத் தான் இளைப்பாற வேண்டுமென்று விருப்பங்கொண்டு, மந்திரிகளோடுங் கலந்து ஆலோசித்துத் தனது கருத்தைத் திடப்படுத்திக் கொண்டு, விரைவாகவே அதனைச் செய்து முடிக்கக் கருதி, அந்நாட்டிலுள்ள மன்னர்களையும் மகாசனங்களையும் எல்லாம் வரவழைத்துப் பெருஞ்சபை கூட்டி, அவர்களுக்குத் தன் கருத்தை வெளியிட்டனன். அப்போது அவர்கள் யாவரும் அளவற்ற ஆனந்தம் அடைந்து, 'கிழவரே! நீர் ஒழிந்துபோம். இராமனுக்கே முடிசூட்டுவீராக' என்று மிகப் பெரிய கோஷமாகக் கூறினர். தன் விருப்பத்தை அனைவரும் ஆமோதித்தது பற்றி உள்ளம் பூரித்த தயரதன், இராமனிடத்தில் சகல ஜனங்களுக்கும் இங்ஙனம் அன்பு நிறைந்திருக்கும் காரணத்தைத் தான் அறிந்திருந்தும், அவர்கள் வாயிலாகவே அதை இனிதாகத் தெரிந்து கொள்ள விரும்பி, அவர்களை நோக்கி, ''ஓ மன்னவர்களே! மகாசனங்களே! என் மனத்தில் தோன்றிய விருப்பத்தை நானே சுதந்திரனாய் செய்து முடித்துக் கொள்ள வல்லவனாயிருந்தும், உங்கள் கருத்தையும் அநுசரித்து நடந்து கொள்ள வேண்டுமென்று எண்ணி உங்களையும் வரவழைத்துக் கேட்டேன். கேட்டவுடனேயே நீங்கள் 'கிழவா! ஒழிந்துபோ, கிழவா ஒழிந்து போ, இராமனுக்கே முடிசூட்டவே

னும், என்று பேரிரைச்சல் செய்து கூறுவதை நோக்குங்கால், என் அரசாட்சியில் நீங்கள் யாவரும் மிகவும் துன்பம் அடைந்திருந்தீர்கள் போலவும், அந்தத் துன்பத்தை எப்போது தவிர்த்துக் கொள்ளப் போகிறோம் என்று சமயம் பார்த்திருந்தீர்கள் போலவும், நினைக்க வேண்டியதாகின்றதே; சக்கரவர்த்தியாகிய நீர் உம்முடைய விருப்பப்படி செய்து கொள்ளலாமே, எங்களைக் கேட்க வேணுமோ? என்று மரியாதையாக வார்த்தை சொல்லி இருக்கலாம் அன்றோ? அப்படிச் சொல்லாமல் என்பால் மிகவும் வெறுப்புத் தோன்றச் சொன்னீர்களே இதற்கு என்ன காரணம் கூறுமின்?' என்றனன். அதற்கு அனைவரும், 'மன்னர் பிரானே! உம் மீது நாங்கள் யாதொரு குற்றமும் நினைத்திலோம்; நீ பெற்ற புதல்வன் எல்லையில்லா நற்குணங்கள் அமையப் பெற்றவன். ஆதலின் அவனது திருக்குணங்களில் ஈடுபட்ட நாங்கள் அவனை அரசனாகப் பெற்று அவன்கீழ்க் குடிவாழ விரும்பினோம்; அவனது திருக்குணங்களைக் கேட்க விரும்புவாயின் சொல்லுகின்றோம். கேட்டருள்க கோமானே!'' என்று பீடிகையிட்டு, இராமனுடைய திருக்குணங்கள் பலவற்றையும் சொல்லி வருகின்றனர்கள்.

Dy. Commissioner (Retired)
HR&CE Administration Dept

## பரதுக்க துக்கம்

பிறர் துயருறக் கண்டால் தான் அபரிமிதமாகத் துயருறுபவன்; பிறர்க்கொரு மகிழ்ச்சியுண்டானால்தான் மிக மகிழ்பவன் என்பது சுலோகத்தின் (அயோ. 230) பொருள். பிறருடைய மகிழ்ச்சியில் மகிழ்பவன் என்றது இருக்கட்டும். 'பிறர் துயருறக் கண்டால், தான் அபரிமிதமாகத் துயருறுபவன்'' என்றார்களே, இது தான் தயாளுவான புருஷனின் மிகச் சிறந்த உயர்ந்த தன்மை. இங்கு இராமனது கலியாண குணங்களைச் சொல்லுவதாக மகுடமிட்டுச் சொல்லி வருகையில் (சுமோ. 26), அக் குணங்களினிடையே பரதுக்க துக்கித்துவமாகிய இக் குணத்தைக் கூறியிருக்கையாலே, இது மிகச் சிறந்த நற்குணமே யொழியத் தீயகுணம் அன்று என்பது வெளிப்படை. ஆனால் சிலர் துக்கப்படுகை யென்பது எவ்விதத்திலும் தீய குணமேயன்றோ என்று கலங்கி ஆட்சேபங்கள் செய்வதுண்டு. சகஸ்ரநாமத்தில் 'வகர்த்தா' என்கிற திருநாமத்திற்குப் பாஷ்யம் அருளிச் செய்யா நின்ற பட்டர், அவர்களது கலக்கம் நீங்க ஆட்சேப பரிகாரம் செவ்வனே செய்தருளியிருப்பதால், இங்கு விரிவு வேண்டா; அனந்த கல்யாண குண நிதியான எம்பெருமானைத் துக்கப்படுபவனாகச் சொல்லவே கூடாதென்றும், துக்கப்படுவதென்பது ஹேய குணமே யாகுமென்றும், நினைப்பவர்களைச் சுருக்கமாகத் தெளிவிக்கிறோம் இங்கு. துக்கப்படுவதென்பது தன் பொருட்டு என்றும், பிறர் பொருட்டு என்றும் இரண்டு விதம். தனக்கொரு துன்பம் நேர்ந்ததென்று துக்கப்படுவதானது தன் பொருட்டுத் துக்கம் எனப்படும். பிறர்க்கு நேர்ந்த துன்பத்தைப் பற்றித் துக்கப்படுவது பிறர்பொருட்டுத் துக்கம் எனப்படும். முந்தின துக்கத்தை ஹேயகுணமாக நினைக்க நியாயமுண்டு. பிந்தின துக்கத்தை ஹேய குணமாக நினைத்தல் மிகப் பிசகு; குணங்களில் தலையானது இதுவேயாகும். உலகத்தில் ஒருவன் துக்கப்படும்போது அந்தத் துக்கத்தைக் கண்டு கொண்டிரா நின்ற மற்றொருவன், தானும் துக்கப்படாமல் வாளா கிடந்தால், அவனைக் கல்நெஞ்சன் என்றும், ஈரநெஞ்சு இளநெஞ்சு இல்லாதவன் என்றும், வசை கூறுகிறோம். பிறர் துக்கிப்பதைக் கண்டு பரவசமாக ஒருவன் துக்கிப்பானாகில், அவனை ஈரநெஞ்சன் என்றும் இரக்கமுள்ளவன் என்றும், பரம தயாளுவென்றும் சொல்லிப் புகழ்கிறோம். இவை இன்றாக ஒருவராலும் அபலாபம் செய்ய ஒண்ணாதவை. ஆகவே, கருணையின் பொருளான பரதுக்க துக்கித்வம் என்பது, மிகச் சிறந்த குணங்களில் முதன்மையாகக் கணக்கிடக் கூடியதே யன்றித் தீயகுணமாக ஒருவராலுங் கூறவொண்ணாதது. எம்பெருமானிடத்தில் இக்குணம் ஒன்றை மறுத்து மற்றும் பலபல குணங்களை இசைந்தாலும் பயனில்லை; நிர்க்குணப் பிரமவாதிகளின் திரளில் தலைமை பெற வேண்டியதே.

ஆனால் இங்கு ஒன்று சொல்லலாம்; பிறர் படும் துயரத்தைப் பரிகரிக்கக் கூடிய சக்தி நமக்கில்லாமையாலே, நாம் பிறர் துயரைக் கண்டு துயருறுவது இயல்பு. பிராணதார்த்திஹரன் என்று பெயர்படைத்துப் பரிபூரண சக்தியுக்தனான எம்பெருமான், பிறருடைய துயரத்தைக் கண்டு தானும் துயருறக் காரணமேயில்லை என்று. இங்கே அவசியம் தெரிந்து கொள்ள விஷயங்களைத் தெளிவாகத் தெரிவிக்கிறோம். பிறர்படும் துயரத்தைக் கண்டு துயருறுகை என்கிறவொரு தன்மையும், பிறர் படும் துயரத்தை நீக்கத் தக்க சக்தியுடைமை என்கிறவொரு தன்மையும், ஒன்றோடொன்று முரண்பட்டவை என்று நினைக்கலாகாது; 'அசக்தனே துயருறுவன், சக்தன் துயருறமாட்டான்' என்று நினைப்பது மருள்.

## காருணிகத்துவம்

தன் குழந்தைக்கு ஒரு துன்பம் நேர்ந்து விட்டால், அதனை உடனே பரிகரிக்கக் கூடிய சக்தி மாதாவுக்கு இருக்கச் செய்தேயும், அப்படியே அத்துன்பத்தை அவள் பரிகரித்து விடச் செய்தேயும், குழந்தைக்குத் துன்பம் நேராமல் காக்கவேண்டியது நமது கடமையாயிருந்தும் ஏமாந்து போனோமே; அந்தோ அநியாயமாய்க் குழந்தையைத் துடிக்க விட்டோமே! என்று பலவாறாகக் கதறி வருந்தும்படியைக் காணாதார் உண்டோ? துச்சாதனன் கையிலே திரௌபதி பரிபவப்பட்டுக் கூவினபோது கண்ணபிரான் ஒருவாறு அவளது துயரைத் தீர்த்திருக்கச் செய்தேயும், 'ஐயோ! அவள் கூவினபோது நான் நேரில் சென்றிருந்து உதவாது ஒழிந்தேனே, ஐயோ அவளுக்குப் பரிபவம் நேர்ந்து அவள் கதறின பின்பு நான் காரியம் செய்தேனேயன்றி, முதல் தன்னிலேயே பரிபவமே அவளுக்கு உண்டாகாதபடி ஜாகரூகனாய் இராது போனேனே! அவளுக்கு நான் பெரிய கடனாளியாய் விட்டேனே, என் பிறப்பு என்னாயிற்று!'' என்று, தன் காவற் சோர்வை நினைந்துத் திருவுள்ளம் வேவுண்டு வருந்தினபடியுண்டே! அன்றியும், மடுவின் கரையிலே முதலையினால்

அடர்ப்புண்ட கசேந்திராழ்வானுடைய இடரை எம்பெருமான் தீர்த்தருளினான். என்னும், அவன் தான்பட்ட பரிதாபம் பேச்சுக்கு நில மன்றே. ஆழ்வானும் பட்டரும் அன்றோ, அதை எடுத்துரைத்த உருகினவர்கள், 'கெட்டேன், கெட்டேன்' என்று நொந்துகொண்டே எம் பெருமான் அரை குலையத் தலைகுலைய ஓடி வருவான், என்கிறார்களே. இங்ஙனே பல்லா யிரம் எடுத்துக் காட்டத் தக்கவையுண்டு. இவற்றால் பரதுக்க துக்கித்துவ ரூபமான எம் பெ்ருமானது காருணிகத்துவம் அசைக்கவொண் ணாதபடி தேறி நிற்கும். இதை இராமாயணத் தில் அநுபவிக்கலாம் இட்ம் காட்டுதும். காண் மின்.

## சமன சோகம்

பெருமாள் சுக்கிரீவனுக்காக வாலியைக் கொன்றார்; வாலி மாண்ட பின் சுக்கிரீவன் மிக வருந்தினான்; அவனது வருத்தத்தைக் கண்டு பெருமாள் ஆற்ற கில்லாது தாமும் அபரி மிதமாக வருந்தி யழுதார் என்பதைக் கூறுகின்ற வான்மீகி (கிட்கிந்தா 24-24), சுலோகத்தில் 'ஸஜ்ஞ்ஜாத பாஷ்பா:' என்றதும், 'முகூர்த்தம் விமநாபபூவ' என்றதும், கல்நெஞ்சையும் உருக் கும் சொற்கள். சுக்கிரீவனுடைய அழுகை ஓய்ந் தும் இராமனுடைய அழுகை ஓயவில்லை என் கிறது. 'ஸஞ்ஜாத பாஷ்ப' என்பது. சிலர் உள்ளே பசையில்லாமல் வெளியில்மாத்திரம் கண் ணீரைவிட்டுத் துக்காபிநயம் செய்வதுண்டு. அப்படியல்ல; மதியெல்லாம் உள் துலங்கி நின் றார் என்கிறது, 'ராமோ முகூர்த்தம்விமநாப பூவ' என்பது. மேலே இருபத்தைந்தாம் சர்க் கத்தின் முதல் சுலோகத்தில், வாலியின் மர ணத்தினால் தாரைக்கும் அங்கதனுக்கும் எவ் வளவு சோகமோ, அவ்வளவுக்குச் சிறிதும் குறையாத சோகம் பெருமாளுக்கும் இருந்தது. என்கிறார் முனிவர். ''ஸாமந சோக காகுத்ஸ்த' என்பதனால். அந்த சர்க்கத்தின் முடிவிலும் (52), அதையே மீண்டும் மொழிகின்றார். ஆக இவற்றால், 'தர்மஞ்ஜ' என்பதன் பொருள் விவரிக்கப்பட்டது.

---

# இராமலிங்க அடிகளாரும், திருமூலர் திருமந்திரமும்

அண்மைக் காலத்துச் சான்றோர் ஆகிய வடலூர் இராமலிங்க அடிகளை அறியாதவர், தமிழ் நாட்டில் எவரும் இரார். அவருக்குத் திருமந்திரத்தின்பால் இருந்த ஈடுபாடு எல்லையற்றது. ''தோத் திரத்தில் சிறந்தது திருவாசகம்; சாத்திரத்தில் சிறந்தது திருமந்திரம்'' என்பது, இராமலிங்க அடிகளார் திருவுள்ளம். இராமலிங்கர் ஒரு பெரும் சித்த புருடர் என விளங்கியவர். 'பாம்பு அறியும் பாம்பின் கால்' என்றபடி, சித்தபுருடராகத் திகழ்ந்திருந்த இராமலிங்கர்தாம், 'கயிலாயத்தொரு சித்தர்' எனப்பெறும் திருமூலரின் அருமை பெருமைகளைச் செவ்விதின் அறிந்திருத்தல் இயலும். ஆதலின் அவர், திருமந்திரத் திருமுறையின் பெருமையை யுணர்ந்து, பெரிதும் போற்றிப் பயன்கொண்டார் எனத் தெரிகின்றது.

''இறைவன் ஒருசமயம் எனக்குத் தில்லைத் திருச்சிற்றம்பலத்திற் குருவடிவாகப் போந்து மெய்ம் மொழிப் பொருளை உபதேசித்தான்; பின்னர் ஒருகால் திருமந்திரத் திருமுறையினால், அம் மெய்ம் மொழிப் பொருள் விளங்கும்படி தெளிவுமிக உணர்த்தியருளினான்; பிறிதொரு சமயம் என் உள்ளத்திலே நிலைபெற்று அம்மெய்ம்மொழிப் பொருளைக் காட்டியருளினான். இங்ஙனம் இறைவன் செப்பியதும் உணர்த்தியதும் காட்டியதும் ஆகிய மெய்ம்மொழிப் பொருள், என் உள்ளத்திலே மருவிப் பொருந்தி யுள்ளது; அதனையே யான் நம்பியிருக்கின்றேன்; என்னுடைய இந்நிலையை இறைவனன் திருவுள்ளம் நன்கறியும்'' என்கிறார் இராமலிங்கர்.

''திருவளர் திருஅம் பலத்திலே அந்நாள்
செப்பிய மெய்ம்மொழிப் பொருளும்,
உருவளர் திருமந் திரத்திரு முறையால்
உணர்த்திய மெய்ம்மொழிப் பொருளும்,
கருவளர் அடியேன் உளத்திலே நின்று
காட்டிய மெய்ம்மொழிப் பொருளும்,
மருவளர் உளத்தே நம்பிநான் இருக்கும்
வண்ணமும் திருவுளம் அறியும்''

எனவரும் திருவருட்பாப்பாடல் ஒன்றே, இராமலிங்க வள்ளலார்க்குத் திருமந்திரத்தின்பால் இருந்த எல்லையற்ற ஈடுபாட்டினை இனிது புலப்படுத்தப் போதியதாகும்.

—ஆசிரியர்

# கோக்கராயன்பேட்டைச் சிவாலயம்

திரு. தி. இராசமாணிக்கம், பி.ஏ., பி.காம்.,
பொள்ளாச்சி

"கொந்தணவும் பொழில் சூழ் கொடி மாடச் செங்குன்றூர் "என்றும், "குன்றன மாளிகை சூழ் கொடி மாடச் செங்குன்றூர்" என்றும், முத்தமிழ் விரகராம் திருஞான சம்பந்தப் பெருமானால் பாடப் பெற்ற பேறு பெற்றதும்; "சீர் கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும் ஏரகமும் நீங்கா இறைவன்' என்று முருகன் உறையும் திருத்தலங்களில் ஒன்றென்று, இளங்கோவடிகளால், தமது சிலப்பதிகாரத்தில் குறிக்கப் பெற்றதும் ஆகிய திருச்செங்கோட்டினின்றும், சுமார் 16 கி. மீ. தொலைவில், கொக்கராயன்பேட்டை என்ற சிற்றூர் உள்ளது.

இங்குள்ள கோயில் கிழக்கு நோக்கி உள்ளது. இறைவனது கோயில், உபானம்—முப்பட்டைக்குமுதம்—வரி—வரிமானம் ஆகியவை கூடிய அதிட்டானத்தைக் கொண்டது. முன்பக்கம் நீங்கலாக ஏனைய மூன்று பக்கங்களிலும் கல்லில் கதவு அமைக்கப்பட்டுள்ளது. கதவின் இரு புறங்களிலும் கலசம், தாமரை, பலகை ஆகியவை கொண்ட நான்கு அரைத் தூண்கள் உள்ளன. கதவின் மேல் இரண்டு கூடுகள் கொண்ட கபோதம், அதற்கு மேல் 3 கூடங்கள், அதற்கு மேல் 3 கூடுகள் கொண்ட கபோதம் காணப்படுகின்றன. அரைத்தூண்கள் மற்றும் 3 கூடுகள் கொண்ட கபோதத்தின் மேல் தாமரை இதழ் போன்ற அமைப்பும், அதற்கு மேல் 6 கூடுகள் கொண்ட கபோதமும், அதற்கு மேல் யாளி வரிசையும் அமைக்கப்பட்டிருக்கிறது. யாளி வரிசைவரை கல்லால் கட்டப்பட்டுள்ளது. அதற்கு மேல் விமானம் செங்கல்லால் கட்டப் பெற்றதாம்.

விமானம் 3 தளங்கள் கொண்டது. முதல் தளத்தில் நான்கு கூடங்களும் ஒரு சாலையும், இரண்டாவது தளத்தில் இரண்டு கூடங்களும் ஒரு சாலையும்; மேல்தளத்தில் ஒரு சாலையும் நான்கு புறமும் மாலை போன்று உள்ளது. விமானத்தின் சிகரம் சதுர அமைப்பினைக் கொண்டது. அதற்கு மேலே தூபி காணப்படுகிறது. விமானத்தின் கூடங்கள் மற்றும் சாலைகளில் உள்ள உருவங்களில் சில சிதைந்து உள்ளன. தென்புறத்தில் அடித்தளம் மற்றும் மேல்தளத்தில் உள்ள சாலைகளில் சிவனின் ஆலமர் செல்வன் வடிவங்களும், இடையில் உள்ள சாலையில் திருமாலின் வடிவமும் அமைக்கப்பட்டுள்ளன. மேலே உள்ள சிங்கக்கூடின் நடுவில் இளநங்கை ஒருத்தி உட்கார்ந்து வணங்கும் நிலையில் காணப்படுகிறாள். வடபுறம் முதல் தளத்தில் உள்ள சாலையில் நான்முகனும், அவனை அடுத்தாற்போன்று ஆடவல்லானின் ஊர்த்துவ நடன வடிவமும் உள்ளன. மேல்தளத்தின் நான்கு மூலைகளிலும் அண்ணலின் ஊர்தியாம் காளை காணப்படுகிறது. காளைக்கு இரு உடலும் ஒரு தலையும் அமைக்கப்பட்டு, இரு புறத்தினின்று நோக்கினும் காளை படுத்து இருப்பது போன்று உள்ளது.

கருவறையின் உள்ளே இலிங்கத் திருவுருவம் உள்ளது. அவனது திருநாமம் பிரமலிங்கேசுவரர் என்பதாம். ஒருகாலத்தில் நான்முகனால் வழிபட்டமையால் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். கருவறையை ஒட்டி அர்த்த மண்டபமும் அதனை அடுத்து மகாமண்டபமும் உள்ளன. இவை பிற்காலத்தைச் சேர்ந்தவையாம். கோயில் முன்பு நந்தியின் திருமுன்பும், அதனை அடுத்துப் பலிபீடமும் அமைக்கப்பட்டுள்ளன. தென்புறம் ஆலமர் செல்வனின் உடைந்த வடிவம் காணப்படுகிறது. இறைவனது கோயிலுக்கு இடது பக்கத்தில் இறைவியின் கோயில் உள்ளது. இறைவியின் திருநாமம் சௌந்திரநாயகி என்பதாம். இவற்றைச் சுற்றி இடிந்த நிலையில் திருச்சுற்று காணப்படுகிறது.

திருச்சுற்று வாயிலை அடுத்து வலது பக்கத்தில் சூரியனின் சிற்றாலயம் உள்ளது. இறைவனது கோயிலுக்குத் தென்புறத்தில் கண்ணனும், அநுமானும், மேல்புறத்தில் முருகனும் உள்ளனர். இறைவன் மற்றும் இறைவி ஆகியோரின் கோயில்களுக்கு இடையில் சண்டிகேசுவரரும், பைரவரும் காணப்படுகின்றனர். புல்லாங்குழல் இசைக்கும் நிலையில் உள்ள கண்ணனது வலக்கால் ஆகம விதிகளின்படி இடது கால் முன்மடித்து இருக்க, விரல்கள் பூமியைத் தொடும்படி அமைக்கப்பட்டுள்ளன. முன் இரு கைகளில் புல்லாங் குழல் ஏந்தியுள்ளான். ஆகமங்களில் வேணுகோபாலன் அல்லது கான கோபாலனுக்கு இருகைகள்தாம் சொல்லியிருக்க, இங்கு நான்கு கைகள் உள்ளன. பின் வலது கையில் சங்கும், பின் இடது கையில் சக்கரமும் உள்ளன. கண்ணனது இருமருங்கிலும் சத்திய பாமாவும், உருக்குமிணியும் உள்ளனர். அவனது காலைக் காளை ஒன்று நாக்கால் தடவிக்கொண்டு இருக்கிறது. அவனது வடிவம் கண்ணைக் கவரும் கைவண்ணத்துடன் உருவாக்கப்பட்டிருப்பது கண்டு இன்புறத்தக்கதாம்

அடுத்துக் காண வேண்டியது பைரவரது திருவுருவம். பைரவரை நான்கு கைகளுடனும் தனது ஊர்தியாம் நாயுடனும் சிவன் கோயில்களில் காணலாம். அச்சத்தை விளைவிக்க அவரது தலையைச் சுற்றும் தீப்பிழம்புகளும் வாயில் கோரைப் பற்களும் அமைக்கப்பட்டிருக்கும். ஆகமங்களில் 64 வகை பைரவர்கள் கூறப்பட்டுள்ளனர். இங்குள்ள திருவுருவிற்கு 8 கைகள் உள்ளதால், இவரை வடுக பைரவர் என்று ஆகமங்கள் சொல்லும். தலையைச் சுற்றிலும் தீப் பிழம்புகளும், ஒரு புறத்தில் முற்றா வெண் திங்களும் காணப்படுகின்றன. ஏனைய வடிவங்களில் உள்ளது போன்று இவரது ஊர்தியாம் நாய் இங்கு இல்லை. இவரது வாயில் கோரைப் பற்களும் இல்லை. முகத்தில் அமைதி நிலவுகிறது. ஆடை ஏதும் இன்றுக் காணப்படும் இவரது இடுப்பில் பாம்பு கடிபந்தம் என்ற அணிகலனாக உள்ளது. மார்பில் பாம்பு முப்புரி நூலாகவும், மண்டையோடுகள் மாலையாகவும் அணியப்பட்டுள்ளன. வலக்கைகளில் மழு, சூலம், கத்தி, பாம்பு இருக்க, இடக்கைகளில் சூலம், பாசம், மண்டையோடு, கேடயம் உள்ளன. இறைவனது இடது பாகம் பெண் என்பதற்கு ஏற்ப, இடது காதில் பெண்கள் அணியும் தோடு உருவாக்கப்பட்டுள்ளது.

சிவனது திருவுருவங்களில் பிச்சை உகக்கும் பெருமான், மற்றும் பைரவர் ஆகிய இரு வடிவங்கள் ஆடை ஏதும் இன்றி அமைக்கப் பெறும். பிச்சை உகக்கும் பெம்மானின் திருவுருவிற்கு வலது புறத்தில் மானும் இடதுபுறத்தில் பிச்சை இடுவதை ஏற்கப் பாத்திரத்தைத் தலையில் வைத்துள்ள பூதமும் இருக்க வேண்டும். அவை இரண்டும் இங்கு இல்லை. பிச்சை உகக்கும் பெம்மானுக்கு 4 கைகள்தான் சொல்லப்பட்டுள்ளதே அன்றி, 8 கைகள் ஆகமங்களில் கூறப்படவில்லை. மேலும் திருச்சுற்றில் உள்ள சிற்றாலயத்தில் பைரவரைத் தான் அமைப்பது வழக்கம். எனவே இந்தத் திருவுருவம் பைரவராம்.

சோழர் காலத்துக் கோயில்களில் செந்தமிழ்நாட்டுப் பொற்காலச் சிற்பி மாமன்னன் இராசராசன் காலம் வரை சிவனது கோயிலைச் சுற்றி எட்டுச் சிற்றாலயங்கள் அமைப்பது வழக்கம். அங்கு எழுந்தருளியிருக்கும் தெய்வங்கள் எட்டுச்சுற்றுப்புறத் தெய்வங்கள் (அட்ட பரிவாரத் தெய்வங்கள்) எனப்பட்டன. அவை: விநாயகர், முருகன், சூரியன், சந்திரன், சண்டிகேசுவரர், பைரவர், சப்தமாதர் மற்றும் சேட்டை, இங்கு இறைவனது கோயிலைச்சுற்றி 6 சிற்றாலயங்கள் காணப்படுகின்றன.

ஏனையவை சிதைந்துபோயிருக்கவேண்டும். தற்போது உள்ள சிற்றாலயங்களில் எட்டு சுற்றுப்புறத் தெய்வங்களில் முருகன், சண்டிகேசுவரர், பைரவர் மற்றும் சூரியன், 4 சிற்றாலயங்களில் உள்ளனர். ஏனைய இரண்டில் கண்ணனும், அநுமாரும் அமைக்கப்பட்டுள்ளனர். சுற்றுப்புறத் தெய்வங்களில் கண்ணனும், அநுமாரும் கூறப்படவில்லை. மேலும் அநுமார் இராமனின் அன்பர். எனவே கண்ணன் மற்றும் அநுமாரின் வடிவங்கள் பிற்காலத்தில் கொண்டு வந்து வைக்கப்பட்டிருக்க வேண்டும். விநாயகரின் திருவுரு நந்திக்கு அருகிலும், சப்தமாதர்களின் வடிவங்கள் முருகன் திருமுன்பு சிதைந்த நிலையிலும் காணப்படுகின்றன. சந்திரன் மற்றும் சேட்டை ஆகியோரின் திருவுருவங்கள் காணப்படவில்லை.

கருவறைச் சுவரின் வெளிப்புறத்தில் யாளி வரிசை அமைப்பது சோழ அரசர்களின் கோயில் கட்டிடக் கலையைச் சார்ந்ததாகும். 9 மற்றும் 10 ஆம் நூற்றாண்டுகளில் கட்டப் பெற்ற பல்லவர்கள் மற்றும் சோழர்களின் கோயில்களில் உள்ள கருவறையில் வெளிப்புறத்தில் அரைத் தூண்கள் அமைக்கப்பட்டிருக்கும். தெய்வத் திருவுருவங்களுடன் கூடிய புரைகள் இருக்காது எனத் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் தமது ''முற்கால சோழர்களின் கலை'' என்ற நூலிற் குறிப்பிட்டுள்ளார். இங்குள்ள கருவறையின் வெளிப்புறத்தில் யாளி வரிசையும், அரைத் தூண்களும் காணப்படுகின்றன; தெய்வத் திருவுருவங்கள் கொண்ட புரைகள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. பல்லவர்களது ஆட்சி கொங்கு நாட்டில் பரவவில்லை என்பது வரலாறு. சோழ மன்னன் முதலாம் ஆதித்தன் கொங்குநாட்டை வென்றதாக வரலாறு கூறுகிறது. இதை நம்பியாண்டார் நம்பிகள் தமது திருத்தொண்டர் திருவந்தாதியில்,

''சிற்றம்பல முகடு கொங்கிற் கனகம் அணிந்த ஆதித்தன்'' எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும் சோழர்களின் கோயில்களில்தான் திருச்சுற்றில் எட்டு சிற்றாலயங்களை அமைக்கும் வழக்கம் இருந்தது. இம்முறை காவிரி தந்த கலைச்செல்வன் மாமன்னன் இராசராசன் காலம் வரை இருந்து வந்தது. இங்கு இறைவிக்கென்று தனியாகக் கோயில் உள்ளது குறிப்பிடவேண்டிய ஒன்றாகும். கங்கையும் கடாரமும் கொண்ட இராசேந்திர சோழன் காலம் வரை, இறைவிக்கு என்று தனியாகக் கோயில் இல்லை என்பது ஆராய்ச்சியாளர்களின் முடிந்த முடிபாகும். எனவே இறைவியின் கோயில் பிற்காலத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டும். முதலாம் ஆதித்தன் கி.பி. 871 முதல் கி.பி. 907 வரை ஆட்சி புரிந்தான். மாமன்னன் இராசராசனது ஆட்சிக்காலம் கி.பி. 985 முதல் 1014 வரையாகும். இவ்வாறாகக் கோயில் கட்டிட அமைப்பு மற்றும் வரலாறு ஆகியவற்றை நோக்கும்போது, இந்தக் கோயிலின் காலத்தை 10ஆம் நூற்றாண்டாகக் கொள்ள வேண்டியுள்ளது.

கோயிற் கட்டிடக் கலைக் கண்ணோட்டத்தில், இந்தக் கோயில் சேலம் மாவட்டத்தில், மிகவும் தொன்மையான ஒன்றாகும். ஆனால் இன்று யாரும் கவனிப்பாரின்றி உள்ளது. திருச்சுற்று மதிலில் உள்ள இடிபாடுகளின் வழியாகக் கால்நடைகள் தடை எதுவுமின்றி உட்புகுந்து மேய்ந்து கொண்டிருக்கின்றன. தமிழகத்தின் பொற்காலமான சோழப் பேரரசின் ஆட்சியின் கலைச் செல்வம் ஒன்றின் இன்றைய அவலநிலையைக் காண மனம் புண்பட்டு வேதனையடைகிறது. இக்கோயிலின் திருப்பணிக்கு ஆவன செய்திட இறை அன்பர்கள் முன்வருவார்களாக! ***

# வள்ளுவர் காட்டும் நூலறிவும், வாலறிவனும்

திரு. டாக்டர் இ. சுந்தரமூர்த்தி, M.A., Ph.D.,
சென்னைப் பல்கலைக் கழகம்.

## வாழ்க்கைத் துணை நூல்:

வள்ளுவ வான்மறை, வையக வாழ்வுக்கு வழிகாட்டியாகத் திகழும் வாழ்வியல் நூல். உலகம் நமக்கு உறவாகவும், உயர்வாகவும் அமைய அடிகோலும் அறிவு நூல். இந்திய அற நூல்களுள் சிறந்தது என மேலை நாட்டாரும் போற்றும் உயரிய நூல். 'மனித சிந்தனையின் தூய வெளிப்பாடு' எனத் திகழும் இவ் வான்மறை, நாம் வாழும் வாழ்வு, நல வாழ்வாக அமைய உதவும் வாழ்க்கைத் துணை நூலாகும். உலக நேயத்தையும், பண்பாட்டையும் தழுவிய வள்ளுவ மறையின் முதற்பொருளாக ஒளிர்வது கடவுள் வாழ்த்தாகும்.

## சமயப் பொதுமை:

ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரேயே சமயப் பொதுமையுணர்த்தும் ஞான நூலாகத் திகழ்ந்தது இக் குறள் மறை. எந்தச் சமயத்தையும், எந்தக் கடவுளரையும் குறிப்பிடாது இறைப்பொருள் உணர்த்தும் பொதுச் சொற்களால் கடவுளின் பண்பு நலன்களை எடுத்துரைத்து, மெய்ப்பொருள் உண்மையை வலியுறுத்தியது வள்ளுவம். ''சமயக் கணக்கர் மதி வழி கூறாது, உலகியல் கூறிப் பொருளிது வென்ற வள்ளுவன்'' என்று கல்லாடம் என்னும் நூல் போற்றும்.

## உலக இயக்கம்:

உலகம் இயங்குகின்றது, உடல் வாழ்கின்றது, உயிரும் உணர்கின்றது, மரம் முதலாய ஏனையவும் அசைகின்றன. இவ் இயக்கத்திற்கு ஏதோ ஒரு அடிப்படை இருத்தல் வேண்டும். அதுவே மெய்ப்பொருள். அம் மெய்ப்பொருளே எல்லாப் பொருள்களுள்ளும் கலந்து நின்று எல்லாவற்றையும் இயக்குகின்றது. ஞாலத்தை இயக்குகின்ற மூலமுதற்பொருளாகக் கடவுள் விளங்குவது தெளிவு. ''ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடா தாரே? அடக்குவித்தால் ஆரொருவர் அடங்காதாரே, ஒட்டுவித்தால் ஆரொருவர் ஓடா தாரே? உருகுவித்தால் ஆரொருவர் உருகா தாரே, பாட்டுவித்தால் ஆரொருவர் பாடா தாரே? பணிவித்தால் ஆரொருவர் பணியா தாரே? காட்டுவித்தால் ஆரொருவர் காணா தாரே? காண்பார் ஆர் கண்ணுதலாய்க் காட்டாக்காலே?'' என இறைவனின் இயக்கமே, அனைத்துலக இயக்கத்திற்கும் காரணமாய் அமைகின்றது.

## அகர முதல்வன்:

வள்ளுவப் பெருந்தகை, ஆதிபகவன், வாலறிவன், மலர்மிசை ஏகினான், இருவினை சேரா இறைவன், ஐந்தவித்தான், எண்குணத்தான் என்று அவ் இறைவனின் பண்பைச் சுட்டுகின்றார். எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனின் முதன்மைப் பண்பை ஓர் அரிய, எளிய உவமையால் வள்ளுவர் காட்டுகின்றார். ''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு'', என்பது வான்மறையில் முதற்குறள்.

எழுத்துக்கள் அகரத்தை முதலாக உடையன. அதுபோல் உலகம் இறைவனை முதலாக உடையது. அகரமாகிய முதல் எழுத்திலிருந்தே உயிர் எழுத்துக்கள், மெய் எழுத்துக்கள் தோன்றின. சொற்கள் தொடர்கள் தோன்றின. இவற்றாலான பற்பல நூல்கள் தோன்றின. உலகிலுள்ள மொழிகளின் எழுத்துக்களெல்லாம் அகர ஒலியையே முதலாகக் கொண்டு இயங்குகின்றன. பல்வேறு நாடு, பல்வேறு நாகரிகமுடைய மக்கள் பேசுகின்ற மொழிகள் அனைத்தும் அகர ஒலியைக் கொண்டு விளங்கும் நுட்பம் வியத்தற்குரியது. உயிர்கட்கெல்லாம் பிறப்பிடம் ஒன்றே என்னும் ஓர் அரிய உண்மையை அன்றோ, இது உணர்த்துகின்றது. உலக சகோதர நேயத்தை உணர்த்தும் ஒப்பற்ற குறள் இக்குறள்.

அகர ஒலி, வாயைத் திறந்தவுடன் இயல்பாகப் பிறக்கின்றது. ஏனைய ஒலிகள் பிறப்பதற்கும் இவ் அகர ஒலியே துணையாக இருப்பதோடு அமையாமல் ,அவ் ஒலிகள் அனைத்திலும் இவ் அகரம் நீக்கமறக் கலந்து நிற்கின்றது. எனவேதான் கடவுளுக்கும் உலகத்திற்கும் உள்ள இயைபை, இவ் அகர ஒலியோடு ஒப்பிட்டு அரிய உண்மைத் தத்துவத்தை உரைக்கின்றார் வள்ளுவப் பெருந்தகை. 'எழுத்துக்களுள் நான் அகரமாய் இருக்கின்றேன்' என்றான் கண்ணபிரான். 'அகார முதலாய் அனைத்துமாய் நிற்கும்' என்று திருமந்திரமும் இறை

யியல்பை எடுத்துரைக்கும். ''மொழிகளுள் அகரம் முன்னுற நிற்கும்; முதன்மை போல் இறைவனே யாண்டும், ஒழிவற மருவி உலகெலாம் இயக்கி ஒலியுரு வாய் உறைந் தருளும்'' எனப் பின்னையோரும் வான்மறையைப் போற்றினர்.

## நூலறிவின் பயன்:

கல்வி அறிவு மெய்யுணர்வைப் பெற வழிகோல வேண்டும். நூல்களைக் கற்கக் கற்கக் கடவுள் தன்மையை உணரும் ஆற்றல் வளர வேண்டும். அதுவே கற்றதன் பயனுமாகும். நூலறிவின் பயன் வாலறிவனைத் தொழுதலே ஆகும். அவ்வாறே மனித உறுப்புகள் ஒவ்வொன்றும் இறைவனையே எண்ணியெண்ணி உருகவேண்டும் என்பர் பெரியோர். ''வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும், தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச் சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே ,வீழ்த்தவா வினையேன் நெடுங் காலமே'' என வாகீசப் பெருந்தகையும், வாயும் நெஞ்சும் சென்னியும் தந்த தலைவனைத் துதியாது இருந்த நிலையை எண்ணியெண்ணி வருந்துகின்றார். காணாத கண்ணும், இறைவன் புகழைக் கேட்காத செவியும் போல் வணங்காத தலையும் வாழ்வுப் பயனைத் தாராது. ''கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான், தாளை வணங்காத் தலை'', ''கற்றதனால் ஆயபயன் என்கொல் வாலறிவன் நற்றாள் தொழார் எனின்'' என்னும் இரு குறட்பாக்களும் இறை வழிபாட்டின் இன்றியமையாமையை எடுத்துரைப்பனவாம்.

## வாழ்க்கைக் கடல்:

வாழ்க்கைக் கடலைக் கடப்பதற்குள் மனிதன் படும் துன்பங்கள் சொல்லுந் தரமன்று. எத்துணை அகப்புற இடர்ப்பாடுகள் அவனுக்கு. புகழ், பொருள், போன்ற இன்னோரன்ன ஈர்ப்புச் சக்திகளால் அவன் பெறும் ஏமாற்றங்களும், இழப்புகளும்தான் எத்தனை, எத்தனை. அழியும் இவ் ஆசைப் பொருளுக்கும், நிலையற்ற புகழுக்கும் நினைந்து விரும்பியதால் அவன் பெறும் பெரிய பரிசு 'இடும்பை'-துன்பம். விருப்பு வெறுப்புகளோடு இயங்கும் உலகத்தை வெற்றிகொள்ள, விருப்பு வெறுப்பற்ற இறைவனிடம் விரும்பிப் பற்றுவைக்கும் நெஞ்சுறுதி அவனுக்கு வேண்டும்.''நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே நிறைந்து நிறைந்து, ஊற்றுஎழுங் கண்ணீரதனால் உடம்பு நனைந்து நனைந்து அருளமுதே நன்னிதியே, ஞான நடத்தரசே, என்னுரிமை நாயகனே என்று வனைந்து ஏத்ததும் நாம், வம்மின் உலகீரே மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர் புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியம்சொல் கின்றேன் பொற்சபையிற் சிற்சபையிற் புகுந்தருணம் இதுவே'' என வள்ளற்பெருமான் வலியுறுத்தி அழைப்பதும், இருள்சேர் இருவினையும் சேராத, யாண்டும் இடும்பை இலாத, நீடு வாழ்கின்ற இறையுலகத்திற்குத்தான்! எக்காலத்தும் எவ்விடத்தும் எவராயினும் எவற்றானும் எவ்வகையாலும் துன்பம் பெறாதிருக்கத் துணை இறையேயாகும்.

## இன்பப் பேறு:

விரும்பிய பொருள் எய்தாவிடினும் துன்பம், வேண்டாதன எய்திடினும் துன்பம், விழைவும் வெறுப்பும் துன்பத்திற்கு மூலகாரணங்கள், விருப்பும், வெறுப்பும் மன்தரிடம் நிலவும் சிறுமைகள். இவற்றை எண்ணாது இறைவனையே எண்ணினால் இன்பமே அல்லாது எந்நாளும் துன்பமில்லை. இறையுணர்வு இருக்குமானால் நம்மை வந்தடைந்த துன்பமும் இன்பமாகும். ''வேண்டுதல் வேண்டாமை இலான் அடிசேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல'' என்பது வள்ளுவ வான்மறை. ''நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம், நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம், ஏமாப்போம், பிணிஅறியோம், பணிவோம் அல்லோம் இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை, தாமார்க்கும் குடியல்லாத் தன்மை யான சங்கரன்நற் சங்கவெண் குழைஓர் காதின் கோமாற்கே நாம் என்றும் மீளா ஆளாய்க் கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகினோமே'' எனத் துன்பக் காலத்தும் இன்ப வீறுபெற்றுப் பாடும் உள நிலை, இறையடியை எண்ணுவோர்க்கே வரும் இன்பப் பேறாகும்.

## ஐந்தவித்தான்:

இறைவன் பொறி புலன்களை வென்றவன், ஒழுக்கநெறியில் நின்று அவனைச் சார்வார் நீடுவாழ்வார் என்பது குறள்மறை. பொறிவெறியனாய்ப் புலன்களில் இழிந்து அலைபவன் எந்நாளும் துன்பமுறுவான். காத்துய்க்கும் ஆற்றல் பெற்றவன் வீடுபேறு பெறுவான். இதனை நல்வழி காட்டும் நாலடியார் பின்வருமாறு கூறும்.

''மெய்வாய் கண்மூக்குச் செவி எனப்பேர்பெற்ற,
ஐவாய வேட்கை அவாவினைக்-கைவாய்க்
கலங்காமல் காத்துய்க்கும் ஆற்றல் உடையான்
விலங்காது வீடு பெறும்''

இனியவனாய் நின்று என்றும் வாழ ஒழுக்க நெறி இன்றியமையாப் பண்பாகும். ஐம்பொறிகளின் வழியாக வரும் அவா ஐந்தையும் ஒழித்தானது மெய்யான ஒழுக்க நெறியின் கண்ணே வழுவாமல் ஒழுகுபவர்கள் விழுமிய நிலையில் என்றும் நெடுங்காலம் புகழுடன் வாழ்வார்கள். ''பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறிநின்றார் நீடுவாழ் வார்'' என்பது குறள்.

## இறையியல்பு:

இறைவன் தனக்கு நிகர் இல்லாதவன்; அங்கிங்கெனாதபடி எங்கும் பரந்துள்ள இறைவன்ன் இயல்புகளை எடுத்துரைக்க முடியாத வண்ண்ம் பெருமை பெற்றவை; இப்படியன் இந்நிறத்தன் இவன் இறைவன் என்றெழுதிக் காட்டவொண்ணா இயல்பினன் என்றும் கூறுவர். ''ஒப்புடையன் அல்லன் ஒருவன் அல்லன் ஓர்ஊரன் அல்லன், ஓர் உவமன் இல்லி, அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும் அவனருளே கண்ணாகக் காணின் அல்லால் இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே'' என்று வாகீசமும் கூறும். இத்தகைய ஒப்பற்ற இறைவனைப் பாடி நைந்து நைந்து உருகி வழிபட்டால் எல்லாத் துன்பங்களும் போகும். அவனுடைய திருவடிகளை நினைத்துப் பொருந்துகின்றவர்களுக்கே மனக்கவலையை மாற்றுவது முடியும். மற்றவர்களுக்கு அது அரிது. ஆகும். இதனை உணர்த்தும் வான்மறை இதோ;

''தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு
அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது''

## ஆணவ அரண்மனை:

வாழ்க்கைக் கடலைக் கடப்பது அவ்வளவு எளிதன்று. நமக்கு நாமே தரும் துன்பங்கள் எத்தனை அளவு பெருமை பெற்றது தெரியுமா? இவ்வுலகில் நமக்குக் கிடைத்துள்ள பொக்கிஷம்-ஆங்காரம்; செல்வக் களஞ்சியம்-கோபம்; நம்முடைய அரண்மனை-நம்மை விட்டு நீங்காத ஆணவம்; பொய் வைத்தகூடம் நமக்கு உரிமை, விண்முட்டும் அளவு வளர்ந்தது நம்முடைய காமமாகிய பெருமதில், நம் வீட்டிற்குப் பெயர்-காமவிலாசம்; இத் தேகமோ, கந்தல்; அழகாக உருவகித்துக் காட்டும் பட்டினத்தாரின் பாடல் பின்வருமாறு:

''ஆங்காரப் பொக்கிசம், கோபக்
களஞ்சியம், ஆணவந்தான்
நீங்கா அரண்மனை, பொய் வைத்த
கூடம், விண்ணில்வளர்
தேங்கார் பெருமதிற் காமவிலாசம்
இத்தேகம் கந்தல்,
பாங்காய் உனைப்பணிந்து எப்படி
ஞானம் பாவிப்பதுவே?''

இவ்வனைத்தையும் கடந்து நீந்துவதற்கு ஒரு பற்றுக்கோடு கடவுளின் திருவடிகளைப் பொருந்துவதுதான். ''அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்கு அல்லால், பிறவாழி நீந்தல் அரிது'', ''பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார், இறைவன் அடிசேரா தார்'' என்னும் வள்ளுவ வான்மறைகள் வாழ்க்கைக் கடலைக் கடக்கும் கலங்கரை விளக்கங்களாக ஒளிர்கின்றன.

## கடவுள் வாழ்த்துச் சிந்தனைகள்:

வான்மறையில் கூறும் கடவுள் வாழ்த்துச் சிந்தனைகள் மனிதகுலப் பண்புக்கு உயிரூட்டமாக அமைவன. உலகத்திற்கு முதல்வன் ஒருவன் உளன்; அவன் தூய அறிவு வடிவானவன், உயிர்க்கு உயிரானவன், விருப்பு வெறுப்பற்ற பெருமை உடையவன். புலன்களை வென்றவன், தனக்கு உவமை இல்லாதவன், அறவாழியானவன், எண்குணங்களை உடையவன், பிறவிக் கடலைக் கடப்பதற்கு உதவுபவன், அவனே இறைவன் என அவன் பண்பு நலங்களைச் சுட்டுவது வள்ளுவ வான்மறையில் கடவுள் வாழ்த்தின் கருத்தோவியமாகும்.

## வாழ்வியல் நூல்:

வள்ளுவம் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் நூல். இறைவனின் நற்குண நற்செயல்களைப் புரிந்து அவற்றின் வழியே நம்முடைய வாழ்வையும் அமைத்துக் கொள்ள அறிவுறுத்தும் வழிகாட்டியாகத் திகழ்கின்றது வான்மறை. ஆம்! இவ்வையகத்தையும் வானுலகு ஆக்க விழைகிறது வான்மறை வள்ளுவம்.

## தெய்வப் புலவர் திருவள்ளுவர்!

திகழும் திருவள் ளுவனார்தாம்,
சிறந்த தெய்வப் புலவர்எனல்,
பகவன் உண்மை நிறுவுதற்குப்
பண்பின் ஆராய்ந்து, அவர்சொற்ற
அகர உவமை தான்ஒன்றே,
அறியத் தெருட்டும்! அச்சான்றோர்
தகவின் அளித்த திருக்குறள்நூல்
தக்காங்கு ஓதி நாம்உய்வோம்!

—ந. ரா. முருகவேள்

# திருவெம்பாவைக் காட்சி

"சிவநெறிப் பெரியார்"

திரு நல். முருகேச முதலியார், B.A.

இடம் திருவண்ணாமலை. காலம் சிறப்பான மார்கழி மாதம். திருவாதிரைக்கு முன் நாட்கள். கருத்தெல்லாம் தில்லையில் ஆனந்தக் கூத்தனின் பஞ்ச கிருத்தியங்களின் காட்சியில். மாணிக்கவாசகப் பெருமான் விடியற் காலத்திலே எழுந்து சோதிப்பிழம்பான அண்ணாமலையானைத் தொழக் கிழக்கு நோக்குகிறார். வீதியில் பெண்கள் அண்ணாமலையானைப் பாடிக் கொண்டு, ஒருத்தியை இன்னொருத்தி துயிலிலிருந்து எழுப்பியவாறு நீராடச் செல்கிறார்கள். அவர்களின் பேச்செல்லாம் அழகாக இருக்கிறது. அவர்கள் பாடல்கள், இறைவனுக்குத் தாம் ஆட்பட்ட நிலையைப் புலப்படுத்துகின்றன. மணிவாசகப் பெருமான், கேட்டதும் கண்டதும் நம் போன்றவர்க்கு இந்திரியக் காட்சிகள்தாம் ஆனால், அவர், யோகக் காட்சியில் அவற்றைப் பார்த்திருக்கிறார். கன்னியர்களின் ஆடல் பாடல்களெல்லாம், இறைவனின் திருவருள் விளக்கமாக அவருக்குக் காணப்படுகின்றன.

பதார்த்தங்கள் பாராது பரனையே பார்ப்பவர்களுக்கு அப்படித்தான். நினைவிலேயே சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் இவை அவர்களுக்கு உடலின் நிகழும். அருட்பெருஞ்சோதி தனிப்பெருங் கருணையை எந்நேரமும் ஆழ்ந்து அநுபவிப்பவர்களுக்கு அறிவை விளக்கக்கூடிய எல்லாம் அருள் நிலைக்கே கூட்டிச் செல்லும். அவத்தை நிலைகளிலும் அந்த அநுபவம், காலப் பிரக்ருதி தத்துவத்தை நீக்கிப் படிப்படியாகப் பிரதிட்டை நிவிர்த்தி வித்தை, சாந்தி, சாந்தியாதீத கலையாய்த்தூய நிலைக்குக் கூட்டிச் செல்லும். இது சவிகற்பமும் அல்ல; நிர்விகற்பமும் அல்ல. சுத்த நிலையில் இறைவனின் சக்தியாக அருள் பிரகாசமே நிலவும். இந்தச் சுத்த நிலைக்குத் துணையாயிருப்பது, திரோதான சத்தி. இந்த மறைப்புச் சத்திதான், இருட்கேவல நிலையிலிருந்து அருட் கேவல நிலைக்கு (கைவல்யம்) செல்லத் துணை செய்கிறது. இதைத்தான் மாணிக்கவாசகப் பெருமான் உருவகமாகக் கிளி மொழியார்கள் பாடும் பாவைப் பாட்டாக இருபது பாடல்களில் பாடியுள்ளார். இதுதான் 'திருவெம்பாவை' எனப்படும். திருவெம்பாவையாகிய இந்த அருளிப்பாட்டைத் திருவாதிரைக்கு முன் பத்துநாட்களில் விடியற்காலத்தில் ஓதி அருள் பெறும்படி பெரியோர்கள் விதித்துள்ளார்கள். மார்கழி மாதம் முழுவதும் இதை ஓதுதல் வழக்கு.

திருவெம்பாவையில் முதல் பத்துப் பாட்டுக்கள் அநாதியாகிய மலசத்தியைத் திரோதான சத்திகள் எழுப்புவது போல அமைந்து, ஒரு பெண்ணை, பல பெண்கள் உறக்கத்தை விட்டுப் பிரித்து, நீராடுவதற்கு அழைத்துப் போதலாகப் பொருள் தரும். இப்பத்திலும் சத்திகள் வினா விடைகள் அருளுவதால் உறக்கத்திலிருந்த மலசத்தி, பரிபாகமாகிவிட வெளியில் எழுந்தருளி எல்லோரும் நீராடுகிறார்கள். அவர்கள் பேச்சும் ஆடல்களும் சுகாதீத நீராடலாகக் காணப்படும். அருள் கூடும் போது இன்பமே நிகழும். 11 முதல் 14 வரையுள்ள பாடல்கள் திருவருள் இன்பப் பூம்புனலின் மெய்ப்பாடுகளைப் பேசுகின்றன. 15 முதல் திரோதான சத்திகளின் பிரேரணையால் பராசக்தியின் அருள் கூடுவது பேசப்படுகிறது. சிருட்டி, முடிவில் செய்யும் அநுக்கிரகம் இரண்டும் சுத்த சிவனின் செயலாகும். இடையில் நிகழ்வதெல்லாம் சத்தியின் உபகாரமே.

எனவே திருவெம்பாவையைச் 'சக்தியை வியத்தல்' எனப் பெரியோர்கள் கூறுவர். 11 முதல் 20 வரை உள்ள பாட்டுக்களில் ஒருவர்க்கு ஒருவர் செய்யும் உரையாடல்களாக, அழகான நாடகத்தமிழில் பாட்டுக்கள் அமைந்துள்ளன. இருந்தாலும் அவர்கள் சொன்னதும் கேட்டதும் கேட்கும் பொருளும் அதனால் விளையும் இன்பமும், பரம்பொருளின் தடம் பெருங் கலையாகவே பொருள்தரும். கடைசிப் பாட்டு, எல்லா மடவார்களும் கூடி இறைவனின் பஞ்ச கிருத்தியத்தைப் போற்றி, மார்கழி நீராடலின் பயனைப் பெறுவதைக் கூறுகிறது. அவர்களின் அத்துவித அன்பு, கடைசி இரண்டு பாட்டுக்களால் நன்கு புலனாகும்.

அரும்பெரும் சோதியைப் பாடக் கேட்காமல், கண்ணைத் திறக்காமல், வன்செவியாக இருந்து மூல மலசத்தி தொழிற்படாமல், பிரக்ருதி சம்பந்தப்பட்டுக் கேவல இருள் நிலையில்

இருப்பவளைத் திரோதான சக்திகளான அநு கூலம் செய்யும் தோழிகள் எழுப்புகிறார்கள்.

''ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி போய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எம்தோழி பரிசேலோர் எம்பாவாய்!''

என்று முதல் பாட்டின் கருத்து மேல் கூறப் பட்டது. பின்னால் மூலமலத்தின் ஞான, இச்சா, கிரியை ஆகிய சக்திகளைத் தூண்ட முயற்சி நடக்கிறது. பரஞ்சோதியினிடம் அன்பு வைத்தலே ஞானம். அவனை வாயால் பாடுதலே அவனுக்கு ஆட்படும் மார்க்கம். உள் நெக்கு உருகுதலே நமக்கு நல்ல செயல். நமக்கு நேயமான பொருள், மண்ணும் இல்லை. விண்ணும் இல்லை; பிறவும் அறிவரியான் அவன் நம்மைக்கோதாட்டி அருளும் சீலத்தைப் பாடிச் 'சிவனே சிவனே!' என்று ஓலமிடுதலே தகுதி. இச்சா, ஞானம், கிரியை எல்லாம் இந்த முடிவுக்குத்தான் வரவேண்டும். இது செய்யின். 'வானே நிலனே பிறவே அறிவரியான் தானே வந்து எம்மைத் தலையளித்து ஆட்கொள்வான்'. அதுவே இன்பம். அவன் சின்னங்கள் கேட்கும் போதே, 'சிவனே, என்னரையன், என்னமுதன்' என்ற துதி கேட்கும்போதே, வன்நெஞ்சப் பேதையர்போல் வாளாகிடத்தல் ஆகாது. ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை, ஏழை பங் காளனைப் பாடல் வேண்டும். அவனே நமக்குப் பிரான். அவனே நம் கணவன். அவன் தொழும்பே நம் பரிசு. என்ன குறையும் இலோம்.

இப்படியெல்லாம் இப்பெண்கள் உரை யாடி நீராடுகிறார்கள். குடைந்து குடைந்து கழல்பாடி நீராடுகிறார்கள்.

''ஐயாநீ ஆட்கொண்(டு) அருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந் தொழிந்தோம்
எய்யாமல் காப்பாய் எமை....''(11)

என்று பாடுகிறார்கள். இது மலபரிபாகமாகும். இதுவே சுகாதீத நீராடல் எனப்படும். ஆர்த்த பிறவி கெடத்தீர்த்தனாக இருப்பவன் தில்லைச் சிற்றம்பலத்தான். புனலாடும்போது பைங்கு வளைக் கார்மலரும் செங்கமலப் பைம்போதும் நம்பிரானையும் பிராட்டியையும் ஞாபகப் படுத்துகின்றன. இன்பத்தால் கொங்கைகள் பொங்க (அபரஞான) வாய்மை நீராடுகிறார் கள். சோதி திறம் பாடுகிறார்கள். ஆதி திறம் பாடுகிறார்கள். தங்கள் மலத்தீர்வை எண்ணிப் பெருமிதப்படுகிறார்கள். முன்சுரக்கும் இன் னருள் மழைப் பொழிவை அநுபவிக்கிறார்கள். மழை எங்கும் பொழிவதுபோல் ,இறைவன், 'நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிப் பொற் பாதம் தந்தருளுவதை எண்ணிப் பாடுகிறார் கள்.' அண்ணாமலையை நோக்கி அவன் அடிக் கமலத்தைப் போற்றுங்கள்' என்று ஒருவரை ஒருவர் நோக்கி ஆரவாரிக்கிறார்கள். இது பரா சக்தி, திரோதான சக்தியை நோக்கிக் கூறுவ தாகக் கொள்ளப்படும். திரோதான சக்திகள் எல்லாம்கூடி, 'எங்களை உமக்கே அர்ப்பணித்து விடுகிறோம்' என்று அர்ப்பணிக்கின்றன. 'நாங்கள் எம்பெருமானுக்கே ஆள் ஆவோம். எங்கள் கொங்கைகள் அவன் அடியார்கள் அல் லாரைச் சேரா, எங்கள் கரங்கள் அவன்பணியே செய்யும். இரவு பகலெல்லாம் அவன் காட்சி யையே காண்போம். இந்த ஞானநிட்டை கூடில் கதிரவன் எந்தத் திக்கில் உதித் தாலும் அடியேங்களுக்கு ஆவதொன்றில்லை' என்ற உயர் ஞானம் பேசுகிறார்கள். (இதை நிர்மல சுக்கிரம் என்பார்கள். இரவு பகல் அற்ற நிலை என்றும் பேசப்படும். தத்துவ தாத்துவீகங்களால் பாதிக்கப்படாத நிலை).

சிருட்டி முதல் அநுக்கிரகம் வரையிலும் பெத்தத்திலும் முத்தியிலும் தம்மை உய்ய ஆட்கொண்டருளும் சிவபெருமானின் பஞ்ச கிருத்தியங்களை விளக்கும் அவன் திருவடி களை இவ்வாறு ஞானத்தைப் பெற்ற ஞானப் பெண்கள் ஒன்றுசேர்ந்து அஞ்சலி செய்து பாடு கிறார்கள்.

''போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் தோற்றமாம் பொற் பாதம்
போற்றிஎல் லாஉயிர்க்கும் போகமாம் பூங் கழல்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்ய ஆட் கொண்டருளும் பொன் மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம் பாவாய்!''

இப்பாட்டில் ஆதி அந்தம்,தோற்றம், போகம், அழிப்பு, மறைப்பு, உய்வு என்ற கருத்துக்கள் நடராஜ மூர்த்தத்தில் பஞ்சகிருத்தியம் காணப் படும் தத்துவத்தை விளக்குகின்றன. திருவெம் பாவைப் பாட்டின் முடிவு, இறைவனின் ஆனந்த நடனத்தில் இணைந்து நிற்பதே. இது திருவடி ஞானத்தால் அருள்நிலை பெற்றவர்க்கே கூடும். மார்கழி நீராடல், மலங்கழுவித் திருவருளை நாடுதலாகும். சத்தி, பரை, சிவஞானம் எல் லாம் ஒரு பொருளே. இந்த நாட்டம் உதய காலத்தில் ஆரம்பித்து இராப் பகலற்ற நிலை யில் பயனடையும்.

திருவெம்பாவை ஞானப்பாட்டைக் கன் னிப்பெண்கள் காத்தியாயினி நோன்பு (பாவை நோன்பு) அநுட்டிக்கும்போது பாடுவார்கள் என்று கூறப்படும். மழை பொழிவதற்கும் இதைப் பாடலாம். சயாம் நாட்டில், மன்னன் முடி சூடும்போது ஒரு புது சகாப்தத்தைக் குறிக்க இது பாடப்படுகிறதாம். பெரியோர்கள் கூறியதான 'சத்தியை வியந்து சிவனை அடை தல்' என்பதே இதன் மேலான பொருள். மார் கழி முதல்நாள் முதல் திருவாதிரை வரை எல் லோரும் நீராடி இப்பாட்டை ஓதினால் ஞானம் பெற்றுச் சுகோதயம் பெறலாம் என்பது கருத்து.

***

# பட்டரின் விளக்கவுரைகள்

திரு கே. ஆர். கிருஷ்ணமூர்த்தி,

உறையூர், திருச்சி.

## முன்னுரை

இவ்வுலகின்கண் தோன்றும எல்லா உயிர்களையும் உய்வித்து, அவர்களுக்கு வீடுபேறு அளிக்கவேண்டும் என்பதே, இறைவன் திருவுள்ளமாகும். இதன்பொருட்டாக எம்பெருமான், இராமகிருஷ்ணாதி அவதாரங்களை எடுத்தார். அந்த விபவ அவதாரங்களை இழந்தவர்களான நம்போன்றோர்க்குக் காட்சி தருவதற்காகக் கோயில், பெருமாள்கோயில்- திருமலை-திருமாலிருஞ் சோலை முதலான திவ்விய தேசங்களை உகந்தருள, அர்ச்சாரூபமாக இன்றும் சேவைசாதித்து அருளுகின்றார். இத்தகைய திவ்விய தேசங்களிலுள்ள எம்பெருமான்மீது ஈடுபட்டு, அவனது அவதார வைபவங்களிலும், திருவிளையாடல் களிலும் மிகவும் ஆழங்காற்பட்டுப் பன்னிரு ஆழ்வார்களாலும் பாடப்பெற்ற பாடல்களின் தொகுப்பே ,நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் ஆகும். இப் பாசுரங்களின்பால் மிகவும் ஈடுபட்ட நமது ஆசாரியப் பெருமக்கள் பலரும், இதன் பருப்பொருளையும், நுண்பொருளையும் விளக்கிப் பல உரைகள் செய்தருளினர். இவற்றை ''வியாக்கியானம்'' எனப் பெரியோர் பணிப்பர்.

பரம காருணிகரான பெரியவாச்சான் பிள்ளை என்னும் சான்றோர், நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் முழுவதற்கும் வியாக்கியானம் செய்தருளினார். திருவாய்மொழிக்கு மட்டும் இவரைத் தவிர, மற்றும் திருக்குருகைப்பிரான் பிள்ளான், நஞ்சீயர், நம்பிள்ளை, வாதிகேசரி அழகியமணவாள ஜீயர் என்ற நால்வர் வியாக்கியானம் அருளினர். இதுபோன்ற வியாக்கியானங்கள் தோன்றாவிடில், இவ்வுலகம் இருள் தருமா ஞாலமேயாக இருந்திருக்கும். இவ்வியாக்கியானங்களை விளக்குகையில் ஆழ்வார்களின் ஈரச் சொற்களையும், அவற்றிற்கு உரையாசிரியர்களின் உரைகளையும் அழகுறத் திறம்படக் கேட்போர் மனத்தினில் நிற்கும்படி எடுத்துரைத்து, 'இதன்பொருள் இப்படித்தான் இருத்தல் வேண்டும்' என நிலைநாட்டிய ஆசாரியர்களின் திரளில் தலைசிறந்தவர் பட்டர் என்ற பெருஞ்சான்றோர் ஆவர். இவரது மாட்சிமைகளையும், திவ்யப் பிரபந்தப் பொருட்களை நிர்வாகம் செய்த திறமையையும், ஈண்டு இயன்றவரை காண்போம்.

## கூரத்தாழ்வான் புதல்வர்

இராமாநுசரின் திருவடியில் ஈடுபட்ட மாணவர் திரளில், 'கூரத்தாழ்வான்' என்பவர் சிறந்தவராவார். இவர், தம் மனைவியாரான 'கூரத்து ஆண்டாள்' என்னும் மாதுசிரோமணியுடன் திருவரங்கத்தில் வாழ்ந்து வந்தார். ஒருநாள் இரவு தம்பதிகள் இருவரும் ஆகாரமின்றிப் பட்டினியாக இருக்கையில், திருவரங்கனுக்கு அர்த்தசாம பூசை நடக்கும் மணிஓசை கேட்டது. அவ்வமயம் அரவணை என்னும் நெய்ப்பொங்கல் பெருமாளுக்குத் திருவாராதனம் செய்யப் படும். கூரத்தாண்டாள் பரம பக்தரும், தம் கணவருமான கூரத்தாழ்வான் பட்டினியாகக் கிடக்க நேரிட்டதை எண்ணி வருந்தி மனக்கவலையுற்று ''அரங்கனே! உனக்கரவணை ஆராதனம் ஆகும் வேளையில், உனது பக்தன் பசித்திருப்பது நியாயமாகுமா?'' என்று வேதனையுற்றாள். சிறிது நேரத்தில் அரங்கனே ஒரு வைணவ அடியார் வடிவில் வந்து அரவணைப் பிரசாதத்தைக் கொண்டு வந்து கொடுத்துத் தம்பதிகளை உண்ணச் சொன்னார். அந்த பகவத் பிரசாதம் உண்டு, கூரத்தாண்டாள் திருவயிறு வாய்த்து, உரிய காலத்தில் இரண்டு ஆண் குழந்தைகளைப் பெற்றெடுத்தாள். இக்குழந்தைகள் இரண்டும் ஒரு வைகாசித் திங்கள் அனுட நட்சத்திரத்தில் அவதரித்தன.

## பராசர பட்டர்

நம்பெருமாள் திருவருளால் ஆழ்வானுக்குக் குமாரர்கள் இருவர் உதித்ததை அறிந்த இராமாநுசர், அக்குழந்தைகள் பிறந்த பதினொன்றாம் நாளில் தம் மாணவர் திரள்கள் பின் தொடர்ந்து வர, கூரத்தாழ்வான் திருமாளிகைக்கு எழுந்தருளி, தன் பிரதான சீடர்களில் ஒருவரான எம்பார் என்பவரை நோக்கி, ''குழந்தைகளை எடுத்துவாரும்'' என்று பணித்தார். எம்பார் அங்ஙனமே அக் குழந்தைகளை எடுதது வரும்பொழுது கண்ணேற்றுக் குற்றங்

கள் தாக்காமல் இருக்கவேண்டும் என்று கருதி, காப்பாகத் 'துவயம்' என்னும் மந்திரத்தை அனுசந்தானம் செய்துகொண்டே வந்தார். குழந்தைகளைத் தன் கண்களால் குளிர நோக்கிய இராமாநுசர் 'எம்பாரை, இக் குழந்தைகளிடம் துவயம் பரிமளிக்கின்றதே! இங்ஙனம் ஆகுமாறு என்செய்தீர்?' என்று வினவினார். எம்பாரும் குழந்தைகளுக்குக் காப்பாகத் தாம் துவயத்தை அனுசந்தானம் செய்து வந்தமையைக் கூறினார். அப்படிக் காப்பிட்டதற்கு மிகவும் உகந்த உடையவர் 'இக்குழந்தைகள் உய்யும் வகையை நாடிக் காப்புச் செய்ய நீர் முற்பட்டீர் ஆதலால், நீரே இவர்களுக்கு ஆசாரியன் ஆகக் கடவீர்' என்று நியமித்து இரு குழந்தைகளுக்கும் முறையே பராசர பட்டர், வேதவியாச பட்டர் என்ற திருநாமங்களைச் சூட்டினார். இவர்களுள் மூத்தவரான பராசர பட்டர் என்பவரே, வைணவம் கூறும் நல்லுலகில் ''பட்டர்'' என்ற சிறப்புப் பெயருடன் சமயப் பெருஞ் சான்றோராக விளங்கி வருகின்றார். பலப்பல மறைநுண் பொருட்களைத் தம் திருத்தகப்பனாரான கூரத்தாழ்வானிடம் பட்டர் கேட்டு அறிந்தார். எம்பாரிடம் முறையாகப் பல சாத்திரங்களையும், திவ்வியப் பிரபந்த நுண்பொருள்களையும் பாடங்கேட்டுப் பயின்றுணர்ந்தார்.

## நஞ்சீயர்

பட்டர், திருவரங்கம் அழகிய மணவாளரின் அருட் சிறப்பால் அவதரித்த காரணத்தினால், திருவரங்கநாதனாலும், திருவரங்க நாச்சியாராலும் புதல்வராக ஏற்றுக் கொள்ளப் பெற்று வளர்க்கப்பட்டார். சிறு வயதிலேயே இவர் எல்லாச் சாத்திரங்களையும் கற்றுவல்ல பேரறிஞராக விளங்கினார். சகஸ்ரநாம பாடியம், ரங்கராசஸ்தவம் ,குணரத்தினகோசம், ரங்கராசத்தோத்திரம், கிரியா தீபம், கைசிக புராணம் முதலிய நூல்களை இயற்றியருளினார். இவரது சீடர்களுள் தலைசிறந்தவர் நஞ்சீயர். வேதாந்திகள் என்றும், மாதவாசாரியர் என்றும் பூர்வாச்சிரமப் பெயர் பெற்ற நஞ்சீயர், அத்வைத சம்பிரதாய தத்துவத்தில் சிறந்த தேர்ச்சி பெற்றிருந்தார். பட்டர் இவரைத் திருத்திப் பணிகொண்ட பின், 'நஞ்சீயர்' என்னும் சிறப்புப் பெயர் பெற்று விளங்கினார். மற்றும் அட்டப்பிரபந்தம் பாடியருளிய பிள்ளைப்பெருமாள் அய்யங்கார், பிள்ளைப் பிள்ளையாழ்வார் முதலானோர் ,இவரது திருவடியில் ஈடுபட்டவர்கள். நஞ்சீயர் தனது ஆசாரியரான பட்டரைப் பலமுறை விளக்கங்கள் கேட்ட இடங்கள் அனேகம் உண்டு. அத்வைதியான அவருக்குப் பல இடங்களில் ஐயங்கள் தோன்றும். அவற்றை விளக்கி அவரது ஐயப்பாட்டை நீக்கிய பட்டரின் ஒப்புயர்வற்ற திறமையை நினைந்து நினைந்து மகிழலாம். அவைகளில் சிலவற்றை மட்டும் ஈண்டு இயன்றவரை நாம் அனுபவிப்போம்.

## 1. கண்டகாலிப்பூவும் சாத்தலாம்

திருமங்கையாழ்வார் ''கள்ளார் துழாயும் கணவலரும் கூவிளையும், முள்ளார் முளரியும் ஆம்பலும், முன்கண்டக் கால், புள்ளாய் ஓர் ஏனமாய்ப்புக்கு இடந்தான் பொன்னடிக்கு என்று உள்ளாதார் உள்ளத்தை உள்ளமாக் கொள்ளோமே'' என்று அருளிச் செய்த பாசுரத்தில், எம்பெருமானுக்கு எல்லாவிதமான மலர்களையும் சமர்ப்பிக்கலாம் என அருளிச் செய்தார். பட்டர் இப்பாசுரத்திற்கு விளக்கம் கூறுகையில், ''கூளத்தையிட்டுப் புகைத்தாலும் போதும்; கண்டகாலிப் பூவை இட்டாலும் எம்பெருமான் ஏற்றுக் கொள்வான்'' என்று அருளிச் செய்தார். அதைக் கேட்ட நஞ்சீயர் ''கண்டகாலிப் பூவினை எம்பெருமானுக்குச் சாத்தலாகாது'' என்று சாத்திரம் விதித்திருக்கிறதே?'' என்று வினவினார். அதற்குப் பட்டர் ''எம்பெருமானுக்கு ஆகாதது என்னும் நினைவாலே கண்டகாலிப்பூவைச் சாத்திரம் விலக்கவில்லை. அப் பூவைப் பறிக்க முற்படுகின்ற பாகவதனின் கையில், அதில் உள்ள முள் குத்தித் துன்புறுத்துமே என்பதனானால்தான், அது தவிர்க்கப்பட்டது'' என்று விடையருளிச் செய்தார்.

## 2. புள்ளுப் பிள்ளைக்கு இரைதேடும்

ஆழ்வார்களின் மங்களாசாசனம் பெற்ற திவ்வியதேசங்களுள், புள்ளம்பூதங்குடி என்று ஒரு தலம் சோழ நாட்டில் உள்ளது. புஜங்க சயனராக எம்பெருமான் பள்ளிகொண்ட திருப்பதி ,அது. திருமங்கையாழ்வார் தம்முடைய பாசுரம் ஒன்றில் ''பள்ளச் செறுவில் கயல் உகள ,பழனக் கழனி அதனுள் போய் புள்ளுப்பிள்ளைக்கு இரை தேடும்புள்ளம்பூதங்குடிதானே'' என்று அருளிச் செய்கின்றார். பட்டர் இப் பாசுரத்திற்கு விளக்க விரிவுரை ஆற்றுங்கால், நஞ்சீயர் ''சுவாமீ! வயலில் மீன்கள் துள்ளுகையில், தேங்கியுள்ள நீரில் கொக்குகள் இரை தேடும் புள்ளம்பூதங்குடி என்பது சுவைக்கத் தக்கதாக இல்லையே! வயல்களில் துள்ளிக் கொண்டு கிடக்கின்ற மீன்களைப் பிடிக்காமல் கொக்குகள், இரை தேடி அலைந்து வருந்துவது எற்றுக்கு?'' என்று வினவினார். அதற்குப் பட்டர், ''நஞ்சீயரே! ஆழ்வாரின் பாசுரத்தை நன்கு பாரும். அந்தப் புள்ளானதுதனக்கு இரை வேண்டும் என விரும்பினால் வயல்களில் துள்ளும் மீன்களை உண்பதில் தடையில்லை காணும் ஆனால் ஆழ்வார் ''புள்ளுப் பிள்ளைக்கு இரை தேடும்'' என்றன்றோ கூறியிருக்கின்றார்? தன் பிள்ளையான சிறிய குஞ்சுக்குக் கொக்கானது, வயலில் துள்ளும் பெரிய மீனைக் கொண்டு சென்று என் செய்வது? எனவே அதன் வாய்க்கு ஏற்ற அளவில் உள்ள குஞ்சு மீனாகத் தேங்கியுள்ள நீரில் இரை தேடுகின்றது காணும்'' என்று பொருத்தமாக விடை புகன்றார்.

## 3. புல்லாங்குழல் தளிர்க்காதது ஏன்

பெரியாழ்வார் கண்ணபிரானின் குழலூதும் தன்மையை விவரித்துப் பாடிய பாடல்களில் ''விலங்குகள் மட்டுமின்றித் தாவரங்களும் கண்ணனின் குழலோசையில் மயங்கி நின்றன: பட்டுப்போன மரங்களும் தளிர்விட்டன, என்று விளக்கினார். அதனைக் கேட்ட

நஞ்சீயர் ''சுவாமீ! கண்ணனின் குழலோசை கேட்டுப் பட்ட மரங்கள் தளிர்த்தன எனக் கூறு கின்றீர்களே? அப்படியாயின் கண்ணனின் கையில் இருந்த புல்லாங் குழலும் ஒரு பட்ட மரம் தானே. அது தளிர்விட்டதா? ''என்று வினவினார். பட்டர் 'சீயரே! தளிர் விடுதல் என்பது மறுபிறப்பு அடைதலை ஒக்கும். எம் பெருமானின் திருவடியை உபாயமாக எண்ணு பவர்களுக்கே மறுபிறப்புக் கிடையாது என்று சாத்திரங்கள் விதித்திருக்கையில், அந்த எம் பெருமானின் கையிலேயே தவழக் கூடிய பெரும் பேறு பெற்ற அப்புல்லாங் குழலுக்கு மறுபிறப் புண்டா? எனவேதான் அது தளிர்க்கவில்லை'' என்று அருளிச் செய்தார்.

## 4. தெளிவிலாக் கலங்கல்நீர்

பன்னிரு ஆழ்வார்களும் தமக்குள் ஒரே கருத்தை உடையவராய் இருந்தனர். அவர்களின் பாடல்களில் முரணான கருத்து வேறுபாடுகள் எதுவும் கிடையாது. இதுவே ஆழ்வார்களின் பாசுரத்துக்குள்ள சிறப்பான ஏற்றம், என்று ஒருமுறை பட்டர் கூறினார். அது கேட்ட நஞ்சீயர் ''சுவாமீ! திருமாலையில் தொண்டரடிப் பொடியாழ்வார் 'தெளிவிலாக் கலங்கல் நீர் சூழ் திருவரங்கத்துள்' எனப் பாடுகின்றார். குலசேகராழ்வார் 'திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி' என்று பாடுகின்றார். ஓர் ஆழ்வார் 'கலங்கல்நீர் உள்ள காவிரி' என்றும்; மற்றும் ஓர் ஆழ்வார் ''தெளிந்த நீரையுடைய காவிரி'' என்றும் பாடியுள்ளனரே! இவைகள் ஒன்றோடொன்று மாறுபட்ட கருத்தை உடையன அன்றோ? இவ்வாறு இருக்க, ஆழ்வார்களுக்குள் முரணான கருத்து வேறுபாடு எதுவுமே காணப்படாது என்றது எப்படிப் பொருந்தும்?'' என்று வினவினார்.

அதற்குப் பட்டர், ''சீயரே! தொண்டரடிப் பொடியாழ்வார் திருவரங்கத்தைவிட்டு வேறு எங்கும் செல்லாதவர். கோடை காலத்திலே காவிரியில் தெளிவான நீர் ஓடுவதை அவர் பார்த்திருக்கக் கூடும். அப்படியிருந்தும் 'தெளிவிலாக் கலங்கல்நீர்' என்று அவர் பாடியுள்ளதன் உண்மைப் பொருள், நீரின் கலங்கலான தன்மையைக் குறித்தது அன்று. நதிகளெல்லாம் கடலரசனின் மனைவியர். கடல் கடைந்த காலத்தில் அதிலிருந்து தோன்றியவள் திருமகள். எனவே திருமகள் கடலரசனின் மகளாவாள். கடலரசனின் மனைவியான காவிரியும், திருமகளுக்குத் தாயாராவாள். அந்தத் திருமகள்தான் திருவரங்கநாச்சியார் என்ற பெயரில், திருவரங்கத் தலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றாள். குடகில் இருந்து புறப்பட்டு வரும் காவிரித்தாய், தன் மகளைத் திருவரங்கத்தில் பார்க்கப் போகிறோம் என்ற ஆவலுடன் குதூகலமாக வருகின்றாள். மகளையும் மருமகனையும் வெறுங் கையுடன் சென்று பார்க்கக் கூடாது என்று தங்கத்தையும், சந்தனம், தேவதாரு, அகில் முதலிய வாசனை மரங்களையும் கொழித்துக்கொண்டு வருகின்றாள்.

திருவரங்கத்தை நெருங்க நெருங்கப் பக்தர்களும் பாகவதர்களும் யோகிகளும் பலர் கூட்டம் கூட்டமாக அந்த அரங்கனின் பெருமையைப் பற்றியும், அவன் திருக்கோயில்விமானம் தங்கத்தினால் வேயப்பட்டுள்ளதையும், பலர் புகழ்ந்து கூறக் கேட்கின்றாள். அவன் தினசரி உபயோகிக்கும் வட்டில்கள் யாவும் தங்கத்தினால் ஆனவை என்றும், அவன் உடுத்துவது பீதாம்பரம், அணிவது வைர வைடூரிய மாலைகள், தரிப்பது முத்து அங்கி, தலையிலே இரத்தின அங்கி, நெற்றியிலே கஸ்தூரித் திலகம், மார்பிலே கவுத்துவ மாலை, உண்பதோ மூடநெய் பெய்து முழங்கை வழிவாரும் பாற்சோறு, எரியும் திருவிளக்கு முதல் தீப்பந்தம் வரை நெய்! இப்படியெல்லாம் அரங்கனது செல்வச் செழிப்பைப் புகழ்ந்து அனைவரும் பேசுவதைக் காவிரித் தாய் கேட்கின்றாள். அதனால், தன் மகளுடையவும், மருமகனுடையவும் செல்வத்திற்கு முன்னால், தான் கொண்டு வரும் தங்கமும் சந்தனமும் தேவதாருவும் பிறவும் மிகவும் துச்சமானவை என்று எண்ணி, இப்பொருட்களை எடுத்துக் கொண்டு, எப்படி என் மகள் வீட்டிற்குச் செல்வேன்? என்ற மனக் கலக்கத்துடன், திருவரங்கத்தைவிட்டு, மீண்டும் கிழக்கு நோக்கிச் செல்கின்றாள். அவ்விதம் செல்லுகின்ற காவிரியின் மனக் கலக்கத்தையே, ஆழ்வார் ''தெளிவிலாக் கலங்கல் நீர்'' என்று பணித்திருக்கின்றார் என்று பட்டர் விளக்கம் செய்தருளினார்.

—தொடரும்.

## வைணவத் தலங்கள்

பொங்குநற் பக்தி வெள்ளப்
புணரியில் திளைத்து மூழ்கி
நன்குயர் ஆழ்வார் கள்தாம்
நலமிகப் பணிந்தி றைஞ்சி,
மங்களா சாச னம்செய்
வைணவத் தலங்கள் யாவும்,
இங்குநாம் கண்டு போற்றல்,
இனியநற் கடமை யாகும்!

—க. சி. முருகவேள்

# சைவசித்தாந்தமும், ஆன்மநேய ஒருமைப்பாட்டு நிறைவாழ்வும்

பேராசிரியர், 'தத்துவ வித்தகர்'
திரு. டாக்டர் வ. ஆ. தேவசேனாபதி, M.A., Ph.D.,
சென்னை.

மக்கள் சேர்ந்து வாழும் இயல்புடையவர்கள் என்று கருதப்படுகின்றனர். எனினும் போர் ஆர்வம் என்பதும் அவர்கள் இயல்பூக்கங்களில் ஒன்றாகக் கூறப்பெறுகிறது. உலக மக்கள் வரலாற்றில் கடும் போர்கள் நிகழ்ந்துள்ளன. எனினும் மக்கள் அனைவருமே ஓர் இனமாக வாழவேண்டும் என்னும் முயற்சியும் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாராளுமன்றம் என்பது ஒரு நாட்டுக்கே மட்டுமே உரியதாக அன்றிப் பார் அனைத்தையும் இணைக்கும் அரசின் உறுப்பாக இருத்தல்வேண்டும் என்பது கவிஞர் கண்ட கனவு. போர் இன்றி நிலைபேறான அமைதியுடன் வாழமுடியுமா என்பது வெறும் அறிவாராய்ச்சியாக மட்டும் இராது, மக்கள் இனம் உய்வதற்காக உடனடியாக வேண்டப்படுவதாக உள்ளது. போர்கள் நேராமல் செய்ய இயலாதெனில், போர்கள் உலகை அறவே அழித்துவிடும் என்பது இப்போது மிகத் தெளிவாகியுள்ளது.

இந்த நெருக்கடியில் சமயங்கள் உதவக் கூடுமா? சமயங்களா? அவற்றால் போர்கள் நிகழ்ந்துள்ளனவே! அவை போர்களைத் தூண்டுவன, வளர்ப்பன. அவற்றால் எங்ஙனம் போர்களை ஒழிக்க முடியும்? இவ்வாறு தடைகள் எழுப்பப் பெறுகின்றன. இவற்றை உள்ளங்கொண்டு சைவசித்தாந்தம், மக்கள் ஒருமைப்பாட்டுக்கும் நிறைவான வாழ்க்கைக்கும் துணை செய்ய இயலுமா? என்னும் கேள்விக்கு விடை காண முயல்கிறேன்.

சிக்கல்களை நீக்கி நல்ல தீர்வுகள் காண வேண்டுமெனில் அவற்றின் அடிப்படைக் காரணத்தைத் தெரிந்துகொள்ளுதல் கட்டாயமாகிறது. அடிப்படைக்குச் செல்லாமல் தீர்வு காண முயல்வது நோய் முதல் (காரணத்தை) அறிந்துகொள்ளாது, அதன் அறிகுறியை மட்டும் நீக்குவதைப் போன்றதாகும். நோய்நாடி அதன் முதல்நாடி, நோய்தீர்க்கும் வாய்நாடி, வாய்ப்பச் செய்தல், மருத்துவத் துறைக்கு மட்டுமே உரியமுறையன்று. இம்முறை பிற துறைகளுக்கும் பயன்படக்கூடிய பொதுமை உடையது. இம்முறையைத் தெரிந்தோ, தெரியாமலோ கையாண்டுதான் உலக ஒற்றுமை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மக்கள் இயற்கை பற்றிய கருத்தும் இங்கே பின்னிக் கிடக்கின்றது. மக்கள் வாழ்க்கை எவ்வாறு நிறைவுறும்? மக்களுக்கு வேண்டிய உணவு உடை, உறைவிடம் ஆகியவை அனைவருக்கும் கிடைக்கும்படிச் செய்தல் முதற்படி. அதற்குப் பிறகு, அறிவாராய்ச்சிகள், வேலைவாய்ப்புக்கள், கலைப்பயிற்சிகள், விளையாட்டு வகைகள் ஆகியவை அவரவர் விருப்பப்படி மக்களுக்குக் கிடைக்கும்படிச் செய்துவிட்டால், மக்களுக்குள் தனித்த முறையிலோ, நாடு, இன, மொழி சமய-பிற அடிப்படைகளிலோ போர்கள் நிகழா. இவ்வாறு கருதுவோர் பசி, நோய், கல்வி, அறிவின்மை போன்ற குறைகளை நீக்க முயன்று வந்துள்ளனர். நல்வாழ்வு நல்கும் அரசு (Welfare state) என்பது குறிக்கோளாக மட்டுமிராது, அதனை உருவாக்கிச் செயல்படுத்தவும் நாடுகள் முயன்று வந்துள்ளன. இந்நாடுகளின் அரசியல், குடியாட்சி முறையாக இருக்கவேண்டுமென்பது ஏறத்தாழ அனைவருக்கும் உடன்பாடு. ஆனால் குடியாட்சி (Democracy) எவ்வாறு செயல்பட வேண்டுமென்பது பற்றி வேற்றுமைகள் நிலவுகின்றன. மக்கள் நல்வாழ்வுக்கு உதவுவது பொது உடைமைக் கொள்கையா, தனி உடைமைக் கொள்கையா என்பதனைப் பற்றிப் பொருளியலில் வேற்றுமைகள் காணப்பெறுகின்றன. அரசியல் பொருளியல் துறைகளில் செய்யப்பெறும் முயற்சிகள் பாராட்டுக்கு உரியவையே யெனினும், அவை நோயின் அறிகுறியைத் தீர்ப்பனவே தவிர நோயைத் தீர்ப்பனவல்ல என்பது, பொதுவாகச் சமயங்களுக்கும், சிறப்பாகச் சைவசித்தாந்தத்திற்கும் உள்ள பொதுக்கருத்து. சுருங்கக் கூறின், சிக்கல், அரசியல் பொருளியல் பற்றியது அன்று. மனிதனையே பற்றியது. (Problem of Ego or Egoism). 'நான்'' எனது' என்னும் அகப்புறப் பற்றுக்களே மனிதனைப் பற்றியுள்ள நோய். தன்னைப் பற்றிய தவறான எண்ணங்களைச் செயல்முறையில் கைவிடுவதே வீடு (மோட்சம்). இவற்றினின்றும் விடுபட்டால் மனிதன் பிற உயிர்களை உயர்த்தித் தானும் உயரலாம் என்பது சைவசித்தாந்தத்தின் பிழிசாறாகும். 'பொத்தின நோய் அது இதனைப் பொருள் அறிந்தேன் போய்த்தொழுவேன்' என்று நோய் தீர்க்கும் வழியை-தொழுகையை-சுந்தரர் எடுத்துரைக்கிறார். தொழுகை இறைவனை வணங்

குவதும், உயிர்களுக்கு உள்ளம், உரை, செயல்களால் நன்மை செய்வதும், ஆகியவற்றை இணைபிரியா உறுப்புக்களாகப் பெற்றுள்ளது.

சமயம் என்பதைக் குறிக்கும் (Religion) என்னும் சொல், பிரிந்துள்ளவற்றை மீண்டும் ஒன்று சேர்த்தல் என்னும் பொருளுடையது. இறைவனுக்கும் உயிர்களுக்கும் உயிர்களிடையேயும் செயற்கையாக நேர்ந்துள்ள பிரிவு நீங்கி, அவை மீண்டும் ஒன்றாக வேண்டுமென்பது இச்சொல்லின் உட்கிடை எனக் கொள்ளலாம். நம் நாட்டில் 'மதம்' 'தரிசனம்' என்னும் சொற்கள் சமயத்தைக் குறிப்பனவாக வழங்கப்பெறுகின்றன. 'மதம்' என்பது சிந்தித்துத் தெளியப்பெற்றது என்று பொருள்படும். 'தரிசனம்' என்பது 'அகநோக்கு' எனக் கொள்ளலாம். இந்நோக்குப் புறப்பொருள்களின் தன்மையையும் அகமான தன்மையையும் பற்றி நிகழ்வது. அதன் தன்மையையும் நாம் எவ்வாறு காண்கிறோமோ அவ்வாறே அது இருப்பதாகக் கொள்கிறோம். இதனால் நம் நாட்டில் பல்வேறு நோக்குகளுக்கும் இடம் அளிக்கப்பட்டுள்ளது. பொது உடைமைக் கொள்கை மேலைநாட்டில் அப்படையாக உள்ள முரண் இயல் (Dialectical Materialism) ஜடக்கொள்கையை நம் நாட்டுச்சாருவாகம்அல்லது உலோகாயதம் என்பதன் அறிவியலான வளர்ச்சியாகக் கருதலாம். இவ்வாறே உயிர்களின் நலத்தை அற ஒழுக்கத்தின் அடிப்படையில் அமைக்கும் சமண, பௌத்த சமயங்களை மக்கள் பற்றுக் கோட்பாட்டுடன் (Humanism) ஒப்பிடலாம். இனி, உடலின் வேறாக ஆன்மா என்பதை உடன்பட்டால், அது ஒன்றா பலவா என்னும் கேள் எழுகிறது. இரண்டற்ற ஒன்று என்று நம்நாட்டில் சங்கரர் எடுத்துரைத்தது, மேலை நாட்டு முழுமுதற் கொள்கையுடன் (Absolutism) ஓரளவு ஒப்புமை உடையதா என்று ஆராயலாம். உயிர்கள் பல. அவை இருப்பு நிலையில் இறைவனுக்கு வேறாயும் கலப்பு நிலையில் ஒன்றாயும் உள்ளன என்னும், கடவுட் கொள்கை (Theism) பல திறப்பட்டது. எனவே சைவம், வைணவம், கிறிஸ்துவம் இஸ்லாம் போன்றவற்றைச் சேர்த்துப் பார்க்கலாம். இவ்வாறு பலவாக விரிந்தும் வேறுபட்டுள்ளவற்றை ஆறு என்னும் எண்ணில் அடக்கி, ஆறு எவை என்பதை அவ்வக்காலத்தில்பெருவழக்கில் உள்ளனவாகக் கொள்ளலாம். ஆறு என்னும் சொல்லைப் பல என்றே பொருள் கொண்டு, கொள்கைகளோ, சமயங்களோ பலவாக இருப்பினும் அவற்றையெல்லாம் மக்கள் நிலைகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்றவாறு தோற்றுவிப்பவர் இறைவனே என்று சைவப்புகழ் நூல்களிலும் பொருள் நூல்களிலும் கூறப்படுவதைச் சைவர்கள் ஆழ்ந்து அகன்று நுண்ணிய பொருளுடையதாகக் கொண்டு அதன் மெய்ம்மையைத்தம் வாழ்க்கையிலும் கடைப்பிடிப்பது சைவத்தை உள்ளவாறு உணர்தல் எனக் கருதுகிறேன்.

எங்கேனும் யாதாகப் பிறந்திடினும் தன்னடியாருக்கு
இங்கே யென்று அருள் புரியும் எம்பெருமான்

—சம்பந்தர்.

போற்றுந்தகையன பொல்லா முயலகன் கோபப் புன்மை
ஆற்றுந் தகையன ஆறுசமயத் தவரரைத்
தேற்றுந் தகையன தேறிய தொண்டரைச் செந்நெறிக்கே
ஏற்றுந் தகையன இன்னம்பரான்தன் இணையடியே

—அப்பர்.

ஆறொன்றிய சமயங்களின் அவ்வவர்க்கப் பொருள்
வேறொன்றிலாதன..

—அப்பர்

அறுவகைச் சமயத்தோர்க்கும்அவ்வவர் பொருளாய்

—அருணந்திசிவம்

முயலகன் கோபப் புன்மை என்பது ஆணவத்தின் சீற்றத்தால் ஏற்கும் இழிவு. 'ஆணவம்' என்பது 'யான்' 'எனது' என்பனபற்றிய தவறான எண்ணம். மெய்ம்மையை நாடுவாரும் தவறான எண்ணத்தால் பலவழியிலும் சீறி எழுகின்றனர். அச் சீற்றத்தைத் தணிப்பவன், ஆற்றுபவன் இறைவன். மெய்ம்மையை நாடி அதனைக் காணாமல் திகைக்கும் நிலையில் அவரவர் பக்குவத்திற்கேற்பத் தேறித் தெளியவைப்பவன் இறைவன். 'தேறும்வகைநீ, திகைப்பும் நீ' .இனித் தாம் தெளிந்த நிலையிலேயே தேங்கி நின்று விடாமல் முன்னேறுவதற்காகச் செவ்விய நெறிக்கு ஏற்றுபவன் இறைவன். இவ்வாறு யார் எவ்வாறு உள்ளினாலும் தன் இருப்பை மறுத்தாலும், மறந்தாலும், மறவாது இடையீடின்றிப் போற்றினாலும்- 'உள்ளுவார் உள்ளத்தெல்லாம் உடனிருந்து' அறிந்து ஊக்குவிப்பவன் இறைவன் என்பது சைவம். உயிர்கள் தம்மை உணர்ந்தும், தம்மை உடைய தலைவனை உணர்ந்து ஏற்றாலும் ஏற்காவிட்டாலும் அவர்கள் அனைவரும் அவன் அடியவர்களே. அவர்கள் எங்கேயாயினும் யாதாகவாயினும் பிறந்தாலும் அவர்களுக்கு அருள் செய்பவன் இறைவன் என்று உறுதி கூறுகிறார் சம்பந்தர். 'என்னை வளர்ப்பவனே' என்று மாணிக்கவாசகர் கூறுகிறார். எல்லாஉயிர்களையும் ஆன்மிக முன்னேற்றத்தில், நிறைவு எய்த இறைவன் வளர்க்கிறான்.

செல்லும் அளவும் செலுத்துமின் சிந்தையை
வல்லபரிசால் உரைமின்கள் வாய்மையை
இல்லை யெனினும் பெரிதுளன் எம்இறை
நல்ல அரன்நெறி நாடுமின் நீரே.

என்று திருமூலர் கூறுவது ஆழ்ந்து சிந்திக்கத் தக்கது.

உண்மையைக் காண அறிவைக் கொண்டு ஆராயும்போது தன் நெஞ்சு அறிவதை ஏற்கலாம். தான் அறிவது ஏதாயினும் அது வளர்ச்சியைத்தன்னகத்தே கொண்ட மெய்ம்மை. இதனால் 'மெய்ம்மைதான் இறைவன்' என்னும் நிலையில் தொடங்கிஇறைவன்தான் மெய்ம்மை என்னும் முடிநிலையை அடையலாம். இல்லை என்ற எதிர்மறை உரை வெறும் மறுப்பாக இராமல், உடன்பாட்டு உட்கிடை கொண்டது என்பது கருதற்குரியது. இனி திருமூலர் தம் அப்பனாகவும் நந்தியாகவும் ஆரா அமுதாகவும் ஒப்பிலியாகவும் வள்ளலாகவும் ஊழிமுதல்வனாகவும் தேர்ந்து தெளிந்த இறைவனை எப்பரிசாயினும் ஏத்துமின் என்கிறார். இறைவன் என்று ஏற்காமல், 'நான் கண்ட உண்மை இஃதே' என்று அவன் இருப்பை மறுப்பதும் அவனை ஏத்துவதில் ஒரு பரிசே. அவ்வாறு மறுப்பவர்களுக்கும் அவன் அருள் செய்கிறான்.

'உளன் எனில் உளன் அவன் உருவம்
இவ்வுருவுகள்
இலன் எனில் இலன் அவன் அருவம் இவ்
வருவுகள்'

என்னும் நம்மாழ்வார் பாசுரமும் இங்கே ஒப்பு நோக்கத் தக்கது.

'ஒன்றதுபேரூர் வழியா றதற்குள
என்றதுபோல இருமுச்சமயமும்'

என்று திருமூலர் கூறுவது 'உட்சமயம்' என்னும் தலைப்பில் தரப்பட்டாலும், 'உள்பொருள் ஒன்றே. உரவோர் அதனைப்பலவாறு கூறுவர்' என்னும் மொழியின் கருத்தைக் கொண்டதே என்பது தவறாகாது.

'ஓதுசமயங்கள் பொருளுணரும் நூல்கள்
ஒன்றோ டொன்றொவ்வாமல் உளபலவும்;
இவற்றுள்
யாது சமயம் பொருள்நூல் யாதிங் கென்னில்
இதுவாகும் அதுவல்லது எனும் பிணக்கதின்றி
நீதியினால் இவையெல்லாம் ஓரிடத்தே காண
நின்றது யாது ஒருசமயம், அதுசமயம்;
பொருள்நூல்''

என்று சித்தியார் கூறுவதை நினைவு கொள்ளலாம்.

'சைவமாம் ஊழ்பெறல் அரிது' என்பது போன்ற உரைகள் சைவத்திற்கு ஏற்றம் தருகின்றனவே. அவற்றை மறந்தோ மறைத்தோ, சைவத்தின் சமரசத்தை-இணக்கப்போக்கை - வற்புறுத்துகிறோமா? 'வாழ்வெனும் மையல் விட்டு, வறுமையாம் சிறுமை தப்பித் தாழ்வெனும் தன்மையோடும்-சைவமாம் சமயம் சாரும் ஊழ் பெறல் அரிது' என்றுவரும் சொற்கள் அனைத்தையும் இணைத்துப் பார்க்க வேண்டும். 'சைவமாம் சமயம் சாரும் ஊழ் பெறல் அரிது' என்பதைப் பிற சமயங்களை மறுக்கும், பழிக்கும் பொருளில் கொள்ளத் தேவையில்லை. 'ஆட்பாலவர்க்கருளும் வண்ணமும் ஆதிமாண்பும் கேட்பான் புகில் அளவில்லை யாதலின், இறைவன்திருவருள் அவர் அவர்களுக்கு உரிய வகையில் அவர்களை நடத்தும் என்று அமைதி கொண்டு, நமக்கு வாய்த்த பேறு எத்தகையது என்று அதன் மதிப்பை நன்குணர்ந்து முழுப்பயன் பெறுவதே அறிவுடைமை. 'இதுவே, அது அன்று' என்னும் போக்கு அறிவின் அடக்கமாகாது. தாழ்வெனும் தன்மையும் ஆகாது. புற இருளைப் போலன்றித் தன்னையும் காட்டாது மறைக்கும் ஆணவத்தின்-'கணவற்கும் தோன்றாக் கற்புடைய' இருட்பாவையாகிய ஆணவத்தின்-திருவிளையாடலே நம் சமயத்திற்கு ஏற்றம் கூறி வேறு சமயங்களை இழித்து ஒதுக்குவது என்பதை உணரவேண்டும். இனி, பேரூருக்குச் செல்லவழி ஆறோ பலவோ இருப்பினும் அவற்றுள் ஒன்றே நாம் இருக்கும் இடத்திலிருந்து செல்வதற்கான சுருக்கவழியாகும். அதைப்போலவே நாம் பிறந்த சமயத்தைக் கொண்டு முன்னேறலாம். பேரூரை ஒரு முறை அடைந்தபின், பலவழிகளில் சென்றும் பார்க்கலாம். ஆயினும் அப்போதும் ஒருவழியில் தொடங்கும்போது இறுதிவரை அவ்வழியே நடந்தால்தான் ஊரை அடையமுடியும். இதற்காகவே, பயிற்சி நிலையில் ஏற்றம் கூற வேண்டுவதாகிறது. 'சமயச் சிலுகிட்டவரைத் தவறித் தவமுற்றவரை நாடுபவராக' அருணகிரியார் முருகனைக் காட்டுகிறார். 'மாலோன்மருகன். மன்றாடிமைந்தன்' என்று சைவ வைணவ இணக்கம் அருணகிரியார் காட்டும்வழி. வேதாந்த சித்தாந்தசமரச நன்னிலை, தாயுமானவர் தெளிவுறுத்தும் மெய்யுணர்வுக் கொள்கைகளின் 'இசைந்த பொருத்தம்'. சென்ற நூற்றாண்டில் இராமலிங்கர் சமரச சன்மார்க்கத்தைப் புகழ்ந்து பாடினார். வாழையடி வாழையாக வந்த இந்த நன்மரபில் நாம் ஆன்மிக, அறிவுத்துறைகளில் ஏழைகளாகிப் பாடுபடவோ, பிறரைப் பாடுபடுத்தவோ தேவையில்லை.

இனி, நிறைவான வாழ்க்கைக்குச் சைவ சித்தாந்தம் எங்ஙனம் உதவும் என்று பார்ப்போம். ''யான்'' எனது என்பது நம்மைப் பீடிக்கும் நோய். கட்டு நிலையில் 'எல்லாம் நானே' எவையும் என் உடைமையே என்று வாழ்வதால்-வாழ்வதாக நினைப்பதால்-நுகர் பொருள்களை அவை எத்துறையாயினும், அவற்றை, நம்மிடத்தே முடக்கித் தேக்கிப் பிற உயிர்களை வறுமையில் வாடவைக்கிறோம். அவ்வாறே, பிறர் சீரை எடுத்துரைக்காமல் அவரைப் புறந்தூற்றி நமக்கே ஏற்றம் தேடுவது, நம்மையே வியந்து அணிவது, யான் எனத்தருக்கி நிற்பது, பிற உயிர்களின் நன்மைக்கு உழைக்காமல் தன்னலத்தில் மனப்பாறையாவதாகும். ஈயென இரந்தோர்க்கு ஈயேன் என்னாமலும், கொள் என்று கொடுப்பாரிடம் கொள்ளேன் என்று பற்றாமலும், தன்னை அழித்தாயினும் பிறர் வாழ வகை செய்வது வீட்டுநிலை. இந்நிலை, தனக்கு மட்டும் தான் வீடு எனின், அவ்வீடும் வேண்டாப் பெருநிலை. மறைப்பு ஆற்றலாகிய திரோதான சக்தி அருள் ஆற்றலாக மாறுவதைப் போல வீட்டுநிலையில் ''யான்-எனது'' என்பவையும் ஆக்கப்போக்கைப் பெறுகின்றன. அமுதுண்ணக் கடையவனாகி நஞ்சுண்ண முந்தும் இறைவன் வழிநின்று பிறர் இடர் களைவதற்காக 'நான்' என்று முந்தும்நிலை கள்ளத்தலைவர் துயர்கருதிக் கருணை வெள்ளத்தில் அலையும் அருள் நிலை. நல்வினைகளைச் செய்தோ செய்யாமலோ அவற்றின் விளைவை 'எனது' எனக் கொள்வது கட்டுநிலை. தீயவை விலக்கி நல்லனவே செய்து அவற்றின் விளைவைப் பிறருக்கு உவந்தளித்தல் வீட்டுநிலை. மேலும் ஒருபடிச் சென்று பிறர் செய்த தீவினையின் விளைவைத் தாம் ஏற்று அவர்களைத் திருத்தி வாழச் செய்வது முடிநிலை.'யான் எனது' என்னும் உலக இயற்கைக்கு மாறாக இல்லையென்னாத - என்கேட்கினும் தருவதில்லையென்னும் புன்மை அறவே இல்லாத-செயல்முறை. அன்பே-ஆக்கமுறை. அன்பே-சிவன் என்று உணர்ந்தால், ஆன்மநேய ஒருமைப்பாடு உலகமக்கள் அனைவருக்கும் நிறைவான வாழ்க்கை பகற்கனவாயிராது நனவாகும். இயன்ற வரையில் எல்லாவகையிலும்-பொருள், அறிவு, அறம் ஆகியவற்றைத் தன் உழைப்பால் விளைவித்துப் பிறருக்குத் தருதல்—'எனது யானும் வேறாகி, எவரும் யாதும்யானாகும்' இன்பநிலை— அடித்துப் பிடுங்காது கொடுத்து உவக்கும் அருள்நிலை அடைவதற்குத்திருவருள் துணை செய்வதாக! ***

# திருநெல்வாயில்

திரு. அழ. சித. அழகப்ப செட்டியார், சிவபுரி.

''ஆலயம் தொழுவது சாலவும் நன்று'' என்ற வாக்கினைப் பின்பற்றிச் சைவ மெய்யன்பர்கள், தேவாரப் பாடல்பெற்ற சிவதலங்களைச் சிறப்பாக வழிபட்டு வணங்குவர். மூவர் தேவாரத் திருப்பதிகங்களைப் பெற்று விளங்கும் சிவதலங்கள் 274. அவற்றுள் சோழவள நாட்டில் காவிரியின் வடகரையில் விளங்கும் தலங்களில், மூன்றாவதாக வைத்துப் போற்றப்பெறும் தலம், சிவபுரி என்று தற்பொழுது அழைக்கப்பெறும் திருநெல்வாயில். நெல் வயல்களை ஊரின் வாயிலில் கொண்டு விளங்குவதால், இவ்வூர் நெல்வாயில் எனப் பெயர்பெற்றது.

சுவாமியின் பெயர் அருள்மிகு உச்சிநாதர். அம்பாளின் பெயர் கருணைமிகு கனகாம்பாள். இத்தலம் தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் புகைவண்டி நிலையத்திலிருந்து தென் கிழக்கில் ஒன்றரை மைல் தூரத்திலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அமைந்துள்ள (திருவேட்களம்) - அண்ணாமலை நகருக்குத் தெற்கே ஒரு மைல் தூரத்திலும் உள்ளது.

திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள், சீர்காழியிலிருந்து சிதம்பரம் நடராசப் பெருமானைத் தரிசனம் செய்யும் பேராவலுடன் திருநீலகண்ட யாழ்ப்பாணர், சிவபாத இருதயர் முதலிய அடியார்கள் புடைசூழப் புறப்பட்டுத் தில்லைவாழ் அந்தணர்கள் வரவேற்கத் தில்லையை அடைந்து, தென்திசையித் திருவாயில் வழியே, திருக்கோவிலுக்குச் சென்று தில்லையம்பலவனைத்தரிசித்து மகிழ்ந்தார். சிதம்பரம் தலம் முழுவதுமே 'கோவில்' எனக் கூறப்படுவதால், தில்லையில் தங்க அஞ்சித் திருவேட்களத்தில் தங்கியிருந்து தில்லைவந்து பல நாட்கள் வழிபட்டு இன்புற்றார். திருவேட்களத்தில் ஞானசம்பந்தர் தங்கியிருந்த நாட்களில், திருநெல்வாயில் கோவிலுக்குச் சென்று திருவுச்சி மேவியுறை செல்வனைப் பாடி வழிபட்டார்.

இத்திருக்கோயில், இராமநாதபுரம் மாவட்டம், கோட்டையூரைச் சேர்ந்த க.வீ. சொ.வீ.அழகப்ப ஐயா அவர்களால், சுமார் 3 லட்ச ரூபாய்ச் செலவில் திருப்பணி செய்யப் பெற்று, விபவ ஆண்டு வைகாசி மாதம் 11க்கு 24.5.1928 மகா கும்பாபிஷேகம், சிறப்பாக நடைபெற்றது. 29 ஆண்டுகளுக்குப் பிறகு அழகப்ப ஐயா அவர்களின் குமாரர் வீர. அழ. சிதம்பரம் செட்டியார் அவர்களால் சுமார் ரூ. 15,000 செலவில், விளம்பி வருடம் ஆனி மாதம் 2க்கு சரியான 16.6.1957 ஞாயிற்றுக்கிழமை அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் செய்விக்கப் பெற்றது. அதையடுத்துத் துந்துபி ஆண்டு ஆவணித் திங்கள் 16 ஆம் நாள் (1.9.1982), புதன் கிழமை சுமார் மூவாயிரம் ரூபாய் செலவில், நவக்கிரகங்கள் புதிதாகப் பிரதிஷ்டை செய்யப் பெற்றுக் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

ஆண்டு தோறும் வைகாசி விசாகத்தன்று காலையில் கோவில் எதிரேயுள்ள கிருபாசமுத்திரம் என அழைக்கப்படும் திருக்குளத்தில் தீர்த்தவாரி உற்சவமும், இரவில் பஞ்ச மூர்த்திகளின் திருவீதியுலாப் புறப்பாடும் நடைபெற்று வருகிறது. நவராத்திரி விழாவும் சிறப்பாக நடைபெற்று வருவதோடு, விஜய தசமிக்கு மறுநாள் விடையாற்றி உற்சவத்தில் இரவில் பஞ்ச மூர்த்திகள் புறப்பாடும் உண்டு. ஆண்டு தோறும் ஆடி மாதம் வெள்ளிக்கிழமை கனகாம்பிகைக்குச் சந்தனக் காப்பு விழா நடைபெற்று வருகிறது. பிரதோஷம் நடராஜா அபிஷேகம், அன்னாபிஷேகம், கார்த்திகைச் சோமவாரம், திருக்கார்த்திகை, திருப்பள்ளிஎழுச்சி முதலான விழாக்களும் தவறாமல் நடைபெற்று வருகின்றன. இத்தலத்திற்குத் திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகம் ஒன்று உண்டு.

புடையினார் புள்ளி கால் பொருந்திய
மடையினார் மணிநீர் நெல் வாயிலார்
நடையின்நால் விரற் கோவணந் நயந்து
டையினா ரெமதுச்சி யாரே. 1.

வாங்கினார் மதின் மேற்கணை வெள்ளம்
தாங்கினார் தலையாய தன்மையர்
நீங்குநீர நெல்வாயி லார்தொழ
ஓங்கினார் எமது உச்சியாரே. 2.

நிச்ச லேத்தும் நெல்வாயிலார் தொழ
இச்சையா லுறை வாரெ மீசனார்
கச்சை யாவதோர் பாம்பினார் கவின்
இச்சை யாரெம துச்சியாரே 3.

நாடினார் மணிவண்ணன் நான்முகன்
கூடினார் குறுகாத கொள்கையார்
நீடினார நெல்வாயிலார் தலை
ஓடினா ரெம துச்சியாரே 4.

நெண் பயங்கு நெல்வாயி லீசனைச்
சண்பை ஞானசம் பந்தன் சொல்லிவை
பண்பயன் கொளப் பாட வல்லவர்
விண்பயன் கொளும் வேட்கை யாளரே 5.

—oOo—

# திருமந்திர யோகம்

## (முற்றொடர்ச்சி)

'கவியோகி' 'மகரிஷி'
தவத்திரு சுத்தானந்த பாரதியார் அவர்கள்

Dy. Commissioner, RAJ... HR&CE Administration Dept.

**6. கிரியை:**

கிரியை என்றால், செயல் தொண்டு பொதுநலப்பணி. சிவபூசையைச் சீவபூசையில் உய்த்தலே கிரியை. சீவ பூசையின் விரிவே சிவ பூசையாகும். வாகீசப் பெருமான் வழிகாட்டு கிறார். ''என்கடன் பணி செய்து கிடப்பதே'' என்று தொண்டுவழி கோலுகிறார். இக்காலப் பெரியார் மகாத்மாகாந்தியின் முன்னோடி அப்பரே. சம்பந்தர் வாகீசரை ''அப்பரே''என்று அழைப்பதும், அப்பரும் அடியேன் என்று கை குவித்தலும் உள்ளத்தை உருக்குங்காட்சியாகும். மதுரையில் வெற்றிபெற்றுப் பல்லக்கில் வரு கிறார் சம்பந்தர். பூந்துருத்திக்கு அருகில் வந்ததும் ''எங்குற்றார் அப்பர்'' என வினவு கிறார்.

''உருகாநின்று உம்மடியேன் உம்மடிகள் தாங்கி வரும்
பெருவாழ்வு எய்தப் பெற்று இங்கு உற்றேன்''

என்று வணக்கமாக முன்னிற்கிறார் அப்பர். என்ன பணிவு! பணியுமாம் என்றும் பெருமை எனும் வள்ளுவர் வழிநடப்போம்.

சரியை, தூலமான உருவவழிபாட்டிற்கு வேண்டியன செய்தலாம்; இறைவன் தோன் றாத் துணயாகி அடியாரை ஆளுகிறான், அன்புக்கு அன்பை அருளுகிறான். சிவலிங்க பூசை, கிரியையிற் கிரியை ; மனமணி யிலிங்க மாக, தியானத்தாற் செய்யும் உள்வழிபாட் டால் வரும் அனுபவ உணர்வு, அருளுணர்வு, கிரியையில் ஞானமாகும். தியானத்தால் உள்ளே வழிபட்டு, அருட்பணியால் உயிர்களுக்கு நலம் புரிதலே சிறந்த கிரியாசாதனமாம். ஏனெனில் பூசைப் பெட்டி, கோயில் இவற்றில் இறைவன் கட்டுப்படவில்லை. அவன் அனைவருள்ளும் எல்லாவுலகினும் இருக்கிறான். திருமூலர் இதை அடிக்கடி வற்புறுத்துகிறார். ''பத்துத் திசையும் பரம்; ஒரு தெய்வம் உண்டு; அவன் இச்சைக்கு ஒத்துத் திருவடி நிழலிற் சரண்புகுந் தால், வினைக்கடல் சாராது. காட்டிலுள்ள கோடிக்கணக்கான சந்தன மரங்களை அரைத் துச் சந்தனாபிஷேகம் செய்தாலும், விண் ணகத்திலுள்ள கற்பகமலரையெல்லாம் அருச் சித்து வணங்கினாலும் பயனில்லை; ஊனை மறந்து, தற்போதமான தேகாத்ம புத்தியை விட்டு, உன்னே உணர்பவருக்கே அருள்தேன் பொழியும், சிவபாத மலரை நெஞ்சினால்கூட முடியும்.

''கானுறு கோடி கடிகமழ் சந்தனம்
வானுறு மாமலர் இட்டு வணங்கினும்,
ஊனினை நீக்கி உணர்பவர்க் கல்லது,
தேனமர் பூங்கழல் சேரவொண் ணாதே''

உண்மையான பசு நிலையிலிருந்து, கன்று தாயை அன்பு செய்வதுபோல இறைவனடியை ஏத்துங்கள். அப்படி ஏத்தும் உள்ள நடுவே ஞானக் கன்றான சிவசேதனம் சுழலும்; வான வர் தொழும் நந்திதேவனின் அருள்வெள்ளம் பெருகும். இறைவன் மங்கைபாகன்(அவளொரு கூறன்); எண்டிசை மண்டலமெல்லாம் அவன் இருக்கின்றான். இதுவான சீவன் பணிந்து, அதுவான சிவத்தின் அருட்பணி செய்க. இவ் வுடற் பாதுகாப்பிற்குச் செய்யும்பணி, மானிடப்பணி; பதிகைங்கரியம் செய்வதே பத்திமையாகும். உயிர்க்குயிரான இறை யுணர்வால், அவனருளை விளக்கும் தொண்டு செய்வதுதான் சிறந்த கிரியாசாதனமாகும். தெய்வபக்தன் சரியை கிரியையால் அருள் பெற்று, அருளால் மாசற்று, சித்த சுத்தி எய்தி, அதனால் தியான யோகங் கைகூடி, அதில் உய்ந்து சென்று, ஞானத்தை எட்ட வேண்டும்; அப்போது சிவகுருவின் அருளால் சித்தமே சிவமாகும். 'சித்தம் குருவருளாற் சிவம் ஆகுமே!'. எலும்புக்கூடாகிய இவ்வுடலுள் அருட்சோதி யிறைவன் விளங்குகிறான். அவனே உள்ளத்தான், உலகத்தான், மண்ணகத் தான், விண்ணகத்தான். நெக்கு நெக்குநினைப் பவர் உள்ளத்தில் புக்கு நிற்கும் உள்ளத்தான்.

என்னை ஏதும் அறிகிலன் ஏழையேன்
தன்னை நானும்முன் ஏதும் அறிகிலேன்
என்னைத் தன்னடி யான்என் றறிந்ததும்
தன்னை நானும் பிரான்என் றறிந்தேனே

என்னும் அப்பர் பாசுரத்தைப் பன்முறை பாடிச் சிந்தியுங்கள். கப்பலுக்கு வழிகாட்டும் கலங் கரை விளக்குப்போல் கடவுளருள் அன்பர்க்கு வழிகாட்டுகிறது.

என்பினுட் சோதி இலங்குகின்றானே, அவன் செம்பொன்மேனியன்; அவனது கமலத் திருவடி முன்னிருந்து அவன் மந்திரத்தை

மொழியவேண்டும். அன்பினால் உருகுக; அத்துடன் ஒவ்வொருநாளும் அவன் பணி செய்க. ''அன்பின் உருகுவன்; நாளும் பணி செய்வன்'' என்கிறார் திருமூலர். பண்ணும் பணியும்நாயன்மார் கண்ட பத்திநெறியாகும். பூசையும், சேவையும் சேர்ந்ததே கிரியையாகும். சூரியனை இருளாற் கூடமுடியாது; எத்தனைபுற வழிபாடு செய்தாலும், உள்ளே தூய்மையும் அருட்பணியுமின்றி மடமையிருள் நீக்கி அருட்சுடரைப் பெறமுடியாது.

''சாத்திரமும் பூசைச் சமாதிகளும் சார்போத
கோத்திரமும் மாயைக் குழாம்''

என்றார் ஒழிவிலொடுக்கத்தார். வெறுங்கிரியை மட்டும் போதாது; உள்ளக் கோயிலில் சிவதரிசனம் பெற்று, உலகக்கோயிலில் சிவ-சீவ கைங்கரியம் (அருட்பணி) செய்தலே நல்ல கிரியையாகும்.

### 7. சமயோகம் :

ஒன்றினை ஒன்றலே யோகம், அலைமனத்தை
வென்றிடின் ஒன்றாம் விரைந்து

யோகம் என்பது ஓகம், உகுதல். சித்தச் சுழற்சியைப் போக்கி, மனம் சுத்தான்ம சைதன்யத்தில் ஒன்று கலப்பதாகும். யோகத்தில் எட்டுப்படிகள் உண்டு; அவற்றுள் இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம் ஆகிய நான்கும் யோகத்தின் சரியையாகும். இவை புறச்சாதனங்களாகும். பிரத்யாகாரம் தாரணை இரண்டும் கிரியை; தியானம் யோகத்தில் யோகம்; சமாதி, யோகத்தில் ஞானமாம். யோகம் ஞானத்திற்கு நடத்துவது; அதுவே, முடிபன்று. கண்ணாடியைப் பார்க்கும் குரங்கு, கண்ணாடி நிழலையே இன்னொரு குரங்கு என்றெண்ணி 'உர்' என்னும். அதுபோல் யோகத் தியானத்திலும் தற்போத உருவம், மனோசங்கற்ப உருவம் கண்டு, அதையே பொருள் என்றும், அதைக் கண்டதும் எல்லாச் சித்தியும் பெற்றதாகவும் நினைப்பது தவறு. சும்மா படுக்கையிற் படுத்துப் புரண்டால் சுகநித்திரை வராது. சும்மா ஆசனம் போட்டமர்ந்தால் யோகத்தியானம் வராது; மனம் உள்ளடங்க வேண்டும். தேகாபிமானமும் போகாபிமானமும் அறவே ஒழிய வேண்டும். 'நான், எனது, எனக்கு' என்னும் அகம்பாவத்தை வைத்துக் கொண்டு, 'யோகி' என்று விளம்பரப்படுத்திக் கொள்வது உலகை ஏமாற்றுவதாகும். ''வந்ததையும் போனதையும் வாதனைப்பட் டெண்ணுவதேன்? சிந்தை யலையாதிருக்கச் செய். இதுவே சாதனமாகும். சுற்றும் பேய்நெஞ்சைச் சுருக்கிச் சுகவழியிற் பற்றற்று நிற்கப் பயில்''. இதுவே யோகப் பயிற்சியாகும்.

பொறிவழியே செல்லாமல், அருள் வழியே சென்று, வெளி வேடமின்றி, கள்ளத்துறவு காட்டாமல், நேர்மையான தியானத்தில் கூடி, மனோலய மெய்தி, ஒரு தூணைப்போல் அசைவறத் தன்னை நிட்டையில் இருத்த வேண்டும். அந்நிட்டையில் உடலுணர்வு நீங்கும்; அப்போது பிறர் சொறிந்தாலும், தட்டினாலும், சொல்லாலும் கையாலும் தாக்கினாலும், மனம் அசையாது. திண் என்றுணர்ந்து திடுக்கிட்டு எழுந்திரான் உண்மையோகி. இப்படித் தேகவுணர்வுற்ற தியான நிட்டையே யோகத்தின் அறிகுறி. இக்குறிப்புள்ளவர்களுக்கே யோகமும் கைகூடும். முப்பதாண்டுகள் நான் மகா துரிய சமாதியில் இருந்து அறிவு மலர்ச்சி பெற்றேன்.

நெறிவழியே சென்று நேர்மையுள் ஒன்றித்
தறியிருந் தாற்போல் தம்மை இருத்திச்
சொறியினும் தாக்கினும் துண்ணென் றுணராக்
குறியறி வாளர்க்குக் கூடலும் ஆமே

ஒருட்சிதான் யோகம்; ஊழிகாலம் ஒருட்சியுடன் உணர்ந்துணர்ந்து, தியான நிட்டை செய்தவர்க்கே சிவசைதன்யம் உள்ளே உணர்வாகும். சுத்த மனம் என்னும் பாற்கடலில், குண்டலிப்பாம்பில், அரியாகிய ஆக்க சக்தி, சிருஷ்டி சக்தியாகிய பிரமாவுடன் அறிதுயில் கொண்டிருப்பதைக் கருதுவோம். பூவில் மணம் போலச் சீவ்னில் சிவமணம் உள்ளது; ஓவியம் போன்ற அசலத்தியானத்தில் உணர்ந்தறியும் யோகிகளுக்கே சிவம் உணர்வாகும். கஸ்தூரி முதலிய வாசனைத் திரவியங்கள் பூசிய சிவலிங்கம்போல், நடுதறியில் (மேருதண்டத்திலே) உள்ளொருமையில் எழுந்தருளிய சிவன் விளங்கும். சிவம் சோரூபம்; மணம் சேதனம், உணர்வு. சிவயோகிகளைச் சுற்றிச் சிவவுணர்ச்சி கதிரிட்டுப் பரவும். (நடுதறி என்பது ஆதார தண்டம் அல்லது மேரு தண்டமும ஆகும். அது மணிபூரக நிலையமான நாபியை அணைந்தோங்கும். அதில் ஆதார மலர்களுக்குரிய தெய்வ மணம் பரவும்)

பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோற்
சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது
ஓவியம் போல உணர்ந்தறி வாளர்க்கு
நாவி யணைந்த நடுதறி யாமே

யோகி, உள்ளத்தில் ஊறும் சுத்த சைதன்யத்தை உணர வேண்டும்-கலக்க வேண்டும். மலரில் மணம்போலச் சிவன் சீவனிற் கலந்திருப்பதை உணர வேண்டும். சிந்தையைத் தியானத்தில் ஊன்றியே சிவத்தைத் தெளிய வேண்டும். அப்போதே இருள் மாயை நீங்கும்; இருள் நீங்கினால் முற்பிறவிகளுக்கெல்லாம் மூலவித்தாய் இருந்த வினை எது என்று புலப்படும். வினை தீர்ந்தாலே விடுதலை. இப்படியின்றிச் சும்மா நீட்டி மடக்கி உட்கார்ந்து நாம் உய்ந்தோம். கண்டோம் என்று சம்பமடிப்பது அகம்பாவமாகும்.

உய்ந்தனம் என்பீர்;உறுபொருள் காண்கிலீர்
கந்த மலரிற் கலக்கின்ற நந்தியைச்
சிந்தை யுறவே தெளிந்திருள் நீங்கினால்,
முந்தைப் பிறவிக்கு மூலவித் தாமே

பிறவித் துயரம் பெருந்துயரம்; வினையினால் பிறவியுண்டாகிறது. பழிப்புடைய பாசப் பிறவித்துயர் நீங்க வேண்டுமானால், எழுதினாலும், பாடினாலும், அறுபத்து நான்கு கலைகளும் கற்றாலும் பயனாகாது. ஆதார வழி

யாகத்.. தலையுச்சிக் கேறிய குண்டலியால், சகஸ்ராரத்தில் சூரியசந்திர அக்கினியான முச்சுடர் நிலையத்தை வழியுணர்ந்து, அடையும் சாதன வகையை அறிய வேண்டும். முச்சுடர் நிலையத்தில், நிலைத்த நிட்டை கூடியிருப்பதே யோகமாகும். இந்த நிட்டை பெறவேண்டுமானால், ஆர்வம் வேண்டும். தீவிரமாகவிரும்பி அருள்வழியில் நின்று சாதனம் செய்தாலே மெய்த்தவராகலாம். அப்படி விரும்பி நின்று சாதனம் செய்தால், உண்மை யுரையான ஓங்காரப் பொருள் உள்ளே விளங்கும். அந்த ஓங்காரப் பொருளையே விரும்பி ஊன்றி நின்று தியானம் செய்தலே மெய்த்தவமாகும்.

''தஸ்ய வாசக; ப்ரணவ:
தத்ஜப தத் அர்த்த பாவனம்
த்யான ஹோயாத் தத்வ்ருத்ய''

என்கிறார். பதஞ்சலி யோகி. (ஓம், இதை விடாது ஜபித்துத் தியானித்து, உள்ளே ஓங்காரலயம் எய்தவேண்டும்.)

விரும்பி நிலைத்துத் தியான சாதனம் செய்து, சித்தி பெற்றவன், விண்ணாகிய சகஸ்ராரத்தை (ஆயிரம் இதழுடைய உச்சி மலரை) அடைந்த சித்தனாவான். அவன், மானிடம் மாறி அமரத்தன்மை பெறுவான்.

''விரும்பிநின் றேசெயின் மெய்த்தவ ராகும்;
விரும்பிநின் றேசெயின் மெய்யுரை யாகும்;
விரும்பிநின் றேசெயின் மெய்த்தவ மாகும்;
விரும்பிநின் றேசெயில் விண்ணவ னாகுமே!''

இத்தகைய சுத்தசிவ யோகத்தைப் பேணினால் பிறவாவுலகாகிய சுத்த சச்சிதானந்தம் ஊற்றெடுத்து அருள்பொழியும். அதனால் சீவனும் சிவனும் கூடிக் குழைந்து குலாவுவதாகும். இதுதான் பேரின்பநிலை. இதை அடையாது நாணி ஒதுங்கினால் நரகமே கதி. ஊன்ஆரும் உயிர்வாழ்வானை வினைக்கலத்தில் போட்டு ஆன்மாவைத் தீவண்ணனான சிவபிரான், மீண்டும் மீண்டும் கருணையினால் சுட்டு மாசிலாப் பொன்னாக்குவான். உலகில் இந்திரனை ஒத்த எத்தனையோ செங்கோலரசர், எண்ணரிய மாதவர், உடலை உதறி வீழ்ந்து இறந்தனர். கணக்கில்லாச் சித்தரும் தேவரும், பிரம்மா விஷ்ணுக்களும், தேவாரம் பாடிய மூவரும், இறைவனே தூயன்நேயன் மேலானவன் என்று பரம்பொருளையே அன்பு செய்வார். செத்து வீழும் உடல் வணக்கம் நிலையில்லை. இறைவன் ஒருவனையே அறிஞர் பணிந்து நினைந்து பக்குவமாகக் கூடுவர். யோகத்திலேயே சரியை, கிரியை, ஞானம் உண்டு. மனத்தாகமான ஆசையை விட்டு, ஆதித்தனான சிவசூரியனிடம் அன்பு வைப்பதே, அன்பினால் அவனுடன் கூடுவதே யோகம், யோகம் என்பது சீவன் சிவனுடன் கூடும் ஒருமையாம்; அதில் பல நினைவிற்கு இடமில்லை. பல பிரிவுகளும் சாதனமுறைகளும் யோகத்தின் சிறப்பான அம்சங்களே. அட்டாங்க யோகமும் அவ்வாறே. யோக சித்தியால் பரம்பொருள் உதயமாதலே நிர்வாணம், முத்தியின்பம், சுத்தசுதந்தரம், இந்த முத்தி பெறலே போதாபிஷேகமான இன்ப நுகர்ச்சியாகும். இதற்கு வழி ஞானம்.

## 8. ஞானம் :

''நான்'' என்று சிவம் சீவனுட் பேசுகிறது. நான் என்பதை ஞான் என்றும் சொல்லுவர். நான் நானே. நானானேன் என்றுணர்வதே ஞானம். யோகத்தினும் மிக்கது ஞானம். ஞான உபதேசம் கேட்டலே, ஞானத்திற் சரியை. கேட்டதைச் சிந்தித்தலே, ஞானத்திற் கிரியை. அதனைத் தியானத்தால் தெளிதலே யோகம். தெளிந்ததை நிட்டை கூடி இறையுணர்வாக நிற்றலே ஞானத்தில் ஞானம். யோகமுடி ஞானம்; யோகமின்றி முத்தியில்லை எனில், ஞானமின்றி யோகமில்லை. எல்லாச் சாதனங்களின் முடிவும் பயனும் ஞானமே என்பது யோகசிகோபநிஷத்தின் கருத்து. இதையே திருமூலர் வற்புறுத்துகிறார்; ஞானத்திலும் பெரிய அறமும் சமயமும் இல்லை.

''ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை;
ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று;
ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவாம்;
ஞானத்தின் மிக்கார் நரரின்மிக் காரே!''

பலபிறவிகட்குப் பிறகு மனிதன் ஞானியாகிறான். ஞானி நானே (ஞானீது ஆத்மைவ) என்கிறான் கண்ணன்.

பிரம்ம ஞானியே தலைசிறந்தவன்என்பது வேதவாக்கு. (பிரம்மவித் ஆப்னோதிபரம்) ஞானத்தைத் தப்பி வேறு வெறும் கர்மமோ பக்தியோ உபாசனையோ ஒரு உருவைச் சுற்றிச் சுற்றி வருமே யொழியத் தன்னறிவைத் தராது. தன்னறிவின்றித் தனக்கின்பமில்லை. ஞானப் பேச்சால் வராது; சத்தங் கடந்த மோனத்திலே தான் வரும். மனம், மனவுணர்ச்சி, புலனுணர்ச்சி, எனது, யான் என்னும் அகம்பாவம்; சித்த சலனம், சிந்தனையிற் சுழலும் சங்கற்ப விகற்பங்கள், அவற்றால் ஆகிய செயல்கள்-எல்லாம்சுத்தக் குழாங்களே; இவை மனத்தைப் புறமிழுத்து அலைப்பனவாம். இவற்றைத் தாண்டிய ஞானமோனத்திலேதான் சத்தா[illegible] பரம்பொருளை அடையும் சன்மார்க்கம் பு[illegible] படும்-சத்தம்கடந்தவர்பெற்றதுசன்மார்க்க[illegible]

•

தன்னை உலகிலும் உலகினைத் த[illegible] ளும் காண்பவனே ஞானி என்று வேதம் செ[illegible] லும். தன்னிடம் உலகை, உலகில் தன்னை[illegible] காண்க. அது தனக்கு அருகாவதும் உள்ள[illegible] பால்; அந்த அன்பால் எல்லாவுயிர்களிடமும் அருள் பரவும்; அருளன்பால், அனைத்துலகு[illegible] என்னுள் என்னும் சாதகர் ஞானமெய்துவ[illegible] ஞானத்தால் நான் சிவம், சிவோஹம், என்னு[illegible] உணர்ச்சி பெறுவர். அதனால்சிவநேயங்கூ[illegible] அனைத்தையும் சிவமயமாகக் காண்பர், ஞா[illegible] யர் என்று மூலர்மந்திரம் கூறுகிறது. ஞான[illegible] தேர்ந்தவர், தாம் இருக்குமிடமான இதய[illegible] தில் நிலைத்திருப்பார்; அந்நிலையே சராசர உ[illegible] கெல்லாந் தன்னுட் காணும் நிலை; உலக சம[illegible] ஆசார தருமமெல்லாம், மயக்கமில்லாத ஞானி[illegible]

பெ ன்னுள் அடைந்தவனாகிறான். ஞானமற்ற து மதாசாரங்களால் தருக்கமாடுவர். ஞானி ''ஆசாரத்தில் தருக்க வாதம் இராது. உள் எ ம தகாராச நிலையம், பிரியா நகர். அதில் மா றும் இருக்கும் பேரருளாளன் இறைவன்; சேவனது குறி, குணம், திருவடி இவற்றைப்பற்றி யற்கும் நெறியை அறியும் ஞானிகளுக்கு அறி வும் அடக்கமும் அன்பும் தம்முடன் பிரியா அறையும். அதனால் எழும் சைதன்ய உணர்ச்சி சுடரில் ஒளிரும் கதிரொளி போன்று ஒள்ளிய ருவி போன்று உடம்பெல்லாம் பரவும். ஞான ணர்வு பிரம்மாகாரம்; சிற்சக்தி விளைந் தழும் சிந்தையில், மதிமண்டலத்தில், அது முதவெள்ளம் எனப் பொசியும். அது குறை ளை நீக்கி உடலுயிர் மனம், சுடர்போல் ளிரச் செய்யும். இங்கே ஞானம் என்பது லறிவன்று. யோகச்சித்தியால் எழும் சிற் த்தியுணர்ச்சி, மகாசுத்த குண்டலி சக்தியே ண்மை யறிவாகும். அதில் நீந்துதலே, அறி னந்தம். அதையே 'மேல்நிற்றலாம் சக்தி' ன்றார் மூலர். அதுதான் ஊர்த்துவசக்தி, மலெழுங்கனல் எனப்படுவது. அதனாலே ன் ஊர்த்துவரேதஸ் எய்தும். அதுவே பர த்தையான சகல ஞானத்தையும் விளைக்கும். தன் ஞானத்தில் சரியை கிரியை யோகம் னம் ஆகிய நான்கின் பயனும் அடங்கும்.

மனம் அலையாமல் உள்ளடங்கித் தன் ள் இலயித்துச் சும்மா இருக்கும் மோனிக்கு ச்சாதனமும் இன்றியே சக்தி மேலெழுந்து, முதமளிக்கும். முத்தியை நாடுதல் ஞானக் ரியை; நாதாந்த நல்லொளி காணல் ஞான யோகம். நான் எனது என்னாத, ஆணவம் கிளம்பாத, இயல்நிலையே சகசநிட்டையே ஞானத்தின் ஞானம். ஞானத்திலேயே நான்கு சாதனங்களும் அடங்கும். ஞானத்திலேயே நான்கு சாதனங்களையும் நண்ணும் மகான், புண்ணிய பாவங் கடந்த, பிணக்கற்ற, முர ணற்ற கண்ணியமான சிவஞான நேயன், கரை கண்ட ஞானி, திண்ணியசுத்தன், சிவமுத்தனா வான்.

''நண்ணிய ஞானத்தின் ஞானாதி நண்ணு
வோன்,
புண்ணிய பாவங் கடந்த பிணக்கற்றோன்
கண்ணிய நேயங் கரைஞானங் கண்டுள்ளோன்
திண்ணிய சுத்தன், சிவமுத்தன் சித்தனே''

ஞானமார்க்கமே தன்னைக் காட்டும். பரம்பொருள் உள்ளத்தின் உள்ளே உதித்தல் ஞானச் சிறப்பினாலேதான்; நன்றாக உணரப் பட்ட அருட் சக்தியே ஞானநிர்வாணமாகும். இந்த ஞானத்தைத் தரும் சிவகுருபாதத்தைப் பற்றலே ஞானாபிஷேகமாகும். சிவத்தியா னமே பக்தி, சிவமயங் க..ணலே ஞானம் என் பது சிவயோக சாரமாகும்.

''இதய குகைநடுவில் மனதுலயம் அடைந்தே
இருந்தபடி யிருந்து மகிழேனோ?
அதனின் உயரவரு துரியமலை முடியில்
அமுதசஞ் சீவிரசம் பருகேனோ?''

என்று ஞானவேட்கை விம்முகிறது.


—தொடரும்.

## திருமூலர் திருமந்திரம்


மக்கள் வாழ்வின் இம்மை மறுமை நலங்களுக்கு உரிய மறைபொருள் நுட்பங்கள் அனைத்தையும் கெடுத்துத் தெளிவித்து உரைப்பதில், திருமந்திரம் போல்வதொரு விழுமிய முழுநூலை, உலகின் வேறு எந்தமொழியிலும் காண்டல் அரிது. முடிந்த முடிபான சிறந்த மந்திரங்கள், அவற்றை உரு தைற்றும் முறைகள், அவற்றை அமைக்கும் சக்கரங்கள், அம் மந்திரங்களுக்குரிய மாபெரும் தெய்வங்கள், ந்தெய்வங்கள் அனைத்தும் முழுமுதற் கடவுளான சிவபரம்பொருளின் ஆணைவழிநின்று மை வழிபடுவார்க்கு இம்மை மறுமைப் பயன்களை அளிக்கும் வகைகள், சரியை கிரியை யோகம் னம் முதலிய தவ ஒழுக்கத்தின் பாகுபாடுகள், அவற்றை மேற்கொண்டு ஒழுகும் முறைமைகள், அழி லாப் பேரின்பம் ஆகிய வீடுபேற்றியல் நிலைகள், ஆகிய பலவற்றையும், முற்ற எடுத்து முடியக்கூறித் ற்றென விளக்கும் முழுமுதல் நூல், திருமூலர் திருமந்திரமேயாகும் எனத் துணிந்து கூறலாம்.

அதனாலேயே, நம் தமிழ்நாட்டில் வாழையடி வாழையாக வந்த மாகெரும் சான்றோர்கள் லரும், திருமூலர் அருளிய திருமந்திரத்தினைப் பெரிதும் போற்றிப் பயன்கொண்டுள்ளனர்.

—ஆசிரியர்.




மதுரை அருள்மிகு மீனாட்சிசுந்தரேசுவரர் திருக்கோயிலுக்கு, மலேசிய நாட்டுப் பொதுப்பணித்துறை அமைச்சர் மாண்புமிகு டத்தோ. சா. சாமிவேலு அவர்கள் வருகைதந்தபோது, அறங்காவலர் குழுத்தலைவர் திரு. வி. என். சிதம்பரம் அவர்கள் மாலை சூட்டி வரவேற்றுப் பட்டாடை அணிவித்து, மீனாட்சியம்மன் திருவுருவச் சிலையும், வெள்ளி டாலரும் பரிசாக அளித்து, தங்கரத தரிசனம் செய்து வைக்கல்



திருச்சி மாவட்டம், குமாரவயலூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு, அறநிலைய ஆணையர் திரு. ஆர். ஷண்முகசிகாமணி, ஐ.ஏ.எஸ். அவர்கள் வருகை தருதல்.

 பதிவு எண். எம் 7039



பழநி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலின் சார்பில், ஆண்கள் தொழில்நுட்பக் கல்லூரித் தொடக்கவிழா நடைபெற்றபோது, மாண்புமிகு அறநிலைய அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் தலைமையில், அறநிலைய ஆணையர் திரு. ஆர். ஷண்முகசிகாமணி, ஐ.ஏ.எஸ். அவர்கள் முன்னிலையில், கல்வியமைச்சர் மாண்புமிகு செ. அரங்கநாயகம் அவர்கள், தொழில்நுட்பக் கல்லூரியைத் தொடங்கி வைத்தார்கள். அவ்விழாவில் பழநி திருக்கோயிலின் சார்பில், பழநி நகராட்சிக்கு நன்கொடையாக வழங்கிய 22 சோடியம் வேப்பர் மின் விளக்குகளை, உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு குழந்தைவேலு அவர்கள் இயக்கி வைத்தார்கள்.




வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600 034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ,எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.